மின்தமிழ்மேடை

காட்சி: 24 ஜனவரி - 2021

உழவுக்கும் கைத்தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்

தமிழ் மரபு அறக்கட்டளை - பன்னாட்டு அமைப்பு
வெளியிடும் காலாண்டு மின்னிதழ்
24

மின்தமிழ்மேடை

காட்சி: 24

ஜனவரி - 2021

"உழவுக்கும் கைத்தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

முன்னட்டைப் படம்: ஜனவரி - 2021 - தமிழர் விழாவாகிய தைப்பொங்கல், உழவர் திருநாள் மற்றும் தைப்புத்தாண்டு வாழ்த்துகள் - "உழவுக்கும் கைத்தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

தமிழ் மரபு அறக்கட்டளை - பன்னாட்டு அமைப்பு

http://www.tamilheritage.org/

வெளியிடும் காலாண்டு மின்னிதழ்

பொறுப்பாசிரியர்: முனைவர் தேமொழி

தலையங்கம்: உழவுக்கும் கைத்தொழிலுக்கும் வந்தனை செய்வோம்

— முனைவர் க. சுபாஷிணி

வணக்கம்.

மின்தமிழ் மேடை காலாண்டிதழின் வழி உலகத் தமிழர்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

பொதுமக்களிடையே ஆய்வுத்தரம் நிறைந்த வரலாற்று விழிப்புணர்வு ஏற்படுத்துதல் என்பதை தமிழ் மரபு அறக்கட்டளையின் தலையாய பணியாக இவ்வமைப்பு தொடங்கிய காலம் முதல் செயல்படுத்தி வருகின்றோம்.

தமிழகச் சூழலில், மிக நீண்ட காலமாக தொல்லியல் அகழாய்வுப் பணிகளிலும், வரலாற்று ஆய்வுப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்ற அறிஞர்களின் உரைகளைப் பொதுமக்களுக்கு ஏற்பாடு செய்து வழங்குவதன் வழி தமிழக வரலாறு தொடர்பான ஆய்வுப்பூர்வமான தரவுகளைக் கடைக்கோடி மக்களுக்கும் கொண்டு சென்று சேர்க்க முடியும் என்பதைத் தமிழ் மரபு அறக்கட்டளை நம்புகின்றது.

வரலாற்றுப் பாதுகாப்பு நடவடிக்கைகளோடு சமூக நலனை முன்னிறுத்தும் செயல்பாடுகளின் தொடர்ச்சியாகத் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் 'வையத்தலைமை கொள்' பிரிவு மாற்றுப்பாலினம் மற்றும் மாற்றுப்பாலீர்ப்பு கொண்டோர் நலனைக் கருத்தில் கொண்டு மூன்று நாள் இணையவழி கருத்தரங்கத்தை ஏற்பாடு செய்திருந்தது. கலையும் வரலாறும், கலாச்சாரமும் மானிடவியலும், சமூகச் சிக்கல்களும் சாதனைகளும் என்ற மூன்று பொருண்மைகளில் இந்தியா-இலங்கை ஐரோப்பா எனப் பல பகுதிகளிலிருந்து சமூக செயல்பாட்டாளர்கள் கலந்து கொண்ட சிறப்பான ஒரு நிகழ்வாக இது அமைந்தது. மாற்றுப்பாலினத்தவர் சந்திக்கும் பல்வேறு வகையான பிரச்சினைகளை அலசியதோடு அப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை முன்னெடுக்கும் வகையிலும் கருத்துப் பரிமாற்றம் நிகழ்த்த ஒரு ஆரம்பத்தளமாக இந்த மூன்று நாள் நிகழ்வு நடந்தேறியது. இதன் தொடர்ச்சியாக, ஐக்கிய நாடுகள் சபையின் மாற்றுப்பாலினத்தோருக்கான அறிக்கையை தமிழ் மொழியில் மொழிபெயர்க்கும் சீரிய பணியையும் 'வையத்தலைமை கொள்' பிரிவு ஏற்று செயல்படுத்த ஆரம்பித்துள்ளது.

நவம்பர் மாதத்தில் 'வடலூர் வரலாறு - கற்காலம் முதல் தற்காலம் வரை' என்ற தலைப்பு கொண்ட ஆய்வு நூல் அதன் நூலாசிரியர் முனைவர்.ஜே ஆர் சிவராமகிருஷ்ணன் அவர்களது மிக நீண்டகால ஆய்வுப் பணியின் பலனாக வெளிவந்துள்ளது. இணைய வழி நூல் வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. இந்நூலை தமிழ் மரபு அறக்கட்டளையின் வலைத்தளத்திலிருந்து தரவிறக்கி வாசிக்கலாம்.

தமிழகம் பல சமயங்களும் தத்துவங்களும் தோன்றி வளர்ந்த ஒரு நிலப்பகுதி. சமணம் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மக்களின் சமயமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறையில் இருந்தமைக்குப் பல சான்றுகளை இன்று கல்வெட்டுகளாகவும் சிற்பங்களாகவும் காண்கின்றோம். தமிழகத்தின் நடுநாட்டில் சமண தடையங்கள் ஏராளம் உள்ளன. இவற்றை ஆராய்ந்து அவை பற்றிய பல்வேறு தகவல்களை வெளிப்படுத்தும் வகையில் மூன்று நாள் தொடர் வரலாற்று ஆய்வுரைகள் இதே காலாண்டில் நிகழ்த்தப்பட்டன.

செப்டம்பர் மாதத்தில் தொடங்கப்பட்ட சங்கம்பீடியா வலைப்பக்கத்தின் வளர்ச்சி பற்றிய அறிவிப்பினை மைய நோக்கமாகக் கொண்ட சிறப்பு நிகழ்ச்சி டிசம்பர் மாதம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சங்கச்சோலை வலைப்பக்கத்தை உருவாக்கிய முனைவர்.ப.பாண்டியராஜா அவர்களது சிறப்புரை இந்த நிகழ்ச்சிக்கு மெருகூட்டியது.

தமிழ் மரபு அறக்கட்டளையின் அருங்காட்சியகம் மற்றும் கண்காட்சிப் பிரிவின் ஏற்பாட்டில் இளம் தொல்லுயிராளர் செல்வி அஸ்வதா பிஜுவின் `தொல்லுயிரியல் ஓர் அறிமுகம்` என்ற உரையும் இயற்கை சார்ந்த பாரம்பரிய கலைப் படைப்புகளை உருவாக்கும் முயற்சியை அறிமுகப்படுத்தும் வகையில் நுண்கலை ஆசிரியர் உமாபதி அவர்களது இணைய வழி கைவினைக் கண்காட்சியும் இக்காலாண்டில் இளையோருக்கான சிறப்பு அம்சமாக அமைந்தது.

பண்பாட்டு ஆய்வாளர் பேராசிரியர் முனைவர் தொ.பரமசிவன் அவர்களது திடீர் மறைவு உலகத் தமிழ் ஆய்வாளர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய ஒரு நிகழ்வாக இந்த டிசம்பர் மாதத்தில் அமைந்தது. 2015ஆம் ஆண்டு பேராசிரியர் தொ.பரமசிவன் அவர்களைத் தமிழ் மரபு அறக்கட்டளை `சிறந்த தமிழ் மானுடவியல் ஆய்வாளர்` என்ற சிறப்பு செய்து கௌரவித்தோம் என்பது நினைவு கூறத்தக்கது.

***உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.   (குறள் - 1032)***

உழவைப் போற்றுவது தமிழ்ப்பண்பாடு. உழவர் திருநாளாம் இப்பொங்கல் திருநாளில் உலகத் தமிழர் அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துகளையும் தமிழர் திருநாள் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்புடன்
முனைவர்.க.சுபாஷிணி

இந்த இதழில் ...

மின்தமிழ்மேடை - காட்சி: 24; ஜனவரி – 2021

"உழவுக்கும் கைத்தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

(மின்தமிழில் அக்டோபர் 16 – ஜனவரி15, 2021 வரை பதிவான படைப்புகளின் தொகுப்பு)

உள்ளடக்கம்

தலையங்கம்: உழவுக்கும் கைத்தொழிலுக்கும் வந்தனை செய்வோம்
— முனைவர் க. சுபாஷிணி i

1. ஈழத் தமிழர்களின் குலதெய்வ வழிபாட்டின் தொல்லியல் ஆதாரங்கள்.
— பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் 1

2. ஆலகிராமத்தின் பண்டைக்காலச் சிற்பங்கள்.
— முனைவர். த. ரமேஷ் 5

3. நாயக்கர் காலத்து கல்திட்டை மற்றும் நடுகற்கள்.
— முனைவர். ப. தேவி அறிவு செல்வம் 7

4. மானுடமும் மாற்றுப்பாலினமும்!
— முனைவர்.க. சுபாஷிணி 10

5. மாற்றுப்பாலினம், பாலீர்ப்பு கொண்டோர் இணையவழிக் கருத்தரங்கம்.
— முனைவர். பாப்பா 22

6. நிறைவான ஒரு ஒரு நிகழ்வு.
— மா.மாரிராஜன் 30

7. சங்கச் சுரங்கத்தில் பண்பாட்டுப் புதையல் – ஆர்.பாலகிருஷ்ணன் இஆப.
— அ. குமரேசன் 33

8. திருவாசக மொழிபெயர்ப்பு - பணிவும் துணிவும்.
— முனைவர்.ஔவை.அருள் 43

9. சிறார் இலக்கியம்: அழகான புனைவும் அபத்தமான பொய்யும்.
— அ. குமரேசன் 44

10. கல் முகவடிவங்கள் கண்டுபிடிப்பு - துருக்கி.
— முனைவர்.க. சுபாஷிணி 48

11. தமிழக நிலவியல்.
— சபாரத்தினம் 49

12. வேட்டைச்சமூகத்தில் பெண்களின் நிலை - தொல்லியல் சான்றுகள்.
— முனைவர்.க. சுபாஷிணி 53

13. ராகுல சாங்கிருத்தியாயனை பௌத்த பிக்குவாக ஆக்கிய இலங்கை.
— என்.சரவணன் 55

14. கல்விக் கொள்கையும் மொழிக் கொள்கையும்.
— சொல்லாக்கியன் 61

15. கௌதம சன்னாவின் இட ஒதுக்கீட்டின் மூலவரலாறு.
— முனைவர்.ஆ.சிவசுப்பிரமணியன் 72

உள்ளடக்கம்

16. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ், நமது உரிமைகளும் கடமைகளும்.
— சொல்லாக்கியன் 78
17. கலைஞர் எனும் கருணாநிதியின் வாழ்க்கை வரலாறு.
— முனைவர். தேமொழி 88
18. நெசவாளர்களும் துணிவணிகர்களும்.
— முனைவர். க. சுபாஷிணி 102
19. வரலாற்றுப் பேராசான் தி. வை. சதாசிவ பண்டாரத்தார்.
— மா. மாரிராஜன் 114
20. பாரி நிலையம் செல்லப்பன்.
— கல்பனாதாசன் 116
21. என்னே தமிழின் இளமை! — நெத்துரு.
— முனைவர். ப. பாண்டியராஜா 120
22. எல்லை தருவான் கதிர் பருகி ஈன்ற கார் !
— முனைவர். தேமொழி 123
23. திருக்குறள் குறியீடு படங்கள்.
— சொ. வினைதீர்த்தான் 128
24. பெருந்தொற்றுகளின் காலம்: புதுச்சேரியின் அனுபவங்கள்!
— பேராசிரியர். எம். பி. இராமன் 129
25. அதுவொரு காலம்! பொங்கும் பொங்கல் நினைவுகள்.
— இரா. நாறும்பூநாதன் 133
26. டிக்.. டிக்... திக்... திக்....
— பாளை ப. இசக்கி ராஜன் 139
27. அமெரிக்க அதிபர் தேர்தல் வாக்காளர் கையேடுகளில் தமிழ்!!!!
— முனைவர். தேமொழி 142
28. எல் உமிழ் இரும்பொறை அம்பொறி கனல.
— ருத்ரா இ. பரமசிவன் 143
29. கீழ்த்திசை சிவக்கக் கண்டோம்.
— கோவை எழில் 144
30. உன்னையே நீ எண்ணிப்பார்.
— ருத்ரா இ. பரமசிவன் 145
31. உழவும் வாழ்வும்.
— கோவை எழில் 147
32. தமிழ் மரபு அறக்கட்டளை நிகழ்வுகள் மற்றும் வெளியீடுகள்
— முனைவர். தேமொழி 148

Attribution-NonCommercial-ShareAlike
4.0 International (CC BY-NC-SA 4.0)

மின்தமிழ்மேடை இதழ்கள் தொகுப்பு:
http://mintamilmedai.tamilheritage.org/wp/

'மின்தமிழ்மேடை' இதழுக்கு தங்கள் படைப்புக்களை அனுப்ப விரும்புபவர்

mailto:editorthfjournal@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்

THE TEXT IN THIS ISSUE BY Tamil Heritage Foundation IS LICENSED UNDER A CREATIVE COMMONS ATTRIBUTION-SHAREALIKE 4.0 INTERNATIONAL LICENSE.

குறிப்பு:

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் பதிப்பகப் பிரிவின் வெளியீடு இது. இந்த நூல் தமிழ் ஆய்வுப்புலத்தின் தேவை கருதி அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகிறது. இந்நூலை மறுபதிப்பு செய்ய விரும்புவோர் அல்லது ஏதாவது ஒரு வகையில் தங்கள் படைப்புகளில் பயன்படுத்த விரும்புவோர் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பினைத் தொடர்பு கொண்டு அனுமதி பெற்று உசாத்துணைகளை வழங்கி மீள்பதிப்பு செய்யலாம்.

- தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் பதிப்பகப் பிரிவு

1. ஈழத் தமிழர்களின் பழங்கால குலதெய்வ வழிபாட்டின் தொல்லியல் ஆதாரங்கள்.

— பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்

நாகபடுவானில் பானைக்குள் வைத்து நாகப் பாம்பை வழிபட்டதற்கான மிகத் தொன்மையான சான்றுகள் கண்டுபிடிப்பு.

தென்னாசியாவில் தொன்மையான நாட்டுப்புற வழிபாடுகளில் ஒன்றாக நாக வழிபாடு காணப்படுகின்றது. நாகம் பூமிக்குள் இருந்து வந்து மீண்டும் பூமிக்குள் மறைந்து போவதால் ஆதிகால மக்கள் அவற்றை மண் (பாம்பு) புற்றுக்குள் வைத்து வழிபட்டனர். இதற்கு மத வழிபாட்டில் நாகத்தை குலமரபுத் தெய்வமாகக் கொண்டிருந்த மக்கள் வாழ்ந்து வருவதே காரணமாகும். இதன் காரணமாகவே வட இந்தியாவில் அரசமைத்த குப்தரும், தக்கணத்தில் ஆட்சி புரிந்த சாதவாகனரும் தம்மை நாக குலத்தவர் என அழைத்துக் கொண்டனர். தமிழகத்தின் பண்டைய தலைநகரான நாகபட்டினம் நாகரின் தலைநகராக இருந்ததெனக் கூறப்படுகின்றது.

இலங்கையின் பூர்வீக மக்களது வரலாறு கூறும் பாளி இலக்கியங்கள் வட இந்தியாவிலிருந்து விஜயன் தலைமையிலான மக்கள் இலங்கை வருவதற்கு முன்னர் இங்கு வாழ்ந்த மக்களை இயக்கர், நாகர் எனக் குறிப்பிடுகின்றன. ஆயினும் இலங்கையின் மனித வரலாறும், நாகரிக வரலாறும் விஜயன் வருகையைத் தொடர்ந்து ஏற்பட்டது எனக் கூறும் அறிஞர்கள் பலரும் பாளி இலக்கியங்கள் கூறும் இயக்கர், நாகரை மனிதப் பிறவிகள் அற்ற அமானுசராகவே எடுத்துக் கொள்ளுகின்றனர். ஆனால் பேராசிரியர் சத்தமங்கல கருணாரத்தினா போன்ற அறிஞர்கள் விஜயன் வருவதற்கு முன்னர் வாழ்ந்த நாகரை இலங்கையின் தொன்மையான இனக்குழுக்களில் ஒன்று என்பதற்கு இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னர் புழக்கத்திலிருந்த கல்வெட்டுக்களில் வரும் நாககுலம் பற்றிய செய்திகளை ஆதாரமாகக் காட்டுகின்றனர்.

இலங்கையில் கி.மு.6ஆம் நூற்றாண்டளவில் விஜயன் தலைமையிலான வட இந்தியக் குடியேற்றம் நடந்ததாகக் கூறப்படும் காலத்திற்கு முன்னரே இலங்கையில் வளமான நாகரிக வரலாறு கி.மு.1000 ஆண்டிலிருந்து தோன்றி வளர்ந்தது பரவலாகக் கண்டுபிடிக்கப்பட்டு வரும் ஆதியிரும்புக்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் (பெருங்கற்கால பண்பாட்டுச் சின்னங்கள்) உறுதிப்படுத்துகின்றன. இலங்கையின் தொல்லியற் திணைக்களப் பணிப்பாளராக இருந்த கலாநிதி சிறான்தெரணியகல இப்பண்பாட்டை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியவர்கள் நாக இன மக்கள் எனக் கூறுகின்றார். இப்பண்பாட்டு மக்கள் தென்தமிழகத்திலிருந்து இலங்கைக்குப் புலம் பெயர்ந்தவர்கள் எனக் கூறும் பேராசிரியர் கா.இந்திரபாலா இந்த நாக இன மக்களின் ஒரு பிரிவினரே இற்றைக்கு 2500 ஆண்டளவில் தமிழ் மொழி பேசும் மக்களாக மாறினர் எனக் கூறுகின்றார்.

தமிழகத்தில் சங்ககாலம் தொட்டு பாம்புப் புற்று வழிபாடு இருந்ததற்கான சான்றாதாரங்கள் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. ஆனால் இக்காலத்திற்கு முன் இருந்த ஆதியிரும்புக் காலப்பண்பாட்டில் இவ்வழிபாடு இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்ததாகத் தெரியவில்லை. ஆனால் வட இலங்கையில் அண்மையில் கட்டுக்கரை, நாகபடுவான் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வுகளின் போது ஆதியிரும்புக்கால மக்களிடையே இவ்வழிபாடு இருந்ததற்கான அதிக ஆதாரங்கள் கிடைத்துள்ளன. அவற்றிலிருந்து இலங்கைக்கு ஆதியிரும்புக் காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்தியவர்கள் நாக வழிபாட்டை குலமரபுத் தெய்வமாகக் கொண்டிருந்த மக்கள் என்பது உறுதியாகின்றது. அவற்றுள் நாகபடுவானில் கண்டுபிடிக்கப்பட்ட நாகத்தைப் பானையில் வைத்து வழிபடப்பட்ட மரபு வட இலங்கை மக்களிடையே நாக வழிபாடு தொன்மையானது என்பதை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

இவ்விடம் பூநகரிப் பிராந்தியத்தில் முழங்காவிலுக்கு அண்மையில் உள்ள காட்டுப் பகுதியில் அமைந்துள்ளது. இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட நாக வழிபாடு பற்றிய சான்றுகள் சில தென்னாசியாவின் ஏனைய வட்டாரங்களில் இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை. இவ்விடத்தில் நாகபடுவான் என்ற இடப்பெயரின் பழமை, அதன் பொருள் ஆய்வுக்கு உரியது. படுவம், படுவான் என்பவை பழமையான தமிழ்ச்சொற்கள். இப்பெயர்கள் சங்க இலக்கியத்தில் ஆழமான குளம், பெரிய குளம் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனால் நாககுளம் என்ற பொருளைக் கொண்ட இடப்பெயரே இன்றும் மாற்றம் அடையாது நாகபடுவான் என்ற பண்டைய தமிழ்ச் சொல்லில்; அழைக்கப்படுகிறது எனலாம்.

கலாநிதி இரகுபதி இவ்விடப்பெயர் ஆதியில் இங்கு நாகத்தைக் குலமரபாகக் கொண்ட மக்கள் வாழ்ந்ததன் காரணமாகத் தோன்றியது எனக் கூறுகிறார். இவ்விடத்தில் ஆதியிரும்புக்காலப் பண்பாட்டுச் சின்னங்களுடன் அதிக எண்ணிக்கையில் சுடுமண்ணாலான நாகச் சின்னங்கள், பீடத்துடன் கூடிய நாக, நாகினி சிலைகள், சிற்பங்கள், நாக கற்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதாரங்கள் ஆதியிரும்புக்காலப் பண்டு மக்கள் மதவழிபாட்டில் நாகத்தை தமது குலமரபுச் சின்னமாகக் கொண்டிருந்தனர் என்பதை உறுதிப்படுத்துகின்றன. அவற்றுள் நாகச் சிற்பத்தைப் பானையில் வைத்து வழிபடப்பட்டதற்கான சான்றுகள் தொல்லியல் அறிஞர்களுக்குப் புதிய அம்சமாகக் காணப்படுகின்றது.

இங்கு அகழ்வாய்வு செய்யப்பட்ட ஆய்வுக் குழிகளில் ஒன்றில் அரைவட்ட வடிவில் செய்யப்பட்ட பெரிய பானை மண்ணில் புதைக்கப்பட்டு அதன் மேற்பகுதியில் பாம்பு வந்து போவதற்கான வாய்ப்பகுதியும், அதைச் சுற்றி மூடிய நிலையில் பாம்புப் புற்றை அடையாளப்படுத்தும் நான்கு சிறு கலசங்களும் காணப்படுகின்றன. பானைக்குள் இருந்த மண்ணை அகற்றிப் பார்த்த போது நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த அழகான நாகப் பாம்பின் சிலை பானையால் மூடப்பட்டிருந்தது தெரியவந்தது. இப்பானையின் மூன்று திசைகளிலும் தெய்வங்கள் அமர்ந்திருக்கும் பீடங்கள் காணப்படுகின்றன. அவற்றில் அமர்ந்துள்ள தெய்வத்தின் இடது கால் பானையை முட்டியவாறு உள்ளது. நான்காவது திசையில் மண் சட்டிகளின் விளிப்புப் பகுதியில் நான்கு திசைகளை நோக்கியவாறு நாகப்பாம்பு படமெடுத்த நிலையில் இருக்க, அவற்றின் வால் பகுதிகள் சட்டிக்குள் இணைந்து சட்டியின் நடுமையத்தில் ஒரு வட்டமாகக் காணப்படுகின்றது.

ஆதியிரும்புக்காலப் பண்பாட்டில்

தற்காலப் பண்பாட்டில்

இவ்வாதாரங்கள் பாம்புப் புற்று வழிபாடு தோன்றுவதற்கு முன்னோடியாக ஆதியிரும்புக்காலப் பண்பாட்டுடன் தோன்றிய தொன்மையான வழிபாட்டு மரபு எனக் கூறலாம். இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் ஒன்றுக்கு மேற்பட்ட நாக வடிவங்கள் மண் சட்டிகளில் வைக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதாரங்கள் சமகாலத்தில் நாக வழிபாட்டு ஆலயங்களில் நாகதோசம் நீங்க செப்பு அல்லது மண் பாத்திரங்களில் நாகப்பாம்பை வைத்து ஆலயங்களுக்குக் கொடுக்கும் மரபு ஆதியிரும்புக் காலத்திலிருந்து தோன்றியிருக்கலாம் என்பதைக் காட்டுகின்றது.

பண்டுதொட்டு திருகோணமலை உள்ளிட்ட அநுராதபுரத்திற்கு வடக்கில் உள்ள பிராந்தியம் நாகதீப(ம்), நாகநாடு என வரலாற்று மூலங்களில் தனித்து அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இப்பெயர்களே கி.பி.13 ஆம் நூற்றாண்டுவரை இப்பிராந்தியத்தில் வன்னி, வன்னிப்பற்று என்ற பெயர்களும், 15 ஆம் நூற்றாண்டில் யாழ்பாணயன் பட்டினம் என்ற பெயரும் தோன்றும்வரை தொடர்ச்சியாகப் பயன்பாட்டிலிருந்து வந்ததற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன.

பண்டைய இலங்கையில் நாக இனமக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் பல பிராந்தியங்களில் காணப்பட்டாலும் அது இலங்கையில் ஒரு பிராந்தியத்தின் பெயராக அடையாளப்படுத்திக் கூறப்பட்டு வந்ததற்குத் தற்காலத்தில் வட இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் பூர்வீக வரலாறு ஆதியிரும்புக்காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்திய நாக இனக்குழுவோடு தோன்றி வளர்ந்ததையே கட்டுக்கரை, நாகபடுவான் அகழ்வாய்வுகள் உறுதிப்படுத்துகின்றது எனலாம்.

2. ஆலகிராமத்தின் பண்டைக்காலச் சிற்பங்கள்.

— முனைவர். த. ரமேஷ்

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் வட்டம் ஆலகிராமம் பல்லவர்கால பல்வேறு வரலாற்றுத் தடயங்களை தன்னகத்தே கொண்ட ஊர். இவ்வூரிலுள்ள எம கண்டேஸ்வரர் கோயில்உள்ள சதுர வடிவம் கொண்ட ஆவுடையார், பலகைகளில் செதுக்கப்பட்ட விஷ்ணு, எழுத்து பொறிப்பு உள்ள கிபி 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழகத்தின் தொன்மையான விநாயகர், சண்டிகேசுவரர், விஷ்ணு ஆகிய சிற்பங்கள் இதனை உறுதி செய்கிறது.

மேலும் பிடாரி கோயில் உள்ள மிகத் தொன்மையான மூத்த தேவி பலகைகளில் பெரிய அளவில் செதுக்கப்பட்ட அய்யனார் குதிரை நாயுடன், இரு பெண்கள் படையல் செய்வது போன்ற அமைப்பு ஊர் அய்யனார் இவையாவும் மன்னர் காலத்தில் இவ்வூர் சிறப்பு பெற்றதை நமக்கு எடுத்துக் காட்டுகிறது இங்குள்ள சிற்பங்கள் பழமைக்கு மட்டுமல்லாது சிறந்த வேலைப்பாடு இருக்கும் எடுத்துக்காட்டாய் விளங்குபவை இவற்றைப் பார்வையிடுவது பராமரிப்பது பாதுகாப்பது நமது தலையாய கடமையாகும்.

(குறிப்பு: தொல்லியல் ஆர்வலர் சேலம் மோகன் ஐயா, தமிழ் ஆசிரியர் திரு கமலக்கண்ணன், மருத்துவர் காளிதாஸ். மருத்துவர் நிவாஸ், மருத்துவர் பாபு, நண்பர் ஜோதி பிரகாஷ் ஆகியோர் சேர்ந்து குழுவிற்கு மனமார்ந்த நன்றி.)

3. நாயக்கர் காலத்து கல்திட்டை மற்றும் நடுகற்கள்.

— முனைவர். ப. தேவி அறிவு செல்வம்

பெருங்கற்கால மரபின் எச்சமாக நாயக்கர் காலத்தில் கல்திட்டை மற்றும் நடுகற்கள்

மதுரை கள்ளந்திரியில் கல்திட்டை, திருமங்கலம் வடகரை புதுாரில் 400 ஆண்டுகளுக்கு முந்தைய நடுகல்லை மதுரை கோயில் கட்டட கலை, சிற்பத்துறை ஆய்வாளர் தேவி, தொல்லியல் ஆய்வாளர் சசிகலா, வரலாற்று ஆய்வாளர் அறிவுச்செல்வம் கண்டுபிடித்தனர்.

அவர்கள் கூறியதாவது: கள்ளந்திரி கால்வாய் அருகே கிழக்கு பார்த்தபடி 3 பக்கங்களும் 6 குத்து கற்கள் நட்டு மேலே பலகை கல் மூடிய கல்திட்டை உள்ளது. உள்ளே சிறு கல் ஊன்றி மாலை அம்மன் கோயில் என அப்பகுதி மக்கள் வழிபடுகிறார்கள். அருகில் 20க்கும் மேற்பட்ட தனி கற்களில் இறந்தவர் பிறப்பு, இறப்பு தேதி பொறிக்கப்பட்டுள்ளது. பெருங்கற்கால மரபின் எச்சமாகப் பல கல்திட்டைகள் நவீனக் காலத்தில் உருவாக்கியதை இங்கு காணலாம்.

கொங்கு நாட்டிலிருந்து விஜய நகர நாயக்கர் காலத்தில் பாண்டிய மண்டலம் வந்த ஒரு இனத்தினர் இங்கும் இறப்பு சடங்கு பின்பற்றியதை இக் கல்திட்டைகள் உணர்த்துகின்றன. திருமங்கலம் வடகரை புதுாரில் சிறு பலகை கல்லில் இரு ஆண் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. வலதுபுறம் இருப்பவர் இடது கையில் வளரி, வலது கையில் வாள், தலையில் கொண்டை வடிவ தலையணி அணிந்து அரை ஆடையுடன் இயக்க நிலையில் உள்ளார்.

இடதுபுறம் இருப்பவர் உயரம் குறைந்து, நீண்ட காது, அரை ஆடையுடன் வலது கையில் வாள், இடது கையில் குடுவை வைத்துள்ளார். தலைக்குப் பக்கவாட்டில் சந்திரன், சூரியன், பூ அமைப்பு உள்ளது.இவர்கள் 400 ஆண்டுகளுக்கு முன் வடகரை ஊரை உருவாக்கிய சோழ மூக்கன், நல்ல மூக்கன் என்ற சகோதரர்கள். இவர்களது வாரிசுகள் இவர்களுக்கு நடுகல் எடுத்து, இன்றும் விழா எடுப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர் என்றனர்.

தெரிவு: முனைவர். ப. தேவி அறிவு செல்வம்
நன்றி: தினமலர் - நவம்பர் 19, 2020
(https://www.dinamalar.com/news_detail.asp?id=2654963)

4. மானுடமும் மாற்றுப்பாலினமும்!

— முனைவர். க. சுபாஷிணி

தமிழகத்தில் சித்ரா பௌர்ணமி திருவிழாவின் போது விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள கூத்தாண்டவர் கோயிலில் ஆண்டுதோறும் நடைபெறுகின்ற திருவிழாவில் மாற்றுப்பாலினத்தோர் ஒன்று கூடுகின்றார்கள்.

இந்தத் திருவிழாவின்போது சித்ரா பௌர்ணமி அன்று இரவு மாற்றுப்பாலினத்தோர் அக்கோயில் பூசாரிகளிடம் தாலி கட்டிக் கொண்டு மறுநாள் காலை அக்கோயிலின் முக்கிய தெய்வமாகிய அரவான் களபலி கொடுக்கப்படுவது போன்ற சடங்கு நிறைவடைந்த பிறகு தன் கழுத்தில் சூட்டப்பட்ட தாலியை அறுத்துக்கொண்டு ஒப்பாரி வைத்து அழுது வெள்ளை புடவை அணிந்து கொண்டு தங்கள் சொந்த ஊர்களுக்குச் செல்வார்கள். இதற்காக இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களிலிருந்தும் லட்சக்கணக்கான திருநங்கையர்கள் இந்த விழாவுக்கு வருகின்றார்கள் என்ற செய்திகளைப் பார்க்கின்றோம். அதேபோன்று தமிழகத்திலுள்ள பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் பொதுமக்களும் வந்து கூடுவார்கள். தமிழகத்தின் பல பகுதிகளில் திரௌபதி அம்மன் கோயில்களில் அரவான் வழிபாடு என்பது தொடர்ந்து நடைபெறுவதைக் காண்கின்றோம்.

இந்த திரௌபதி அம்மன் வழிபாடு என்பது தமிழகத்தின் வடபெண்ணையாற்றுக்குத் தெற்கே, கர்நாடகாவின் தென்பகுதிகளிலும்,

கேரளாவில் சில பகுதிகளிலும், வட தமிழ்நாட்டில் அதிகமாகவும், தஞ்சாவூரிலும் பரவலாக இருப்பதைக் காணமுடியும்.

புகைப்படம் நன்றி: எம்.மீனாக்ஷி, உதவி பேராசிரியர் (ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி)

திரௌபதி அம்மன் கோயில்கள் இருக்கும் இடங்களில் தீமிதி திருவிழா நடப்பது வழக்கம். பாஞ்சாலி அம்மன், தர்மராஜன் கோயில் ஆகியனவும் இதில் முக்கியத்துவம் பெறும் தெய்வங்களாக இருக்கின்றன. இத்தகைய கோயில்களில் திரௌபதி அம்மனே முக்கியக் கடவுளாக இருப்பார். துணை தெய்வங்களாக பீமன், சகாதேவன் என பாண்டவர் ஐவரின் சிலைகளும் சில கோயில்களில் வைக்கப்பட்டிருப்பதைக் காண முடியும். திரௌபதி அம்மன் கோயிலில் பொதுவாக காவல் தெய்வமாக போத்து ராஜா என்ற காவல் தெய்வம் அமைந்திருக்கும். அது ஒரு மனிதர் நடப்பது போன்ற வடிவத்தில், ஒரு கையில் வாள் ஏந்தியவாறும் ஒரு கையில் வெட்டப்பட்ட மனித தலையை வைத்திருப்பது போலும் செய்யப்பட்டிருக்கும். மனித தலைக்குப் பதிலாக மான் அல்லது வேங்கை கையில் இருப்பதாகவும் சில இடங்களில் உள்ள கோயில்களில் காணப்படுகின்றது.

செங்காடு திரௌபதி அம்மன் கோயில் கோபுரத்தில் அரவான் தலை
புகைப்படம் நன்றி: காந்தி பாலசுப்பிரமணியன்

திரௌபதி அம்மன் கோயிலில் இன்னொரு துணை தெய்வத்தையும் காணமுடியும். முத்தால ராவுத்தன் என்ற முஸ்லிம் ஒருவர் காவல் தெய்வமாக அமைக்கப்படுகின்றார். அந்தச் சிலையின் பக்கத்தில் முஸ்லிம் தர்கா சமாதி போன்ற ஒரு அமைப்பையும் வைத்திருப்பார்கள்.

திரௌபதி அம்மன் கோவிலில் வருடத்திற்கு ஒரு முறை பதினெட்டு நாட்கள் திருவிழா நடத்துகின்றனர். இந்த விழாவில் மகாபாரதக் கதை தினம் தினம் சொல்லப்படும். வில்லிபாரதம் அல்லது நல்லாபிள்ளை பாரதம் என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்ட கதைகள் முதல் பத்து நாட்கள் சொல்லப்படும் கதைகளாகின்றன. பின் அதே கதை தெருக்கூத்து வடிவில் நடைபெறுவதும் வழக்கம்.

கூரம் செப்பேடு (புகைப்படம் நன்றி: தகவலாற்றுப்படை, தமிழக அரசு)

வரலாற்றுச் சான்றாக நாம் ஆராயும் போது, பாரதக் கதைகள் சொல்வதற்கான நிவந்தம் வழங்கப்பட்ட செய்தி கூரம் பல்லவர் செப்பேட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. தற்சமயம் இந்தச் செப்பேடு சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஊர் கூரம். பல்லவன் முதலாம் பரமேசுவரவர்மன், கி.பி.7ஆம் நூற்றாண்டு காலத்தில் ஆட்சி செய்தவன். அவன் ஆட்சிக் காலத்தில் வெளியிடப்பட்ட இந்தச் செப்பேடு அரக்கோணம் அருகில் உள்ள பரமேஸ்வரமங்கலம் என்ற ஊரைச் சிறப்பு நகராக வடிவமைப்பதற்காக 6300 (98.44 ஏக்கர்) குழி நிலப்பரப்பு தேர்வு செய்யப்பட்டு இந்த நகரை உருவாக்கும் பொறுப்பு உத்தரகாணிகா மகா சேசன் தத்தன் என்ற ஆணத்தியிடம் தரப்பட்ட செய்தியைக் கூறுகிறது. இந்த நகரில் பரமேஸ்வர தடாகம் என்ற ஏரி வெட்டப்பட்டது என்றும், அதற்குத் தேவையான நீர் இருப்புக்காக பாலாற்றிலிருந்து பெரும்பிடுகு என்ற கால்வாய் வெட்டப்பட்டு நீர்மேளாண்மை நிறுவப்பட்டது என்றும் செப்பேட்டின் வழி அறியமுடிகின்றது.

ஆன்மீக திருவிழாக்களின் மூலம் மக்களை ஒற்றுமைப்படுத்த முடியும் என்ற கருத்தின் அடிப்படையில் இந்த நகரில் கோயில் எழுப்பப்பட்டது. ஊருக்கு நடுவில், மகாபாரதம் வாசிக்கும் மண்டபம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இப்படி நீதிக் கதைகளைச் சொல்லி மக்களை நல்வழிப்படுத்தும் இடமாகவும் அரசின் ஆணைகள், சட்டதிட்டங்களை மக்களுக்குச் சொல்லும் ஊடக மையமாகவும் கோயில்கள் செயல்பட்டன. இத்தகையைச் செய்திகளைச் சொல்லும் முக்கியச் செப்பேடு இந்தக் கூரம் செப்பேடு. ஆக கிபி.7ம் நூற்றாண்டு வாக்கில் மகாபாரதக் கதையைக் கோயிலில் சொல்லும் வழக்கம் பல்லவர்களால் கொண்டுவரப்பட்டதற்கானச் சான்றாக இச்செப்பேடு அமைகின்றது

அரவான் களபலி நாடகம்:
பாரதக் கதை சொல்லும் மரபில் ஒரு நாள் கதை அரவான் களபலி நாடகம் ஆகும். புராணக் கதையின் படி அரவான் அர்ஜுனனுக்கும் உலுப்பி என்ற நாகக்கன்னி பெண்ணுக்கும் பிறந்தவன். அரவான் வியாசபாரதத்தில் சாதாரண மன்னனாகக் காட்டப்படுகிறான். ஆனால் தமிழ் நாட்டில் அரவான் முக்கிய கடவுளாகக் கருதப்படுகிறான்.

தமிழ்நாட்டில் வீரர்கள் போர் வெற்றிக்காகக் கொற்றவைக்குத் தன்னை களபலி கொடுத்துக் கொள்வது போல மகாபாரதத்தில் அரவான் தன்னைத் தானே களபலி கொடுத்துக் கொண்டதாக வழக்குண்டு. தமிழகத்தின் பண்டைய வரலாறு கொற்றவைக்கு களபலி கொடுப்பது பற்றி கூறுகிறது. நவகண்டங்கள் இதற்குச் சான்று பகர்கின்றன. அந்த வகையில் கொற்றவையையே அரவானாகப் பார்க்கும் ஒரு பார்வையையும் அரவான் களப்பலி சடங்கு முன்வைக்கின்றது என்றும் கூறலாம். இது ஆய்வுக்குரியது.

மகாபாரதப்போரில் வெற்றி பெறுவதற்கு முன்னர் சாமுத்திரிகா லட்சணம் பொருந்திய ஒரு நல்ல வீரனைப் பலி கொடுத்தல் வெற்றியை அளிக்கும் என்று சகாதேவன் கூற அவ்வகையில் சாமுத்திரிகா லட்சணம் பொருந்தியவர்கள் கிருஷ்ணன், அர்ஜுனன், அரவான் ஆகிய மூவரும் தான் என அவர்கள் அறிந்து கொள்கின்றனர். கண்ணனும் அர்ஜுனனும் கடமைகள் கொண்டிருப்பதால் அரவானை களபலி ஏற்றுக் கொள்ள தருமர் கேட்டுக் கொள்ள அவனை களபலி கொடுக்க அவன் சம்மதிக்கிறான். போர் முடியும் வரை தான் முழுமையாகப் போரைக் காண வேண்டும் எனவும், தனக்குத் திருமணம் ஆகாததால் ஒரு நாள் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து அவளுடன் குடும்பம் நடத்த வேண்டும் என்றும் இரண்டு வரங்களை அரவான் கேட்கிறான். கிருஷ்ணன் வரங்களை அளிக்கின்றார். மறுநாள் இறக்கப்போகும் ஒருவனை மணக்க வேறு பெண்கள் முன்வராததால் தானே மோகினியாக வடிவம் ஏற்று கிருஷ்ணன் அரவானுடன் கூடி ஒரு நாள் வாழ்வதாகப் புராணம் சொல்கிறது. இதனையே அரவான் நாட்டுப்புறக் கூத்துக் கலையும் கூத்தாண்டவர் விழாவும் பிரதி பலிக்கின்றன.

சடங்குகளும் மாற்றுப்பாலினத்தவர்களும்:
மாற்றுப்பாலினத்தோர், மாற்று பாலீர்ப்பு கொண்டோர் என்னும் சமூகத்தை இந்தப் புராணக் கதைக்குள் மட்டுமே குறுக்கி வைத்துப் பார்ப்பது நமது சமூகத்தில் இருக்கும் ஒரு குறை. புராணக் கதைகள் நம் சமூகச் சிந்தனையில்

ஏற்படுத்தியிருக்கும் அழுக்குகள் என்பது மிக அதிகம். இதில் ஒன்றாகவே இதனையும் காண வேண்டியிருக்கின்றது.

ஒரு வகையில் பண்பாட்டு விழுமியமாக மக்கள் வழக்கத்தில் இத்தகைய சடங்குகள் இருந்தாலும் இன்று நாம் கவனிக்க வேண்டியது மாற்றுப்பாலினத்தோர், மாற்று பாலீர்ப்பு கொண்டோருக்கான அடிப்படை மனித உரிமைகளுக்கான தேவைகளைத்தான்.

ஆண் பெண் என்ற இரண்டு வெவ்வேறு கோணங்கள் (Binary classifications), இதுதான் இயல்பு என்று நம்மைப் பிரித்துப் பார்க்கப் பழக்கியுள்ளன. ஆண் அல்லது பெண் என்ற இரு வகைகளுக்குள் வகைப்படுத்தப்படமுடியாத ஒன்று இயல்பற்ற ஒன்று என்றும் காணும் போக்கு நீண்ட காலமாக நமது மனதிற்குள் வலிந்து திணிக்கப்பட்டுள்ளது. அந்தத் திணிப்பு நடவடிக்கையில் மிக முக்கிய பங்களிப்பு சமயங்களுக்கு இருக்கின்றது. ஆண் என்பவன் யார் என்பதையும் பெண் என்பவள் எப்படிப்பட்டவள், அவள் எப்படி இருக்க வேண்டும் என்பதையும், இவை இரண்டிற்குள் இடம்பெறாதவற்றை இயல்புக்கு மாறானது என்றும் வலிந்து உருவாக்கி வைக்கப்பட்டுள்ள சூழலிலேயே நாம் வளர்ந்து வந்திருக்கின்றோம். இதுதான் சரி, இப்படித்தான் இருக்க வேண்டும். இதுதான் நம் பண்பாடு, இதுதான் நமக்கு நல்லது எனச் சொல்லி, சொல்லி, அடிப்படை பண்பான மானுடத்தை இழந்தவர்களாக நாம் இன்று இருக்கின்றோம்.

மாற்றுப் பாலினத்தவர் எதிர்நோக்குகின்ற சிக்கல்களையும் அதற்கான தீர்வுகளையும் பொதுப்படையாகப் பச்சாதாபத்துடன் பேசுவதைத் தவிர்த்து அவர்கள் நொடிக்கு நொடி சந்திக்கின்ற பிரச்சினையின் மூல காரணத்தை ஆராய வேண்டியது அடிப்படை அவசியமாகின்றது. அப்படி பிரச்சினைகளை அலசும் போது மூன்று வகையில் இந்த பிரச்சனைகளை நாம் பட்டியலிடலாம்.

மாற்றுப் பாலினத்தோருக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகள் மற்றும் பாகுபாடுகள். மாற்றுப் பாலினத்தோருக்கு எதிராக இழைக்கப்படும் வன்கொடுமைகள் மற்றும் அவமானங்கள். மாற்றுப் பாலினத்தோரது அன்றாட வாழ்க்கை நிலை.

மாற்றுப்பாலினத்தவர்களும் சக மனிதர்களே:
பாகுபாடுகள், கொடுமைகள் எனும்போது மாற்றுப் பாலினத்தோருக்கு இழைக்கப்படும் கொடுமைகள் மீது கொடுக்கப்படுகின்ற அழுத்தங்களின் மதிப்பீடு என்பது மிகக் குறைவாகவே இருக்கின்றது. அல்லது மாற்றுப் பாலினத்தவர் சந்திக்கும் கொடுமைகளை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை என்ற அளவுக்குச் சிந்தனை செதுக்கப்பட்டவர்களாக நம் சிந்தனை போக்கு அமைந்திருக்கின்றது.

மாற்றுப் பாலினத்தோருக்கு எதிராக இழைக்கப்படுகின்ற வன்கொடுமைகளுக்குப் பின்னணியில் இருக்கும் காரணங்களை சரியாக அலசுகின்றோமா..? அதற்கான தீர்வுகளைச் சரியாக முன்னெடுக்கின்றோமா..? என்பதும் ஒரு கேள்வியாகவே அமைகின்றது.

பொது வெளியில்.. பள்ளிக்கூடங்களில்.. அலுவலக வெளிகளில்.. மாற்றுப் பாலினத்தவர் மிக இயல்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றார்களா என்பதையும் நாம் கேள்வியாக முன் வைக்க வேண்டி இருக்கின்றது.

நமது இயல்பான சிந்தனைப் போக்கை நாம் பொதுவாகவே கேள்வி எழுப்புவதில்லை. இதுதான் மரபு.. இதுதான் சடங்கு.. பெரியவர்கள் சொன்னார்கள்.. என்று இயந்திரங்கள் போலச் சொல்லிக் கொண்டு சமூகத்தில் நிகழ்கின்ற அநீதிகளை அலசிப் பார்க்காமல் பெரும்பாலானோர் சென்று விடுகின்றோம். நம் சிந்தனைக்குள் திணிக்கப்பட்டுள்ள அழுக்கு மூட்டைகளை அலசிப் பார்க்கும் போது தான் நாம் ஏனைய சக மனிதர்களை எவ்வகையில் அணுகுகின்றோம் என்பதை அறியக்கூடும்.

அடிப்படை உரிமைகள்:
நாம் நம் ஒவ்வொருவரையும் கேள்வி கேட்டுக் கொள்ளும் போதுதான் நம் சிந்தனைப் போக்கை அலசி ஆராயவும் நமக்கு வாய்ப்பு கிடைக்கும். ஆனால் ஒரு சில குறிப்பிட்ட விஷயங்களை ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ள நாம் விரும்புவதில்லை. நம் சிந்தனையில் நமக்குத் திறந்த மனப்பக்குவமும் மிக மிகக் குறைவு. மாற்றுச் சிந்தனையை எதிர்நோக்க நமக்குத் தைரியமும் இல்லை. இப்படிச் சில உதாரணங்களாகச் சொல்வதென்றால் சாதிப் பிரிவினையும் அதனையொட்டி எழுகின்ற பல்வேறு வகையான அநீதிகளையும் தினம் தினம் நாம் வாசித்தாலும் கூட நொடிக்கு நொடி சாதிப்பெருமை பேசும் மனப்பாங்கிலிருந்து கற்றவர்கள் எனச் சொல்லிக் கொள்பவர்கள் கூட தன்னை மாற்றிக் கொள்ளவில்லை. அதைப்போலவே, மாற்றுப் பாலினத்தோரை ஒரு குற்ற உணர்வுடனேயே குடும்பத்திலும் சுற்றுச்சூழலிலும் பொது வெளியிலும் நாம் காண்கின்ற மனப்பான்மை அமைகிறது. எப்படி நாம் நம் மாற்றுப்பாலின உறவுகளை இயல்பாக நம் சூழலில் ஏற்றுக் கொள்கின்றோம் என்ற சிந்தனையும், அவர்களுக்கு சமூகத்தில் நிகழ்கின்ற அநீதிகளையும் பெரும்பாலும் நமது கண்கள் பார்க்கத் தவிர்த்து விடுகின்றன. கேளிக்கைகளிலே நமது மனதைச் செலுத்துவதில் பொதுவாக நாம் விரும்புகிறோம். இதுதான் அடிப்படையாக நமக்கு அமைய வேண்டிய சமூகத்தின் பால் விழிப்புணர்வு என்பது நமக்கு ஏற்படாததற்குக் காரணமாக அமைகின்றது.

மனிதர்களுக்கான அடிப்படை உரிமைகளைப் பற்றி (The Universal Declaration of Human Rights) ஐக்கிய நாடுகள் சபை 10.12.1948ம் ஆண்டு பாரீசில் நடந்த மாநாட்டில் ஆய்வறிக்கை தயாரித்து பிரகடனப்படுத்தியது. தமிழ் உட்பட 500 மொழிகளில் இன்று இந்தப் பிரகடனம் வாசிக்கக் கிடைக்கின்றது.

பிரகடனம் 1: *எல்லா மனிதர்களும் சுதந்திரமாக, சமமான கௌரவத்தோடும், உரிமைகளோடும் பிறந்தவர்கள். (Article 1. All human beings are born free, and equal in dignity and rights.)*

பிரகடனம் 2: *ஒவ்வொருவரும் இன, நிற, பால், மொழி, அரசியல் அல்லது கருத்து வேறுபாடு, தேசிய அல்லது சமூக அடிப்படை, சொத்துக்களால் அல்லது பிறப்பாலான அந்தஸ்து என்ற வேறுபாடுகள் எதுவுமின்றி இப்பிரகடனத்தின் உள் அடக்கப்பட்டுள்ள உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் உரித்தாகின்றார்கள்.*

(Article 2 -Everyone is entitled to all the rights and freedoms set forth in this declaration, without distinction of any kind such as race, colour, sex, language, religion, political or other opinion, national or social origin, property, birth or other status.)



பிரகடனம் 6: *ஒவ்வொருவரும் சட்டத்தின் முன் எல்லா இடங்களிலும் மானிடத்தில் ஒருவராக அங்கீகரிக்கப்படுதல் அவரது அடிப்படை உரிமையாகும். (Article 6 - Everyone has the right to recognition everywhere, as a person before the law.)*

(குறிப்பு: ஐக்கிய நாடுகளின் சபை The Universal Declaration of Human Rights என்ற பெயரில் வெளியிட்ட இப்பிரகடனத்தைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டவர் திரு.தா.தேச இலங்கை மன்னன்)

ஐக்கிய நாடுகள் சபையின் செயல்பாடுகளை அலசிப்பார்க்கும் போது மிக ஆழமாக மாற்றுப்பாலினத்தோர் தொடர்பான சமூக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற முயற்சிகள் கடந்த சில ஆண்டுகளில் முக்கியத்துவம் பெற்றிருப்பதைக் காணமுடிகின்றது. அந்த வகையில் 7.3.2012ல் Sexual Orientation and Gender Identity என்ற பொருளில் பால்வேறுபாடுகள் பற்றிய புரிதல் மற்றும் பால் வேறுபாட்டின் அடையாளம் தொடர்பான பிரச்சனைகளைப் பேச ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையம் ஒன்று கூடியது. அதில் வரையறுக்கப்பட்ட தீர்மானங்கள் 17/19, முதல் முறையாக மாற்றுப்பாலினத்தோர், மற்றும் மாற்றுப்பாலீர்ப்பு கொண்டோருக்கான தேவைகளைச் சிறப்புக் கவனத்துடன் அலசியது.



ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பு மாற்றுப்பாலினத்தோர் நலனுக்காக 2011ம் ஆண்டில் ஒரு ஆய்வறிக்கையைச் சமர்ப்பித்தது. 'Discrimination on grounds of sexual orientation and gender identity' என்ற பெயரிலான அறிக்கை அது. இதில் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கத்துவம் பெற்ற 47 உறுப்பு நாடுகளும் கையெழுத்திட்டன. 2014ம் ஆண்டில் "A boy or a girl or a person – intersex people lack recognition in Europe" என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டு திறந்த மனப்போக்கிற்கான சிந்தனையை ஆழமாக ஐரோப்பிய மக்களிடையே கொண்டு சென்றது ஐக்கிய நாடுகள் சபை. 2015ம் ஆண்டில் மாற்றுப்பாலினத்தோர் நலனை முன் வைத்துச் செய்யப்பட்ட விரிவான ஆய்வறிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபை வெளியிட்டது. ஆங்கிலம், பிரஞ்சு என இரு மொழிகளில் இந்த அறிக்கை கிடைக்கின்றது.

மாற்றுப்பாலினத்தவர் திருமணம்:

மாற்றுப்பாலினத்தோரிடையே செய்துகொள்ளப்படும் திருமணத்தை அங்கீகரிக்கும் உலக நாடுகளாக இன்று 28 நாடுகள் பட்டியலில் இடம் பெறுகின்றன. அப்பட்டியலில் முதலாவதாக இடம்பெற்று மானுடத்திற்குப் பெருமை தேடிக்கொள்கின்றது நெதர்லாந்து. 1.4.2001ல் மாற்றுப்பாலினத்தோரிடையேயான திருமணத்தை நெதர்லாந்து அரசு அங்கீகரித்தது. இதனையடுத்து பெல்ஜியம் மற்றும் தொடர்ச்சியாக ஏனைய ஐரோப்பிய நாடுகள் இவ்வரிசையில் இடம்பிடிக்கின்றன.

மாற்றுப்பாலினத்தோரிடையே திருமணம் செய்து கொள்வதை அனுமதிக்கலாமா என்ற கருத்துக் கணிப்பு உலகெங்கும் நிகழ்த்தப்பட்டது. அதில் 92% மக்கள் இது இயல்பானது தான் என்றும் தேவையானதும் கூட என்றும் கூறியிருப்பது சுவீடன் நாட்டில். சுவீடனுக்கு அடுத்து நெதர்லாந்து, டென்மார்க், ஐஸ்லாந்து, ஸ்பெயின், லுக்ஸம்பெர்க், இங்கிலாந்து, ஜெர்மனி, பெல்ஜியம், சுவிஸர்லாந்து, பிரான்சு, ஃபின்லாந்து ஆகிய நாடுகள் முதல் பட்டியலில் மாற்றுப்பாலினத்தோரிடையே

திருமணம் செய்து கொள்வதை அங்கீகரித்து வரவேற்பதைப் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

Opinion polls for same-sex marriage by country

- Same-sex marriage performed nationwide
- Same-sex marriage performed in some parts of the country
- Civil unions or registered partnerships nationwide
- Same-sex sexual activity is illegal

Country	Pollster	Year	For[a]	Against[a]	Neither[b]
Sweden	Eurobarometer	2019	92% (94%)	6% (6%)	2%
Netherlands	Eurobarometer	2019	92%	8%	0%
Denmark	Eurobarometer	2019	89% (92%)	8% (8%)	3%
Iceland	Gallup	2006	89%	11%	–
Spain	Eurobarometer	2019	86% (91%)	9% (9%)	5%
Luxembourg	Eurobarometer	2019	85% (90%)	9% (10%)	6%
United Kingdom	Eurobarometer	2019	85% (88%)	12% (12%)	3%
Germany	Eurobarometer	2019	84% (88%)	12% (12%)	4%
Belgium	Eurobarometer	2019	82% (83%)	17% (17%)	1%
Switzerland	gfs-zürich	2020	81% (82%)	18% (18%)	1%
Ireland	Eurobarometer	2019	79% (86%)	13% (14%)	8%
France	Eurobarometer	2019	79% (84%)	15% (16%)	6%
Finland	Eurobarometer	2019	76% (78%)	21% (22%)	3%

நன்றி: *https://en.wikipedia.org/wiki/Legalstatusofsame-sexmarriage*

மாற்றுப்பாலினத்தவர் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளில் ஆரம்பப் புள்ளியாக அமைவது அவர்களது குடும்பம் மற்றும் அவர்கள் பிறந்து வளர்கின்ற சூழல் தான். சரியான புரிதல் இல்லாத காரணத்தினாலும், அறிவியல் அடிப்படையில் மனித உடல் மற்றும் பால் வேறுபாடுகள், உடலிலுள்ள வேறுபாடுகளைப் பற்றிய புரிதல் இல்லாத காரணத்தினாலும் சக மனிதர்கள் என்ற எண்ணம் சிறிதும் இல்லாமல் மாற்றுப்பாலினத்தவர் பலர் பல இன்னல்களைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதை நாம் மறுக்க முடியாது. சர்வசாதாரணமாக மாற்றுப்பாலினத்தவர்களைப் பார்த்து முகம் சுளித்து ஒதுங்கிப் போவதிலிருந்து, பாலியல் வன்கொடுமை, கொடூரமான கொலைகள் என்பதுவரை, பல்வேறு கொடுமைகள் தமிழ்ச்சூழலில் நிகழ்ந்திருக்கின்றன, நிகழ்ந்து கொண்டுமிருக்கின்றன.

ஆனாலும் கூட, கடும் சொற்களையும் புறக்கணிப்புக்களையும் கடந்து சக மனிதர்கள் கொடுக்கின்ற தாக்குதல்களையும் வலிகளையும் ஏற்றுக்கொண்டு துவண்டுவிடாமல்

தங்கள் வாழ்க்கையையும் மேம்படுத்திக் கொண்டு தங்கள் சக மாற்றுப் பாலின உறவுகளுக்கும் விடியலை ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற நோக்கத்துடன் அயராது உழைக்கும் தோழர்கள் சிலர் நம்மிடையே இன்று உருவாகியிருக்கின்றார்கள். மாற்றுப் பாலினத்தவர்களும் சமூகத்தில் ஒரு அங்கமே என்ற செய்தியை வலியுறுத்தும் வகையில் விழிப்புணர்வு செயல்பாடுகளை அவர்கள் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றார்கள்.

மிக முக்கியமாக நம் சமூகத்தில் சுயபரிசோதனை, மற்றும் விழிப்புணர்வு என்பது நம் ஒவ்வொருவரிடமும் ஏற்பட வேண்டிய தேவை இருக்கின்றது.

நட்பும், விழிப்புணர்வும்:

பெற்றோரும் ஆசிரியரும் மாற்றுப் பாலின குழந்தைகளிடம் அவர்கள் மனதில் வேதனையையும் குற்ற உணர்வையும் விதைக்காமல் அவர்கள் இயல்பாக தங்களை அறிந்து கொள்ளவும், கல்வியில் உயர்ந்து தரமான பொருளாதார சூழலை அவர்கள் எட்டவும் வாய்ப்பளிக்க வேண்டும் என்பதை நாம் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகின்றது. நமது நட்பு வட்டத்தில் மாற்றுப் பாலின உறவுகளையும் நாம் எந்த தயக்கமுமின்றி இணைத்து அரவணைத்து இயங்க வேண்டும். சடங்குகளும் சம்பிரதாயங்களும் புராணங்களும் சமயங்களும் சொல்கின்ற பொருளற்ற வரையறைகளை ஒதுக்கி மானுட பண்பை வளர்க்கும் வகையில் நமது செயல்பாடுகளை நாம் கூர்மையாக்கிச் செயல்பட வேண்டிய காலகட்டத்தில் இருக்கின்றோம். ஏனெனில், மிக நீண்டகாலமாக சமயங்களும் சடங்குகளும் சம்பிரதாயங்களும் புராணங்களும் நமது மனதில் மனிதகுலத்துக்கு எதிரான பல விஷயங்களை ஆழமாக விதைத்து விட்டன. அவற்றைக் களைய வேண்டியது நம் ஒவ்வொருவருக்கும் இருக்கின்ற கடமை.

குடும்பத்தில் அங்கீகாரம், சமூகத்தில் அங்கீகாரம் என்பதோடு அரசியல் தளத்திலும் மாற்றுப்பாலினத்தோருக்கான அங்கீகாரம் என்பது தேவை. ஐரோப்பிய நாடுகளில் விரிவாகவும் வட அமெரிக்காவில் சில இடங்களிலும், இன்று உலக அளவில் அரசியல் தளங்களில் இயங்கும் மாற்றுப்பாலின அரசியல் தலைவர்கள் சிலர் தென்படுகின்றனர்.

வெளிப்படையாகத் தன்னை ஒரு மாற்றுப்பாலின அரசியல்வாதியாக அடையாளம் காட்டிக்கொண்டவர் பட்டியலில் முதலிடம் பெறுபவர் ஜெர்மனியைச் சார்ந்த கிறிஸ்டியான் ஷென்க் என்பவர். நாடாளுமன்ற உறுப்பினராக 1990ம் ஆண்டில் ஜெர்மனி நாடாளுமன்றத்தில் இவர் செயல்பட்டிருக்கின்றார்.

அதனை அடுத்து வட அமெரிக்காவின் ஆல்த்தியா கேரிசன் மேசசூசட்ஸ் சட்டமன்றத்தில் 1992ல் செயல்பட்டிருக்கின்றார். கமிலி காப்ரியல் பிரான்சின் கவுன்சில் உறுப்பினராக 2001ம் ஆண்டில் செயல்பட்டிருக்கின்றார். 2002ல் இங்கிலாந்தில் ஜென்னி பெய்லி என்பவர் கேம்பிரிட்ஜ் நகர கவுன்சிலராகச் செயல்பட்டிருக்கின்றார். 2006ம் ஆண்டில் இத்தாலியைச் சார்ந்த விலாடிமியர் லுக்சுரியா என்பவர் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில் செயல்பட்டிருக்கின்றார்.

அரசியல் பிரதிநிதித்துவம் என்பது மாற்றுப்பாலினத்தோர் நலன்களை முன்னெடுக்க மிக முக்கியத் தேவையாகின்றது. இந்தத் தேவைகளை சமூகத்தில் வலியுறுத்த வேண்டிய கடமையும் சமூகப்பொதுநல அமைப்புக்களது கடமையுமாகின்றது.

நமது சூழலில், மாற்றுப்பாலினத்தோர், மற்றும் மாற்று பாலீர்ப்பு கொண்டோர் பற்றிய நமது சிந்தனையில் ஏராளமான மறு ஆய்வுகள் தேவைப்படுகின்றது. பண்பாட்டு ரீதியாகவும் சமூகவியல் ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் நாம் எல்லோரும் சமம் என்ற தெளிவுடன் நாம் மாற்றுப்பாலினத்தோரை அரவணைத்துச் செல்ல வேண்டியது மானுடத்தின் அவசியம்.

மாற்றுப்பாலினத்தோர் மற்றும் மாற்று பாலீர்ப்பு கொண்டோர் என்ற பெயர் கூட பொருந்துமா என்ற கேள்வி எழுகின்றது. ஆங்கிலத்தில் LGBTQI - lesbian, gay, bisexual, transgender, queer and intersexed community என வேறுபாடுகளின் தனித்துவத்தை மதிப்பளித்து சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழில் இன்றும் அரவாணிகள், மாற்றுப்பாலினத்தோர், திருநங்கை, திருநம்பி என்ற சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. கொச்சை மொழிகளில் மாற்றுப்பாலினத்தோரை வசை மொழியாகவும் கேலியாகவும் பேசும் தரம் தாழ்ந்த போக்கும் நமது சமூகத்தில் ஆழ வேரூன்றிப் போயுள்ளது. திரைத்துறை கலாச்சாரம் இதனை மேலும் நம்மிடையே விரிவாக்கியுள்ளது. இவற்றை மாற்றவேண்டும், மனிதத்தை நிலைநாட்ட வேண்டுமென்றால், மொழிவழி அடையாளம், சமூக அங்கீகாரம், இயல்பான பிரச்சனைகளுக்கான தீர்வு காணுதல், கல்வி, தொழில் மேம்பாடு என்பதோடு மாற்றுப்பாலினத்தோருக்கான அரசியல் பிரதிநிதித்துவம் பற்றிய முயற்சிகளும் தீவிரப்படுத்தப்பட வேண்டிய தேவை இருக்கின்றது.

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் வையத்தலைமை கொள் பிரிவு அக்டோபர் 30, 2020 தொடங்கி நவம்பர் 1, 2020 வரை மூன்று நாட்கள் ஏற்பாடு செய்து நடத்திய இணைய வழி விழிப்புணர்வு கருத்தரங்கில் பகிர்ந்து கொள்ளப்பட்ட கட்டுரையாசிரியரின் கருத்தரங்க நோக்கவுரை. இந்த 3 நாட்கள் நடைபெற்ற கருத்தரங்கில் தமிழ் மரபு அறக்கட்டளையின் வையத்தலைமை கொள் பிரிவு இரண்டு காணொளிகளை வெளியிட்டது.

(1) LGBT - ஒரு அறிமுகம் [https://youtu.be/MsiO198Kqec]
(2) `மாற்றுப்பாலினம் & பாலீர்ப்பு கொண்டோர் நலவாழ்வு [https://youtu.be/kRwXwwuQtCk]
என்ற பகுதியிலிருந்து காணலாம்.
இந்த நிகழ்ச்சி பற்றிய செய்திகள் [https://ruletheworld.tamilheritage.org/category/2020-lgbtq-conference/]
என்ற பகுதியிலிருந்து காணலாம்.

நன்றி: மின்னம்பலம் (நவம்பர் 8, 2020)

5. மாற்றுப்பாலினம், பாலீர்ப்பு கொண்டோர் இணையவழிக் கருத்தரங்கம்.

— முனைவர். பாப்பா

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் வையத்தலைமை கொள் பிரிவு அக்டோபர் 30, 2020 தொடங்கி நவம்பர் 1, 2020 வரை மூன்று நாட்கள் ஏற்பாடு செய்து நடத்திய இணைய வழி விழிப்புணர்வு கருத்தரங்கம் ஒன்றை நடத்தியது. இக்கருத்தரங்கம் 'கலையும் வரலாறும்', 'பண்பாடும் மானுடவியலும்' மற்றும் 'சமூகச்சிக்கல்களும் சாதனைகளும்' என மூன்று தலைப்புகளில் நடைபெற்றது. இதில் மொத்தம் ஒன்பது கருத்துரைகளும் மூன்று சிறப்புரைகளும் நிகழ்த்தப்பெற்றன.

மூன்று நாட்களும் கருத்தரங்க நிகழ்வுகளைத் தோழர் ஆனந்தி, முனைவர் பாப்பா, தோழர் மலர்விழி ஆகியோர் நெறியாள்கை செய்தனர். தோழர் மலர்விழி, முனைவர் சாந்தினிபீ, முனைவர் தேமொழி ஆகியோர் வரவேற்புரை வழங்கினர்.

தமிழ் மரபு அறக்கட்டளை நிறுவனர் முனைவர் சுபாஷிணி மூன்று நாட்களும் நோக்கவுரையாற்றினார். சமூகத்தில் தொடர்ந்து பேசப்படாத, புறக்கணிக்கப்பட்டு வருகிற மனிதர்கள் பற்றிப் பேசுவதற்கான தளத்தினை உருவாக்கும் நோக்கத்தில் இக்கருத்தரங்கு நடத்தப்படுவதாகக் கூறினார். வரலாறு, இலக்கியம், வழிபாடு, கூவாகம் திருவிழா, தொல்லியல் மற்றும் பாரதக்கதை சொல்லும் மரபு போன்ற நிலைகளில் மாற்றுப்பாலினம் பற்றிய செய்திகள் காலந்தோறும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

1948இல் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைச் சாசனம் மனிதர்கள் அனைவரும் சமம் என்று வெளியிட்டது. 2014இல் அவர்கள் வெளியிட்ட அறிக்கை தமிழில் உள்ளது. இவர்களுக்கெனத் தனிச்சட்டம் இயற்றப்பட்டு அது பதினான்கு மொழிகளில் வெளியிடப்பட்டிருக்கிறது. தமிழில் மொழிபெயர்ப்பு செய்யும் பணியைத் தமிழ் மரபு அறக்கட்டளை மேற்கொள்ளும் என்றும் தெரிவித்தார். மாற்றுப்பாலினம் பற்றிய விழிப்புணர்வு உருவாவதற்குப் பள்ளிக்கூடச் சூழலில் மாற்றம் வேண்டும். அதற்கு ஆசிரியர்களுக்கு நாம் உதவவேண்டும். ஐரோப்பா, அமெரிக்கா போன்ற உலக நாடுகளில் வெளிப்படையாகத் தம்மை மாற்றுப்பாலினம் என்று வெளிப்படுத்திக்கொண்டு இவர்கள் மகிழ்ச்சியாக வாழ்வதைப் போல நமது சூழலிலும் மாற்றுச்சிந்தனை தேவை என்று கூறியதோடு உலகளாவிய நிலையில் மாற்றுப்பாலினச் சாதனையாளர்களைப் பட்டியலிட்டார்.

மூன்று நாட்களும் நோக்கவுரையைத் தொடர்ந்து பங்கேற்பாளர்களின் புரிதலுக்காக LGBT குறித்த காணொலி ஒன்று திரையிடப்பட்டது.

மூன்று நாட்களும் நடைபெற்ற கலந்துரையாடல் பங்கேற்பாளர்களிடையே LGBT குறித்ததொரு நல்ல புரிதலையும் இதுகுறித்துப் பரந்துபட்ட மனதுடன் வெளிப்படையான பேச்சுக்கும் வழி செய்தது.

முதல் நாள் நிகழ்வு: கலையும் வரலாறும் :

முதல் கருத்துரை ஸ்ரீ ஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியின் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் முனைவர் கற்பகவள்ளி அவர்களுடையது. மீவியல்பு கொண்டவர்கள் என்று தோழர்களைக் கூறுவதில் பெருமையடைகிறேன் என்று மகிழ்வுடன் கூறினார். அலெக்சாண்டர் இவர்களுக்கு அதிக சக்தி இருப்பதாக எண்ணித் தமது ஆட்சியில் அனைத்துத் துறைகளிலும் வாய்ப்புக் கொடுத்தது, மாலிக்கபூர்,

அலாவுதீனுக்கு மிடையிலான நட்பு போன்ற வரலாற்றுச் செய்திகளையும் மகாபாரதம், சீவக சிந்தாமணி ஆகிய இலக்கியங்களிலிருந்து சான்றுகளையும் எடுத்துரைத்தார். இவர்களுக்கான அனைத்து வாய்ப்புகளும் இந்தியாவில் குறைவு என்றாலும் தமிழகத்தில்தான் முதன்முதலில் (2008) மாற்றுப்பாலினத்தவர் நலவாரியம் தொடங்கப்பட்டதையும் இவர்களுக்கென தனிக்குடும்ப அட்டை, கடனுதவி, மருத்துவக்காப்பீடு, வேலைவாய்ப்புப்பயிற்சி, அரசு மருத்துவ மனைகளில் இலவசமாகப் பாலின அறுவை சிகிச்சை, கல்வி நிலையங்களில் கல்வி கற்பதற்கு அனுமதி போன்றவை வழங்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

சமூகத்தில் மனிதராக இவர்களுக்கு மரியாதை தரவேண்டும், அவர்களது குறைகளை முதலில் கேட்கவேண்டும், இவர்கள் சமூகச்செயல்பாடுகளில் ஈடுபடுவதை ஊக்குவிக்க வேண்டும், பள்ளிகளிலேயே இது பற்றிய ஆரம்ப விழிப்புணர்வுக் கல்வியைக் கொடுத்தோமானால் இவ்வயதில் இத்தோழமைகளுக்கு ஏற்படும் உடலியல் ரீதியான மாற்றங்களை மற்றவர்கள் புரிந்து கொள்வதற்கு உதவியாக அமையும் அதை நாம் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இரண்டாவதாக, சங்கம நிறுவனத்தின் துணைத்தலைவர், சமூகச் செயல்பாட்டுக்கான கேரள அரசின் விருது (2012) பெற்றவர், எழுத்தாளர் தோழர் ஷீத்தல். தமிழகத்தில் எங்களை மனிதராகப் பார்க்கிற மனது இருக்கிறது. கேரளத்தில் அது இல்லை, இப்பொழுதுதான் பெண்கள் எங்களைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று தனது உரையைத் தொடங்கினார். மூன்றாம் பாலினம் என்று ஏன் எங்களைச் சொல்ல வேண்டும். முதல், இரண்டு, மூன்று என்று இடங்களை வரையறை செய்தது யார்? அதற்கான அடிப்படை எது? ஆண், பெண் இருவரது குணங்களும் கொண்ட நாங்களே முதலிடம் என்கிற கேள்வி, கருத்து இரண்டினையும் முன்வைத்தார்.

சமூகம் மற்றும் சட்டரீதியில் இவர்களுக்குக் கிடைத்த அங்கீகாரத்தை எடுத்துரைத்தார். இவர்களும் மனிதர்களே, சமூகத்தில் அனைத்து உரிமைகளும் இவர்களுக்கு உண்டு என்று 2014 ஆம் ஆண்டில் கேரளாவில் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது, இவ்வாண்டில் மாற்றுப்பாலினம் குறித்த கணக்கீடு ஒன்றைத் தான் செய்தது, 'ரெயின்போ' என்கிற பெயரில் அரசுடன் இணைந்து ஆய்வுத்திட்டம் தொடங்கி இத்தோழமைகளுக்காகப் போராடுவது பற்றியும் பேசினார்.

முதலில் ஆண்களுக்கு, பிள்ளைகளுக்கு இது குறித்துக் கற்றுத்தருதல் வேண்டும். நான் எப்படி வாழ வேண்டும், எனது ஆசை, கனவுக்கேற்ற வகையில் நான் வாழ வேண்டும் என்றும் எங்குமே எங்களுக்கான இடம் இல்லை. பிரச்சனைகள்தான். நாங்கள் போராடுகிறோம். நீங்களும் எங்களுடன் சேருங்கள். எங்களுக்காகப் பேசுங்கள் என்றும் கூறினார். தன்னம்பிக்கையுடன் கூடிய இவரது உரை நமக்கும் உற்சாகத்தைத் தந்தது.

இதையடுத்து கேரளத் திருநங்கையர் பற்றித் தோழர் ஸ்ரீஜித் சுந்தரம் தயாரித்த 'பறையான் மறந்த கதை' நாடகக் காணொலி திரையிடப்பட்டது. இந்நாடகத்தில் வாழ்க்கைதான் துயரமானது, இறப்பும் துயரமா? என்று இறந்துபோன உடல்களின்

ஆவிகள் கேட்பதாக இறுதிக்காட்சி அமைத்திருப்பதையும் சமீபத்தில் சென்னையில் தோழர் சங்கீதா கொடுமையாகக் கொல்லப்பட்டது குறித்தும் பேசினார்.

சமூகத்தில் தங்களைப் பற்றிய தரவுகள் கலைவழியே சொல்லப்பட்டதாகத்தான் இருக்கின்றனவே தவிர களப்பணி வழியானதாகவோ, நேரடி அனுபவங்கள் வாயிலானதாகவோ இல்லை என்றார். பதினைந்து வருடங்களாகத் தான் நடத்திவரும் 'கட்டியக்காரி' நாடக அமைப்பின்வழி நடத்தப்பெற்ற மிளகாய்ப்பொடி, அவமானம், பறையான் மறந்த கதை போன்ற நாடகங்களின் உருவாக்கம், பின்னணி, இதற்குப் பேரா. மங்கையின் மிகுந்த ஆதரவு கிடைத்தது பற்றியும் எடுத்துரைத்ததோடு தங்கள் வாழ்க்கையில் கலை மூலம் முக்கியமான பணியைச் செய்து வருவதாகவும் அதேநேரம் நாடகக்கலையில் பங்கேற்கும் தோழமைகள் கூட வெளிப்படையான பகிர்தலை வைத்துக் கொள்ள முடியாத அளவிற்கு இச்சமூகத்தின் புரிதல் உள்ளது என்றும் கூறினார். கட்டியக்காரி என்கிற தனது நாடக அமைப்பின் பெயரை விளக்கும் பொழுது நாட்டில் பெயர் குறித்த பிழை திருத்தங்கள் காட்டப்படுவதுதான் அதிகம், நாங்கள் பேசுவதை, எங்கள் வலிகளை யாரும் கேட்கமாட்டார்கள் என்றும் வருந்தினார்.

மதுரையில் தோழர் பிரியா பாபுவால் தொடங்கப்பட்டிருக்கிற திருநங்கைகளுக்கான ஆய்வு மையத்தினைக் கல்லூரி மாணவர்கள் அதிகம் பயன்படுத்துவது வரவேற்கத்தக்க ஒன்று. நாடகக்கலைவழி திருநங்கைகள் வாழ்வியலைச் சமூகத்திற்குப் பறைசாற்றும் இவரது உரை கேட்பவர் மனதைக் கனக்கச் செய்தது.

இன்றைய சிறப்புரையாளர் முனைவர் கட்டளை கைலாசம் தமது இளவயதுப் பருவத்திலும் இத்தோழமை பற்றிய அறிதலும் பகிர்தலுக்குமான வாய்ப்பு இல்லை என்று தனது உரையைத் தொடங்கினார். 1992 ஆம் ஆண்டு பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரி, நாட்டார் வழக்காற்றியல் மையத்தில் திரௌபதி வழிபாடு பற்றி விரிவான ஆய்வு செய்த ஆல்ஃப் ஹில்டபெடல் என்பவரது தொடர் சொற்பொழிவுகள் பற்றிக் கூறினார். நவம்பர் 1ஆம் தேதி திருநங்கையருக்கான மின்னிதழ் மதுரையில் பிரியா பாபு அவர்களால் தொடங்கப்படவிருப்பதையும் தெரியப்படுத்தினார். திருநங்கைகள் பற்றிய இலக்கியத்தரங்களை மிகுதியாகப் பகிர்ந்து கொண்டார்.

ஆந்திராவின் ஹைதராபாத்தில் தொடங்கி தென்மாவட்டங்கள் வரையிலான திருநங்கையரின் தோற்றக்கதைகள் பற்றியும் கூவாகம் திருவிழா, வட இந்தியாவில் வாழும் இவர்களது பிரிவுகள், மொழி, உறவுமுறைகள் இவர்களது நூல்கள், இவர்களைப் பற்றிய நூல்கள் குறித்தும் விளக்கமாகக் கூறியதோடு இது குறித்த ஆழமான ஆய்வு தேவை, இன்னும் நாம் இவர்களை முதலில் ஏற்றுக் கொள்ளவேண்டும். குடும்பம் பள்ளி, சமூகம் என அனைவரும் ஏற்பதோடு இவர்களை நேசிப்பதே நமது கடமை என்றும் தனது உரையை முடித்துக் கொண்டார்.

இரண்டாம் நாள் நிகழ்வு: மானுடவியலும் கலாச்சாரமும்:

இரண்டாம் நாள் நிகழ்வில் முதலில் பேசியவர் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் நிர்வாகவியல் துறைப்பேராசிரியர் செந்தில்குமார் அவர்கள். திருநங்கையர் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை மக்களிடையே தொடர்ந்து நடத்திக் கொண்டிருப்பதால் களப்பணி அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். உலகளாவிய நிலையில் மாற்றுப்பாலினத்தாரின் நிலை ஒரே மாதிரியாக, உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில்தான் இருக்கிறது. ஜனநாயக ஆட்சியிலும் இந்நிலை மாறவில்லை என்பதைத் தமது ஆய்வுத்தரவுகளோடு விளக்கினார். கல்வி, பொருளாதாரத்தில் கட்டாயம் முன்னேற்றம் தேவை. அதுவே அவர்களை உயர்த்தும் வழிமுறையாகும் என்றார்.

இரண்டாவதாகப் பேசியவர் திருப்பூர் எல். ஆர். ஜி மகளிர் அரசு கலைக் கல்லூரியின் தமிழ்துறைப் பேராசிரியர் அமைதி அரசு அவர்கள். மாற்றுப்பாலினத் தோழமைகளுக்கான சக்தி, திறமை, ஆளுமை, கலைத்தன்மை போன்ற தனித்த வெளிக்கு நாடக உலகம் பேருதவியாக இருக்கிறது என்பதைத் தமது கூத்துப்பட்டறை அனுபவங்கள் வழித் தெளிவாக விளக்கினார்.

மூன்றாவதாகப் பேசியவர் இருபது வருடங்களுக்கும் மேலாக விளிம்புநிலை மக்களிடம் பணியாற்றிவரும் தோழர் கலைமாமணி சுதா அவர்கள். ஒருசில மனிதர்கள் ஓரிரு சமயங்களில் செயலாற்றுவதை மட்டும் வைத்து அவர்களைத் தவறாக எடைபோடக்கூடாது. இது திருநங்கைகளுக்கும் பொருந்தும். எங்களுடனான உங்களது நட்பு, அனுபவம் குறித்தும் அவ்வனுபவம் நல்லதாக இல்லாவிட்டாலும் பேசுங்கள், எழுதுங்கள் என்று கேட்டுக்கொண்டார். தனது சமூகத்திற்கான முன்னேற்றமும் மாற்றமும் இப்பொழுது அதிகமாகத்தான் இருக்கிறது என்று கூறினார். திருநங்கையர் கூடுமிடமாகிய ஜமாத், இவர்களது சடங்குகளான தத்தெடுத்தல், தாயாகிய சேலா, பாலூற்றும் திருவிழா, இவர்களது உறவுகளுக்கிடையேயான வலிமை அதாவது இந்தியாவில் எந்தப் பகுதிக்குச்

சென்றாலும் ஏதாவதொரு திருநங்கையைப் பார்த்தால் போதும் தங்குமிடம், உணவு போன்ற சிக்கல்கள் தீர்ந்துவிடும் என்று பண்பாடு ரீதியிலான தரவுகளைத் தம் உரையாக்கினார். குடும்பம் எனும்போது இரண்டு ஏற்கவியலாத, வருந்தத்தக்க நிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறினார். ஒன்று – திருநங்கையாக மாறியபின் ஒருவரை அவரது குடும்பம் அவர் எவ்வழியில் சம்பாதித்தாலும் பரவாயில்லை என்று அப்பணத்திற்காக மட்டுமே ஏற்கிறது, இரண்டு – குடும்பம் ஏற்பதைப் பெரிதாக நினைக்கும் திருநங்கையரும் சாதி, சமயத்தைப் பின்பற்றத் தொடங்கிவிட்டனர். இன்னும் மாற்றுப்பாலினத்தவர் தன்னைப் பற்றி அறிந்த பிறகு குடும்பத்திலிருந்து வெளியில் வருவதே சரி என்றும் இல்லையெனில் அக்குடும்பம் அவரைப் பெண்ணாகவே இருத்தி இன்னொரு ஆணுக்குத் திருமணம் செய்வித்து இருவரது வாழ்க்கையையும் பாழாக்கிவிடும் என்றார். மேலும் திருநங்கையைவிடத் திருநம்பியர் வாழ்வு இன்னும் சிக்கலானது, இது குறித்த புரிதலும் தேவை என்றும் பேசியது யதார்த்தத்தை வெளிச்சமிட்டுக் காட்டியதாக இருந்தது.

சிறப்புரையாளர் சுப. வீரபாண்டியன் அவர்கள் இக்கருத்தரங்கில் என்னைப் பேசத்தான் அழைத்தார்கள், ஆனால் இரண்டு நாட்களும் நான் நிறைய கற்றுக்கொண்டேன் என்று திறந்த மனதோடு பேசத் தொடங்கி சமூக மாற்றம் நிகழ்ந்து கொண்டே இருப்பதுதான். சமூக உளவியல்தான் சமூகத்தை வழிநடத்துகிறது என்று கூறி அதனை மேட்டிமைத்தனமும் ஒவ்வாமையும், புறக்கணிப்பு, அவமதிப்பு, பரிவு, தோழமை என்கிற ஐந்து நிலைகளில் விளக்கினார். சுதந்திரமும் சுயமரியாதையும்தான் மனிதனுக்கு முதல் தேவை. ஒவ்வொரு மனிதனும் இதுபற்றி நினைக்கும் போதுதான் சமூகம் மாறுகிறது. சமூகத்தில் எதையுமே தரப்படுத்துதல் மற்றும் வரிசைப்படுத்துதலே தவறான ஒன்று என்றதோடு மனித உரிமைகள் குறித்த கருத்துக்களைப் பிடல் காஸ்ட்ரோவில் தொடங்கி சகோதரத்துவம், சமத்துவம், சுதந்திரம் என்கிற புத்தர், அம்பேத்கர் கருத்துக்களுடன் முடித்தார்.

மூன்றாம் நாள் நிகழ்வு: சமூகச்சிக்கல்களும் சாதனைகளும் :

ஏழாவது கருத்துரையை வழங்கிய இலங்கையைச் சார்ந்த ஏஞ்சல் குயின்ரஸ் சமூகத்தில் தங்களுக்கான இடம் பற்றிய விழிப்புணர்வு இருந்ததால் கல்வி கற்கும் பொருட்டு எட்டு வயதில் உணர்ந்த தனது நிலையைப் பதினாறு வயதில் வெளிப்படுத்தியதாகவும் இந்த ஒடுக்குமுறையே சமூகம் பற்றிய சிந்தனையைத் தனக்குக் கொடுத்தது என்றும் கூறினார்.

இந்தியாவில் அதிகார ஒடுக்குமுறை, திருநங்கையருக்குள்ளும் ஒருவரையொருவர் ஒடுக்குதல் உள்ளது. அது போன்று இலங்கையிலும் வந்துவிடக்கூடாது என்று நினைத்தோம் என்று கூறினாலும் இந்தியாவில் தனக்கு அநேகம்பேர் உதவி செய்திருக்கிறார்கள். அதற்குத் தான் நன்றிக்கடன் பட்டிருப்பதாகவும் கூறினார்.

இலங்கையில் Jafna Transgender Network அமைப்பின்வழி சுயதொழிலுக்கான உதவியும் பயிற்சியும் வழங்குதல், இவர்கள் தமது அடையாளத்தை வெளிப்படுத்துவதற்கான சிக்கல் இருப்பதால் உளவியல் ரீதியாக ஆறுதல் தருதல், உங்கள் வாழ்க்கையை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும் என்கிற விழிப்புணர்வைக் கொடுத்தல் என்கிற வகையில் பணிசெய்து வருவதையும் அரசுக்கும் அதிகாரிகளுக்கும் இப்படியொரு சமூகம் இருப்பதையும் இவர்களது சிக்கல்களையும் சொன்னால்தான் தெரிகிறது என்றும் கூறினார். இலங்கையில் இளைஞர்கள் மத்தியில் தங்களுக்கு ஆதரவு அதிகம், தங்களோடு அவர்கள் இணைந்து செயல்படுவது மகிழ்ச்சி அளிக்கிறது என்றும் தெரிவித்தார்.

எட்டாவது கருத்துரை தென்கொரியாவில் வசித்துவரும் தோழர் சம்யுக்தா விஜயன். தமிழகத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர். இந்தச்சமூகம் பற்றிச் சிந்தித்த கணத்திலிருந்தே நான் பெண் என்று கூறும் இவர் தனது குடும்பம், பள்ளி, ஆசிரியர், நண்பர்கள் எனத் தன்னைச் சுற்றியிருந்த அனைவருடைய ஆதரவும் இருந்ததால் தனது வாழ்வில் எத்தகைய சிக்கலும் இல்லை என்று கூறினார். இந்தியாவில் இது பற்றிய ஆய்வுகள் நிறைய நடக்கவில்லை. திருநங்கையர் குறித்த சொற்களின் ஆய்வினைவிடப் புரிதல்தான் முக்கியம் என்று கூறினார்.

பாலினம் பற்றிய இவரது அறிவியல் ரீதியான விளக்கம் தெளிவாக, பயனுள்ளதாக, மிகுந்த புரிதலுடன் கூடியதாக இருந்தது. இவ்வுலகம் பகல் மற்றும் இரவால் ஆனது என்றாலும் முற்பகல், பிற்பகல், சாயுங்காலம் என்றிருப்பதைப்போல ஆண், பெண் என்பதும் முழுமையானதல்ல. இது ஒரு Spectrum. பால் (Biological sex), பாலினத்தை அடையாளப்படுத்துதல் (Gender Identity), வெளிப்படுத்துதல் (Gender Expression), பால்நிலை குறித்த பயிற்சி (Sexual Orientation) என்கிற நான்கு நிலைகளுக்குள்தான் நாம் இருப்போம் முழுமையான ஆண், பெண் என்பது இல்லை என்று விளக்கினார்.

ஒன்பதாவது உரைக்குரியவர் சென்னை, தமிழ்த்திரையுலகில் இயக்கம், எழுத்து, தயாரிப்பு என்று பல பரிமாணங்களில் சாதனை படைத்து வரும் தோழர் மாலினி ஜீவரத்தினம். தான் வாசித்த நூல்கள், நண்பர்கள், பணியிடத்தில் இடத்தில் உடனிருந்தோர் ஆதரவு இவையே தன்னை வெளிப்படுத்த உதவியதாகக் கூறினார். திரையுலகில் படம் தயாரிக்க நிறைய திருநங்கையர் முன்வந்திருப்பது மாற்றத்தைக் காட்டுகிறது. நான் வாழ்க்கையில் சந்திக்கும் மனிதர்களின் கருத்துக்களை, என்னைப் பற்றிய பேச்சுக்களை எனது படைப்புகளில் பயன்படுத்துவேன் என்றார்.

திரைப்படங்களில் கதாநாயகன் திருநங்கையாக வேடமிடுவது வரவேற்கத்தக்க ஒன்று என்றாலும் வேடமிடுவதற்கும் தாங்களே நடிப்பதற்கும் வேறுபாடு உண்டு என்றும் கூறினார். இருபத்தொன்றாம் ஆண்டில் திருநங்கையர் பற்றிய, இவர்கள் பணிசெய்த திரைப்படங்கள் நிறைய வெளியிடப்படவிருக்கின்றன என்று தெரிவித்தார். தமிழ்ச்சமூகத்தில் திருநங்கையருக்கான தனித்த இடம் என்பது சவாலான விசயம்தான் என்றார்.

மூன்றாம்நாள் சிறப்புரை வழக்கறிஞர் சன்னாவினுடையது. பாலியல் பாதையில் சமூக, அரசியல் நிலைப்பாடுகள் பற்றிப் பேசினார். பதினெட்டு வருடங்களுக்கு முன் புதிய கோடாங்கி இதழுக்காகத் திருநங்கையருக்குச் செய்த இலக்கியப்பயிற்சி முகாம் ஒன்று தனக்கு இவர்கள் பற்றிய அறிதலுக்கு அடிப்படையாக அமைந்ததாகவும் முகாமிற்குப் பிறகு களப்பணி செய்து இவர்களது வாழ்வியல் மற்றும் இவர்களது படைப்புகளைக் கொண்டு சிறப்பிதழாகவே கொண்டு வந்தது அக்காலகட்டத்தில் மிகுந்த சலசலப்பை உண்டு பண்ணியதாகவும் கூறினார். இதைத்தொடர்ந்து திருநங்கையருக்குச் சட்டசபையில் தனித்த இடம் கேட்க சட்டவழி முறைகளை எடுத்துக்கூறியது. அரவாணி என்பது பெண்பால், உருவாக்கப்பட்டது – கலைஞர் கருணாநிதி ஆட்சியில்; இந்த அரவாணி என்கிற பெயர் திருநங்கை, திருநம்பி என மாற்றம் பெற்றது, தமிழ்ச்சமூகத்தில் அரசியல் ரீதியான புரிதல் இருந்ததால் இது சாத்தியமானது என்றும் நலவாரியம் அமைக்கப்பெற்றது பற்றியும் கூறினார். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நடந்த ஒடுக்குமுறைகள் மாற்றம் பெற இது போன்ற கருத்தரங்கு தேவை என்றார். மொழியைக் கட்டமைப்பவர்கள் ஆண்களே, Gender என்னும் சொல்லின் முதல் பகுதியே Gen என்னும் ஆண் மையத்தை, முதன்மையைத்தான் குறிக்கிறது. மக்களிடம் ஏற்பு கிடைத்திருப்பது கடந்த பத்து ஆண்டுகளாகச் சாதனை நிகழ்ந்திருக்கிறது என்பதையே காட்டுகிறது.

வெறும் பேச்சாக மட்டும் இல்லாமல் தமிழ் மரபு அறக்கட்டளைக்குச் சில கோரிக்கைகளையும் முன்வைத்தார். மொழி ஆண் மொழியாகத்தான் இருக்கிறது. சட்டமன்றம், நாடாளுமன்றத்தில் ஒரு இடமாவது வேண்டும். பள்ளிக்கல்வியிலிருந்தே பாலினச்சமத்துவம் மற்றும் மாற்றுப்பாலினம் குறித்த கல்வி வழங்கப்படவேண்டும். மனித இனத்தில் 120 பிரிவுகள் இருப்பதாகக் கணக்கெடுத்திருக்கிறார்கள். இவர்களது பிரிவுகளுக்குரிய பெயர்களைக் கண்டறியவேண்டும். தமிழறிஞர்களும் தமிழ் மரபு அறக்கட்டளையும் முன்னெடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

(1) LGBT - ஒரு அறிமுகம் [https://youtu.be/MsiO198Kqec]
(2) `மாற்றுப்பாலினம் & பாலீர்ப்பு கொண்டோர் நலவாழ்வு [https://youtu.be/kRwXwwuQtCk]
இந்த நிகழ்ச்சி பற்றிய செய்திகள் [https://ruletheworld.tamilheritage.org/category/2020-lgbtq-conference/]
மாற்றுப்பாலினம் & பாலீர்ப்பு கொண்டோர் இணைய கருத்தரங்கம்
நாள் 1 – கலையும் வரலாறும் - https://youtu.be/IdftHixA2iI
நாள் 2 – மானுடவியலும் கலாச்சாரமும் - https://youtu.be/ADhyUD5Ceaw
நாள் 3 – சமூகச்சிக்கல்களும் சாதனைகளும் - https://youtu.be/6yBZMNK1Occ

6. நிறைவான ஒரு ஒரு நிகழ்வு.

— மா.மாரிராஜன்

டிசம்பர் 4, 2020 அன்று நடைபெற்ற ஐரோப்பாவில் நிறுவப்பெற்ற திருவள்ளுவர் சிலைகளின் ஓராண்டு நிறைவு நாள். இந்நாளை ஐரோப்பியத் தமிழர் நாளாக ஏற்றுக்கொண்ட நாள். கடந்த வருடம் சரியாக இந்நாளில்தான் ஜெர்மனி அருங்காட்சியகத்தில் தமிழ் மரபு அறக்கட்டளை சார்பாக ஐயன் திருவள்ளுவரின் இரண்டு வெண்கலச் சிலைகள் இடம்பெற்றன.

தமிழ் மரபு அறக்கட்டளையின் பல்வேறு நிகழ்வுகளில்.. மகுடமாகத் திகழ்வது இந்நிகழ்வு..

கனவுகள் காண்பது எல்லோருக்கும் எளிது. கண்ட அக்கனவை நிஜமாக்கும் பாக்கியம் ஒரு சிலருக்கு மட்டும் கிடைக்கும். அந்த பாக்கியத்தை சற்று அதிகமாகப் பெற்றவர்தான் தமிழ் மரபு அறக்கட்டளைத் தலைவர் முனைவர். சுபாஷிணி அவர்கள்.

ஐரோப்பா..ஜெர்மனி..

லிண்டன் அருங்காட்சியகத்தில் ஐயன் திருவள்ளுவரின் சிலையை நிறுவ வேண்டும் என்பது சுபாஷிணி அவர்களின் கனவு. இக்கனவு நிஜமாவது அவ்வளவு எளிதான ஒன்று அல்ல.

தமிழகத்தில் சிலை செய்து, தமிழக அரசின் அனுமதி பெற்று, ஜெர்மனி கொண்டுவந்து, அருங்காட்சியகத்தின் வழிகாட்டுதல் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்து சிலையை நிறுவி, அதை ஒரு மாபெரும் விழாவாக எடுத்து...எளிதான ஒரு செயல் அல்ல..

எத்தனையோ தடைகள்.....

ஏராளமான பிரச்சனைகள். கடும் மன உளைச்சல். வீண் வம்பர்களின் விமர்சனங்கள்.

தடைகள் அனைத்தையும் உடைத்து, அருங்காட்சியகத்தில் சிலையை நிறுத்தி தான் கண்ட கனவை நிஜமாக்கினார். இவரது இந்த சாதனை மூலம் சரித்திரத்திலும் இடம்பெற்றார்.

சிலை நிறுவிய ஓராண்டு நிறைவு விழாதான் இந்நிகழ்வு.

ஏறக்குறைய மூன்று மணிநேரம், வள்ளுவன் காட்டிய வழியை நினைவு கூர்ந்த நிகழ்வு.

நிகழ்வின் துவக்கமே அசத்தல். திருக்குறள் சிலவற்றுக்கு இராகம் கொடுத்து இசையுடன் பாடி அபிநயம் பிடித்த அற்புதமான நிகழ்வு.

குறளுக்குப் பரதம் ஆடிய அந்த தமிழ் பெண். ஆடலும், பாடலும் பரவசம். இது முன்னமே பதிவு செய்த ஒன்றுபோல் தெரிகிறது. முழுவதையும் பார்க்க ஆவல்.

நிகழ்வின் முன்னோட்டமாக சுபாவின் முன்னுரையைத் தொடர்ந்து..அருங்காட்சியக் காப்பாளர் டாக்டர். ஜார்ஜ் நோவாக் அவர்களின் அருங்காட்சியகத்தில் வள்ளுவர் சிலை நிறுவப்பட்ட நிகழ்வை நினைவு கூர்ந்தார். வணக்கம் என்று அவர் ஆரம்பித்தது சிலிர்ப்பு.

முன்னாள் மொரிஷியஸ் துணைஅதிபர் திரு.வையாபுரி பரமசிவம் பிள்ளை அவர்களின் உரையும் சிறப்பான ஒன்று.

குறள் பற்றி பேசும் இடத்தில் அவசியம் நான் இருப்பேன் என்ற கொள்கையுடன் இருக்கும் திரு.பாலகிருஷ்ணன். இ.ஆ.ப. அவர்களின் பொழிவு வழக்கமான வள்ளுவத்தைப் பகிரும் அவரின் உரை. தயவு கூர்ந்து வள்ளுவனுக்கு எந்த ஒரு சமய மத போர்வையும் போர்த்தாதீர்கள். வேட்டி கட்டிய தமிழனின் தோழன்தான் வள்ளுவன். அருமையான சொல்லாடல். நோபல் விருதைவிட நான் ஒரு தமிழ் மாணவன் என்பதே எனது மகுடம் என்ற அவரது கருத்திடல் இளம் தலைமுறையினரிடம் சேரவேண்டிய ஒன்று.

திருக்குறளுக்கு ஏராளமான விளக்கவுரை எழுதியாகிவிட்டது. திருக்குறளை திறனாய்வு செய்யவேண்டும் என்று திரு.பாலசந்திரன் இ.ஆ.ப அவர்களின் கோரிக்கை சரியான ஒன்று.

திருவள்ளுவர் சிலையின் உருவாக்கம் குறித்த திரு. சன்னாவின் சுருக்கமான உரை.

அப்புறம்..
நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிய .. மலர்விழி, குமரன் மற்றும் கார்த்தி.
மிகையில்லா ஆளுமை. அருமை. வாழ்த்துகள்.
மழலைக் குரலில் திருக்குறளைக் கேட்க அவ்வளவு ஆனந்தம்.
அந்தத் தமிழ் பிள்ளைகள் தமிழுடன் வளர்வார்கள். வரும் காலம் அவர்களுக்கே.

மொத்தத்தில்..
உலகத்தமிழர்கள் ஒன்று கூடி வள்ளுவனை ஆராதனை செய்த நிகழ்வு..

" வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு .... " என்ற பாரதியின் வரிகளுக்குப் பொருத்தமானது நேற்றைய நிகழ்வு.

7. சங்கச் சுரங்கத்தில் பண்பாட்டுப் புதையல் – ஆர்.பாலகிருஷ்ணன் இஆப.

— அ. குமரேசன்

திரு ஆர்.பாலகிருஷ்ணன் இஆப: ஒடிசா மாநில கூடுதல் தலைமைச் செயலராகப் பணியாற்றியவர். ஓய்விற்குப் பிறகு தற்போது அம்மாநிலத்தின் சிறப்புத் திட்டங்களுக்கான தலைமை ஆலோசகராகப் பொறுப்பு வகிக்கிறார். திராவிடவியல் அறிஞரான இவருக்கு சிந்து சமவெளி நாகரிகம் பற்றிய ஆய்வுகளுக்காகப் பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம் மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளது. இவரது "சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்" நூல் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் விருது பெற்றது.

திராவிட மொழியியலையும் சிந்துவெளிப் புவியியலையும் பிணைத்து இவர் முன்வைத்துள்ள புதிய கருதுகோள்கள் ஒரு நூற்றாண்டுக் காலமாகத் தொடர்கின்ற "திராவிடக் கருதுகோள்" என்னும் புதிரின் மீது பாய்ச்சிய மின்னல் வெளிச்சங்கள் எனலாம். "இடப்பெயர்ச் சான்றுகளும், சங்க இலக்கியம் மீள் நினைவுகளைப் பேசுகிறது என்கிற முன்வைப்பும்" ஆகிய இவ்விரண்டும் இவர் நம் அறிவுலகுக்கு அளித்துள்ள இரு பெரும் கொடைகள். "சங்கச் சுரங்கம்" என்கிற தலைப்பில் இவர் ஆற்றிவரும் தொடர் உரைகள் ஒளிக்கீற்றுகள்.

இந்தியப் பண்பாட்டின் பன்மியத்தை "மழைக்காடு" என்று புதிய கண்ணோட்டத்தில் உருவகப்படுத்துகிற இந்த ஆய்வாளர், பண்பாட்டுத் திருவிழாவாகிய தைப்பொங்கல் கொண்டாட்டத்தையொட்டி செம்மலர் கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார்.
| செம்மலர், ஜனவரி – 2021 இதழுக்காக நேர்காணல்: அ.குமரேசன் |

பண்பாடு, பண்பாட்டுத்தளம் இவற்றை நீங்கள் என்ன பொருளில் எடுத்துக்கொள்கிறீர்கள்?
பண்பாடு மானுடவியலின் மையப்புள்ளி. மனிதர்களுக்கென்று உலகளாவிய சில பொதுவியல்புகள் உள்ளன. அதே நேரத்தில் மனித சமூகங்களுக்குள் சிறிதும் பெரிதுமான கால நில வரையறைகளுக்குள் கற்றுத்தரப்பட்ட கற்றுக்கொள்ளப்பட்ட பல்வேறு பழக்கவழக்கங்களும் இயல்புகளும் தனித்துவமான உணவு உடை, கலை, என்று பல்வேறு வகைகளிலும் வெளிப்படுகின்றன. ஒருவகையில் பண்பாடு ஒரு சமூகம் தனது இருப்பை வெளிப்படுத்த நிலைநிறுத்தும் குறியீடுகளின் கூட்டுவடிவம் போலவே தோன்றுகிறது. அது இயங்கும் சூழலும் நோக்கமும் பயனுமான காரணிகளும் களங்களுமே பண்பாட்டுத்தளமாகும். "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்" என்ற சங்க இலக்கியம் ஒரு சிறந்த புரிதல். ஒரு தொடர் இயக்கமான பண்பாடு காலம், இடம், புறச்சூழல், அகச்சூழல்களால் தொடர்ந்து கட்டமைக்கப்படுகிறது.

பண்பாடும், நாகரிகமும் மாறுபட்டவையா? பண்பாடு என்றால் குடும்ப, சமூக வாழ்க்கை முறைகள் என்றும், நாகரிகம் என்றால் அந்தந்தக் காலத்து நவீனங்களோடு கலந்த நடைமுறைகள் என்றும் பொதுவான புரிதல் இருக்கிறதல்லவா?

இரு சொற்களும் ஒன்றோடொன்று தொடர்புடையவை, ஆனால் ஒன்றல்ல என்ற ஒரு கருத்து உண்டு. திருந்திய ஒழுக்கம் பண்பாடு, திருந்திய வாழ்க்கை நாகரிகம் என்று பாவாணர் கூறியதாக நினைவு. ஆனால் சிந்துவெளிப் பண்பாடு என்கிறபோது நான் அதை பண்பாடு/ நாகரிகம் என்ற இருநிலைகளையும் உள்ளடக்கிய சொல்லாகவே பயன்படுத்துகிறேன். அதைப் போலவே தமிழ்ப் பண்பாடு, தமிழ் நாகரிகம் என்ற இரண்டையும் ஒரு தளத்தில் வைத்தே நான் பேசிவருகிறேன்.

கல்ச்சர், சிவிலைசேசன் என்ற இரு ஆங்கிலச் சொற்களுக்கும் இடையிலான வேறுபாட்டுக்குப் பல்வேறு கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. பண்பாடு என்று சொல்லும்போது ஒரு இனம், மொழி, நிலப்பகுதி என்ற வரையறைக்குள் நின்று பேசுவதாகவும் நாகரிகம் என்று சொல்லும்போது மேலும் உயர்ந்த, பண்பட்ட, விரிவான, தொழில்நுட்பங்கள், சட்டதிட்ட நெறிமுறைகள் கூடிய பன்முகமான ஒரு பரந்த பொருண்மையைக் குறிப்பதாகவும் கருதப்படுகிறது. ஆனால் ''பண்பாடு''- பண்பிலாமை, நாகரிகமானவர்- நாகரிகமற்றவர் என்ற ஒப்பீட்டு இருமைகளால் இச்சொற்கள் மதிப்பீடு செய்யப்படுவதையும் கருத்தில்கொண்டு இரண்டிற்கும் நான் பொதுவாகப் பண்பாடு என்ற சொல்லையே பயன்படுத்தி வருகிறேன்.

''நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்'' என்ற நற்றிணையை (355) அடியொற்றிய ''பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்'' என்ற திருக்குறளும் நினைவிற்கு வந்தாலும் நான் பண்பாடு என்ற சொல்லையே விரும்பிப் பயன்படுத்துகிறேன். சங்க இலக்கியத்தில் பண்பு என்ற சொல் 45 முறை பயன்படுத்தப்படுகிறது. அச்சொல்லை அடிப்படையாகக் கொண்ட பண்பின், பண்பு, பண்பே போன்ற சொல்லாக்கங்களுக்கும் பஞ்சமில்லை. எனவே பண்பாடு என்ற பதத்திற்கே எனது வாக்கு. சூழலைக் குறித்து அது தனிமனிதர் பற்றியதா, ஒரு குழுவைப்பற்றியதா, மொழி பேசுவோர் பற்றியதா அல்லது பரந்து விரிந்த நாடு அல்லது அதற்கும் பெரிதான அடையாளங்கள் பற்றியதா என்று புரிந்துகொள்வதில் அப்படி ஒன்றும் பெரிதாக சிரமம் இருப்பதாகத் தோன்றவில்லை.

சமூக வளர்ச்சியில் பண்பாட்டுத்தளம் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகிறது? அல்லது, சமூக வளர்ச்சி பண்பாட்டுத்தளத்தில் தாக்கம் செலுத்துகிறதா?

இந்தக் கேள்வியைச் சற்று மாற்றிக்கொண்டு சமூகப் பொருளாதாரம்- பண்பாடு என்று பார்ப்பது பொருத்தமாக இருக்கும். இதை விவாதிப்பதற்கு முன்னால் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டின் மீது அம்மக்கள் வாழும் புறச்சூழல் குறிப்பாக புவிச்சூழல் செலுத்தும் தாக்கத்தைப் புரிந்துகொள்வது மிகவும் முக்கியம். ஒருவகையில் நிலத்தையும் காலநிலை என்ற பொழுதையும், அதாவது பெரும்பொழுதாகிய காலத்தையும் சிறுபொழுதாகிய நேரத்தையும் முதல் பொருள் என்றும், அந்த நிலத்திற்குரிய உணவு, மரம், விலங்குகள், பறவைகள், தொழில், இசைக்கருவி என்று பல்வேறு கூறுகளைக் கருப்பொருள் என்றும், ஒரு குறிப்பிட்ட மனித உணர்வை அல்லது வாழ்வியல் சூழலை உரிப்பொருளாகவும் கட்டமைக்கிற பழந்தமிழ் திணைக்கோட்பாடு உணர்த்தும் கருத்தாக்கத்தை நாம்

உள்வாங்கவேண்டும். பண்பாட்டை புவிச்சூழல் தீர்மானிக்கிறது என்ற புவிநியதி வாதம், தீர்மான வாதம் என்று கூறுகிறார்கள். இதை நான் ஒரு சார்ந்தியங்கியல் என்றுதான் எடுத்துக்கொள்கிறேன்.

ஆனால் பண்பாடு, சமூகவியல், அரசியல் பொருளாதாரம் என்ற கூட்டசைவில் எது என்ன விகிதம் என்று துல்லியமாக எடைபோடுதல் சாத்தியம் இல்லை. பண்டமாற்று முறையிலேயே புவிச்சூழலையும் மீறிய புதிய கூறுகள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் பரவத் தொடங்கிவிட்டன. பண்டமாற்றுதான் பண்பாட்டு மாற்றத்தின் தொடக்கப்புள்ளி. வேளாண்மை ஒரு தொழிலாக உருவெடுத்தபோது புன்செய் மேட்டுநிலம், நீர்வளம் மிக்க மருதநிலம் அவற்றின் உற்பத்தித் திறன், அவற்றின் மதிப்பு, சந்தை ஆகியவற்றால் மதிப்பிடப்பட்டபோது மலைப் பெருமிதத்தைப் பின்னுக்குத் தள்ளி, காடுகொன்று நாடாக்கப்பட்ட புதிய விளைநிலம் முன்னுக்கு வருகிறது. பிறகு தொலைதூர வணிகம் சமூகப் பண்பாட்டு முன்னுரிமைகளைத் தலைகீழாக்கிவிடுகிறது. மக்களின் உணவு மாறும்போது கடவுள்களின் படையல்களின் நிறமும் குணமும் கூட மாறிவிடுகிறது. நெல்லும் கரும்பும் பெருமிதமாகும் சூழலில் வரகு வாழ்ந்துகெட்ட பயிராகிறது. கேழ்வரகைக் கேட்பாரில்லை. திணறுகிறது தினை.

இவ்வாறு அரசியல், போர்கள், மேட்டுக்குடிகளின் ஆதிக்கம், வணிகப் பொருளியல், தொழில் நுட்ப வளர்ச்சி என்ற பல காரணிகளால் பண்பாடு பல்வேறு தாக்கங்களை எதிர்கொள்கிறது. மேற்கத்திய காலனியாதிக்கம் இல்லாமல் போயிருந்தால் இந்தியாவில் இவ்வளவு ஆங்கிலம் இருக்காது. இந்த மேற்கத்தியத் தொடர்பு பெரும் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்பதுதான் உண்மை. இவற்றில் எவை நேர்மறை விளைவுகள், எவை எதிர்மறை விளைவுகள் என்பது பார்வையைப் பொறுத்து. அத்தகைய மதிப்பீடுகளைத் தாண்டி தாக்கம் நிகழ்ந்தது என்பதுதான் பொது உண்மை. மொகலாய அரசுகள் இந்தியாவின் பண்பாட்டிலும் சமூகத்திலும் செலுத்திய தாக்கங்களின் தடயங்களை அப்படியெல்லாம் போகிற போக்கில் புறந்தள்ளிவிட முடியுமா? உணவுப் பழக்கங்களிலும் கட்டடக் கலையிலும் அக்காலகட்டம் ஏற்படுத்திய தாக்கங்களை மறுக்கவோ மறைக்கவோ முடியுமா? சமூக வளர்ச்சி, பொருளாதார மாற்றங்கள் எவ்வாறு ஒரு தொடர் இயக்கமாக இருக்கிறதோ அதைப் போலவே பண்பாட்டு மாற்றங்களும். எந்த குறிஞ்சி நிலப்பெண் எப்போது உடன்கட்டை ஏறினாள்? அத்தகைய கருத்தாக்கம் எப்போது நுழைந்தது? எப்போது எதனால் மறைந்தது? இவை மட்டுமல்ல பொங்கல் வாழ்த்து அட்டை எப்போது தோன்றியது எப்போது குறைந்தது என்பது கூட இந்தக் கேள்வியோடு தொடர்புடையதுதான்.

ஆனால் சில பண்பாட்டு மரபுகள் நீண்ட நெடுங்காலமாக, எத்தனையோ சமூகப் பொருளாதார வளர்ச்சிகளையும் வீழ்ச்சிகளையும் கடந்து தொடர்கின்றன. தொன்மைக்கும் தொடர்ச்சிக்கும் இடையிலான குறியீடுதான் ஜல்லிக்கட்டு போன்ற சமூகப் பண்பாட்டு நிகழ்வுகள். ஜல்லிக்கட்டுப் போராட்டம் ஒருவகையில் சமூக வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி, பண்பாடு மற்றும் அது சாந்த பண்பாட்டு அரசியல் ஆகியவற்றிற்கு இடையில் ஊடாடும் தொடர்பிற்கு ஒரு எடுத்துக்காட்டு.

தனிமனிதர் வாழ்வு, லட்சியம், கொள்கை, அணுகுமுறை இவற்றில் பண்பாட்டுத்தளத்தின் பங்கு என்ன?

தனிமனிதர் வாழ்வு லட்சியம், கொள்கை, அணுகுமுறை ஆகியவற்றில் அவர் தன்னைச் சுற்றிக் கண்ணுறுகிற, பங்கேற்கிற பண்பாட்டுச் சூழலின் தாக்கம் இருக்கிறது என்பதில் ஐயமே இல்லை. ஆனால் அது எல்லா தனிமனிதர்களையும் ஒரே மாதிரியாக வழிநடத்துகிறதா என்ற கேள்வியும் உடன் எழுகிறது. அடிப்படையில் ஒருவரின் லட்சியம் கொள்கை அணுகுமுறையில் ''சொந்த விருப்பம்'' என்பதும் இருக்கிறது. இந்தியா போன்ற ஒரு பெரிய நாட்டில் ஒரே நிகழ்விற்கு பல்வேறு நிலப்பகுதியினரும் மொழியினரும் வெவ்வேறு வகையில் எதிர்வினையாற்றுகிறார்கள் என்பதில் கூட இதற்கான விடை இருக்கிறது. பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதலெனில் அந்தப் பக்குவத்தைப் பண்பாட்டுச் சூழல் கற்றுத்தரும். வாழ்க்கையில் சந்திக்கும் பிரச்சனைகளுக்கெல்லாம் முற்பிறவியின் பாவ புண்ணியங்கள் காரணம் என்பதை மக்களின் பொதுப்புத்தி ஏற்றுக்கொண்டால் கண்முன் நடக்கும் அவலங்கள் எல்லாம் மனசை உறுத்தாது. தத்துவம் பேசிக் கடந்து செல்லும் மனநிலை தோன்றும். அதே நேரத்தில் யாதும் ஊரே யாவரும் கேளிர், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல், முயற்சி தன் மெய்வருத்தக்கூலி தரும் என்பது போன்ற சிந்தனைகள் ஊட்டி வளர்க்கப்பட்ட ஒரு பண்பாட்டுச் சூழலில் அதன் தாக்கம் இருக்கவே செய்யும்.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் பயணம் செய்திருக்கும் நான் இதுபற்றி நடைமுறை வாழ்வியல் நோக்கில் யோசித்திருக்கிறேன். ரயில் பயணத்தில் முன்பதிவு செய்த இருக்கைகள் என்பதையே மதிக்காமல் உள்ளே புகுந்து ஆக்கிரமிப்புச் செய்வது ஒரு தவறாகவே கருதப்படாத பகுதிகளில் பயணம் செய்திருக்கிறேன். ஆனால் பிற பகுதிகளில் அவ்வாறு நிகழ்வதில்லை. தனிமனிதர்களின் அணுகுமுறைகளில் பண்பாட்டுச் சூழல் தாக்கம் புரிவதாகவே தோன்றும். ''எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே'' என்ற ஔவையாரின் பாடல் மிகவும் யோசிக்க வேண்டிய கருத்து.

பண்பாட்டு முன்மாதிரிகள் என்று எதைக் கொண்டாடுகிறோமோ, யாரைக் கொண்டாடுகிறோமோ அதன் தாக்கம் தனிமனிதர்களின் அணுகுமுறையில் இருக்கும். அரசுகளையும் ஆட்சியதிகாரங்களையும் நோக்கி வினா எழுப்பும் தொன்மரபுக்கதைகள் நிலவும் பண்பாட்டிற்கும், பெண்கள் உடன்கட்டை ஏறுவதைக் கொண்டாடும் மரபிற்கும் வேறுபாடு இருக்கவே செய்யும். மொத்தத்தில் பண்பாட்டுத்தளத்தில் முன்னுரிமையளித்து முன்னிறுத்தப்படுகிற கருத்தாக்கங்கள் தனிமனிதர்களின் மீது தாக்கம் புரிகிறது என்றே நான் நம்புகிறேன். ஆனால் அந்தத் தாக்கம் அனைவரின் மீதும் ஒரே மாதிரியான விளைவுகளை ஏற்படுத்துவதில்லை; அங்கே சுயபுத்தி முக்கியமாகிறது.

பண்பாட்டுத்தளத்தில் அரசியலின் இடம் என்ன?

அரசியலும் பண்பாடும் ஒருவகையில் ஒன்றின் மீது பிறிதொன்று தொடர்ந்து தாக்கம் செய்கிற சகபயணிகள் தான். இன்னும் சொல்லப்போனால் பல நேரங்களில் பண்பாட்டுத் தளம் என்ற மேடையில் நின்று தான் பல அரசியல் சித்தாத்தங்கள் நியாயப்படுத்தப்படுகின்றன. இனம், மொழி, பண்பாட்டு மேன்மை போன்ற

ஆயுதங்களைக் கொண்டுதான் உலகில் பல போர்கள் நடந்துள்ளன. தங்களது மொழியைப் பேசுபவர்களை ''வேற்றவர்கள்'', ''காட்டுமிராண்டிகள்'' என்று வெறுப்பை உமிழ்வதிலிருந்து பண்பாட்டு அரசியல் தோன்றுகிறது. ''நல்லது இது; கெட்டது இது'' என்று ஒருசார்பாக வகுத்துக் கொடுத்த பண்பாட்டுத் தளத்தில் தனிமனிதர்களின் சுயசிந்தனைக்கு மதிப்பில்லாமல் போகிறது. அதுவே அரசியலை வழிநடத்தும் உத்தியாகும்போது அரசியல் ஆபத்து நிறைந்ததாகிறது.

அத்தகைய சூழல்களில் முள்ளை முள்ளால் எடுப்பது போல நமது பண்பாட்டு அசைவுகளின் ஊடான ஆக்கபூர்வமான முன்னுதாரணங்களை முன்னிறுத்த வேண்டும். மாறிவரும் காலச்சூழ்நிலைகளுக்கு ஏற்ப பண்பாட்டு முன்மாதிரிகள் மாற வேண்டும். ''சதிக்கல்கள்'' இன்றைய நவீனகாலத்திற்கு வழிகாட்ட முடியாது. இன்னொரு எடுத்துக்காட்டைச் சொல்லலாம். மகாபாரதத்தில் வரும் துரோணர் ஏகலைவனின் கட்டைவிரலைக் காவு வாங்கியது அந்தக் காலகட்டத்தில் நியாயப்படுத்தி ஏற்கப்பட்டிருக்கலாம்; எழுதப்பட்டிருக்கலாம். ஆனால் தற்காலத்தில் விளையாட்டு வீரர்களுக்கான சிறந்த பயிற்சியாளர் விருதை துரோணர் பெயரில் வழங்குவது நிகழ்காலத்திற்கான சிறந்த முன்மாதிரி அல்ல. திறமை யாரிடம் இருந்தாலும் அவர்களை ஊக்கப்படுத்தி ஒலிம்பிக் பதக்கங்களைப் பெறுவதே நோக்கமெனில் இத்தகைய முன்மாதிரிகளைக் கொண்டாடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று நினைவுறுத்துவதும் பண்பாட்டு அரசியல்தான். பண்பாட்டு அரசியல் நல்லதா கெட்டதா என்பதை விட அது தவிர்க்கமுடியாத நடைமுறை எதார்த்தம் என்பதே உண்மை.

இந்தியச் சூழலில் சாதியம், மதம், இனம், மொழி ஆகியவை பண்பாட்டுத்தளத்தில் எவ்வாறு வினைபுரிகின்றன?

இந்தியச் சமூகத்தில் இவை பண்பாட்டுத்தளத்தில் மிகத் தீவிரமாக, நெடுங்காலமாக வினை புரிந்து வந்துள்ளன. இனக்குழுச் சமுதாயம், நிலவுடைமைச் சமுதாயம், தொழிற்புரட்சி சமுதாயம் என்று எந்தச் சூழலில் நின்று பார்த்தாலும் இத்தகைய காரணிகள் தொடர்ந்து இயங்குவதை இலக்கியத் தரவுகள், வரலாற்று ஆவணங்களின் துணைகொண்டு உணர முடியும். இதற்குத் தற்கால மக்களாட்சி சூழல் கூட விதிவிலக்கல்ல. இந்தியத் துணைக்கண்டப் பண்பாடு பன்முகத் தன்மைகளால் கட்டமைக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான பழங்குடிகள், அவர்களின் மொழிகள், தனித்துவமான உணவு, உடை பழக்கவழக்கங்கள் என்று அது ஒரு மழைக்காடாகவே தோன்றுகிறது.

பல நாடுகளில் வெளிப் பண்பாடுகளின் குடியேற்றங்கள் பூர்வகுடிகளின் அடையாள அழிப்பில் முடிந்தன. அது கொடுமையான ஒரு ஆக்கிரமிப்பு மனப்பான்மையால் நேர்ந்த மாபெரும் தவறாகும். ஆனால் இந்தியா அப்படிப்பட்ட ஒரு நாடு அல்ல. மொழி, மதம், சாதியம் சார்ந்த ஆணவங்களும் அதிகாரம் செலுத்தும் முனைப்பும் இந்தியத் துணைக்கண்ட அரசியலின் போக்குகளைக் காலந்தோறும் பாதித்தே வந்துள்ளன. இது ஒரு தொடர் நிகழ்வு போலவே தோன்றுகிறது. இவற்றையெல்லாம் மீறி இந்தியாவின் பன்மியம் ஒரு மழைக்காட்டின் வீரியத்தோடு தொடர்ந்து இயங்குவதற்குக் காரணம், பன்முகத்தன்மை என்பது இந்தியா என்ற மழைக்காட்டின் விழுதுகள் அல்ல; கிளைகள் அல்ல; வேர்கள் என்பதால்தான்.

முன்னேறிய பண்பாட்டிற்கான அடையாளமாக எதையெல்லாம் சொல்லலாம்?
முன்னேறிய பண்பாட்டிற்கான எனது அளவுகோல்களாகக் கல்விப் பரவலாக்கம், பாலின சமத்துவம், பகுத்தறிவு ஆகியவற்றை முன்வைப்பேன். அவற்றோடு விநியோக அறத்திற்கு மிகவும் முக்கியத்துவம் அளிப்பேன். இது உற்பத்தி பற்றியதோ, கிட்டங்கிகள் பற்றியதோ அல்ல – வினியோக அறம் பற்றியது. வெறுப்புணர்வு இல்லாத பொறுப்புணர்வால் கட்டமைக்கப்பட்ட இணக்கமான வாழ்வியல்தான் முன்னேற்றத்தின் சிறந்த அளவீடாகும். மக்கள்தொகையில் மிகக் குறைவான சிலர் உலகப் பணக்காரர்களின் பட்டியலில் இடம்பெறுவதால் எந்த நாடும் பெருமிதம் கொள்ள முடியாது. சராசரி மனிதர்களின் வாழ்வியல்தான் ஒரு நாட்டின் உண்மை முகம்.

இந்தியப் பண்பாட்டை மழைக்காடு என்றீர்கள். எந்த அடிப்படையில் அவ்வாறு அடையாளப்படுத்துகிறீர்கள்?
மழைக்காட்டில் பல்வேறு அடுக்குகள் உள்ளன. ஆனால் அவை ஒன்றை ஒன்று அழித்தொழிப்பது இல்லை. அவை சேர்ந்தே சுவாசிக்கின்றன. ஒரே தரையில் வேரூன்றி வெவ்வேறு உயரங்களில் வெவ்வேறு அடுக்குகளில் உயிர்ப்புடன் உள்ளன. வேற்றுமையில் ஒற்றுமை என்பதை உருக்குப் பானை – மெல்ட்டிங் பாட், காய்-கனித் துண்டுகளின் கிண்ணம் – சாலட் பௌல் என்று உருவகப்படுத்துவார்கள். இந்தியாவின் வேற்றுமையில் ஒற்றுமை என்ற பெருமிதத்தைக் கொண்டாட “உருக்குப் பானை” உருவகம் போதுமானதல்ல; உருக்குப் பானையில் பல்வேறு தனித்துவங்கள் உருக்கி உருக்குலைக்கப்பட்டுதான் புதிய கலவை உருவாகிறது. உருக்குப்பானை தனித்துவங்களின் சிதை. இதில் பெருமைப்பட என்ன இருக்கிறது? இதைப் போலவே “சாலட் கிண்ணம்” உருவகத்திலும் எனக்கு உடன்பாடு இல்லை. சாலட் கிண்ணத்தில் பல வண்ணங்களில் காய்கறி, கனி வகைகள் சம இடம் பெற்றாலும் எல்லாக் காய்கறிகளும் கனிகளும் கிண்ணத்தை அடைவதில்லை. சாலட் கிண்ணம் இயற்கையானது அல்ல; செயற்கையானது; தேர்ந்தெடுக்கப்படுவது. ஆகவே நான் இந்தியப் பண்பாடு தனித்துவங்கள் உருக்குலைக்கப்படாத, இயற்கையான ஒரு “மழைக்காடு” என்ற உருவகத்தை முன்வைக்கிறேன்.

தமிழின் சங்க இலக்கியத்தை வாழ்வியல், அழகியல், உணர்ச்சி ஆகியவற்றைத் தாண்டி ஒரு புதிய இடத்தில் வைக்கிறீர்களா? அதன் அறிவியல்பூர்வ கண்ணோட்டம் குறித்து…
சங்க இலக்கியத்தை மனித சமூகத்தின் ஒரு களஞ்சியமாக, குறிப்பாக தொல்தமிழ் முன்னோடிகளின் தொடர் பட்டறிவின் ஊடாக விளைந்த பட்டறிவின் ஆவணப்பதிவாகவே நினைக்கிறேன். அதில் சமகாலத்திற்கான ஏராளமான படிப்பினைகள் உள்ளன. அதனால்தான் சங்க இலக்கியத்தைச் சமகாலத்தின் தேவைகள் சார்ந்து மீள்வாசிப்பு செய்ய வேண்டும் என்று நினைக்கிறேன். மிகச்சிறந்த வாழ்வியல், அழகியல் இலக்கியம் சங்க இலக்கியம். ஆனால் அதன் இலக்கிய நயத்தின் பெருமைகளைக் கொண்டாடுவது மட்டும் போதுமானதல்ல. சங்க இலக்கியம் பல முக்கியமான புரிதல்களை நமக்குத் தருகிறது, நமது சமகாலப் பிரச்சனைகள் பலவற்றைக் கையாளுவதற்கு, சங்க இலக்கியத்தின் கூட்டு அனுபவம் உதவும் என்று நான் நம்புகிறேன். அதனால் அந்தக் கோணத்தில் அந்த எதிர்பார்ப்புடன் சங்க இலக்கியத்தை நான் மீள்வாசிக்கிறேன். எனது புரிதலைப் பகிர்ந்துகொள்கிறேன். அறிவியல் கண்ணோட்டத்தோடு புதிய அறிவுப்புலங்கள்

சார்ந்த ஆய்வுமுறைகள் கலைச்சொற்கள் விளக்கும் முறை ஆகியவற்றைப் பயன்படுத்தி நமது உரையாடல்களைக் கட்டமைத்தால்தான் நாம் என்ன பேசுகிறோம் என்பது குறித்த நம்பகத்தன்மை ஏற்படும்.

உலகக் களத்திலும், உள்நாட்டிலும் பண்பாட்டுத்தளத்தின் இன்றைய நிலை, போக்கு எவ்வாறு இருப்பதாகக் கருதுகிறீர்கள்? நம்பிக்கை அளிக்கிறதா அல்லது மருட்சியை ஏற்படுத்துகிறதா?

இரண்டும் கலந்த ஒரு கலவையான மனநிலைதான் தோன்றுகிறது. உலகம்/ இந்தியா/தமிழ்நாடு என்ற எந்த வரையறைக்குள் இருந்து யோசித்தாலும் மருட்சி அடையவும், அதே நேரத்தில் நம்பிக்கை இழந்துவிடாமல் எதிர்காலத்தை அணுகவும் காரணங்களும் அறிகுறிகளும் இருக்கவே செய்கின்றன. கடந்தகாலங்கள் பற்றிய தகவல்கள், புரிதல்கள் இல்லாமல் நிகழ்காலத்தை மட்டும் பார்ப்பவர்களுக்குப் பயமாக இருக்கும். ஆனால் கடந்த காலங்களில் உலகமும் இந்தியாவும் தமிழ் மண்ணும் கடந்து வந்த பாதைகளைக் கவனித்தவர்களுக்கு புதிய அபாயங்களாகத் தோன்றும் பலவும் நாம் பழகிய பாதைதான் என்பது புரியும். கடந்த காலங்கள்தான் மீண்டும் கடந்து செல்கின்றன. நான் எப்போதும் நம்பிக்கை இழப்பதில்லை. இதிலும் அப்படித்தான். இன்னும் சொல்லப்போனால் புதிய தொழில்நுட்பங்கள் புதிய சாத்தியங்களைத் தருகின்றன. "சென்று சேர்தல்" என்ற பெரும் சாத்தியப் பெருவெளியில் பேச வேண்டிய செய்திகளைப் பேசவும் வாய்ப்பிருக்கிறதே.

சிந்துவெளி விட்ட இடமும் சங்க இலக்கியம் தொட்ட இடமும் ஒன்றே என்று சொல்வீர்கள். சிந்து சமவெளி நாகரிகத்தையும் வைகைக்கரை நாகரிகத்தையும் இணைக்கிற உங்கள் ஆய்வு குறித்து செம்மலர் வாசகர்களுக்கு…

சிந்துவெளி விட்ட இடமும் சங்க இலக்கியம் தொட்ட இடமும் ஒன்றே என்பது எதுகை மோனை முழக்கம் அல்ல. எது எது என்பது குறித்த திறந்தவெளித் தேடலின் விழைவான புரிதல் அது. இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றுக்கு முற்பட்ட காலகட்டங்கள் குறித்த மீள்கட்டமைப்பில் இரண்டு புதிர்கள். சிந்துவெளி பண்பாட்டின் மொழி எது, அம்மக்கள் யார் என்பது ஒரு புதிர். இன்னொரு புதிர் தமிழ்த் தொன்மங்களின் தோற்றம் பற்றியது. இந்த இரு புதிர்களும் ஒன்றோடொன்று தொடர்புள்ளவை. ஒருவகையில் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள்தான். சங்க இலக்கியம் அவ்விலக்கியம் படைக்கப்பட்ட காலத்து நிகழ்வுகளின் பதிவுகள் மட்டும் அல்ல. அதற்கு முந்தைய மீள் நினைவுகளை உள்ளடக்கிய பல் அடுக்கு இலக்கியம் என்ற புரிதலோடு சங்க இலக்கியத்தை அணுகினால் உண்மை புரியும். சிந்துவெளி அகழ்வாய்வுத் தடயங்கள் வன்பொருள் என்றால் அதன் மென்பொருள் சங்க இலக்கியம்தான். வேறெதுவும் இல்லை. இது வியப்பாக இருக்கலாம். ஆனால் உண்மை. பல்துறை ஆய்வுத் தரவுகள் இந்தக் கருத்தாக்கத்தை மேலும் மேலும் உறுதி செய்கின்றன. இந்தத் தொடர்ச்சியைத் தமிழ்நாட்டு அகழ்வாய்வுகளும், மரபணு சார்ந்த புதிய ஆய்வுகளும் மேலும் தெளிவாக்குகின்றன. பயணங்களால் பட்டை தீட்டப்பட்ட மக்களின் அனுபவக் களஞ்சியம் சங்க இலக்கியம். அதைக் குறுகிய கண்ணோட்டத்தில் அணுகாமல் இந்தியத் துணைக்கண்டம் முழுவதையும் பற்றிய புரிதல்கள் புதைந்திருக்கும் புதையலாகவே நான் பார்க்கிறேன். சங்கச் சுரங்கத்தைத் தொடர்ந்து தோண்ட வேண்டும். கீழடி, ஆதிச்சநல்லூர் போன்ற நூற்றுக்கணக்கான இடங்களைச் சளைக்காமல் தோண்ட வேண்டும். தோண்டுவோம்.

8. திருவாசக மொழிபெயர்ப்பு - பணிவும் துணிவும்.

— முனைவர்.ஔவை.அருள்

இன்றோடு 120 ஆண்டுகளுக்கு முன்னர் தமது எண்பதாம் வயதில் திருவாசக ஆங்கில மொழியாக்கத்தை அருட்தந்தை டாக்டர் ஜி யு போப் பெருமகனார் வெளியிட்டார். திருவாசக மொழியாக்கத்தை ஆங்கிலம் தெரிந்த மக்கள் அனைவரும் தலை மேல் வைத்துப் பாராட்டினார்கள்.

ஆங்கில மொழிபெயர்ப்பைத் திருவாசகத்துக்கும் - திருக்குறளுக்கும் - நாலடியாருக்கும் - புறப்பொருள் வெண்பாமாலையில் 59 பாடல்களும் 71 புறநானூற்றுப் பாடல்களையும் மொழிபெயர்த்து தமிழின் இனிமையில் திளைத்தார். " யாதும் ஊரே யாவரும் கேளிர் " என்ற தொடர் பணி டாக்டர் ஜி யு போப் அடிகளாரின் மொழிபெயர்ப்பாகும். அனைத்து உலகத்தமிழ் மாநாடுகளிலும் அதுவே குறிக்கோள் மொழியாக எங்கும் பரவியது.

" திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார் " என்ற முதுமொழிக்கு இலக்கணமாக ஜி யு போப் அவர்கள் தன் நண்பருக்கு எழுதிய கடிதத்தில் திருவாசகத்தை என் இதழ்கள் முணுமுணுத்ததால் சிந்திய கண்ணீரால் எழுத்துக்கள் சிதைந்துள்ளன. கண்ணீரால் புனிதம் பெற்ற அந்த எழுத்துக்களை அப்படியே விட்டுவிட்டேன். "துளும்பு கண்ணீரில் மூழ்கி அழுது அடியடைந்த அன்பர் " என்றே மணிவாசகரைக் குறிப்பிடுவார்கள்.

திருவாசக மொழியாக்கத்துக்கு எல்லோரும் போற்றிய நிலையில் மொழிபெயர்ப்பில் சமய மரபிலிருந்து பல இடங்களில் டாக்டர் ஜி யு போப் பிறழ்ந்து பொருள் கொண்டார். தாமே சில கருத்துக்களை வலிந்தும் குறிப்பிட்டுள்ளார். மார்கழியில் போற்றிப்பாடும் திருவெம்பாவையில் சில பாடல்கள் மணிவாசகர் நடையில் இல்லை என்பது போன்ற கருத்தையும் எழுதினார். 1958 ஆம் ஆண்டில் திருவாசகமணி கே எம் பாலசுப்பிரமணியம் அவர்களின் மொழிபெயர்ப்பு வெளிவந்தது. ஆங்கிலத்திலும் தமிழிலும் ஈடு செய்ய முடியாத புலமை பெற்ற திருவாசகமணியின் நடையை " வெள்ளிநாப் புலவர் " என்று உலகோரால் பாராட்டப்பெற்ற சீனிவாச சாஸ்திரியார் பாராட்டிய ஆங்கில நடை அது .

திருவாசகமணி தன் முன்னுரையில் போப் அடிகளாரிடத்தில் கொண்ட பணிவையும் பொருந்தாத இடத்தில் கொண்டு மறுக்கும் துணிவையும் பெற்றுள்ளார். மார்கழித் திங்களில் திருவாசகமணியின் முன்னுரையில் மொழிபெயர்க்க முயன்ற சிறு பகுதியே இக் கட்டுரையாயிற்று. "ஒரு பதிற்றாண்டுகளுக்கு முன்னர், 1948 ஆம் ஆண்டில், பாசத்திற்குரிய என் மாமனார் டாக்டர். எஸ். குமாரசாமி எனக்குப் பெருந்தகை டாக்டர்.ஜி .யு . போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த திருவாசக நூலையும் எய்லருடைய தொழுகை பற்றிய நூல் ஒன்றையும் பரிசளித்த அந்த நன்னாள் எனது எளிய வாழ்வில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய திருநாள் ஆகும்.

டாக்டர் ஜி.யு. போப் பற்றி மற்றொரு மருத்துவ டாக்டரால் தற்செயலாக அறிமுகம் ஏற்படாமல் போயிருக்குமானால், திருவாசகத்தின் மொழிபெயர்ப்பாளராக நான் மாறியிருக்கக் கூடிய இந்நிகழ்வு இயலக்கூடிய ஒன்றா என்று பெருமதிப்புடன் அயர்ந்து வியக்கிறேன். ஆகவே, இத்தகைய உயரிய விளைவினை நல்கிய வித்தாக அமைந்த அந்தப் பெறலரும் பரிசினை வழங்கியமைக்காக மிகச்சிறந்ததும் மாட்சிமை மிக்கதுமான உள்ளொளி கொண்ட டாக்டர். எஸ். கே. அவர்களுக்கு மிகுந்த நன்றியுணர்வினை முதலில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, ஆன்மிகத் தொடர்பற்ற எனது தொடக்கக் கால அரசியல் பயணங்களுக்கு இடையே, எனது மூதாதையர் காத்துவந்த மரபுப் பண்பு காரணமாகவோ, முன்வினைப் பயனாகவோ, திருவாசகத்துடன் என்றென்றைக்கும் இமைப்பொழுதும் என் நெஞ்சை விட்டு நீங்காத உறவாகப் பிணைக்கப்பட்டு விட்டேன். தமிழ்மொழியின் ஆன்மீக கருவூலமாகத் திகழும் அரும்பெரும் நூலுக்கு எனது எளிய ஆன்மாவை முழுமையாக ஒப்படைத்துக் கொண்டமையை மேலும் புனிதப்படுத்தும் வகையில் 1948 ஆம் ஆண்டிலேயே அந்நூலில் அடங்கப் பெற்ற ஐம்பத்தொரு பதிகங்களையும் முற்றாக மனதில் எழுத்து மாறாமல் மனத்தில் நிறுத்துகின்ற கடப்பாட்டினை மேற்கொண்டேன்.

நாயன்மார்களுள் ஒருவரான மாணிக்கவாசகரின்பால் எனக்கு ஏற்பட்ட அளவிடற்கரிய பக்திமைப் பெருக்கு முதலில் மாணிக்கவாசக மாலை என்ற தமிழ்ப் பாமாலையாக முகிழ்த்தது; மணிவாசகரையும் திருவாசக அருள்மொழிகளையும் போற்றிப் பரவுகின்ற நூறு பாடல்களின் தொகுப்பு. நினைவில் என்றென்றும் நிற்பவரும் தமிழினத்தின் அருள்நெறித் தலைவருமான திரு. வி. கலியாணசுந்தரனார் எளிய எனது நூலுக்கு அணிந்துரை வழங்கிய போக்கில் என்னை முதன்முதலாகத் திருவாசகம் பாலசுப்பிரமணியம் என்று அழைத்தார். இந்தப் புதிய அடைமொழி நண்பர்கள் நடுவே நின்று நிலவியது.

அதன் பின்னர், 1949 ஆம் ஆண்டில்,வைத்தீசுவரர் திருக்கோயிலில் குடமுழுக்கின் போது அப்போதைய தருமபுர ஆதீனத்தின் திருப்பெரும் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அறிஞர் மணவாள இராமானுசர் முன்னிலையில் திருவாசகமணி என்ற பட்டத்தையும் அடைமொழி பொறித்த ஆடகப் பதக்கத்தையும் வழங்கினார்.

தொடக்கத்தில் குறிப்பிட்டதைப் போல, என் ஆன்மாவின் இத்தகைய உளவியல் கனிவு உருவான நிலையில், டாக்டர். போப்பினுடைய திருவாசக மொழிபெயர்ப்பு நூலைத் தற்செயலாக எதிர்கொண்டேன். புதியதும் ஆர்வமிகுதியை ஊட்டியதுமான அந்நூல் ஆன்மாவை ஆரப் பற்றி அதன் முன்னட்டையிலிருந்து பின்னட்டை வரை எழுத்தெண்ணித் துருவி ஆய்கின்ற இனிமையான பணியில் முழுமையாக ஆழ்த்தியது என்பதை இங்கே குறிப்பிடத் தேவையில்லை. அந்நூலைப் படித்து முடித்த போது எல்லையில்லாப் பேரின்பத்தில் ஆழ்ந்ததுடன் மிகுந்த துயரம் மீதூர்ந்ததுமான கலவை உணர்வுகளுடன் அதனைக் கீழே வைத்தோம்.

ஒரு நூற்றாண்டு காலத்திற்கு முன்னரேயே, கி.பி.1900 - ஆம் ஆண்டிலேயே நாம் கண்டு பொறாமைப்படத் தக்க வகையில் ஓர் அரும்பெரும் பணியினை ஆங்கிலேயச் சமயத்துறவி ஆற்றியுள்ளார் என்பதால் என் உள்ளத்தில் மட்டற்ற மகிழ்ச்சி ஊற்றெடுத்து கண்கள் கசிந்து கண்ணீர் பெருகச் செய்தது. ஆனால், அதே அளவில் வேதனையும் துயரமும் நெஞ்சைப் பிசைந்தன. மொழிபெயர்ப்பாளர் சைவ சமய குரவரின் பால் மிகுந்த பற்றுணர்வும் அளவிடற்கரிய உயர் மதிப்பும் கொண்டிருந்த போதிலும் தனது குறிப்புரைகளில் விரும்பத்தகாத செய்திகள் பலவற்றைத் தருவித்திருந்தார். உடனே, அதற்கான திருத்தங்களைப் பதிவிட்டாக வேண்டும் என்ற பேராவலும் தவிப்பும் என்னை ஆட்கொண்டன.

பதிவிடப்பட்ட கறைகளை அழித்தொழித்து, உரிய விளக்கமளித்து, நமது சமய குரவர் பற்றிய இறுதி முடிவானது என்பதை நிலைநிறுத்தும் வரை நம் வழிபாடே மனம் அமைதியடையாது. அப்படியொரு உறுதிப்பாடு தான் அந்நூலைப் படித்து முடித்தவுடன் எனக்குள் ஏற்பட்ட விளைவாக அமைந்தது. அத்துடன் முடிந்தபாடில்லை. திருவாசகத்தை ஆங்கில மொழியாக்கம் செய்கின்ற புனிதமானதும் இடர்ப்பாடுகள் மிக்கதுமான அரும்பணியில் ஆங்கிலேயக் கிறித்தவப் பாதிரியார் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்த காலகட்டத்தில் தமிழ் மொழியிலேயே கூடத் திருவாசகத்திற்குத் தக்க முறையிலான உரை இருந்ததில்லை. அவருக்குக் கிடைத்ததெல்லாம் ஒரு பழைய நூல்; அதுவும் அவர் குறிப்பிட்டுள்ளதைப் போல, பொருட்பாடான பயனை அளிக்கவில்லை. எவ்வித உதவியுமின்றி, எவருடைய ஆற்றுப்படுத்தலுமின்றி, தமிழ் மறையாம் திருவாசகத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் அந்நியமான புறச்சூழமைவில் போப்பெருந்தகை அப்பணியில் உழன்றுள்ளார்.

ஆகவே, என்னதான் தமிழுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் ஈடிணையற்றதும் மதிப்பிடற் கொண்ணாததுமான தொண்டினை ஆற்றியிருந்த போதிலும், தனது மொழிபெயர்ப்பில் பல இடங்களில் தடுமாறியுள்ளார்; தடுக்கி விழுந்துள்ளார்; சொற்களுக்கும், சொற்றொடர்களுக்கும், மறைபொருளான சுட்டுகளுக்கும் தெளிவற்ற பொருள் கொண்டு தவறான பொருள்விளக்கம் கண்டுள்ளார். இந்நிலை எனது தனிப்பட்ட மொழிபெயர்ப்பில் என்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்ற உறுதிப்பாட்டை எய்தியமைக்கு மற்றுமொரு நோக்கமாக அமைந்தது. இதன் வாயிலாகத் தனது வாழ்க்கையில் பெரும் பகுதியைத் தமிழுக்குத் தொண்டாற்றுவதிலேயே நீண்ட காலம் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட ஒப்புயர்வற்ற கிறித்தவ முனிவரின் அரும்பணியை நன்றியுணர்வின்றிக் குறைத்து மதிப்பிட்டதாக என்றும் கருதிவிடலாகாது. அது மட்டுமன்றி, அப்படியொரு அளவுகடந்த உரிமையை கைக்கொள்ளக் கூடுமானால், அவருடைய ஆன்மாவுடன் நம்முடையதை அடையாளம் காணும் உயிர்க்கலப்புக் கொள்ளும் அளவிற்கு அவரைப் போற்றவும் மதிக்கவும் செய்கிறோம்.

எனது நூலான மாணிக்கவாசக மாலையில் மாண்பிற்குரிய அருட்தொண்டர்கள் பட்டியலில் இடம்பெற்ற அருளாளர்களுடன் டாக்டர் போப் சேர்க்கப்பட்டுள்ளார் என்ற உண்மையும் அவ்வெளிய நூல் பாசத்துடனும், பெருமதிப்புடனும், நன்றியுணர்வுடனும் டாக்டர் போப் அவர்களுக்குப் படைக்கப்பட்டுள்ளது என்பதும் அவர் தெய்வீகச் சான்றோர் என்பதைக் காட்டிலும் சான்றோருள் தெய்வீகத் தன்மை வாய்க்கப் பெற்றவர் என்று நான் அவரைக் கருதுவதற்கான

சான்றுகள். ஆயினும், டாக்டர் போப் என் நெஞ்சுக்கு நெருக்கமானவர் எனினும் பேருண்மை என்பது அவரினும் பெரிதும் போற்றிக் காக்கப்பட வேண்டியது என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

எனவே, திருவாசகம் பற்றிய எண்ணற்ற விரிவுரைகளும் விளக்கவுரைகளும் அடங்கிய பல்வேறு வகைப்பட்ட நூல்களையும் பெரிதும் உறுதுணையாக நிற்கின்ற புறச்சூழல்களையும் கொண்டும், அனைத்திற்கும் மேலாக, இறையாற்றலின் தெளிவானதும் கண்ணுக்குப் புலப்படக் கூடியதுமான மாற்றமிலா அருளாசிகளாலும் திருவாசகத்தின் எனது ஆங்கில மொழியாக்கத்தை வெளிக் கொணர்ந்துள்ளேன் .

இந்த மொழியாக்க நூல் முழுநிறைவானது எனக் கருதுவது எனது நோக்கமல்ல. புனித போப் அவர்களுடைய முந்தைய ஆக்கத்தைக் காட்டிலும் ஓரளவேனும் செம்மைப் படுத்தப்பட்டது, மேம்படுத்தப்பட்டது என்று மட்டிலுமே சொல்லக்கூடும் !

முனைவர்.ஔவை. அருள்
மொழி பெயர்ப்புத்துறை இயக்குநர்
தமிழ்நாடு அரசு
நன்றி: தினமணி

9. சிறார் இலக்கியம்: அழகான புனைவும் அபத்தமான பொய்யும்.

— அ. குமரேசன்

புத்தகக் கடையில் குழந்தை இலக்கிய அலமாரிகள் உள்ள பகுதிக்குச் செல்கிறபோது வியப்பாகத்தான் இருக்கிறது. குழந்தைகளுக்காக இத்தனை புத்தகங்கள் வருகின்றனவா! இத்தனை பேர் எழுதுகிறார்களா! தமிழில் இப்படியொரு வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறதா!

கொரோனா ஊரடங்குக் காலத்தில் வீட்டடங்கிய குழந்தைகளுக்காகக் கதை சொல்லவும், குழந்தைகளே கதை சொல்லவும் நேரலைச் செயலிகள் வழியாகப் பல குழுக்கள் உருவாகி வெற்றிகரமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. காணொளிப் பகிர்வுத் தளங்களில் குழந்தைகளுக்கான கதைப்பதிவுகள் கதைகள் நிறையவே இணையவுலா வருகின்றன. அத்தைகள், மாமாக்கள் மட்டுமல்லாமல் பாப்பாக்களும் வந்து நட்சத்திரங்களாக ஒளிர்கிறார்கள்.

முன்பு குழந்தைகள் படிக்கவென்றே 'கண்ணன்', 'அம்புலிமாமா' எனப் பல பத்திரிகைகள் வந்துகொண்டிருந்தன. இன்று அத்தகைய பத்திரிகைகள் வெகுவாகக் குறைந்துவிட்டது சோகம். ஆயினும், இணையத் தளத்தில் இன்று சில குழந்தை ஏடுகள் விரிந்திருப்பது சுகம். நாளேடுகளில் வாரந்தோறும் குழந்தைகளுக்கான இணைப்புகள் இடம்பெறுகின்றன. அச்சிதழ்களின் எதிர்காலம் பற்றிய கேள்விக்குறி வளர்ந்துகொண்டே இருக்கிற நிலையில், குழந்தைகளுக்கான மின்-இதழ்கள் தவழத் தொடங்கியுள்ளன. அவற்றில் எழுத்துகளோடு, குரல்வழி வசனம், பின்னணி இசை என ஒலியையும் இணைக்கிற தொழில்நுட்பம் புதியதொரு அனுபவத்தை வழங்குகிறது.

கொண்டாட்டக் காலம்?

குழந்தை இலக்கியக் கொண்டாட்டக் காலம் கனிந்துவிட்டதோ என்ற எண்ணம் கூட ஏற்படுகிறது. ஆனாலும், அவ்வப்போது அதிகமாகப் பேசப்படுகிற, ஆனால் எப்போதும் ஓர் அளவோடு நிற்கிற ஒன்றாகவே குழந்தை இலக்கியம் இருக்கிறது.

ஆதித்தாத்திகளும் தாத்தன்களும் தங்கள் பேத்திகளையும் பேரன்களையும் சுற்றி உட்கார வைத்து, அப்போது நடந்தவொரு இயற்கை நிகழ்வை, நடத்தியதொரு வேட்டையை, ஏற்பட்ட சண்டையை, ஏற்றுக்கொண்ட உண்மையைக் கதையாகத்தான் உலகின் முதல் மொழியான சைகையில் சொல்லியிருப்பார்கள். அதன் தொடர்ச்சியாகத்தான், சொற்கள் உருவான பிறகு செவிவழிக் கதைகளாகப் பரம்பரைகளுக்குக் கடத்தப்பட்டன. எழுத்துகள் வடிவெடுத்த பிறகு விழிவழிக் கதைகளாகத் தலைமுறைகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

தமிழ் எழுத்தில் அவ்வையின் ஆத்திச்சூடி, அதிவீரராமபாண்டியன் கதைகள் என்றொரு பாரம்பரியம் இருக்கிறது. பிற்காலத்தில் பாரதியும் கவிமணியும் என்று

தொடங்கி அழ.வள்ளியப்பாவைத் தொடர்ந்து இன்றும் பல படைப்பாளிகள் குழந்தைகளோடு உறவாடிக்கொண்டிருக்கிறார்கள். புதுக்கோட்டை மாவட்டத்தின் ராயவரம் பகுதியிலிருந்து குழந்தைகளுக்காக எழுதுவோர் வரிசையாகப் புறப்பட்டதை ஒரு கட்டுரை தெரிவிக்கிறது. முனைவர் பூவண்ணன் எழுதிய 'குழந்தை இலக்கிய வரலாறு' என்ற நூல் வந்திருப்பதை அறிய முடிகிறது. வேறு சில ஆக்கங்களும் வந்திருக்கக்கூடும்.

2018ம் ஆண்டில் மலேசியாவில் உலகத் தமிழ் குழந்தை இலக்கிய மாநாடு ஒன்று நடத்தப்பட்டிருக்கிறது. தமிழகத்திலும் தமுஎகச முனைப்புகள் உள்ளிட்ட தனி முகாம்கள், விவாதங்கள் நடந்திருக்கின்றன. இத்தனை பசுமையான காட்சி புலப்பட்டாலும் இதிலே ஒரு வறட்சி உணரப்படுவது ஏன்?

காலத்தின் முக்கியத்துவம்:
புதிய தலைமுறைகளை ஒரே மாதிரியாக வார்ப்பதற்கான முயற்சிகள் ஒரு மூர்க்கத்தோடு முடுக்கிவிடப்பட்டுள்ளன. அதிகாரம், மதவாதம், சாதியம் என்ற வாய்ப்புகளோடு, பாரம்பரியப் பெருமை, கலாச்சார மகிமை என்ற ஒப்பனைகளோடு அந்த வார்ப்பட அரசியல் வேலைகள் நடத்தப்படுகின்றன. போதனைக் கதைகளோடு வரும் பத்திரிகைகள், புத்தகங்கள், தொலைக்காட்சித் தொடர்கள், அசையும் படத்தொகுப்புகள், நேரலை இணையத்தொடர்புகள் என நவீனங்களைப் பயன்படுத்தியே பழமைவாதத்திற்குள் நிறுத்துகிற உத்திகள் கையாளப்படுகின்றன. குழந்தைகள் "ஒழுக்கமாக" வளர்வதற்கு உதவுகின்றன என்று நம்புகிற பெற்றோர்களின் மனமுவந்த ஒப்புதலோடு இவை தொடர்கின்றன.

இந்நிலையில் குழந்தைகளின் முதன்மையான உரிமையாகிய அவர்களது சுதந்திரத்தைப் பாதுகாக்கவும், அந்தச் சுதந்திர உணர்வைத் தக்கவைக்கவும் குழந்தை இலக்கியப் படைப்புகள் முன்வரிசைக்கு வந்தாக வேண்டியிருக்கிறது. ஒரு மனந்திறந்த விவாத வெளியைத் திறந்தாக வேண்டியிருக்கிறது.

இதற்கே ஒரு இயக்கம் தேவைப்படுகிறது. வயதுக்கேற்ற புத்தகங்கள் தயாரிக்கப் படுவதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. குழந்தைகளை நேசிப்பது ஒருபுறமிருக்க, அவர்களை மதித்துச் சமதளத்தில் உரையாடும் பக்குவம் தலையாயதாகிறது. மொழி சார்ந்த அறிவோடு ஆர்வத்தை வளர்க்கும் தேவையும் முன்னுக்கு வருகிறது. பெரியவர்களுக்கான இலக்கியம் போலவே சிறார் இலக்கியத்தையும் அணுகுவது முக்கியத்துவம் பெறுகிறது. புதிய தொழில்நுட்ப வளர்ச்சியோடு இணைந்ததாகச் சிறார் இதழ்களை வெளியிடுவது அழகாக முளைவிட்டிருக்கிறது.

சிறார் இலக்கியத்தைப் பெரியதொரு இடத்திற்குக் கொண்டு செல்ல, இது தொடர்பான ஆழ்ந்த அக்கறையுள்ள, கூர்மையான விமர்சன அணுகுமுறை தேவை என்று இதில் அக்கறையோடு ஈடுபட்டிருக்கிறவர்கள் வலியுறுத்துகிறார்கள். குழந்தைகளுக்காக என வெளியாகும் புத்தகங்களைப் பாராட்டி அறிமுகப்படுத்தும் பதிவுகள் வருகிற அளவுக்கு விமர்சனக் கண்ணோட்டத்துடனான பகிர்வுகள் வருவதில்லை. சிறார் இலக்கிய விமர்சன மேடை தவிர்க்கப்பட்டு வந்திருப்பதில் தொடர்வது அக்கறையின்மை மட்டும்தானா, அல்லது இப்படிப்பட்ட

நுட்பங்களைக் குழந்தைகள் புரிந்துகொள்ளத் தேவையில்லை என்ற அக்கறையும்தானா?

சிறார் இலக்கியப் பறவையின் இறக்கைகள் கனவுச் சுகமும் கற்பனைப் பரவசமும்தான். அதில் கால்நடைகளும் பறவைகளும் மீன்களும் பூச்சிகளும் மட்டுமல்ல, மரம் செடி கொடிகளும் பேசும். மேகம் இறங்கிவந்து விளையாடும். வானவில் ஏணியாக நிமிரும். அதேவேளையில், இந்தக் கற்பனை உலகமே அவர்களுக்குப் போதுமென்று அறிவியல் உலகக் கதவுகளை அடைத்துவிடலாமா?

சூழலியல், இயற்கைச் சமநிலை, உயிரினங்களின் புவியுரிமை உள்ளிட்ட சிந்தனைகள் நவீன கால வரவுகள். அவை இன்று உலகளாவிய இயக்கங்களாகவும் உருவெடுத்து, அடிப்படை மாற்றங்களுக்கான எழுச்சிகளோடும் இணைகின்றன. இந்த வளர்ச்சிப் போக்கில், இன்னமும் விலங்குகளுக்கு மனிதர்களின் சுயநலம், அதிகாரப் போட்டி, பொறாமை, தந்திரம், சந்தர்ப்பவாதம் போன்ற குணங்களை ஏற்றிச் சொல்வது காலப்பொருத்தம் உடையதுதானா? சில விலங்குகளை அன்புக்கும், சில விலங்குகளைக் கொடூரத்திற்கும், சிலவற்றை அழகுக்கும், வேறு சிலவற்றை அருவருப்புக்கும் உருவகப்படுத்துவது சரியா?

டொரொன்டோ பல்கலைக்கழகத்தில், 2014ல் இது பற்றியே ஒரு ஆய்வு நடத்தப்பட்டிருக்கிறது. "விலங்குகளை மெய்யாகச் சித்தரிக்கிற புத்தகங்கள் உயிரியல் குறித்து மேலும் துல்லியமான புரிதலுக்கு இட்டுச்செல்கின்றன," என்கிறார் ஆய்வுக்குழு தலைவரான பேராசிரியர் பேட்ரிசியா கனீயா. "வளர்ந்த குழந்தைகள் கூட விலங்குகள் மனித இயல்புகளோடு காட்டப்படுவதன் தாக்கத்திற்கு உள்ளாகிறார்கள், மாயாவுலகக் கற்பனைக் கதைகளைப் படிக்கிற குழந்தைகள் அதிக அளவுக்கு மனித நடத்தைகளை விலங்குகளோடு பொருத்திப் பார்க்கிறார்கள்," என்கிறார் அவர்.

அடிப்படையிலேயே, மனிதர்களின் அனுபவங்கள், எதிர்பார்ப்புகள், ஏக்கங்கள், கனவுகள் என மனிதத் தேவைகளுக்காகவே கதைகள் புனையப்படுகின்றன - கடவுள் கதைகள் உள்பட. கற்பனையான கடவுள்களுக்கு மனித குணங்களை ஏற்றிக் கதை செய்யலாம் என்றால், நனவாக நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கிற விலங்குகளையும் அதேபோல் கதாபாத்திரங்களாக ஆக்குவதில் தவறு இல்லைதான்.

ஆனால், இன்னமும் காட்டுக்கு ராஜா சிங்கம்தான் என்றும், அதற்கான "நுழைவுத் தேர்வுகள்" பலவிதமாக நடத்தப்படுவதில் "தகுதியற்ற" விலங்குகள் தோற்பதாகவும் கதைத்துக்கொண்டிருப்பது, உலகளாவிய ஜனநாயக சிந்தனைகள் ஆழமாக வேர் பிடிக்க வேண்டிய சமகாலத்தில் பொருத்தம்தானா?

அறிவியல் உண்மைகளைக் கற்பனை உலகத்தோடு பொருத்தி எழுதவே முடியாது என்று மறுப்பது சவாலை எதிர்கொள்ள முடியாத இயலாமையிலிருந்து வருகிறதா, அல்லது அறிவியலை ஏற்காமையிலிருந்து வருகிறதா என்றும் ஆராயலாம். உங்கள் எழுத்தில் அறிவியல் உண்மைகளைத்தான் எழுத வேண்டும் என்ற கட்டாயமில்லை, ஆனால் அறிவியல் உண்மைகளுக்கு நேரெதிராக எழுத

வேண்டாமே என்று இப்போதைக்குக் கேட்டுக்கொள்ளலாம். அழகான புனைவு வேறு, அபத்தமான பொய் வேறு இல்லையா?

குழந்தை இலக்கியம் என்றால் கதை மட்டும்தானா, பாட்டு, கவிதை, நாடகம், கட்டுரை என்றெல்லாம் குழந்தை இலக்கியத்தில் இருப்பது பற்றியும் விவாதிக்க வேண்டாமா? இன்றைய கணினி வரைவியல் கலையின் மிகப்பெரும் வளர்ச்சியாக முப்பரிமாண உயிரூட்ட ஓவியக் கதைகள் திரையின் முன்னால் எல்லா வயதினரையும் இழுத்து உட்கார வைத்துக்கொண்டிருக்கின்றன. அந்தக் கலையை வசப்படுத்துவது புதிய சவால்களை வெல்வதில் ஒரு தலையாய பங்களிப்பாக அமையாதா? தமிழில் அத்தகைய தயாரிப்புகள் இல்லாததற்குக் காரணம் வெறும் முதலீட்டுத் தடைகள் மட்டும்தானா, அல்லது தட்டையான புரிதலின் தடைகளும்தானா?

குழந்தை வளர்வது போல குழந்தை இலக்கியத்திற்கான விவாதமும் வளர்வது ஆரோக்கியமானது. அந்த வளர்ச்சியை ஊட்டமும் உயிரோட்டமும் உள்ளதாக்க, முக்கியமானதொரு தரப்பாரிடமும் உரையாடியாக வேண்டும் – ஆம், குழந்தைகளிடம்தான்.

நன்றி: ‘செம்மலர்’ நவம்பர், 2020

10. கல் முகவடிவங்கள் கண்டுபிடிப்பு - துருக்கி.

— முனைவர். க. சுபாஷிணி

நீண்டகால மனிதகுல நாகரிகத்தின் சான்றுகளைக் கொண்டிருக்கும் நாடுகளில் துருக்கி சிறப்பு முக்கியத்துவம் பெறும் ஒரு நாடு. பண்டைய தொல் நகரமான Stratonikeia, Muğla பகுதியில் தொடர்ந்து நிகழ்த்தப்பட்ட தொல்லியல் அகழாய்வுகளில் இங்கு கல்முகவடிவங்கள் கிடைத்திருக்கின்றன. 3000 ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த நகரில் ஏறக்குறைய 2200 ஆண்டுகள் பழமை என அறியப்படுகின்ற இந்த கல்முகவடிவங்கள் பண்டைய தெய்வ வடிவங்கள், விலங்குகள் ஆகியவற்றைச் சார்ந்து வடிவமைக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் நிகழ்த்தப்பட்ட தேடுதலில் இதுவரை இத்தகைய 43 கல்முகவடிவங்கள் கிடைத்துள்ளன. பமுக்காலே பல்கலைக்கழகத்தின் முயற்சியில் கடந்த இரண்டு ஆண்டுகளாக நிகழ்த்தப்பட்டுவரும் இந்த ஆய்வு ஒரு திறந்தவெளி அரங்கப் பகுதியில் (Amphitheatre) நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

இந்த முகமூடிகள் இக்கலைக்கூடத்தின் வாயில் பகுதி தொடங்கி அமைக்கப்பட வகையில் உள்ளன. மிகப் பிரமாண்டமான முறையில் இந்த கல்முகவடிவங்கள் திகழ்கின்றன.

முழுமையான செய்தி:

https://www.dailysabah.com/arts/mythological-masks-unearthed-in-turkeys-ancient-city-of-stratonikeia/news?fbclid=IwAR3He9Zngri58Kd69XoVL4JOENzcEsKnJ5Tbjbl75e-4Cro22OjhNPb2kRE

11. தமிழக நிலவியல்.

— சபாரத்தினம்

அண்மையில் அரியலூரில் கண்டெடுக்கப்பட்டவை டைனோசர் முட்டைகள் அல்ல, ஆனால் இந்த முட்டை போன்ற உருண்டைகள் கடல்வாழ் உயிரினங்களின் படிமப் பாறைகள். முற்காலத்தில் கடலில் வாழ்ந்து பிறகு அழிந்துவிட்ட அம்மோனைட் உயிரினங்களின் மீதும் மற்றும் மேலும் பல்வேறு வகையான தொல் உயிர் எச்சங்களின் மீதும் ஏற்படும் சுண்ணாம்புப் படிமங்களால் பெரிய உருண்டைகளாகியுள்ளது என்று புவியியலாளர் திரு. சபாரத்தினம் விளக்கம் அளிக்கிறார். (காணொளி: http://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2021/01/Geologist-Sabarathinam.mp4).

மேலும் அரியலூர் அருங்காட்சியகத்தில் இருக்கும் உண்மையான டைனோசர் முட்டையின் படத்தையும் பகிர்ந்து கொண்டார். அந்த முட்டை குறித்து ஆய்வு செய்த ஜெர்மானிய புவியியலாளர்கள் எழுதிய ஒரு ஆய்வுக் கட்டுரையானது ஆய்விதழில் வெளியானது என்றும் குறிப்பிட்டார்.

Shell structure of a dinosaur egg from the Maastrichtian of Ariyalur (Southern India)

By **R. Kohring,** Berlin, **K. Bandel,** Hamburg, **D. Kortum,** Hamburg, and **S. Parthasararthy,** Ariyalur

With 9 figures and 1 table in the text

Kohring, R.; Bandel, K.; Kortum, D. & Parthasararthy, S. (1996): Shell structure of a dinosaur egg from the Maastrichtian of Ariyalur (Southern India). – N. Jb. Geol. Paläont. Mh., **1996** (1): 48–64; Stuttgart.

Abstract: From marine sediments of the Maastrichtian of the Ariyalur area a complete dinosaur egg is described. Up to now, occurrences of dinosaur eggs and nests from India have been reported only from the continental Lameta Formation (Northern India). Due to the shell structure, the new specimen can be assigned to the tubospherulitic type, which is fairly common in the Upper Cretaceous. Probably it was laid by a titanosaurid dinosaur (*Titanosaurus indicus* ?), which has also been assumed from other previously known dinosaur eggs of India. The eggshell structure shows some paleopathological phenomena. It is assumed that the egg was transported several times within the oviduct of the mother animal. In this case the resulting massive eggshell facilitated the long transport from a terrestrial into the marine environment.

Zusammenfassung: Aus dem marinen Maastrichtium von Ariyalur (Südindien) wird ein komplettes Dinosaurier-Ei beschrieben, während die bislang bekannten indischen Dinosaurier-Eier und -Nester aus der kontinentalen Lameta-Formation im Norden des Landes stammen. Nach der Schalenstruktur kann das Stück dem tubosphärolithischen Typ zugeordnet werden. Als Produzent kommt wahrscheinlich ein Titanosauroide (*Titanosaurus indicus* ?) in Frage. Die Schale zeigt paläopathologische Ansätze und ist wahrscheinlich mehrfach im Ovidukt der Mutter transportiert worden. Die hohe Schalendicke unterstützte mutmaßlich die Verfrachtung in den marinen Ablagerungsraum.

1. Introduction

Since in the 1920s dinosaur eggs and nests have been discovered in Upper Cretaceous sediments of the Gobi Desert, numerous other dinosaur egg bearing localities were analyzed, described and documented subsequently, including pre-Cretaceous amniotic eggs and eggshells (Hirsch 1989). These studies documented a worldwide occurrence of dinosaur eggs and eggshells during the Campanian and Maastrichtian (Southern France: Erben 1969, Erben et al. 1979; Spain: Kohring 1989;

0028-3630/96/1996-0048 $ 4.25
DOI:10.1127/njgpm/1996/1996/48 © 1996 E. Schweizerbart'sche Verlagsbuchhandlung, D-70176 Stuttgart
(c) 2017 www.schweizerbart.com

லேம்ப்டன் சிகரம் (Lambtons peak)

கோவை நகரத்தின் மேற்கு அரணாகச் செல்லும் நீண்ட மேற்குத் தொடர்ச்சி மலைகளைக் கவனித்திருக்கிறீர்களா!?. அதில் ஒரு சிகரம் கட்டைவிரலை வளைத்து தம்ஸ்அப் காட்டுவது போலிருக்கும். அதுதான் லேம்ப்டன் பீக். இது எங்கிருக்கிறது? வெள்ளக்கிணர், துடியலூர் பகுதிகளிலிருந்து சில கிமீ தொலைவில் இதை அடையலாம். இதே மலைப் பகுதியில்தான் குருடி மலை(குரு_ரிஷி ?) உள்ளது.

யார் இந்த லேம்ப்டன்?
இவர் இந்தியாவின் முதல் சர்வேயர் ஜெனரல்.
Great meridional arc என்ற , நில அளவைக்கான அடிப்படைக் கோட்டை வரையத் துவங்கியவர்(1802). அதை ஆங்கிலத்தில் trigonometrical survey என்பர். நிலங்களைப் பல முக்கோணங்களாகப் பிரித்து அளவை செய்வர். இந்த நில அளவைகளுக்கு அடிப்படையான கோடுதான் Great meridional arc. முசோரியில் இருந்து கன்னியாகுமரி வரை வரையப்பட்டது. இந்தப் பெருமுயற்சியின் இடையில் லேம்ப்டன் காலமாகிவிட ஜார்ஜ் எவெரெஸ்ட் பொறுப்பு ஏற்றார். உலகின் உயர்ந்த சிகரமான எவெரெஸ்ட் இந்த சர்வே யின் விளைவாகவே கண்டுபிடிக்கப்பட்டது. ஜியார்ஜ் எவெரெஸ்ட் நினைவாக அந்த சிகரத்துக்குப் பெயர் வைக்கப்பட்டது போல், இந்த மாபெரும் பணியின் முன்னோடி லேம்ப்டன் இந்த பகுதியில் பணியாற்றியதால்(1806 வாக்கில்) இந்த சிகரத்துக்கு இவர் பெயர் சூட்டப்பட்டது

இந்த மாபெரும் பணியில் ஈடுபட்டபோது(ஏன் உயிரிழப்புக்கள் கூட) நடந்த சம்பவங்களையும், சிரமங்களையும் திரு ரமணன் அவர்கள் தனது "கடைசிக்கோடு" என்னும் நூலில் சுவை படக்கூறியிருப்பார். அவருக்கு எனது நன்றிகள்.

புகைப்பட உதவி: திரு. சுபாஷ் சுந்தரம்

நீலகிரி (Blue mountain)

தமிழ் நாட்டில், மேற்குத் தொடர்ச்சி மலையும், கிழக்குத் தொடர்ச்சி மலையும், நீலகிரியோடு இணைகின்றன. இந்த மலை சார்னோகைட் (Charnockite) எனும் பாறைகளால் ஆனது. இது ஒரு வகை கருங்கல் (Granite) ஆகும். ஹைப்பர்ஸ்தீன் கிரானைட் (Hypersthene Granite) என்று அழைக்கப்படும். ஹைப்பர்ஸ்தீன் அடர் பச்சை நிறத்தில் இருக்கும் ஒரு கனிமம், அந்த வகை கிரானைட் பாறைகளின் ஒரு அங்கமாகக் காணப்படும். தூரத்திலிருந்து பார்க்கும்போது இந்த சார்னோகைட் மலைகள் நீல நிறமாகத் தெரியும். எனவே நீலகிரி என்று அழைக்கப் படுகிறது.

முதன் முதலாக இந்த வகைப் பாறையைக் கண்டு பிடித்தவர் ஜேம்ஸ் ஹாலண்ட் (James Holland) என்னும் புவியியலாளர். கல்கத்தா நகரைக் கட்டமைத்து உருவாக்கிய ஜாப் சார்னோக் (Job Charnock) எனும் ஆங்கிலேயரின் கல்லறையில் (tomb stone) இந்த பாறை முதன் முதலில் காணப்பட்டதால், இப் பாறைக்கு சார்னோகைட் என்று பெயரிடப்பட்டது. சென்னை பல்லாவரம் பகுதிகளில் காணப்படுவதும் இவ்வகைப் பாறைகளே.

சில தாவரவியலாளர்கள் 12 ஆண்டுக்கு ஒருமுறை மலரும் குறிஞ்சிப்பூ காரணம் கொண்டு, நீலகிரி என்று அழைக்கப் படுவதாகக் கூறுவதும் உண்டு.

12. வேட்டைச்சமூகத்தில் பெண்களின் நிலை - தொல்லியல் சான்றுகள்.

— முனைவர். க. சுபாஷிணி

வேட்டைச்சமூகத்தில் பெண்களின் நிலை - தொல்லியல் சான்றுகள்:
பண்டைய சமுதாயத்தில் ஆண்கள் வேட்டையாடி உணவுப் பொருளைக் கொண்டு வருவார்கள் என்றும், பெண்கள் ஒரு இடத்தில் தங்கியிருந்து உணவைச் சமைத்துக் கொடுப்பார்கள் என்றும் பொதுவாகச் சொல்லப்படுகின்றது. இந்தப் பொது சிந்தனையை மாற்றி அமைக்கும் வகையில் அண்மைய ஒரு தொல்லியல் கண்டுபிடிப்பு திகழ்கிறது.

பெரு நாட்டின் ஆண்டியன் மலைப்பகுதியில் நிகழ்த்தப்பட்ட ஒரு அகழாய்வில் 9000 ஆண்டுகள் பழமையானது என அறியப்பட்ட ஒரு எலும்புக்கூட்டினை ஆய்வாளர்கள் கண்டெடுத்தனர். ஒரு வேட்டைக்காரருக்கு உருவாக்கப்பட்ட ஒரு ஈமக்கிரியை பகுதி அது. அந்த எலும்புக்கூட்டின் அருகிலிருந்த வேட்டைக்கருவிகளை ஆராய்ந்த போது இது மிகத் திறமை வாய்ந்த ஒரு வேட்டைக்காரரது உடைமையாக இருக்கும் என்று கருதினர். வேட்டைக்கருவியோடு இணைந்து கிடைத்த 20 கருவிகளும் ஒரு தேர்ந்த வேட்டைக்காரரின் படைப்பு என்று கருதினர். நிச்சயமாக இந்த வேட்டைக்காரர் ஒரு முக்கிய வேட்டைக்குழுவின் தலைவனாக இருக்க வேண்டும் என்றும் கருதினர்.

An artist's depiction of a female hunter 9000 years ago in the Andean highlands of Peru MATTHEW VERDOLIVO/UC DAVIS IET ACADEMIC TECHNOLOGY SERVICES

அதன் பின்னர் எலும்புக்கூட்டின் மேல் அரிசோனா பல்கலைக்கழக ஆய்வாளர்களால் நிகழ்த்தப்பட்ட வேதியல் சோதனைகளில் இந்த வேட்டைக்காரர் ஒரு பெண் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் தற்சமயம் அந்த வேட்டைக்காரர் ஒரு பெண்தான் என்பதை உறுதி செய்திருக்கின்றனர். இதுவரை வேட்டையாடி சமூகம் என்பது ஆண்களே என்ற பொதுச் சிந்தனையை இந்தக் கண்டுபிடிப்பு மாற்றியிருக்கின்றது.

இந்தக் கண்டுபிடிப்பின் அடிப்படையில் ஆய்வாளர்கள் தென்னமெரிக்காவில் வெவ்வேறு பகுதிகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் அவர்கள் மேலும் 10 பெண் வேட்டைக்காரர்களின் எலும்புக்கூடுகளைக் கண்டுபிடித்திருக்கின்றனர். அவர்களது அருகாமையிலேயே அவர்களது வேட்டைக்கருவிகளும் மரியாதை நிமித்தம் வைத்துப் புதைக்கப்பட்ட செய்தியையும் இந்தக் கண்டுபிடிப்பு வெளிப்படுத்தியுள்ளது.

இது பற்றி கருத்து கூறும் போது, இதன் வழி பண்டைய காலத்தில், பெண்கள் வேட்டையாடிகளாகத் தொன்று தொட்டே இருந்திருக்கின்றனர் என்பதையும் உறுதி செய்யலாம் என ஒக்லஹாமா பல்கலைக்கழக தொல்லியல் அறிஞர் போனி பிட்பிளாடோ தெரிவிக்கின்றார்.

பெரு நாட்டின் ஆண்டிஸ் மலைப்பகுதியில் 13,000 அடி உயரத்தில் இந்த வேட்டையாடி மக்கள் வாழ்ந்திருக்கின்றனர். ஆண்களும் பெண்களும் இணைந்தே தங்கள் உணவைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கலாம். அவர்களில் ஒரு பெண் அக்குழுவின் தலைவியாகவும் இருந்திருக்கலாம். பல பெண் வேட்டைக்குழுத் தலைவர்களும் இருந்திருக்கலாம். இப்படிப் பல ஊகங்களுக்கும் தொடர் ஆய்வுகளுக்கும் இட்டுச் செல்லும் கண்டுபிடிப்பாகவே இது அமைகிறது.

மேலதிக செய்திகளுக்கு: https://www.sciencemag.org/news/2020/11/woman-hunter-ancient-andean-remains-challenge-old-ideas-who-speared-big-game?fbclid=IwAR1vDCJG-edq4XZbOz3aB_y00xJ4p90gCa62iQkdboPmv95Kq1xudDNok7c

13. ராகுல சாங்கிருத்தியாயனை பௌத்த பிக்குவாக ஆக்கிய இலங்கை.

— என்.சரவணன்

ராகுல சாங்கிருத்தியாயனை அறியாத எழுத்தாளர்கள் இருக்க முடியாது. இராகுல்ஜி 1893 ஆம் ஆண்டு கிழக்கு உத்திரப் பிரதேசத்தில் ஆஜம்கட் மாவட்டம் , பண்டகா என்ற கிராமத்தில் ஒரு பிராமணக் குடும்பத்தில் முதல் குழந்தையாகப் பிறந்தார். கேதார்நாத் பாண்டே. (09.04.1893 – 14.04.1963) என்கிற இயற்பெயருடன் இவர் தனது பெற்றோர்களைச் சிறு வயதிலேயே இழந்ததன் பின் தனது பாட்டியால் வளர்க்கப்பட்டார்.

ஆரம்பப் பள்ளிப்படிப்பை மட்டுமே முறையான கல்வியாகக் கற்றாலும் தானே கற்று 30க்கும் மேற்பட்ட மொழிகள் அறிந்த பன்மொழி அறிஞராகவும், பலதுறை வல்லுநராகவும் 70 வயதுவரை வாழ்ந்து 1963 இல் மறைந்தவர். இவர் 'மகா பண்டிட்' என்கிற பட்டமும் பெற்றவர். தமிழகத்தில் இவர் வாழ்ந்த காலத்தில் தமிழையும் அறிந்து கொண்டார்.

அவர் காசியில் சமஸ்கிருதம்,அரபு, பர்சிய மொழிகளை மரபுரீதியாகக் கற்றுக்கொண்டார். ஏனைய 30க்கும் மேற்பட்ட மொழிகளை அவர் சுயமாகவே கற்றுக்கொண்டார். அவர் எழுதியுள்ள நூல்களைப் பட்டியலிட இக்கட்டுரை போதாது. அவர் எழுதிய எண்ணற்ற நாட்குறிப்புகள் குறிப்புகள் இன்னமும் வெளியாகவில்லை.

தமிழில் இலக்கிய ஆர்வலர்கள் பலர் வாசிக்கத் தவறியிருக்காத நூல் "வால்காவிலிருந்து கங்கை வரை". "ஒவ்வொரு தமிழனும் கட்டாயம் படிக்க வேண்டிய நூல்" என சி.என். அண்ணாதுரை பரிந்துரைத்த நூல் அது. அது மட்டுமன்றி மேலும் பல முக்கிய நூல்களை நமக்குத் தந்தவர். இந்த நூல் இந்திய, இலங்கை மொழிகளில் மாத்திரமல்ல ரஷ்ய, செக், போலிஷ், சீன மொழி உள்ளிட்ட பல உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுப் பல பதிப்புகளைக் கண்ட நூல்.

1920களின் ஆரம்பத்தில் அவர் தீவிர அரசியல் பணிகளில் இணைத்துக்கொண்டார். இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஒரு வடிவமான ஒத்துழையாமை இயக்கத்திற்காக பிரச்சாரங்களில் ஈடுபட்டு 31.01.1922 அன்று அவரை பிரிட்டிஷார் கைது செய்து சிறையில் அடைத்தது. சிறையிலிருந்தும் கைதிகளை விழிப்புணர்வூட்டுவதற்காகப் பாடல்கள், கவிதைகள், நாடகங்களை எழுதினார். அவரின் எழுத்துக்கள் சிறைக்கு வெளியில் இரகசியமாக அனுப்பப்பட்டது பிரசுரமும் செய்யப்பட்டன. அடிக்கடி கைதாகி சிறையிலிருந்தார். காங்கிரஸ் கட்சியில் ஜில்லா செயலாளராகவும் இருந்திருக்கிறார். இந்தக் காலப்பகுதியில் தான் புத்தர் ஞானம் பெற்ற வெள்ளரசு மரம் இருக்கின்ற "புத்தகயா" ஆலயத்தை இந்துக்களிடம் இருந்து மீட்டு பௌத்தர்களுக்கு வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். முஸ்லிம்களின் படையெடுப்பைத் தொடர்ந்து முன்னர்

இருந்த பௌத்த ஆலயம் சின்னாபின்னமாக்கப்பட்டு பிற்காலத்தில் அங்கே இருந்த புத்தரை சிவனென்று வழிபட்டு ஒரு இந்துக் கோவிலாகவே மாற்றிவிட்டிருந்தனர்.

இன்று பௌத்த மறுமலர்ச்சியின் தந்தையாகக் கொண்டாடப்படும் அநகாரிக்க தர்மபால அப்போது இலங்கையிலிருந்து அங்கு சென்றவேளை இதனைக் கண்ணுற்று இந்துக்களிடம் இருந்து அதை மீட்பதற்காக "மகாபோதி சங்கம்" என்கிற இயக்கத்தை ஆரம்பித்து தீவிரமாக இயங்கிவந்தார். (அந்த இயக்கத்தின் அந்த முயற்சி பின்னர் வெற்றிபெற்றது. இந்த மீட்பில் ராகுல்ஜியின் பங்கும் கணிசமானது.)



Palm-leaf MSS. being examined by Rāhula Sāṅkrityāyana at Sa-skya

புத்தகயா அமைந்துள்ளதும் பீகாரில் தான். அங்கே சாப்ரா (Chhapra) என்கிற பிரதேசத்தின் காங்கிரஸ் கமிட்டியை ராகுல்ஜி கூட்டி அங்கே புத்தகயாவை மீட்பதற்கான தீர்மானங்களை நிறைவேற்றினார். இந்த பரிந்துரைகளை காங்கிரசின் வருடாந்த தேசிய மாநாட்டில் ஒரு தலைப்பாகச் சேர்க்கப்பட்டது. அங்கே அநகாரிக்க தர்மபாலாவும் தனது சார்பில் பிக்குமார்களை அனுப்பிவைத்தார். அங்கு நிகழ்ந்த பல தரப்பட்ட மொழியிலான விவாதங்களை ராகுல் மொழிபெயர்த்தார். பிற்காலத்தில் இது குறித்து ஆராய்வதற்காக அன்றைய காங்கிரஸ் தலைவர் ராஜேந்திர பிரசாத் அமைத்த கமிட்டியில் ராகுல்ஜி முக்கிய பங்காற்றினார். புத்தகயாவை மீட்கும் முயற்சி வெற்றியளிக்காத நிலையில் இலங்கைக்குப் புறப்பட்டார்.

அநகாரிக்க தர்மபாலவின் சிஷ்யரும் மகா போதி சங்கத்தின் செயலாளருமான பிரமச்சாரி தேவபிரிய வலிசிங்க இலங்கைக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார். வித்தியாலங்கார பிரிவெனாவைச் சேர்ந்த நாராவில் தர்மரத்ன தேரர் ஒரு தந்தியின் மூலம் அவருக்கு அழைப்பையும் வழிச்செலவுக்கான பணத்தையும் அனுப்பி வைத்தார். 16.05.1927 அன்று அவர் இலங்கை வந்தடைந்தார்.

இலங்கைக்கு வந்த அவர் தேரவாத பௌத்தத்தால் மேலும் ஈர்க்கப்பட்டு லுனுபொக்குனு தம்மானந்த தேரரின் கீழ் பௌத்த தீட்சை பெற்று காவியுடை அணிந்து பௌத்த பிக்குவாக ஆனார். பின்னர் தனது "ராம் உதார் தாஸ்" என்கிற பெயரை "ராகுல சாங்கிருத்தியாயன்" மாற்றிக்கொண்டார். அவரின் எஞ்சிய காலம் முழுவதும் இந்தப் பெயரிலேயே அவர் இயங்கினார். ராகுல என்பது புத்தரின் மகனின் பெயர். இலங்கையில் பல பிக்குமார்கள் தமக்குச் சூட்டிக்கொண்ட பிரபலமான பெயர்.

இலங்கையில் ராகுலுக்குத் தேவைப்பட்ட நூல்களை வாங்கிக் கொடுத்து உதவியவர் இலங்கை தேசிய காங்கிரசின் தலைவராக, அரசபை உறுப்பினராக, அமைச்சராக எல்லாம் இருந்த சேர் டி.பி.ஜெயதிலக்க.

அமெரிக்காவைச் சேர்ந்த கேணல் ஒல்கொட், ரஷ்யாவைச் சேர்ந்த பிலாவட்ஸ்கி, இந்தியாவைச் சேர்ந்த அயோத்திதாச பண்டிதர் போன்றோர் கூட இதற்கு முன்னர் இலங்கைக்கு வந்து பௌத்த தீட்சை பெற்று பௌத்தர்களாக ஆன நமக்குத் தெரிந்த பிரபலமானவர்கள்.

இலங்கையில் சிங்களத்தையும், பாளி மொழியையும் பௌத்த இலக்கியங்களைப் பற்றி ஆழமாகக் கற்றுணர்ந்தார். பௌத்த புனித நூலான "திரிபீடக" (மூன்று பீடங்கள்) எனப்படுகின்ற பௌத்த கிரந்தங்களைக் கற்றுத் தேர்ந்து "திரிபீடகாச்சார்யா" என்கிற பட்டத்தையும் பெற்றார். ஒன்றரை வருடம் கழிந்து 01.12.1928 அன்று அவர் இலங்கையிலிருந்து நேபாளுக்கு பயணமானார். ஆனாலும் அவர் அதன் பின்னரும் இலங்கைக்கு அடிக்கடி வந்தார். சீன, நேபாள், திபெத் பகுதிகளுக்கு அவர் மேற்கொண்ட பயணங்களின் போது அதுவரை கண்டுபிடிக்கப்படாத முக்கிய புராதன பௌத்த ஓலைச்சுவடிகளைக் கண்டெடுத்து அவற்றை வெளியில் கொண்டுவந்தார்.

திபெத்திற்கு இவர் புத்த துறவியாகச் சென்று அங்கிருந்து பல மதிப்புள்ள புத்தகங்களையும் ஓவியங்களையும் இந்தியாவிற்குக் கொணர்ந்தார். இவை முன்னர் இந்தியாவின் நாலந்தா நூலகத்திலிருந்தவை ஆகும்.

பயணங்கள் தருவது போன்ற அனுபவங்களையும் படிப்பினைகளையும் உலகில் வேறெதுவும் தந்துவிடாது என்பது வரலாற்று உண்மை. ராகுல்ஜியும் ஒரு நாடோடியைப் போல ஏராளமான பயணங்களை மேற்கொண்டார். இந்த இடைக்காலப்பகுதியில் அவர் தனது பெயரை ராம் உதார் தாஸ் என்று மாற்றிக்கொண்டிருந்தார். சாதாரண பயணம் அல்ல. தன் வாழ்நாளில் 45 வருட காலத்தை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணத்தில் செலவழித்தவர். அவரின் பயண அனுபவங்களைப் பற்றி அவரே தனியாக எழுதிய "ஊர்சுற்றிப் புராணம்"

என்கிற நூல் அனைவரும் வாசித்து இன்புற வேண்டிய நூல். இந்திய பயண இலக்கியத்தின் தந்தை என்று இன்றும் அழைக்கப்படுபவர் ராகுல்ஜி.



வர்ணாசிரமதர்ம எதிர்ப்பு, வர்க்க விடுதலை, ஆணாதிக்க எதிர்ப்பு, பிற்காலத்தில் பொதுவுடைமை கொள்கையில் தீவிரம், அம்பேத்கருக்கு ஆதரவு, இட ஒதுக்கீட்டு விடயத்தில் காந்தியின் மீது கடுப்பு, பாகிஸ்தான் பிரிவினை தொடர்பில் "அம்மக்களின் கருத்துக்கே முன்னுரிமை" போன்ற அவரின் அரசியல் நிலைப்பாடுகள் இன்றும் வியக்கவைப்பவை.

இலங்கையில் அவர் பெற்ற அனுபவங்களை விவரித்து "லங்கா" தலைப்பில் ஒரு நூலை எழுதியிருப்பதை அறிய முடிந்தது. இக்கட்டுரைக்காக அந்த நூலைத் தேடிக்கண்டுபிடிக்க முடிந்தது. 1935 ஆம் ஆண்டு வெளிவந்த இந்த நூல் இந்தி மொழியில் 240 பக்கங்களைக் கொண்டது இது. அனுராதபுரம், பொலன்னறுவை கொழும்பு இடங்களைப் பற்றிய விவரிப்புகளையும், வரலாற்றுக் குறிப்புகளையும் பல புகைப்படங்களையும் உள்ளடக்கிய அந்த நூல் இதுவரை தமிழ், சிங்கள அல்லது வேறெந்த மொழியிலும் வெளிவரவில்லை என்பதையும் இந்த இடத்தில் பதிவு செய்ய வேண்டும். 1950லிருந்து வெளியான அவரின் "எனது வாழ்க்கைப் பயணம்" என்கிற தலைப்பில் வெளியான 6 தொகுப்புகளில் முதலாவதில் "லங்கா" உள்ளடக்கப்பட்டிருக்கிறது.

ஆங்கிலத்திலிருந்து சிங்களத்துக்கு ஏராளமான படைப்புகள் வெளிக்கொணரப்பட்டுள்ளன என்பது உண்மை. இந்தி என்பதாலோ என்னவோ இது வரை "லங்கா" கண்டுகொள்ளப்படவில்லையோ தெரியவில்லை. அது மட்டுமன்றி ராகுல்ஜி பற்றி சிங்களத்தில் இதுவரை ஒரு சிறிய கட்டுரையைக் கூட என்னால் இனங்காண முடியவில்லை. இலங்கையைப் பொறுத்தளவில் தமிழர்களை விட சிங்கள பௌத்தர்களால் கொண்டாடப்படவேண்டியவர் ராகுல்ஜி. வால்காவிலிருந்து கங்கை வரை நூல் மாத்திரம் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதைக் கவனிக்க முடிகிறது.

பிற்காலத்தில் அவர் மாக்ஸிய இலக்கியங்களைக் கற்று ஒரு மாக்சியவாதியாக ஆனார். இந்தியப் பல்கலைக்கழகங்கள் அவரைக் கண்டுகொள்ளாத காலத்தில் அவரின் புலமையைக் கண்டு லெனின்கிராட் பல்கலைக்கழகம் இரு தடவைகள் அவரை பணியாற்ற அழைத்தது.

அவரின் இறுதிக்காலத்தில் இலங்கையில் வித்தியாலங்கார பல்கலைக்கழகம் (இன்றைய களனி பல்கலைக்கழகம்) அவரை தம்மோடு பணியாற்றும்படி அழைத்தது. அங்கே பேராசிரியராக பணியாற்றினார். இறுதிவரை அவரை எந்த இந்தியப் பல்கலைக்கழகமும் உரிய கௌரவத்தை அவருக்குக் கொடுக்கவில்லை.

ராகுல்ஜி தனது தொடர்ச்சியான சமூக விஞ்ஞானத் தேடல்களுக்கு ஊடாக மாக்ஸிய சிந்தனையால் கவரப்பட்டார். மாக்சியவாதியாகவே ஆனார். அதன்பின்னர் அவர் பௌத்தத்தை மார்க்சியத்துக்கூடாக எப்படி அணுகவேண்டும் என்று "மார்க்சிய அணுகுமுறையில் பௌத்தம்" (Buddhism: The Marxist Approach) என்கிற நூலை எழுதினார்.

உலகின் பல எழுத்தாளர்கள் தமது இறுதிக்காலத்தில் எதிர்கொண்டிருக்கிற அதே நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இருதய நோய் என்பவற்றால் பாதிக்கப்பட்டதுடன்,

மிகை உழைப்பு உடலின் ஆரோக்கியத்தையும் வெகுவாக பாதித்து நினைவாற்றலையும் இழந்து 1963இல் டார்ஜிலிங்கில் இறந்தார்.

உசாத்துணை:

1. Alaka Atreya Chudal – "Rahul Sankrityayan and the Buddhism of Nepal" - European Bulletin of Himalayan Research 46: 62-87 (2015)

2. பிரபாகர் மாச்வே- இந்திய இலக்கிய சிற்பிகள் "ராகுல் சாங்கிருத்யாயன்" – 1986

3. Rahul Sankrityayan – "Lanka" – Sahitya sevak sangam, 1935

4. கலாநிதி கஹாவத்தே சிறி சுமேத ஹிமி – "புராதன இந்தியாவின் முதல் பௌத்த விகாரை" – திவயின (01-10.2014)

நன்றி - அரங்கம்

14. கல்விக் கொள்கையும் மொழிக் கொள்கையும்.

— சொல்லாக்கியன்

எந்த ஒரு வளர்ந்த நாட்டிலும், மருத்துவமும், கல்வியும் அரசின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும். ஏனெனில், எல்லைப் பாதுகாப்பு மற்றும் உள்நாட்டு அமைதியைக் காப்பதை அடுத்து, குடிமக்களின் உடல்நலனைக் காக்க வேண்டியதும், முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்குத் தேவையான கல்வியை வழங்க வேண்டியதும், அறிவார்ந்த அரசின் தலையாயக் கடமைகளாக உணரப்படுகின்றன. இந்தியா, வளர்ந்த நாட்டுக்குரிய இலக்கணமான, இலவச பொது மருத்துவம் மற்றும் இலவசக் கல்வியை நாட்டு மக்களுக்கு உறுதிப்படுத்த வேண்டும்.

இந்தியாவின் புதிய கல்விக் கொள்கை 2019, தமிழகத்தில் பெரும் பேசும் பொருளானது. ஒரு சாரார் நல்ல கொள்கை என்றும், மற்றொரு சாரார் மோசமான கொள்கை என்றும் கூறிவருகின்றனர். எப்படி இருப்பினும், பாராளுமன்றத்தில் விவாதித்து சட்டமாக நிறைவேற்றாமல், மோடி அரசாங்கத்தின் கொள்கை முடிவாகச் சட்டமாக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையில், இந்தியா அங்கம் வகிப்பதை நாம் அறிவோம். ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதாரம் மற்றும் சமூக விவகாரங்கள் துறை, வளங்குன்றா வளர்ச்சிக்கு (Sustainable Development Goals) 17 இலக்குகளைக் கொண்டுள்ளது. அவற்றில், (SDG4) 4-வது இலக்குதான், "அனைவரையும் உள்ளடக்கிய, சமமாக்கப்பட்ட, தரமான கல்வி மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்கும் வாய்ப்புகளை வளர்ப்பது" மற்றும், "கற்பவரை மையமாகக் கொண்ட, கலந்துரையாடல் சார்ந்த, இணக்கமுள்ள அதே சமயம் மகிழ்ச்சிகரமான ஒன்றாக கல்வியை விரிவுபடுத்துவது".

பெருந்தரவு (BIG DATA), செயற்கை நுண்ணறிவு (AI), இயந்திரவழிக் கற்றல் (MACHINE LEARNING) காரணமாகப் பல தொழில்கள், எதிர்காலங்களில், மனிதர்களின் தேவையின்றி, இயந்திரங்களினாலேயே நிகழ்த்தப்படும். எனவே, இயந்திரங்களால் முடியாத திறன்களை, மிகுதியான மனிதர்கள் வளர்த்தெடுக்க வேண்டியது அவசியமாகும். அறிவியல், மானுடவியல், சமூகவியல் ஆகிய துறைகளுடன் கணிதம், கணினி அறிவியல், தரவு அறிவியல் ஆகியவை ஒன்றிணைந்த, புதிய துறைகளை உருவாக்க வேண்டும். பருவநிலை மாற்றம், தூய்மைக்கேடு, குறையும் இயற்கை வளங்கள் ஆகிய சிக்கல்களைத் தீர்க்க, உயிரியல், இரசாயனம், இயற்பியல், விவசாயம், பருவநிலை அறிவியல், சமூக அறிவியல் ஆகியவற்றின் கூட்டு ஆய்வுகள் தேவைப்படும். இந்தியா, பெரும் மக்கள் தொகையுடன் வளரும் நாடென்பதால், மானுடவியல் மற்றும் கலை சார்ந்த துறைகளின் தேவைகளும் அதிகரிக்கும்.

கல்விகற்றல் முறையானது, கூரிய சிந்தனை, சிக்கல்களைத் தீர்க்கும் திறன், படைப்பாக்கத்திறன் ஆகியவற்றை வளர்ப்பதாய் இருக்க வேண்டும். கலை, திறன்,

இலக்கியம், பண்பாடு, நற்பண்புகள் ஆகியவற்றுடன் முழுமையான மனிதனை உருவாக்குவதாய் கல்வி இருக்க வேண்டும்.

இந்தியாவும், ஐக்கிய நாடுகள் சபையின் இக்கொள்கையை நடைமுறைப்படுத்தப் போவதாய், 2015-லேயே உறுதியளித்தது. அதன் தொடர்ச்சியாக, இந்தியச் சூழலுக்கேற்ற கல்விக் கொள்கையை, இந்தியா உருவாக்க முனைந்தது. முன்னாள் மத்திய அமைச்சரவை செயலாளர் திரு.டி.எஸ்.ஆர்.சுப்பிரமணியன் அளித்த அறிக்கையின் அடிப்படையில், இந்திய அரசாங்கத்தின் மனிதவள மேம்பாட்டுத்துறை சில உள்ளீடுகளை, 2016-ல் வழங்கியது. அவ்வுள்ளீடுகளைக் கொண்டு தேசியக் கல்விக் கொள்கை வரைவை உருவாக்க, பத்மவிபூஷன் முனைவர் கஸ்தூரி ரங்கன் தலைமையில் ஒரு குழுவை, 2017 ஜூன் மாதம், மத்திய அரசு உருவாக்கியது.

அக்குழு, நம் நாடு மற்றும் அமெரிக்கா, இங்கிலாந்து உட்பட, உலக நாடுகள் பலவற்றிலும் உள்ள நூற்றுக்கணக்கான கல்வியாளர்களுடனும், மாநில கல்வி அமைச்சர்களுடனும் உரையாடி, இப்புதிய கல்விக் கொள்கை வரைவை உருவாக்கியுள்ளது பாராட்டுக்குரியது. ஆனால், அதே சமயம், கல்வித் துறையில் சிறப்பான முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளான, பின்லாந்து, டென்மார்க், நார்வே, சுவீடன், ஜப்பான், தென் கொரியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளின் கல்வி அமைப்புகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாதது வருந்துதற்குரியது. இக்கொள்கை குறித்து, மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சரின் உள்ளீட்டுப் பங்களிப்பு, பா.ஜ.க. வின் குறுகிய அரசியல் அம்சங்களோடு, இருப்பது குறிப்பிடத்தக்கது (https://www.mhrd.gov.in/sites/upload_files/mhrd/files/nep/Inputs_Draft_NEP_2016.pdf).

மோபியஸ் பட்டை (Mobius Strip) எனும் இந்த படக்குறி, புதிய தேசிய கல்விக் கொள்கையின் சின்னமாக உள்ளது. இது, துவக்கமோ முடிவோ இல்லாமல், என்றென்றும் வளர்கின்ற, உயிர்ப்புள்ள அறிவின் தன்மையைக் குறிக்கின்றது. நல்ல குறிதான்.

ஐக்கிய நாடுகள் சபையின் 1948- ம் ஆண்டின் மனித உரிமைகள் பிரகடனத்தின் "அனைவருக்கும் கல்வி கற்கும் உரிமை உள்ளது", எனும் அடிப்படையில் தொடங்கி, ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பின், 1996 -ம் வருடத்திய, 21-ம் நூற்றாண்டில் கல்வி பற்றிய சர்வதேச குழுவின் அறிக்கையான, "கற்றல் : உள்ளிருக்கும் புதையல்" (https://unesdoc.unesco.org/ark:/48223/pf0000109590/PDF/109590engo.pdf.multi) என்பது வரை, புதிய கல்விக் கொள்கை வரைவுக் குழு கணக்கில் எடுத்திருப்பது, நன்று.

1. அறிதலுக்கான கற்றல், 2. உழைப்பதற்கான கற்றல், 3. சேர்ந்து வாழ்வதற்கான கற்றல், 4. தானாய் இருப்பதற்கான கற்றல் என்பன, கல்வியின் நான்கு தூண்கள் என்றும், கல்விப் படிப்புடன், 'மென் திறன்களாக' சமூகத்தில் இயங்கும் பல்வேறு குழுக்களுடன் இணக்கமாக வாழக் கற்பது மற்றும் மற்றவர் உணர்வு புண்படாமல்

பழகக் கற்பது என்பதும் கல்வியின்பாற்படும் என்று அவ்வறிக்கை சுருக்கமாகக் கூறுகின்றது.

இப்புதிய கல்விக் கொள்கை, இந்தியப் பாரம்பரியக் கல்விமுறையையும், அறிவு வளத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்வதாய் கூறுகின்றது. பழம் இந்தியாவில், குறிப்பாக, பௌத்த, சமணர்கள் காலத்தில், கல்வியின் இலக்கு, தன்னை உணர்தலும் சுயவிடுதலையுமாகவே இருந்தது. அதனால், சமுதாயத்தின் பெரும்பகுதி பொருளாதார இயக்கமின்றிப் போனது. உழைத்த சிலரின் மீது பெரும்பாரம் அழுத்தியது. ஆனால், அவர்களுக்குப் பின் வலிமையடைந்த சனாதனிகளோ, மொத்த சமுதாயத்தின் பொருளாதார உபரியை, தங்களின் உலகவாழ்க்கைக்காக மடை மாற்றிக் கொண்டனர். தனிநபர்களுக்கும் இறைமைக்கும் இடையில் தரகர்களாய் மாறினர்.

திருவள்ளுவர் போன்ற சமூக இலக்கியவாதிகளால்தான், கல்வி, அறவழியிலான, சமத்துவமான, படைப்பாற்றல் மிக்க சமூக இயக்கத்தின் ஒரு அங்கமானது. மனவிடுதலையும், தனி நபரின் கைகளுக்கு, மீண்டும் வந்தது. இல்லறவாழ்க்கையின் ஊடேயே, விடுதலை அடையமுடியும் என உறுதி செய்தது, திருக்குறள். பல நூற்றாண்டுச் சங்க இலக்கியங்களின் சாரத்தைப் பிழிந்து, குறளுக்குள் நிறைத்தார், திருவள்ளுவர். அதனால், தமிழரின் தொன்மை வாழ்வியல் தொடர்ச்சியாய் அமைந்தது, திருக்குறள். கல்வி பற்றிய திருக்குறளின் உயர்ந்த எளிய கருத்துகளை, இக்கல்விக் கொள்கை எடுத்து ஆளாதது பெருங்குறை.

ஆனால், அதே சமயம், இந்த புதிய கல்விக் கொள்கை, இன்றைய உலகின் அறிவியல்களை முதன்மையாகக் கணக்கில் கொள்ளாமல், பண்டைய சமற்கிருத அறிஞர்களின் படைப்புகளைக் கற்கவும், பரப்பவும் முயல்கின்றது. இதனால், உலக நீரோட்டத்திலிருந்து நாம் விலகிச் செல்லும் வாய்ப்புகள் மிகும்.

ஆனால், ஏழு வகையான நடனங்கள், இரண்டு வகையான இசைகள் இருப்பதையும், அவற்றை ஒன்றுச் சேர்ப்பதன் மூலம், புதிய கலைவடிவங்களை உருவாக்க முடியும் என்று, இந்த புதிய கல்விக் கொள்கை கூறுவது, நன்றே. ''நாம் பொதுவில் உருவாக்கும் நிலையான பொருட்களின் மூலம்தான், நிலையில்லாத நாம், அழியா வாழ்வைப் பெறுகிறோம்'', என்று ஐன்ஸ்டீன் கூறியதைச் சரியாக நினைவுபடுத்துகிறது, புதிய கல்விக் கொள்கையின் வரைவுக் குழு..

இந்தியாவில், 1986 மற்றும் 1992-ல் உருவாக்கப்பட்ட கல்விக் கொள்கைகள், கல்வி பெறுதல் மற்றும் சமத்துவம் ஆகியவற்றிற்கு மட்டும்தான் முக்கியத்துவம் கொடுத்தது, கல்வியின் தரத்திற்கு அல்ல என்றும், அக்கொள்கைகள் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை என்றும் குற்றம் சாட்டுகிறது, இக்கல்விக் கொள்கை. ஆனால், இணையதளத்தை உள்ளடக்கியதாய் அக்கொள்கைகள் இருந்திருக்கவில்லை என்பது உண்மைதான். இனிவரும் காலங்களில், கல்வியோ, வாழ்வோ, இணையம் இன்றி, கற்பனை செய்தும் பார்க்க முடியாது. குறிப்பாக, கல்வி, வாழ்நாள் முழுவதும் மேற்கொள்ள வேண்டியதாகிவிடும். இன்றைய இளைஞர்கள், இணையப்பயன்பாட்டைத் தவறவிட்டால், இந்தியாவின் எதிர்காலம் கேள்விக்குறியதாகிவிடும் என்பது ஏற்கக்கூடிய எச்சரிக்கையே!

பத்தாம் வகுப்பிற்குப் பிறகு, மாணவர்கள் கல்வியிலிருந்து வெளியேறவும் மீண்டும் உள்நுழையவும் வசதிகள் செய்யப்படும் என்பது ஒரு நல்ல செய்தி. அவ்வகையில், மேற்கு நாடுகளைப் போன்று, சில காலம் உழைத்து, பணம் மற்றும் அனுபவம் ஈட்டிய பின் மீண்டும் கல்வியைத் தொடர்வது, தனக்கும், பெற்றோர்களுக்கும் தேவையற்ற பாரத்தை நீக்கும், நடைமுறை வாழ்க்கையுடன் எளிதாக இணைத்துப் பார்க்க முடிவதால், கல்வியும் அதிக பயனுள்ளதாய் இருக்கும்.

இனி, இப்புதிய கல்விக் கொள்கையின் அம்சங்களைச் சற்று விரிவாகக் காண்போம்.

1. கல்விக்கட்டமைப்பு: தற்போதுள்ள 10 + 2 = 12 வருடக் கல்விக் கட்டமைப்புக்குப் பதிலாக, 5 (3 வருடம் பாலவாடி, 1, 2 வகுப்புகள்) + 3 (3, 4, 5 வகுப்புகள்) + 3 (6, 7, 8 வகுப்புகள்) + 4 (9, 10, 11, 12 வகுப்புகள்) = 15 வருடக் கல்விக் கட்டமைப்பாக மாற்ற முயல்கிறது, புதிய கல்விக் கொள்கை. இரண்டு வயது வரைதான், பெற்றோர்களுக்குப் பிள்ளைகள், மூன்று வயது முதல், கல்விமூலம் அரசின் குழந்தைகள். ஆறாவது வயதுக்குப் பதில், மூன்று வயதிலிருந்தே கல்வியைப் புகுத்த முனைகிறது இக்கொள்கை. உலகம் எங்கும், குழந்தைகள் தங்கள் பருவத்தைக் குழந்தைகளாகவே அனுபவம் கொள்ள வேண்டும் என்று முன்வைக்கையில், விளையாட்டுகள் மூலமாக, இயல்பாக மட்டுமே கற்க வேண்டும் எனும்போது, இக்கொள்கை, நடைமுறையில், குழந்தைகளை இளம் வயதிலேயே முறைசார்ந்த கல்வியைக் கற்க வைத்துவிடும். விளையாட்டுகள் மூலமாகக் கற்பிக்கும் கலாச்சாரமும், உள்கட்டமைப்பும், பயிற்சியும் பெரும்பாலும் இந்தியாவில் இல்லை. அந்த வகையில், இக்கொள்கை, குழந்தைகளின் சுதந்திரத்திற்கும், இன்பத்திற்கும் எதிராகக் கட்டவிழ்த்துப்படும் வன்முறையாகி விடலாம்.

2. ஆரம்பக்கால குழந்தைப்பருவப் பராமரிப்பு மற்றும் கல்வி (3-5 வயது): ஒரு குழந்தையின் ஒட்டுமொத்த மூளை வளர்ச்சியில், 85% மேல், 6 வயதிற்குள்ளாகவே நிகழ்ந்து விடுகின்றது. எழுத்துகள், மொழிகள், எண்கள், எண்ணும் திறன், வண்ணங்கள், வடிவங்கள், உட்புற மற்றும் வெளிப்புற விளையாட்டு, புதிர்கள் மற்றும் தர்க்கரீதியான சிந்தனை, சிக்கலைத் தீர்த்தல், வரைதல், ஓவியம் மற்றும் பிற காட்சிக் கலை, கைவினை, நாடகம், பொம்மலாட்டம், இசை, அசைவு ஆகியவற்றைக் குழந்தைகளுக்குக் கற்பிக்கப் போவதாகவும், இக்கல்விக் கொள்கை கூறுகின்றது. ஆனால், குழந்தையின் அறிவு வளர்ச்சியை, வழக்கமான கல்வி முறையில் ஏற்படுத்தக் கூடாது. வெறும் விவரங்களாய் வழங்குவதற்குப் பதில், ஏன் , எதற்கு, எப்படி எனும் கேள்விகளைக் கேட்கும் வண்ணமும், சிந்தனைத் திறனை வளர்ப்பதாகவும் அமைதல் வேண்டும். இதுவரை, அதற்கான முயற்சிகள், அரசின் ஆரம்பக்கால கல்வித் துறையில் தொடர்ந்து எடுக்கப்படவில்லை. தனியார்ப் பள்ளிகள் சிலவற்றில், இவற்றில் சில நிகழ்கின்றன. பெற்றோர்களின் மனநிலையிலும், கல்வி பற்றிய சிந்தனை மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும். ஆங்கிலத்தில் பேசுவதுதான் கல்வி எனும் எண்ணத்தை முதலில் ஒழிக்க வேண்டும்.

I. ஆரம்பக்கால குழந்தைப்பருவப் பராமரிப்பு மற்றும் கல்விக்கான உள்கட்டமைப்பு, ஆசிரியர்கள், ஆசிரியர்களுக்கான பயிற்சி, உபகரணங்கள் ஆகியவற்றிற்கான நிதி ஒதுக்கீட்டைச் செய்தல் அவசியம்.

II. மனிதவள மேம்பாடு, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு, சுகாதாரம் மற்றும் குடும்பநலம் ஆகிய துறைகள் இணைந்து, ஆரம்பக்கால குழந்தைப்பருவப் பராமரிப்பு மற்றும் கல்வியைத் திட்டமிட்டுச் செயலாற்றும் என்பது நற்செய்தி.

3. தொடக்கக் கல்வி (1-3 வகுப்புகள், 6-8 வயது): படித்தல், எழுதுதல், எண்ணுதல் ஆகிய எழுத்தறிவு மற்றும் எண்ணறிவைப் பெறுவது இக்காலக் கல்வியின் நோக்கமாகும். தற்சமயம், தொடக்க வகுப்புகளில் படிக்கும் ஐந்து கோடி மாணவர்களில் பெரும்பான்மையினர், அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவை அடையாதவர்களாக உள்ளனர், என்று கணக்கெடுப்புகள் எச்சரிக்கின்றன.

I ஊட்டச்சத்து மிக்க காலை உணவு வழங்கப்படும்.

Ii. ஆசிரியர் காலியிடங்கள் நிரப்பப்படும்.

Iii எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுப் பாடங்களைக் கற்பிக்க ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கப்படும்.

Iiv. சகமாணவர்கள் மற்றும் தன்னார்வலர்களைக் கொண்டு எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுப் பாடங்களைக் கற்பிக்கலாம் என்கிறது, புதிய கல்விக் கொள்கை.

மீண்டும் போதிய நிதி ஒதுக்கீடு இன்றி, மேற்கூறிய நல்லெண்ணங்களை நிறைவேற்ற முடியாது. மேலும், தன்னார்வலர்கள், அரசியல் சாயம் இல்லாதவர்களாய் இருப்பின் நன்று. காவல்துறை நண்பர்கள் போலில்லாமல் இருப்பது அவசியம்.

4. பாடத்திட்டம்: மனப்பாடம் செய்யும் முறையிலிருந்து, உண்மையான புரிதலுக்காகப் பாடத்திட்டம் மாற்றியமைக்கப்படும் என்று கூறுகின்றது, இப்புதிய கல்விக் கொள்கை. கூர்மையான சிந்தனை, படைப்பாற்றல், தருக்கவகையில் உய்த்தறிதல், கூட்டு முயற்சி, சமூகப் பொறுப்புணர்வு, பன்மொழித்துவம், அளவியல்வகையில் காரணமறிதல், எண்ம அறிவு போன்றவற்றில், உயரிய திறன்களை அடையும் வகையில், பாடத்திட்டம் மாற்றியமைக்கப்படும் என்கிறது.

A பாடத்திட்டத்தின் சுமை குறைக்கப்பட்டு, நுண்ணிய சிந்தனையை வளர்க்கும் விதமாய் மாற்றியமைக்கப்படும்.

B அனுபவம், கலந்தாலோசித்தல் மற்றும் பகுப்பாய்வு அடிப்படையிலான கற்றல் முறை உருவாக்கப்படும்.

C பலவகை பாடங்களை, தங்கள் விருப்பப்படி, மாணவர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

D கலைகள் மற்றும் அறிவியல்கள், பாடக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆகியவை கறாராகப் பிரிக்கப்படாது.

E குழந்தை வளர்ச்சி மற்றும் மொழி பயின்றல் பற்றி அறிவியல் என்ன கூறுகிறதென்றால், குழந்தைகள் இளம் வயதில், மொழியைக் கற்பதுடன் பிற பாடங்களையும், தங்கள் தாய் மொழியில் மிகச் சிறப்பாக கற்கிறார்கள். மேலும், 2 முதல் 8 வயதுவரை, குழந்தைகள் பலமொழிகளை எளிமையாக கற்கிறார்கள்.

எனவே, குறைந்தது ஐந்தாவது வரையிலும், இயன்றால் எட்டாவது வரையிலும் தாய்மொழியில் அல்லது உள்ளூர் மொழியில் கற்பிக்கப்படும். கல்வி மொழி, தாய்மொழியிலிருந்து வேறுபட்டால், இரண்டு மொழிகளிலும் கற்றலுக்கான வசதிகள் உருவாக்கப்படும். முன்-ஆரம்பப்பள்ளி மற்றும் ஒன்றாம் வகுப்பு முதல், மூன்று மொழிகளில் பேசவும், எழுத்துகள் பற்றிய அடிப்படை அறிவைப் பெறுவதற்கும் பயிற்சி அளிக்கப்படும். மூன்றாம் வகுப்புவரை, தாய்மொழியில் எழுதக் கற்பிக்கப்படும். பிறகு, மற்ற மொழிகளிலும் எழுதக் கற்பிக்கப்படும். மும்மொழித் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். இது, எல்லா மாநிலங்களுக்கும் ஏற்புடையதாயில்லை.

F அன்னிய மொழியான ஆங்கிலத்தை விடுத்து, நாம் இந்தியத் தேசிய மொழிகளை வளர்க்க வேண்டும். தேவையான துறைகளில், இந்திய மொழி மற்றும் ஆங்கில மொழி ஆகிய இரண்டிலும் கற்கலாம். பிரெஞ்சு, ஜெர்மன், ஸ்பானிஷ், சீனம் மற்றும் ஜப்பானியம் ஆகிய அன்னிய மொழிகளையும் விருப்பப் பாடங்களாக கற்கலாம்.

G இந்திய மொழிகள் வளம் நிரம்பியவை, அறிவியல் பூர்வமானவை, அழகானவை. அவற்றினுக்கிடையிலான ஒற்றுமைகளைக் கண்டறிதல் மிகவும் ஆர்வமூட்டுவதாகும்.

H சமற்கிருதம் மிகவும் செம்மையான மொழி. அதில் ஏராளமான துறைகளில், படைப்புகள் உள்ளன. மற்ற மொழிகளின் வளர்ச்சியில், சமற்கிருதம் ஆற்றியுள்ள பங்கின் காரணமாக, அம்மொழியும், அம்மொழியின் படைப்பாக்கங்களும் பரவலாகக் கற்பிக்கப்படும். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒடியா போன்ற பிற செம்மொழிகளையும், பாலி, பெர்ஷியன், பிராகிருதம் போன்ற மொழிகளையும் எதிர்கால சந்ததிகளுக்காக நாம் பாதுகாக்க வேண்டும்.

மீண்டும், மீண்டும் சமற்கிருத மொழியையும் அதன் படைப்புகளையும் முன்னிறுத்துவதாகவே, இந்த புதிய கல்விக் கொள்கை இருக்கின்றது. திரு. கஸ்தூரி ரங்கன், கன்னடராயினும், கன்னடமே திராவிடக் கிளை மொழி என்று அறிந்திருந்தும், சமற்கிருதம்தான், இந்திய மொழிகள் அனைத்திற்கும் தாய் என்பது போல் கூறியுள்ளது, அறிஞர்க்கு அழகல்ல.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி இந்தியும், ஆங்கிலமும் அலுவல் மொழிகள். புதிய கல்விக் கொள்கையின் பல இடங்களில், அனைவரையும் உள்ளடக்கிய சமத்துவமாக்கப்பட்ட, உயர்தரமான கல்வி என்று கூறிக்கொண்டே, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் உள்ள 22 மொழிகளில், சமற்கிருத மொழிக்கு மட்டும் அபரிதமான முக்கியத்துவம் தந்திருப்பது, ஒருதலைப்பட்சமானதும், தான்தோன்றித்தனமானதும், அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எதிரானதாகும் ஆகும்.

I உடற்கல்வி மற்றும் விளையாட்டுகளும், அடிப்படைக்கல்வி முதலே பயிற்றுவிக்கப்படும்.

J அரசியல் அமைப்புச் சட்டத்தின் அருமைகள் கற்பிக்கப்படும்.

K நான்காவது தேசிய பாடத்திட்டக் கட்டமைப்பு 2005 (NCF 2005) மீளாய்வு செய்யப்பட்டு, 2020-க்குள் திருத்தியமைத்து, எல்லா வட்டார மொழிகளிலும் வெளியிடப்படும். மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கழகம், தேவையெனில், சிற்சில மாற்றங்களைச் செய்து கொள்ளலாம்.

L மூன்று, ஐந்து, எட்டாம் வகுப்புகளில், கணக்கீட்டுக்கான தேர்வுகள் நிகழ்த்தப்படும். அவை, மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், முதல்வர் மற்றும் பள்ளி நிர்வாகக்குழுவிற்கு, பள்ளி நிர்வாகத்தை மேம்படுத்தவும், கற்பித்தல்-கற்றல் முறைகளை மாற்றியமைக்கவும் உதவும். இத்தேர்வுகள், அடிப்படையான கருத்துருவங்கள் மற்றும் அறிவை சோதிக்கும்.

குறிப்பாக, மூன்றாம் வகுப்பு கணக்கீட்டுக்கான தேர்வு, அடிப்படை எழுத்தறிவு, எண்ணறிவு மற்றும் பிற அடிப்படையான திறன்களைச் சோதனை செய்யும். சில தமிழ்க் கல்வி விமர்சன வாதிகள் குற்றம் சாட்டியது போல், இத்தேர்வுகள் மாணவர்களின் மதிப்பெண்ணை வைத்து, தொழிற்கல்வி அளிக்க அல்ல.

5. இடைநிற்றல்: இடைநிற்றல், கல்வியின் எல்லா காலகட்டங்களிலும் ஏதோ ஒரு காரணத்தால் நிகழ்ந்து கொண்டே உள்ளது. குறிப்பாக, 5 மற்றும் 8-ம் வகுப்புக்குப் பிறகு, இடைநிற்றல் மிகுதியாக நிகழ்கிறது. காரணம் ஒன்று, உயர்நிலைப் பள்ளிகள் இல்லாமை. இரண்டு, அப்படி இருப்பினும், வெகு தொலைவில் உள்ளது அல்லது போய்வருவதற்குப் பாதுகாப்பில்லாமல் இருக்கின்றது.

மாணவர்களின் போக்குவரத்தில் உதவி, அவர்களுக்குப் பாதுகாப்பு, விடுதி வசதிகள் போன்றவற்றை உருவாக்குவதன் மூலம், இடைநிற்றலை வெகுவாக குறைக்க முடியும் என இக்கல்விக் கொள்கை சரியாகவே பரிந்துரை செய்கின்றது.

பல வகுப்பு நிலைகள் கொண்ட பள்ளி வளாகத்தை (School Complex) நிறுவும் எண்ணத்தையும் வெளிப்படுத்துகின்றது, இக்கல்விக் கொள்கை. கல்வியின் தொடர்ச்சிக்கும், இடைநிற்றல் பிரச்சனைக்கும், இதுவும் ஒரு நல்ல தீர்வாகலாம். ஆனால், பெரும்பாலான இடங்களில், இதை உருவாக்குவதுதான் கடினம்.

6. கலைகள் மற்றும் அறிவியல்: உலகின் பெரும்பாலான கல்வி நிறுவனங்களில், அறிவியல் (Science), தொழில்நுட்பம் (Technology), பொறியியல் (Engineering), கணிதம் (Mathematics) ஆகியவை உள்ளடக்கிய STEM அமைப்பே முன்வைக்கப்படுகின்றது. கூடவே, கலைகளையும் (Arts) சேர்த்து, STEAM அமைப்பை, இக்கல்விக் கொள்கை முன்மொழிந்துள்ளது வரவேற்கத்தக்கது. ஏனெனில், இலக்கியம், இசை, நடனம், நாடகம், ஓவியம், சிற்பம் போன்ற கலைகள், மனதை மென்மையாக்கும், மேன்மையுமாக்கும். அன்பு, பரிவு, நட்பு, பாசம், காதல், பிறரை மதித்தல் போன்ற மென்திறன்களை, கலைகள்தாம் சிறப்பாக வளர்க்கும்.

7. தேசிய ஆராய்ச்சி நிறுவனம்: அறிவியல், தொழில்நுட்பம் ஆகியவற்றுடன், சமூக அறிவியல், கலைகள் மற்றும் மானுடவியல் பற்றியும், கல்லூரிகளிலும்,

பல்கலைக்கழகங்களிலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்கு, இத்தேசிய ஆராய்ச்சி நிறுவனம் வழிவகை செய்யும் என்று புதிய கல்விக் கொள்கை முன்வைப்பதும் வரவேற்புடையதே! ஆனால், மிகைப்படுத்தப்பட்ட அதிகாரம் கொண்ட மைய அமைப்பு, நடைமுறையில், மாநிலங்களில் சுணக்கத்தை ஏற்படுத்தி விடலாம். பரவலாக்கப்பட்ட அதிகார அமைப்புகள் அவசியம். அதே சமயம், பொறுப்புகள் கொண்டதாயும், அவை இருக்க வேண்டும்.

8. ஆசிரியர் பயிற்சி: புதிய கல்விக்கட்டமைப்பு மற்றும் பாடத்திட்டங்களுக்கு ஏற்றவாறு, ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பது அவசியம். பல துறைகளின் அறிவைப் பெற்றவராயும், கல்வி நிறுவன நிர்வாகம், மாணவர்நிலை போன்றவற்றை அறிபவராயும், ஆசிரியரை உருவாக்குதல் நன்று. உயர்கல்வி பெறுவதற்கு ஆசிரியர்களை ஊக்கப்படுத்த வேண்டும் என்பதும் நன்றே. கற்பித்தல் அல்லாத நிர்வாகம் மற்றும் அரசாங்க வேலைகள், ஆசிரியர்களுக்குத் தரப்படாது என்பதும் நன்றே. கிராமங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு, ஊக்கத்தொகை வழங்கப்படும் என்பது மிக நன்று. ஆசிரியர்கள் அடிக்கடி பணியிடம் மாற்றம் செய்வது தவிர்க்கப்படும். இதுவும் நன்றே. பல இந்திய மொழிகளில், ஆசிரியர்களுக்கான கற்பித்தல் தகவல்கள் வழங்கப்படும். அவர்களின் தொழில் முன்னேற்றத்திற்கான கல்வியும் பயிற்சியும் வழங்கப்படும். தகுதியில்லாத ஆசிரியர் பயிற்சிப்பள்ளிகள் மூடப்படும்.

9. தேசிய கல்வி நிறுவனம்: மாறி வரும் உலகச் சூழல்களை முன்கூட்டி அறியவும், அவற்றிற்கு ஏற்ப கல்வித் திட்டங்களை வகுக்கவும், நடைமுறைப்படுத்தச் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அறிவுறுத்தவும், இவ்வமைப்பு பயன்படும் என்பது, எதிர்கால சிந்தனை நோக்குள்ளது. . மேலும், தேசிய கல்வி நிறுவனம், இக்கல்விக் கொள்கையின் தொடர்ச்சியான வளரச்சிக்கும் உதவும்.

10. மத்திய கல்விப் புள்ளியியல் பிரிவு: ஒழுங்கான புள்ளி விவரங்கள் இல்லாமல், சரியான கல்வித் திட்டங்களை வகுக்க முடியாது. எனவே, மத்திய நிறுவனமான கல்வித் திட்டம் மற்றும் நிர்வாகத்தின் ஒரு சுதந்திரமான பிரிவாக, மத்தியப் புள்ளியியல் பிரிவை உருவாக்க, இக்கல்விக் கொள்கை பரிந்துரை செய்கிறது. இம்முன்மொழிவும் நன்றே.

11. தேசிய வளர்ச்சிக்கு வழிவகுத்தல்: அமெரிக்கா, சீனாவிற்கு அடுத்து, மூன்றாவது பெரிய பொருளாதாரமாக, இந்தியா வர நினைக்கின்றது. அப்பொழுது, நம்முடைய பொருளாதாரம், இயற்கை வளங்களை (மட்டும்) சார்ந்து இருக்காது, மாறாக அறிவைச் சார்ந்தே இருக்கும். சூழல் அமைப்பு நம்மை வேறுவகையில் சிந்திக்க நிர்ப்பந்திக்கிறது.

இது, ஒரு தவறான எதிர்பார்ப்பாகும். அமெரிக்கா, சீனா இரண்டின் பொருளாதாரப் பாதைகளும் பின்பற்றத் தக்கவையல்ல. அமெரிக்கா, மற்ற நாடுகளை (ஆப்கானித்தானம், ஈராக், சூடான், இன்னபிற.) அவ்வப்பொழுது ஆக்கிரமித்து, தனக்கு வேண்டிய பொம்மை ஆட்சிகளை நிறுவி, காலமெல்லாம் கப்பம் வசூலிக்கின்றது, ஆயுதங்களை உற்பத்தி செய்து, விற்பதற்காகவே, உள்நாட்டுக் கலகங்களைத் தோற்றுவிக்கின்றது. சீனமோ, மிகவும் மோசமான உழைக்கும் சூழலில், மக்களைச் சுரண்டுகின்றது. இந்தியாவும் அத்தகைய பாதைகளைப்

பின்பற்ற முயல்கின்றது. தனியார் ஆயுத உற்பத்தி, உழைப்பாளர்களுக்கு எதிரான சட்டங்கள், விவசாயிகளுக்கு எதிரான சட்டங்கள், சூழலைக் கெடுக்க உதவும் சட்டங்கள் ஆகியவற்றைக் கொண்டு, அமெரிக்கா, சீனம் போல் வளர்தல் அவசியமா? இவற்றால், இந்தியாவின் மொத்த உற்பத்தி மதிப்பு உயரலாம். ஒருசில முதலாளிகள் பெருமுதலாளிகளாகலாம். ஆனால், மக்கள் மேலும் வறுமையடைவார்கள் என்பது மட்டும் உறுதி. சுற்றுச்சூழல் மேலும் மாசுபடும், உழைப்பில், மக்கள் தங்கள் சுதந்திரத்தை இழப்பார்கள், நவீன கூலிகளாக்கப்படுவர். பிற நாடுகளில், இந்திய ஆயுதங்களால், அப்பாவி மக்களைக் கொன்றுதான், இந்தியா வளர வேண்டுமா? பொதுமக்களை வறுமையாக்கி, ஒரு சிலரை பெரும்பணக்காரர்களாக்கி, இந்தியா வளர்ந்துவிட்டது என மார் தட்டிக் கொள்ள வேண்டுமா?

இந்தியா வல்லரசாக வேண்டும் என்று அப்பாவி மக்களும் நினைப்பது வேதனைக்குரியது. இது வரையில், வல்லரசு என்றால், மற்ற நாடுகளை நேரிடையாகவோ மறைமுகமாகவோ கட்டுப்படுத்தல் என்பதாகும். இந்தியா வல்லரசானால், பாவம்தான், சாபந்தான் இந்தியாவைச் சூழும். திரு. அப்துல் கலாமே கூறியிருப்பினும், வல்லரசு என்பது அருவருப்பானது. இந்தியா வளமான அரசாகலாம், நல்ல அரசாகலாம். வல்லரசாகக் கூடாது. வல்லரசு எனும் நினைப்பால், வலிமையைக் காட்ட போர் மூளும், படைகளுக்கான செலவுகள் நீளும். மக்கள் பயத்தால் சாவர். வரிகளால், வறுமை மிகும். எனவே வல்லரசு என்பது, பிற நாடுகளுக்கு மட்டுமல்ல, முடிவில், நம் இந்திய நாட்டு மக்களுக்கே பெருங்கேடாய் முடியும்.

12. உயர்கல்வி நிறுவனங்கள்: இவை சுதந்திரமாகச் செயல்படும். குறிப்பணி நாலந்தா மற்றும் குறிப்பணி தட்சசீலம் ஆகியவை தேசியக் கல்விக் கழகத்தின்கீழ் அமைக்கப்படும். குறிப்பணி நாலந்தா மற்றும் குறிப்பணி தட்சசீலம் ஆகியவற்றின் கீழ், பல மத்திய பல்கலைக்கழகங்களும், கல்வி நிறுவனங்களும் கொண்டுவரப்படும். சமீபத்தில், அண்ணா பல்கலைக்கழகமும், அவ்வாறு கொண்டுவர முயலப்பட்டது. மத்திய அரசின் அதிகாரத்தின் கீழ் போய்விட்டால், சமூக நீதியை நிலைநிறுத்தும் இட ஒதுக்கீடு இல்லாமல் போகும். இதை அறிந்து கொடுத்த அரசியல் அழுத்தத்தால், அம்முயற்சி கைவிடப்பட்டது. பல்துறைக் கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பல்கலைக்கழகங்கள் புதிதாய் தோற்றுவிக்கப்படும் என்பது நன்று.

13. நிதி ஒதுக்கீடு: 2017-2018 ஆண்டில், கல்விக்கான நிதி ஒதுக்கீடு, இந்தியாவின் தேசிய உற்பத்தி மதிப்பில் வெறும் 2.7% தான். 1968, 1986, 1992-ம் ஆண்டுகளில் பரிந்துரைக்கப்பட்ட 6% ஐ, இதுவரை எந்த அரசாங்கமும் எட்டவில்லை. ஆனால், ஒவ்வொரு அரசாங்கமும் பெரிய தனியார் நிறுவனங்களுக்கு, பல்லாயிரம் கோடிக்கணக்கில், கடன்களைத் தள்ளுபடி செய்கின்றன. 2017 – ல், பிற நாடுகளின் கல்விக்கான செலவு கீழ் வருமாறு:
பூடான், சிம்பாவே, ஸ்வீடன் — 7.5%
கோஸ்டாரிகா, பின்லாந்து — 7%
கிரைகிஸ்தான், தெற்கு ஆப்பிரிக்கா, பிரேசில் — 6%
இங்கிலாந்து, நெதர்லாந்து, பாலஸ்தீனம் — 5.5%
மலேசியா, கென்யா, மங்கோலியா, தென் கொரியா, அமெரிக்கா — 5%

கல்விக்கான முதலீடே மிகவும் சிறந்த முதலீடு. அறிவுப் பொருளாதாரத்திற்கு, தரமான கல்வி அவசியம். தரமான கல்வியை அடைய, போதுமான நிதி ஒதுக்கீடு அவசர அவசியம். நெடுங்காலமாகப் பரிந்துரைக்கப்பட்டு வரும் இந்தியாவின் தேசிய உற்பத்தி மதிப்பில் 6% ஐ, கல்விக்காக உடனடியாக ஒதுக்க வேண்டும்.

அடிப்படையில், இப்புதிய கல்விக் கொள்கை தொலை நோக்குடன், நல்ல எண்ணங்களுடன், புதிய திட்டங்களுடனும் நிறுவனங்களுடனும், இந்தியக் கல்வியை மேம்படுத்தக் கருதுவது நல்லது. ஆனால், இடையிடையில், சில தவறான கருதுகோள்களைக் கொண்டு, தவறான பரிந்துரைகளைச் செய்வது வேதனைக்குரியது. குறிப்பாக, சமற்கிருத மொழி பற்றிய முக்கியத்துவம் மற்றும் வளரச்சிக்காகச் சுற்றுச் சூழலைப் பலியாக்க முயல்வது ஆகியவை.

புதிய கல்விக் கொள்கை மட்டும் போதாது. நடைமுறைப்படுத்துகையில், கீழ் வருவனவற்றை உறுதி செய்தல் அவசியம்:

1. ஏற்கனவே தீட்டிய கல்விக்கொள்கையின் நடைமுறைப்படுத்தலை நிறைவு செய்திட வேண்டும். குறிப்பாக, அனைவரும் கல்வி கற்கும் வாய்ப்பு.
2. பாடத்திட்டங்கள் நாடு முழுவதும் சமமாவதை உறுதி செய்தல் மிக மிக அவசியம், அவசரம்.
3. பின்லாந்து நாட்டுக்கல்விமுறை, உலகநாடுகளால் மிகவும் பாராட்டப்படுகின்றது. படைப்பாக்கத்தை (Creativity) இலக்காகக் கொண்டு, நிகழ்வுகளை அடிப்படையாகக் (Phenomenon based) கொண்ட கற்றல் முறைகள் அங்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அத்தகைய கற்றல் முறைகளை நாமும் மேற்கொள்ள வேண்டும்.
4. பின்லாந்தில், கல்விக்காக போதிய நிதிகளும் ஒதுக்கப்படுகின்றன. கல்விக்கான நிதி என்பது செலவு அல்ல, அது பெரும் முதலீடு என்பதை அரசியலாளர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். கல்வியால் உடனடி பலன்களைத் தர முடியாது. ஆனால், எதிர்காலத்தில், அது பெரும் சமூக சொத்தினை உருவாக்கும் என்னும் ஆழ்ந்த கனவுகள் வேண்டும், நடைமுறைப்படுத்தும் உறுதி வேண்டும். நாட்டையும், மக்களையும், குழந்தைகளையும் நேசிப்பவர்களால் மட்டுமே அது சாத்தியம்.
5. ஐக்கிய நாடுகள் சபையின், பொருளாதாரம் மற்றும் சமூக விவகாரங்கள் துறை பரிந்துரைத்த இலக்குகளை நேர்மையாகப் பின்பற்றும் வகையில், பிற்படுத்தப்பட்டவர்கள், பட்டியலின மக்கள், விளிம்பு நிலையில் உள்ளோர், பெண்கள் ஆகியோர்களை உள்ளடக்கிய, சமமாக்கப்பட்ட, தரமான கல்வியைத் தருதல் வேண்டும். தரமான கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற அளவுக்கு, அனைவரையும் உள்ளடக்குவதையும், சமமாக்கப்படுவதையும் விவரிக்கவில்லை, இக்கொள்கை.
6. இந்திய அரசியல் அமைப்பின் எட்டாவது அட்டவணையில் உள்ள எல்லா மொழிகளையும் வளர்க்கும் கல்விக்கொள்கையாக, இதைத் திருத்த வேண்டும். சமற்கிருதம் மட்டுமே இந்திய மொழி எனும் வகையில் அமைந்த, ஒருதலைபட்சமான கல்விக்கொள்கை அம்சங்களைக் கைவிட வேண்டும்.
7. கல்வி அமைப்பில், இப்புதிய கல்விக் கொள்கை விரும்பும் மாற்றங்களைக் கொண்டுவர, மொத்த தேசிய வருமானத்தில் குறைந்தது 6% ஐ, கல்விக்காக, ஒவ்வொரு ஆண்டும், குறைந்தது ஐந்து முதல் பத்து ஆண்டுகளுக்கு ஒதுக்க

வேண்டும். இல்லையெனில், இப்புதிய கல்விக் கொள்கை, வெறும் காகிதங்களாகவே மிஞ்சும் அல்லது குறுகிய அரசியல் நோக்கம் கொண்ட செயல்பாடுகளை மட்டுமே சாதித்துக் கொள்ள வழிவகுக்கும். மற்ற கல்வி சீர்திருத்தங்களும், முன்மொழிவுகளும் மிகவும் ஆர்வமூட்டுவதாய் இருப்பினும், போதிய நிதியை ஒதுக்காவிட்டால், அவை எவற்றையும் சாதிக்க முடியாது. நிதி ஒதுக்குவதைப் பற்றிய உறுதியான நிலைப்பாடு இல்லாதவரை, இவையெல்லாம், ஐக்கிய நாடுகள் சபைக்கு அறிக்கை கொடுப்பதற்காக எழுதப்பட்ட சுவாரசியமான ஆவணமாக மட்டுமே இருக்கும்.

8. அனைவரையும் உள்ளடக்கிய, சமமாக்கப்பட்ட, தரமான கல்வியை அளித்தப்பின்புதான் , தேசிய அளவிலான நீட் (NEET) போன்ற உயர்கல்விக்கான தேர்வுகளை நடத்துவது நியாயமாய் இருக்கும்.

9. சமூகநீதி குலையா வண்ணம், பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்த வேண்டும்.

இக்கல்விக் கொள்கைகளின் குறைபாடுகளை இந்திய அரசாங்கத்திற்குச் சுட்டி தகுந்தவாறு திருத்த முயல்வதோடு, ஐ. நா. பொருளாதாரம் மற்றும் சமூக விவகாரங்கள் மற்றும் ஐ.நா. கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பிலும் முறையிட்டு, இந்திய அரசாங்கத்திற்கு அழுத்தம் தரலாம்.

இறுதியாக, அம்பேத்கர், இந்திய அரசியல் அமைப்பு சட்டம் பற்றிக் கூறிய அதே வாசகம் இப்புதிய கல்விக் கொள்கைக்கும் பொருந்தும். இப்புதிய கல்விக் கொள்கையின் இயல்பு பெரிதல்ல. இது, கெட்டவர்கள் கைகளில் சேர்ந்தால், மக்களுக்குத் தீமையாகும். நல்லவர்கள் கையில் சேர்ந்தால், (இன்னும்) நல்லதாக மாறும். யார் கையில் இருக்கின்றது, இருக்க வேண்டும் என்பதை மக்கள்தாம் உறுதிப்படுத்த வேண்டும்.

15. கௌதம சன்னாவின் இட ஒதுக்கீட்டின் மூலவரலாறு.

— முனைவர்.ஆ.சிவசுப்பிரமணியன்

வருணப் பாகுபாடும் அதிலிருந்து கிளைத்த சாதியமும் கோலோச்சிக் கொண்டிருந்த இந்தியச்சமூகத்தின் ஆட்சியாளராக, ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி தன்னை நிலை நிறுத்திக் கொண்டதும், தங்கள் நாட்டின் நிர்வாக அமைப்பை இங்கு அறிமுகம் செய்தனர். இப்புதிய நிர்வாக அமைப்பில் சாதியப் படிநிலையில் மேலேயுள்ள சாதியினரே பணியாளர்களாக விளங்கி ஆதிக்கம் செலுத்தலாயினர். மன்னராட்சியில் இடம் மறுக்கப்பட்டோர் காலனியாட்சியிலும் அதே நிலைக்கு ஆளாயினர். இராணுவத்தைப் பொறுத்த அளவில் சற்று வேறுபாடான முறை நிலவியது. சில குறிப்பிட்ட சமூகத்தினரை மட்டுமே கொண்ட படைப்பிரிவுகளை ஆங்கிலேயர் உருவாக்கினர். இவை அச்சமூகத்தினரின் பெயராலேயே அழைக்கப்பட்டன. ஜாட் ரெஜிமெண்ட், சீக்கிய ரெஜிமெண்ட், மகர் ரெஜிமெண்ட், பறையர் ரெஜிமெண்ட் என்ற பெயர்களில் அழைக்கப்பட்ட ரெஜிமெண்ட்களை இதற்குச் சான்றாகக் கூறலாம். மராத்திய மாநிலத்தில் தீண்டத்தகாத சாதியினராக ஒதுக்கிவைக்கப்பட்ட மஹர்கள் படைவீரர்களாக ஆங்கிலேயர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதானது அவர்களுக்கு சமூக உயர்நிலையை வழங்கியதாக அம்பேத்கர் கருதியுள்ளார்.

பேராசிரியர். ஆ. சிவசுப்பிரமணியன்

கௌதம சன்னா

கிராமப்புறங்களில் குற்றேவல் செய்பவர்களாக இருந்த, தீண்டாமைக்கு ஆட்படுத்தப்பட்டிருந்த மஹர்களும் சம்பர்களும் இராணுவப் பணியினால் பிற சமூகத்தின் மீது அதிகாரம் செலுத்தும் சமூகங்களாக மாறிவிட்டன என்று அவர் அவதானித்தார். 1927 மார்ச் 19 ஆவது நாளன்று மஹத் என்ற ஊரில் நடந்த மாநாட்டில் அவர் ஆற்றிய தலைமை உரையில், இராணுவப் பணியின் விளைவாக இவ்விரு சாதியினரின் சமூக வாழ்வில் நிகழ்ந்த மாற்றங்களாக அவர் குறிப்பிட்ட செய்திகளின் சுருக்கம் வருமாறு:

மராத்தியச் சிப்பாய்களும் பிற சாதியினரும் மஹர்களையும் சம்பர்களையும் தீண்டத்தகாதவர்கள் என்று கிராமப்புறங்களில் கருதினர். தமக்குக் கீழ்ப் படியாவிடில் தம்மை அவமதிப்பதாகக் கருதினர். இதே ஆதிக்க சாதியினர் இராணுவப் பணியில் சேர்ந்தவுடன் மஹர், சம்பர் வகுப்பைச் சேர்ந்த சுபேதார்களுக்கு, சல்யூட் அடித்தனர். தீண்டத்தகாத சாதியினரான மேலதிகாரிகள் தம்மைப் புண்படுத்தும் வகையில் கேள்வி எழுப்பினாலும் தம் தலையை உயர்த்திப் பார்ப்பதில்லை. இதற்குமுன் இத்தகைய தகுதி இவர்களுக்குக் கிடையாது. இவர்களில் 90% மக்கள் எழுத்தறிவு பெற்றுவிட்டனர். இதில் 50% மக்கள் உயர்கல்வி பெற்றவர்கள். இம்முன்னேற்றம் பெரும்பாலும் இராணுவப் பணியால் ஏற்பட்டது.

வருண எல்லைக்குள் வரவிடாமல் வருணம் அற்றவர்கள் என்ற பொருளில் அவர்ணர்கள் என்றழைக்கப்பட்ட மக்கள் பிரிவினரை இராணுவத்தில் சேர்த்துக்கொண்டதன் வாயிலாக வருணப்படி நிலையில் இரண்டாவதாக இடம் பெறும் ஷத்திரியராக ஆங்கிலேயர்கள் மாற்றிவிட்டனர்.

இது போன்ற முன்னேற்றம் ஏற்பட; வருவாய்த்துறை, காவல் துறை, நீதித்துறை, மருத்துவத்துறை, கல்வித்துறை ஆகிய துறைகள் இடைநிலை சாதியினருக்கும் தீண்டாமைக்கு ஆட்பட்டிருந்த சாதியினருக்கும் குறிப்பிடத்தக்க அளவில் தொடக்கத்தில் துணை நிற்கவில்லை. இதற்குக் காரணம் இத்துறைகளில் இவர்கள் உரிய அளவில் இடம் பெறாமல் போனதுதான். இதுவே இட ஒதுக்கீடு என்பதன் அவசியத்தை, சிந்திக்கத் தூண்டியது.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை இட ஒதுக்கீடு என்பது நீதிக்கட்சி என்ற கட்சியுடன். தொடர்புடையதாக அடையாளம் காட்டப்பட்டுள்ளது. இதன் உண்மைத் தன்மையை ஆராய்வதே "இட ஒதுக்கீட்டின் மூல வரலாறு' என்ற

இந்நூலின் அடிப்படை நோக்கமாகும். இடஒதுக்கீடு என்ற கொள்கை நீதிக்கட்சி உருவாக்கியதா? அல்லது பண்டிதர் அயோத்திதாசர் உருவாக்கினாரா? என்ற விவாதத்தை இந்நூலில் தோழர் கௌதம சன்னா தொடங்கி வைத்து அதற்கு விடையும் கண்டுள்ளார். இம்முயற்சியில் யார் முதலில் என்ற சிறுபிள்ளைத்தனமான ஆராய்ச்சியை அவர் முன்னெடுக்கவில்லை. மாறாக தீண்டாமைக் கொடுமைக்கு ஆட்பட்டிருந்த மக்கள் பிரிவுக்குரிய இட ஒதுக்கீட்டையே ஆய்வுப்பொருளாகக் கொண்டுள்ளார். இது இந்நூலின் சிறப்பாகும் .

இந்நூலின் உள்ளடக்கத்தை இரண்டு பகுதிகளாகப் பகுத்துக் கொள்ளலாம். முதற்பகுதி ஆங்கிலக் காலனியாட்சியில் இட ஒதுக்கீட்டின் தேவை குறித்தது. ஒன்றிற்கொன்று வேறுபாடான மொழி பேசுவோரும் பண்பாடு கொண்டோரும். வாழ்ந்த இந்திய உபகண்டத்தை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியா என்ற பெயரில் ஒரே நாடாக உருவாக்கியது மிகப் பெரிய வரலாற்று நிகழ்வாகும். இதன் பின்னர் ஒரே ஆட்சியாளர்களாகத் தம்மை ஆங்கிலேயர்கள் நிலை நிறுத்திக்கொண்டனர். 1857 சிப்பாய் எழுச்சிக்குப்பின் இங்கிலாந்தின் ஓர் உறுப்பாக, அதற்குத் தேவையான மூலப்பொருள்களை வழங்கும் நாடாக இந்தியா மாற்றப்பட்டுவிட்டது. 1885இல் இந்தியத் தேசிய காங்கிரஸ் உருவான பின்னர் ஆங்கிலக் கல்வி கற்றோரும், பெருநிலக்கிழார்களும், அரசில் உயர்பதவி வகித்தோரும் ஆங்கில அரசிடம் தம் முன்னேற்றத்திற்காக மனுக்கொடுப்போராயினர். இது குறித்து இந்நூலாசிரியர், 'சமூகத்தின் அனைத்துப்பிரிவுகளும் பிரிட்டிஷ் ஆட்சியை அகற்ற வேண்டும் என்கிற நோக்கமின்றி அரசினை அண்டி அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வதே நல்லது என்பதை உணர்ந்து கொண்டன' என்கிறார். அத்துடன் இது ஏற்படுத்திய விளைவுகள் குறித்தும் 'கல்விகற்ற பார்ப்பன வியாபார வேளாண் உயர்குடிகளிடையே கடுமையான போட்டியும் இக்கட்டத்தில் தொடங்கியது என்பது இயற்கையானதே. இந்த வரலாற்றுச் சூழலில் சமூகத்தில் ஓரங்கட்டப்பட்டிருந்த மக்கள் கேட்பாரற்று இருந்தனர்' என்று சரியாகவே அவதானித்துள்ளார்.

இரண்டாவது பகுதி இட ஒதுக்கீட்டிற்கான அயோத்திதாசரின் சிந்தனைகளையும் செயல்பாடுகளையும் அவரது எழுத்துச் சான்றுகளின் துணையுடன் வெளிப்படுத்துகின்றது. இதுவே இந்நூலின் மையப்புள்ளியாக அமைந்துள்ளது. அத்துடன் அவரது தொலைநோக்கான பார்வையையும் வெளிப்படுத்துகின்றது.

'அரசுப்பணிகளில் இடஒதுக்கீடு தொடர்பான வேண்டுகோளை 1891 ஆவது ஆண்டில் அயோத்தியதாசர் முன்வைத்துள்ளார். ஆனால் இட ஒதுக்கீடு என்ற கருத்தை சட்ட வடிவில் அன்றி ஆலோசனை வடிவில் 1888இல் முதலில் வழங்கியவர் டஃபிரின் பிரபு என்ற ஆங்கிலேயர்தான். படித்த பணம் படைத்த,

உயர்சாதியினருக்கு இடஒதுக்கீடும் முன்னுரிமையும் வழங்கவேண்டும் என்பதே அவரது ஆலோசனையாக இருந்தது. இது நடைமுறைப்படுத்தப் பட்டதன் விளைவை, அரசு நிர்வாகத்தில் முதன்முறை இட ஒதுக்கீடு பெற்ற சமூகமாகப் பார்ப்பனர் உள்ளிட்ட உயர்சாதியினரே இருந்தனர். அரசுப்பணிகளில் மடமடவென அவர்கள் நிறைந்தார்கள். தவிர்க்கமுடியாத சக்தியாக அவர்கள் அதில் தம்மை நிரப்பிக் கொண்டார்கள்' என்று வெளிப்படுத்தியுள்ளார் நூலாசிரியர்.

இட ஒதுக்கீட்டுக்கு எதிராகக் குரல் எழுப்புவோர் அறிந்து கொள்ள வேண்டிய செய்தி இது. இத்தகைய சூழலில்தான் 1890இல் சாதிபேதமற்ற திராவிட மகாஜன சபை என்ற அமைப்பை அயோத்திதாசர் உருவாக்கியிருந்தார். இவ்வமைப்பின் முதல் மாநாடு 1891 பிப்ரவரி முதல் நாளன்று நீலகிரியில் நடந்தது. இம்மாநாட்டில் பத்து கோரிக்கைகளை அயோத்திதாசர் முன்வைத்தார். இவற்றுள் ஆறு கோரிக்கைகள் தீண்டாமைக்கு உட்படுத்தப்பட்டிருந்த மக்களின் முன்னேற்றத்தை மையமாகக் கொண்டவை. இம்மக்கள் பிரிவினருக்கென்று பள்ளிகள் நிறுவுதல், கல்வி பயில்வோருக்கு உதவித்தொகை வழங்குதல், கற்றோருக்கு அரசு வேலை வாய்ப்புகள் வழங்குதல், உள்ளாட்சி அமைப்பில் பிரதிநிதித்துவம் என்பன இவற்றில் இடம் பெற்றிருந்தன. சாதியப் படிநிலையில் மேலேயுள்ளோருக்கு வழங்கப்பட்ட இடஒதுக்கீட்டை கீழேயுள்ளோருக்கு வழங்க வேண்டும் என்ற இக்கோரிக்கையானது ஆங்கில உயர் அதிகாரிகளின் ஆலோசனைகளைத் தலைகீழாக்கியதாக நூலாசிரியர் குறிப்பிடுகிறார். நில உரிமையற்றிருந்த இம்மக்களுக்கு நிலம் வழங்க வேண்டும் என்ற பொருளாதாரம் சார்ந்த கோரிக்கையை அயோத்திதாசர் முன்வைத்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தேசிய தொழில் நிதியக் கூட்டமைப்பு என்ற அமைப்பிற்கு 1908 இல் அவர் எழுதிய கடிதத்தை நம் பார்வைக்கு ஆசிரியர் கொண்டு வந்துள்ளார். இக்கடிதத்தில், விகிதாச்சார அடிப்படையிலான இட ஒதுக்கீடு, கல்வி உதவித்தொகை, கல்வித் தகுதிக்கேற்ற வேலை வழங்கல், என்ற மூன்றையும் அவர் வலியுறுத்தியுள்ளார். மிண்டோ மார்லி சீர்திருத்தத்தை மையமாகக் கொண்டு 1909 இல் நடந்த விவாதங்கள் நம் கல்விப்புல வரலாற்றுப் பாட நூல்களில் இடம் பெற்றுள்ளன. இந்துக்கள், இஸ்லாமியர் இரு சமயம் சார்ந்தோருக்கும் இடையிலான முரண்பாடாகவே இவை வெளிப்படுத்தப் பட்டுள்ளன. ஆனால், அயோத்திதாசரை முன் நிறுத்தி இந்துக்கள் என்ற ஒற்றை அடையாளத்திற்குப் பின்னால் உள்ள நுண் அரசியலை இந்நூலாசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். இன்றைய இந்திய அரசியலுக்கும் இது பொருந்தும். மார்லி முன்வைத்த சீர்திருத்தங்கள் பிராமண சமூகத்தின் நலனை ' இந்துக்கள்' என்ற பெயரில் பாதுகாப்பதாக அமைந்தமையால் காங்கிரஸ் அதை ஆதரித்தது.

தீண்டாமைக் கொடுமைக்குப் பெரும்பான்மையான மக்கள் பிரிவை ஆட்படுத்தியதுடன் பின்னர் அதையே காரணமாகக் காட்டி அவர்களை இந்துக் கோயில்களுக்குள் அனுமதிக்க மறுத்தது இந்து மதம். ஆங்கில ஆட்சியிலும் இது தொடர்ந்தது. சமய அடிப்படையிலான எண்ணிக்கை உயர்வு தேவை என்ற போது இந்து என்ற அடையாளத்திற்குள் இம்மக்கள் பிரிவை உட்படுத்தினர். இது இந்துக்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு உதவியது. இது ஓர் எதிர்மறையான அடையாள அரசியல். இதன் வேறுவடிவம்தான் இன்றைய இந்து அரசியல். இந்திய விடுதலைப் போராட்ட காலத்திலிருந்தே இந்து அடையாள அரசியல்

தொடங்கிவிட்டது. (கூடவே இஸ்லாமிய அடையாள அரசியலும்). பிராமணர் அல்லாதோர் இயக்கம் இதற்கு எதிராகத் தொடங்கப்பட்டாலும் அடிப்படையில் அது இவ்வியக்கத்தின் வேரைத் தொடவில்லை. பிராமணர் அல்லாதார் இயக்கம் என்ற பொத்தாம் பொதுவான அடையாளத்தை அது கொண்டிருந்தது.

இது குறித்த சில மதிப்பீடுகளை 1909 செப்டம்பர் 15இல் அயோத்திதாசர் தமது ஒரு பைசா தமிழன் இதழில் முன்வைத்துள்ளார். சைவம் வைணவம் வேதாந்தமென்பனவற்றை ஏற்றுக்கொண்ட பிராமணர் அல்லாதோர் பிராமணச் சார்புடையோரே என்பதை அவர் கருத்தாக வெளிப்படுத்தியுள்ளார். அத்துடன் பிராமணர் அல்லாதாராக யார் விளங்க முடியும் என்பதற்கு, சில வரையறைகளையும் வகுத்துள்ளார். அதன்படி:
பிராமணர் என்போரால் வகுத்துள்ள சாதி ஆதாரங்களையும் சமய ஆசாரங்களையும் வைத்துக்கொண்டு (நான்-பிராமின்ஸ்) என்று கூறுவது வீணேயாகும். காரணம் சாதியாசாரக்கிரியைகளிலும் பிராமணர்களென்போர் வர வேண்டியவர்களாய் இருக்கின்றார்கள். ஆதலின் இவ்விரண்டிற்குஞ் சம்பந்தப்பட்டவர்கள் யாவரும் நான்-பிராமின் ஆகார்கள்.

இக்கருத்துக்களை மேற்கோளாகக் காட்டி அவர் இது தொடர்பாக மேலும் கூறியவற்றை நூலாசிரியர் தொகுத்துக் கூறியுள்ளார் (பக்கம்:75-83). இதன் தொடர்ச்சியாக, நீதிக்கட்சியும் பார்ப்பனர்களை எதிர்த்ததே தவிரப் பார்ப்பனியத்தை எதிர்க்கவில்லை. சாதி மத ஆசாரங்களைக் கடுமையாகக் கடைப்பிடித்த தலைவர்கள்தான் அதில் நிறைந்திருந்தார்கள் என்ற கருத்தை நூலாசிரியர் முன்வைத்துள்ளார். (தமிழ்நாட்டில் இன்று பரவலாகக் காணப்படும் அய்யப்பசாமி வழிபாட்டை, தமிழ்நாட்டில் அறிமுகம் செய்து பரப்பியவர், நீதிக்கட்சியின் தூண்களில் ஒருவராகக் குறிப்பிடப்படும் சர்.பி.டி.ராசன் தான்).

பிராமணர் அல்லாதார் இயக்கத்தை நோக்கி அவர் எழுப்பிய அய்ந்து கேள்விகளும் ஆழமானவை. சாதி இந்துக்கள் என்று சிலரால் வகைப்படுத்தப்படும் இந்துக்களைக் குறிக்க "சாதிபேதமுள்ள இந்துக்கள் என்ற சொல்லாட்சியை அயோத்திதாசர் பயன்படுத்தியுள்ளார். இது பொருள் பொதிந்த ஒன்று.

இவ்வரலாற்றுச் செய்திகளின் பின்புலத்தில் 'இடஒதுக்கீடு என்ற கொள்கையின் மூலவேர்' எது? என்பதை ஆராயும் இந்நூலாசிரியர் இக் கொள்கை முன்வைக்கப்பட்ட காலத்தை,

> *முதற்கட்ட ம் (1890-1900)*
> *இரண்டாவது கட்டம் (1905-1914)*

என இரண்டாகப் பகுத்துக் கொண்டுள்ளார். இப்பகுப்பில் முதற்கட்டம் அயோத்திதாசரை மையமாகக் கொண்டது. இரண்டாவது கட்டம் பிராமணர் அல்லாதார் இயக்கம், நீதிக்கட்சி என்ற இரு இயக்கங்களை மையமாகக்கொண்டது. முதற்கட்டத்தில் இட ஒதுக்கீடு அயோத்திதாசரின் வேண்டுகோளாக முன்வைக்கப்பட்டது. இது யாசகம் சார்ந்ததல்ல. தன் சமூகத்திற்குரிய பங்கினை வெளிப்படுத்தும் தன்மையது. இரண்டாவது கட்டத்தில் இட ஒதுக்கீடு ஒர் இயக்கத்தின் சார்பாக முன்வைக்கப்பட்டது. இடஒதுக்கீடு இன்மையால் பிராமணர்

பெற்றிருந்த ஏற்றம் இருகட்டங்களிலும் முன்வைக்கப்பட்டது. இது ஒருவகையில் ஒற்றுமைக்கூறாக அமைந்துள்ளது. வரலாற்றடிப்படையில், பிராமணிய எதிர்ப்பென்பது தமிழகத்தில் தவிர்க்க இயலாத ஒன்றாக மாறிப்போனதின் விளைவாக இதைக் கொள்ளலாமோ? பிராமணர் அல்லாத பெரு நிலக்கிழார்கள், (பெரும்பாலும் வேளாளர்கள்), வணிகர்கள், தொழில் முனைவோர், உயர் அதிகார வர்க்கத்தினர், வழக்கறிஞர், மருத்துவர் என பிராமணர் அல்லாத மக்கள் பிரிவினரிடமிருந்து உருவானோர் இரண்டாவது கட்டத்தில் உருவான இட ஒதுக்கீடு இயக்கத்தில் இணைந்து கொண்டனர். பிராமணர், பிராமணர் அல்லாதார் என்ற இரட்டை எதிர்மறையை ("Binary oppostion") இவ்வியக்கம் முன்வைத்தது.

சூத்திரர் என்ற பொது அடையாளம் பிராமணர் அல்லாதாருக்கு வழங்கப்பட்டதால் பிராமணர் சூத்திரர் முரண்பாடாக மட்டுமே பார்க்கப்பட்டது. இதன் விளைவாகத் தீண்டத்தகாதவர்கள் என்போர் இட ஒதுக்கீட்டுக்கான இவ்வியக்கத்தின் வேண்டு கோள்களில் "மற்றமை" (the other) ஆகிப்போனார்கள். இவ்உண்மையை அயோத்திதாசர் வெளிப்படையாக விமர்சனம் செய்துள்ளார். இது தொடர்பாக அவர் எழுப்பிய அய்ந்து வினாக்களும் ஆழமானவை, முக்கியமானவை.

'நீதிக்கட்சியின் விகிதாச்சார நடைமுறையை முழுமையாக ஆராய்வது நமது நோக்கமல்ல. மாறாக விகிதாச்சார உரிமை என்னும் கோட்பாடு அதனுடைய கொடையல்ல' என்ற தம் கருத்தை, தக்க சான்றுகளுடன் இந்நூலின் ஆசிரியரான தோழர் கௌதம சன்னா நிறுவியுள்ளார்.

தோழருக்கு வாழ்த்துகள்.

(வெளிவர உள்ள 'இட ஒதுக்கீட்டின் மூலவரலாறு' எனும் நூலுக்கான முன்னுரை)

நன்றி -
நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்
- ஜனவரி 2021

16. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ், அரசு மற்றும் மக்களின் உரிமைகளும் கடமைகளும்.

— சொல்லாக்கியன்

உலகின் ஒவ்வொரு நாட்டுக் குடிமகனும், அந்தந்த நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தை அறிந்திருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். ஏனெனில், எல்லா சட்டங்களின் ஊற்றுக்கண்ணாகவும் அரசியல் அமைப்புச் சட்டமே திகழ்கின்றது. ஒரு நாடு நல்ல வழியில் செல்கின்றதா அல்லது தீய வழியில் செல்கின்றதா என்பதை உரசிப்பார்க்கும் கல்லாகவும் அரசியல் அமைப்புச் சட்டம் நிலவுகின்றது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் சாரத்தைச் சுருக்கமாகக் காண்பதற்குமுன், அதன் பின்புலத்தையும் சிறிது காண்போம்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், உலகில் உள்ள எல்லா நாடுகளின் அரசியல் அமைப்புச் சட்டங்களைக் காட்டிலும், மிகவும் அருமையான சட்ட ஆவணம் ஆகும். ஏனெனில், இதை உருவாக்கியவர்களில் பலரும் சட்ட மேதைகள், உலக வரலாற்றை நன்கு அறிந்தவர்கள், புதிய சுதந்திர, சமத்துவ, சகோதரத்துவ சமுதாயத்தை உருவாக்கத் துடித்தவர்கள். பி. என். ராவ், ராஜேந்திர பிரசாத், பி.ஆர்.அம்பேத்கர், ஜவஹர்லால் நேரு, கோபாலசாமி ஐயங்கார், அல்லாடி கிருஷ்ணசாமி, வி.டி.கிருஷ்ணமாச்சாரி, கே.எம்.முன்ஷி, சையது முகமது சாதுல்லா, சரோஜினி நாயுடு, அன்சா மேத்தா, துர்காபாய் தேஷ்முக், அம்ரித் கவுர், விஜயலக்ஷ்மி பண்டிட் போன்றவர்கள் குறிப்பிடத் தகுந்தவர்கள். உலகத்திலேயே மிகவும் அற்புதமான நாடாக இந்தியாவைக் கொண்டுவர வேண்டும் என்று அவர்கள் இன்பக்கனவைக் கண்டதனால், இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்சு, ஜப்பான், அயர்லாந்து என, உலகில் உள்ள பல அரசியல் அமைப்புச் சட்டங்களின் நல்ல பண்புகளை எல்லாம் ஒன்று சேர்த்து, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கினர். இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், அதன் இறுதி வடிவில் உலகச் சட்டவரலாற்றின் ஒளிமிக்க சிகரம் எனலாம்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் முன்னோட்டம் (Preamble):
சமூகநீதி மற்றும் மதச்சார்பின்மை, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படைப் பண்புகளாகும். பொது நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவை, அதன் இலக்குகளாகும் என்று முன்னோட்டம் (Preamble) குறிப்பிடுகின்றது.

இந்திய அரசின் கொள்கைக்கு வழிகாட்டும் நெறிமுறைகள் (Directive Principles of State Policy):
முன்னோட்டத்தை மேலும் விளக்கும் வகையில், இந்நெறிமுறைகள் அமைந்துள்ளன.
இவை, அயர்லாந்து அரசியல் அமைப்புச் சட்டத்திலிருந்து எடுக்கப்பட்டன. டாக்டர். அம்பேத்கர், இவற்றை, இந்திய அரசியலமைப்பின் "புதுவகையான முக்கியத்துவம்" என குறிப்பிடுகிறார்.

அரசாங்கமானது, மக்கள் நலனிற்காக கொள்கைகளை வகுக்கும் போதும், சட்டங்களைச் செயல்படுத்தும் போதும், நெறிமுறையின் இலட்சியங்களை நிறைவேற்றும் வண்ணம் செயல்பட வேண்டும் என்பது அரசியலமைப்பின் அறிவுறுத்தலாகும் மற்றும் நாட்டின் சட்டமன்றம், நிர்வாகத்துறை, நீதித்துறை ஆகிய அங்கங்களுக்கும் பரிந்துரைப்பதாகும்.

1. இந்தியா, ஒரு நல அரசு (Welfare State): ஒரு மக்கள் நல அரசு, வாய்ப்புகளில் சமத்துவம் மற்றும் செல்வத்தைச் சமச்சீரான முறையில் விநியோகிப்பது ஆகிய கொள்கைகளின் அடித்தளத்தில் அமைந்தது. அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்கள், இந்திய நாட்டின், வரலாற்றின் அநீதி, அடிமைத்தனம், சமமின்மை, போன்ற பிரச்சனைகள் அனைத்தையும் மிக நன்றாக உணர்ந்திருந்தார்கள். அதன் காரணமாகத்தான, இந்தியா ஒரு மக்கள் நல அரசாக விளங்க வேண்டுமென்று அவர்கள் தீர்மானித்தார்கள்.

2. சோசலிசம்: பொருளாதாரச் சுரண்டலுக்கும் ஏற்றத்தாழ்வுகளுக்கும் சமத்துவமின்மைக்கும் முடிவுகட்டி, நியாயமான சமூக அமைப்பை உருவாக்க வேண்டிய கடமையை, அரசுக்கு இது சுமத்துகிறது. மக்கள் அனைவருக்கும், சமூக பொருளாதார அரசியல் நீதி கிடைக்கக் கூடியதான சமுதாய அமைப்பினை உருவாக்கி, நல அரசை உருவாக்க முயல வேண்டும் என்று, இந்திய அரசியல் அமைப்புச்சட்டத்தின் வாசகம் 38 கூறுகின்றது.
ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமவேலைக்கு சம ஊதியம் கிடைத்தல் (வாசகம் 39 d)
ஏழைகளுக்கு இலவச சட்ட உதவி வழங்குவதன் மூலம் சமமான நீதி முறையை ஏற்படுத்துவது (வாசகம் 39 A)
மனிதாபிமான வேலைச்சூழல் அமைய, பேறுகாலச் சலுகை கிடைக்கும் வகை. (வாசகம் 42)
ஊட்டச்சத்து அளவை உயர்த்தி வாழ்க்கைத் தரத்தையும் பொது ஆரோக்கியத்தையும் மேம்படுத்துவது அரசின் கடமை. (வாசகம் 47)

3. காந்தீயம்: கிராமப் பஞ்சாயத்துக்களை அமைத்தல். (வாசகம் 40)
கிராமப் புறங்களில் தனிநபர் அல்லது கூட்டுறவு முறையில் குடிசைத் தொழில்களை மேம்படுத்துதல். (வாசகம் 43)
உடல் ஆரோக்கியத்திற்குத் தீங்கு செய்யக்கூடிய மதுவகை மற்றும் போதைப் பொருள்களைப் பயன்படுத்தாமல் தடுத்தல். (வாசகம் 47)
விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பை, அறிவியல் வகைகளில், அரசு அமைத்தல். பசுவதையைத் தடுத்தல். கன்றுகள் மற்றும் பால் தரும் பசுக்கள் தீவனம் இன்றி வாடும் கால்நடைகளின் நலன்களைப் பேணுதல். (வாசகம் 48)

4. சமத்துவம்: நாடு முழுமைக்கும் ஒரே மாதிரியான சிவில் சட்டத்தைக் கொண்டு வருதல். (வாசகம் 44)
ஆறு வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் உடல் ஆரோக்கியம் மற்றும் கல்வியளிப்பது. (வாசகம் 45)
நலிவடைந்த பிரிவினரின், குறிப்பாகத் தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடிகள் ஆகியோரின், கல்வி மற்றும் பொருளாதார நலன்களை சிறப்புக் கவனம் கொண்டு அரசு வளர்க்க வேண்டும். (வாசகம் 46)

நிர்வாகத்திலிருந்து நீதித்துறையைப் பிரித்தல். (சரத்து 50)

வழிகாட்டும் நெறிமுறைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் ஆகிய இரண்டும் இந்திய அரசியலமைப்பின் தத்துவார்த்தமான பகுதிகள் மற்றும் ஆன்மா நிறைந்த பகுதிகளாகும். நெறிமுறைக் கோட்பாடுகள் மற்றும் அடிப்படை உரிமைகள் அரசியலமைப்பின் மனசாட்சி என கிரான்வில்லி ஆஸ்டின் (Granville Austin) குறிப்பிடுகிறார்.

அடிப்படை உரிமைகள்: அடிப்படை உரிமைகளுக்கு, இந்திய அரசியலமைப்பின் பகுதி – III ல், வாசகம் 12 முதல் 35 வரை, உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் பகுதி – III, இந்தியாவின் மகா சாசனம் (Magna Carta) என அழைக்கப்படுகிறது. இங்கிலாந்தில், வரலாற்றின் முதன் முறையாக 1215 – ல், அரசரின் அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டதும், பிரபுக்கள் மற்றும் சாதாரண மக்களின் உரிமைகள் காப்பாற்றப்பட்டதும், இந்த மகா சாசனம் மூலம்தான்.

வாசகம் 12 – ன்படி, ''அரசு'' என்ற சொல்லில், பின்வருவன அடங்கும்:
(1) இந்திய அரசாங்கம் மற்றும் பாராளுமன்றம்; மற்றும்
(2) ஒவ்வொரு மாநிலத்தினுடைய அரசாங்கம் மற்றும் சட்டமன்றம்; மற்றும்
(3) இந்திய ஆட்சி எல்லைக்குள் உள்ள அனைத்து உள்ளூர் அதிகார அமைப்புகள் அல்லது பிற அதிகார அமைப்புகள், மக்கள் பிரதிநிதிகள், நிர்வாக அதிகாரிகள், நீதிபதிகள் ஆகிய யாவரும், அரசியல் அமைப்புச் சட்டத்தின்படியே இயங்கவும், அதைக் காக்கவும், கடமைப்பட்டவர்கள்.

வாசகம் 13(2) – குடிமக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிப்பதாகவோ அல்லது மீறுவதாகவோ அரசு எந்தச் சட்டத்தையும் இயற்றக் கூடாது மற்றும் இந்நிபந்தனைக்கு முரணாகச் சட்டம் ஏதேனும் இயற்றப்பட்டால், அது அம்முரண்பாடு அளவிற்கு இல்லாநிலையதாக ஆக்கப்படும்.

சமத்துவ உரிமைகள் (வாசகம் 14 முதல் 18 வரை):
வாசகம் 14 – சட்டத்தின் முன் அனைவரும் சமம். அனைவருக்கும் சமத்துவ சட்டப் பாதுகாப்பு.

வாசகம் 15 – மதம், இனம், சாதி, பால், இடம் அல்லது பிறப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அரசு பாரபட்சம் காட்டக்கூடாது.

வாசகம் 16 – அரசின் வேலைவாய்ப்புகளில் அனைவருக்கும் சமவாய்ப்பு,

வாசகம் 17 – தீண்டாமை ஒழிக்கப்படுகின்றது. தீண்டாமையின் எல்லாவகையான நடைமுறையும் தடைசெய்யப்படுகின்றது . தீண்டாமையைக் கடைப்பிடிப்பவர் எவராயினும், சட்டப்படி தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்.

சுதந்திர உரிமைகள் (வாசகம் 19 முதல் 22 வரை):
வாசகம் 19:
1. பேச்சு மற்றும் கருத்துகளை வெளியிடும் சுதந்திரம்,
2. ஆயுதங்களின்றி அமைதியாகக் கூடுவதற்கான சுதந்திரம்,

3. கழகங்கள் மற்றும் சங்கங்கள் அமைப்பதற்கான சுதந்திரம்,
4. இந்தியா முழுவதும் சென்று வர சுதந்திரம்,
5. இந்தியாவிற்குள் எப்பகுதியிலும் தங்கி வாழும் உரிமை,
6. எந்த தொழில், பணி மற்றும் வணிகம் அல்லது வியாபாரத்தைச் செய்யவும் சுதந்திரம்.

வாசகம் 20:
எந்த ஒரு நபரும் தனக்கு எதிராகவே சாட்சியம், வாக்குமூலம் அளிக்க வற்புறுத்தக்கூடாது.

வாசகம் 21:
எந்த நபரின் வாழ்க்கையையும் அல்லது தனி நபர் சுதந்திரத்தையும், சட்டத்தின் நடைமுறைகளால் தவிர, பிற வழிகளில் பறிக்கக் கூடாது.
குழந்தைப்பருவத்தின் பாதுகாப்பிற்கான உரிமை, சமூகப் பாதுகாப்புக்கான உரிமை, ஆரோக்கியமான சுற்றுச்சூழலுக்கான உரிமை, மனித கௌரவத்திற்கான உரிமை போன்ற உரிமைகள் மீறப்படும் போது, பிரிவு 21-ன் கீழ் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டாக வேண்டுமென்று ஏராளமான வழக்குகளில் இந்திய உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

வாசகம் 22:
கைது செய்வதற்குண்டான காரணங்களை எவ்வளவு விரைவாக இயலுமோ அவ்வளவு விரைவாக அவருக்குத் தெரிவிக்க வேண்டும்.
தன் சார்பாக வாதாட, ஒரு வழக்கறிஞரை, தன் விருப்பப்படி கைது செய்யப்பட்டவர் அமர்த்திக் கொள்ளலாம்.
கைது செய்யப்பட்ட நபரை, அவர் கைதான நேரத்திலிருந்து 24 மணி நேரத்திற்குள், குற்றவியல் நீதிமன்ற நடுவர் முன், முன்னிலைப்படுத்த வேண்டும்.

சுரண்டலுக்கு எதிரான உரிமை வாசகம் 23 முதல் 24 வரை:
வாசகம் 23:
மனித இழிதொழில் வாணிகமும், ஊதியமற்ற கட்டாய உழைப்பு முறை மற்றும் இது போன்ற பிற வலுக்கட்டாய உழைப்பு முறைகளும் தடை செய்யப்பட்டுள்ளன.
இத்தடையை மீறி அவ்வாறு ஏதேனும் செய்யப்படுமானால், அது தண்டிக்கத்தக்கக் குற்றச் செயலாகும்.

வாசகம் 24:
14 வயதிற்குப்பட்ட குழந்தைகளை யாரும், தொழிற்சாலையிலோ அல்லது சுரங்கத்திலோ பணிக்கு அமர்த்தக் கூடாது. மேலும் பிற அபாயகரமான பணிகளில் ஈடுபடுத்தக் கூடாது.

சமய சுதந்திர உரிமை வாசகம் 25 முதல் 28 வரை:
வாசகம் 25:
பொது அமைதி, ஒழுங்கு, சுகாதாரம், அறநெறி ஆகியவற்றுக்கும் அடிப்படை உரிமைகளுக்கும் உட்பட்டு எல்லோரும் தங்கள் உளநெறிக்கு உகந்ததாகப்படும் சமய நம்பிக்கையைக் கொள்ளவும், சுதந்திரமாக அதனைப் பின்பற்றவும்,

மற்றவர்களுக்கு அதன் உண்மையை உணர்த்திப் பரப்பவும், அரசியல் சட்ட உரிமையைப் பெற்றிருக்கின்றார்கள்.

வாசகம் 26:
அரசியலமைப்புச் சட்டத்தின் பொது அமைதி, ஒழுங்கு, அறநெறி, சுகாதாரம் ஆகியவற்றின் நலனுக்குட்பட்டு,
1. ஒவ்வொரு சமயரும் அதற்குரிய அற நோக்கங்களை ஏற்படுத்திக் கொள்ளும் உரிமையைப் பெற்றிருக்கின்றார்.
2. சமய சம்பந்தமான விஷயங்களில் தனது சொந்த விவகாரங்களைத் தானே மேலாண்மை செய்து கொள்ளும் உரிமையைப் பெற்றிருக்கின்றார்.
3. அசையும் சொத்துக்களையும், அசையாச் சொத்துக்களையும் சேர்த்துக் கொள்ளவும், உரிமையாக்கிக் கொள்ளவும் உரிமை பெற்றுள்ளார்.
4. அவ்வாறு சேர்ந்து சமயக் கூடங்களுக்கு உரிமையாக்கிக் கொண்ட சொத்துக்களைச் சட்டங்கள் கூறும் முறையில் நிர்வகித்துக் கொள்ளவும், உரிமை பெற்றிருக்கின்றது என்று அரசியலமைப்புச் சட்டம் விளம்புகிறது.

வாசகம் 27:
எச்சமயத்திற்கும் அல்லது அதன் உட்பிரிவிற்கும் வரி விதித்து, அவ்வரியின் வருவாயைச் சமய வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் செலவு செய்யும் நோக்கத்துடன் எந்த ஒரு குடிமகனும் வரிப்பணம் கட்ட வேண்டுமென்று வற்புறுத்தக் கூடாது என்று கூறுகின்றது.

வாசகம் 28:
அரசின் நிதி உதவிகளை முழுமையாகப் பெற்று, கல்விப் பணிபுரியும் நிறுவனங்களில், சமய போதனை செய்வது தடுக்கப்படுகிறது.
அரசின் நிதி உதவியைப் பெறாமல் கல்விப் பணிபுரியும் நிறுவனங்களில் சமய போதனை செய்வது தடை செய்யப்படவில்லை.
மேலும், பள்ளிக் குழந்தைகளைக் கட்டாய மத போதனைகளைக் கேட்க வேண்டுமென்று கட்டாயப் படுத்தக் கூடாது.

கலாச்சார மற்றும் கல்வி வாசகம் 29 முதல் 30 வரை:
வாசகம் 29:
(i) இந்தியாவில் எப்பகுதியில் வாழ்பவராக இருப்பினும், தனி மொழி ஒன்றை அல்லது எழுத்து முறையை அல்லது தனிக் கலாச்சாரம் ஒன்றைப் பெற்றிருக்கும் சமூகத்தினர் அம்மொழி, எழுத்து வடிவம், கலாச்சாரம் ஆகியவற்றைப் பாதுகாத்துக் கொள்ளும் அரசியலமைப்பு சட்ட உரிமையைப் பெற்றுள்ளார்கள்.
(ii) அரசுக் கல்விக் கூடங்களிலும் அல்லது அரசின் உதவி பெற்று நடத்தப்படுகின்ற கல்வியியல் சாலைகளிலும், எந்தவொரு குடிமகனுக்கும், சமயம், இனம், சாதி, மொழி அல்லது அவற்றில் ஏதேனும் ஒன்றினால், கல்வி பெறும் வாய்ப்பை மறுக்க முடியாது.

வாசகம் 30:
மொழி, சமயம் ஆகியவற்றின் அடிப்படையில், சிறுபான்மையினராக உள்ள எல்லாரும், தங்கள் விருப்பப்படி கல்விக் கூடங்களை ஏற்படுத்தி அவற்றை நிர்வகித்துக் கொள்ளக் கூடிய முதல் உரிமையை வழங்குகிறது.

உரிமைகளைக் காப்பதில், அரசியலமைப்பு வாயிலான தீர்வு:
வாசகம் 32 (வாசகம் 226 – உயர்நீதிமன்றம்):
அடிப்படை உரிமைகளால் பாதிக்கப்பட்ட நபர், அரசியலமைப்பு மூலம் தீர்வு பெறலாம். பாதிக்கப்பட்ட நபர் நேராக உச்ச நீதிமன்றத்தை நாடலாம் என்பதே, ஒரு அடிப்படை உரிமையாகும். ஏனெனில் அடிப்படை உரிமைகளை முழுமையாக அனுபவிக்கவும், உரிமை மீறலைத் தவிர்க்கவும், உரிமையை நிலைநாட்டவும், இவ்வாசகம் வகை செய்கிறது.
எனவே, இந்த வாசகத்தை ஒரு போதும் செயலிழக்கச் செய்யவோ அல்லது நிறுத்தி வைக்கவோ முடியாது. மேலும், "இந்த அரசியலமைப்பில் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என ஏதாவது ஒரு குறிப்பிட்ட வாசகத்தின் பெயரைக் கூறும்படி என்னிடம் கேட்கப்பட்டால், இவ்வாசகம் இல்லாமல் இருப்பின், அரசியலமைப்பே செல்லாத ஒன்றாகக் கூடிய இவ்வாசகத்தினைத் தவிர, வேறு எந்த வாசகத்தையும் நான் குறிப்பிடமாட்டேன். இது, அரசியலமைப்பின் இருதயம், ஆன்மா ஆகும்" என டாக்டர் அம்பேத்கர் குறிப்பிடுகிறார்.

ஒருவரின் அடிப்படை உரிமைகள் மீறப்படின், உச்ச நீதிமன்றம் எவ்வகையான நீதிப்பேராணை அல்லது உத்தரவுகளைப் பிறப்பிக்குமோ, அவற்றை, வாசகம் 226-ன்படி, உயர்நீதிமன்றமும் பிறப்பிக்கலாம்.
மேலும், உயர் நீதிமன்றத்தின் நீதிப் பேராணை பிறப்பிக்கும் அதிகாரமானது, உச்ச நீதிமன்றத்தின் அதிகாரத்தை விடப் பரந்தது, என வாசகம் 226 கூறுகிறது.
ஒருவரின் அடிப்படை உரிமை மீறப்பட்டால் தான், வாசகம் 32-ன்படி உச்ச நீதிமன்றம் ஆணை பிறக்கும். ஆனால், அடிப்படை உரிமையின்றி சாதாரண உரிமைகள் மீறப்பட்டாலும், உயர்நீதிமன்றம் அவ்வாணையைப் பிறப்பிக்கும்.
1. ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை (Habeas Corpus): சட்டத்திற்குப் புறம்பான முறையில் சிறைபிடித்து வைக்கப்பட்டவரை விடுவிக்கும்.
2. செயலுறுத்தும் நீதிப்பேராணை (Mandamus): பொதுக் கடமையான ஒரு செயலை, ஓர் அதிகாரி அல்லது கூட்டமைப்பு அல்லது கீழ் நீதிமன்றம் செய்யத் தவறினால், அக்கடமையைச் செய்விக்கும்.
3. நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை (Certiorari): நீதிமுறை சார்ந்த அலுவல்களைச் செய்யும் தீர்ப்பாயங்கள், அதிகாரிகள், தம் அதிகாரவரம்பை மீறிச் செயல்பட்டாலோ, அறமுறைக்கு மாறாக நடவடிக்கை எடுத்தாலோ, அவற்றை மறு ஆய்வு செய்து நீக்கம் செய்வதற்குத் தேவையான ஆவணங்களைத் தமக்கு அனுப்புமாறு நீதிமன்றம் ஆணையிடும்.
4. தடையுறுத்தும் நீதிப்பேராணை (Prohibition): கீழ் நீதிமன்றமோ, ஆட்சி அதிகாரியோ தம் அதிகார வரம்பை மீறி அல்லது சட்ட முரணாக ஏதேனும் நடவடிக்கை எடுத்தால், அவை மேற்கொண்டு நடத்தாமல் தடைசெய்யும்.
5. தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை (Quo Warranto) : பொது அதிகாரப் பதவியில் உள்ளவர், எத்தகுதியில் அப்பதவி வகிக்கிறார் என்று வினவி, பதில் கூற ஆணையிடும்.
சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய மூன்றும், பிரெஞ்சுப் புரட்சி, உலக மக்களுக்கு அளித்த பெருங்கொடைகள். இந்திய அரசியல் அமைப்புச்சட்டத்தில், சமத்துவம் என்பதற்கு முதன்மை தரப்பட்டுள்ளது. காரணம், பல்லாண்டு காலமாய் இந்தியாவில் நிலவிவரும் ஏற்றத்தாழ்வுகளே.

எளியதை வலியது அடக்குவதும், எளியதிடமிருந்து வலியது பறிப்பதும் விலங்குலகில் மட்டுமல்ல, மனித சமுதாயத்தின் நெடிய வரலாற்றில், இன்றும் நிகழ்ந்து கொண்டேதான் உள்ளது. இனிவரும் காலங்களிலும், வெவ்வேறு வடிவங்களில், அவற்றைத் தொடர முயன்று கொண்டேதான் இருக்கும். மக்களின் தொடர்ச்சியான விழிப்புணர்வாலும், உரிமைகளுக்கான போராட்டங்களாலும் மட்டுமே, அம்முயற்சிகளைத் தடுக்க முடியும்.

அடிப்படைக் கடமைகள் (வாசகம் – 51 A)
• அரசியலமைப்புக்குக் கீழ்ப்படிந்து, அதன் நோக்கங்களையும், நிறுவனங்களையும் மதிப்பதுடன் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்து நடத்தல்;
• நமது சுதந்திரப் போராட்டத்திற்குத் தூண்டுகோலாக அமைந்த உன்னதமான நோக்கங்களைப் பேணிக்காத்துப் பின்பற்றி நடத்தல்;
• இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்தல்;
• நாட்டைக் காப்பதுடன், தேவையானபோது, நாட்டு நலப்பணிகளையும் செய்தல்;
• சமய, மொழி, வட்டார, பிரிவினை வேறுபாடுகளை எல்லாம் கடந்து, இந்திய மக்கள் அனைவரிடையேயும் சகோதர உணர்வையும் நல்லிணக்கத்தையும் வளர்த்தல்; பெண்களின் கண்ணியத்தைக் குறைக்கின்ற செயல்களை விட்டொழித்தல்;
• பல்வேறு கூறுகளுடைய நமது பண்பாட்டின் வளமான பாரம்பரியத்தை மதித்துப் போற்றிக் காத்தல்;
• காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கைச் சூழலை மேம்படுத்திப் பாதுகாத்தல், உயிரினங்களிடையே பரிவுடன் இருத்தல்;
• அறிவியல் மனப்பாங்கு, மனிதாபிமானம், ஆராய்ச்சி உணர்வு, சீர்திருத்த மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்தல்;
• பொதுச் சொத்தைப் பாதுகாத்தல்; வன்முறையை விட்டொழித்தல்;
• தொடர்ச்சியாக நம் நாடு தன்னுடைய முயற்சியில் பல முன்னேற்றங்களைக் காணவும், சாதனைகளைப் படைக்கவும் தனிமனித மற்றும் கூட்டு முயற்சிகள் அனைத்திலும் திறமையை வளர்க்கப் பாடுபடுதல்;
• 14 – வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்குக் கல்வி கற்பதற்கான வாய்ப்புகளைப் பெற்றோர்களும், காப்பாளர்களும் வழங்கவேண்டும் என்கிறது.
இந்த கடமைகள், 2002-ம் ஆண்டு 86-வது சட்டத்திருத்தம் வாயிலாகச் சேர்க்கப்பட்டது. இவையாவும் இந்தியக் குடிமக்கள் ஒவ்வொருவரின் கடமையாகும்.

அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தம் (வாசகம் 368):
அரசியலமைப்பையும் அதன் செயல்முறைகளையும் திருத்துவதற்கான அதிகாரத்தை, பாராளுமன்றத்திற்கு வழங்குகிறது. பாராளுமன்றமானது அரசியலமைப்பினைத் திருத்தி புதிய பகுதிகளைச் சேர்க்கவோ, மாற்றி அமைக்கவோ அல்லது நீக்கவோ முடியும். ஆனால், இதற்காக உருவாக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றியே செய்ய வேண்டும். எனினும், பாராளுமன்றமானது, அரசியலமைப்பின் ‘‘அடிப்படைக் கட்டமைப்பை மீறி திருத்தம் செய்யக்கூடாது.

நெருக்கடி நிலை (வாசகம் 352):
இந்தியா முழுமைக்கோ அல்லது குறிப்பிட்ட பகுதிக்கோ, போர் அல்லது அன்னிய ஆக்கிரமிப்பு அல்லது ஆயுதமேந்திய கலகத்தினால் அச்சுறுத்தல் ஏற்பட்டால், குடியரசுத் தலைவர் நெருக்கடி நிலையை பிரகடனப்படுத்துவார்.

கூட்டாட்சி (Federation):
ஒப்பந்தம் என்று பொருள்படும் இலத்தீனிய 'போடஸ் (Foedus)' என்ற சொல்லிலிருந்து கூட்டாட்சி என்ற சொல் ஏற்பட்டது. இதற்கு, கூட்டாட்சி அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்கிடையேயும் ஒப்பந்தம் இருக்கிறது என்று பொருள். தேசிய ஒற்றுமையோடு, மாநில உரிமைகளையும் பாதுகாக்க அமைக்கப்படும் அரசாங்க முறையே, கூட்டாட்சி. ஒற்றையாட்சி முறையில், மத்திய அரசாங்கம் தீட்டும் சட்டங்களை, எல்லா மாநிலங்களும் செயல்படுத்த வேண்டும்.

இந்தியாவின் அரசியல் சட்டம் என்பது எழுத்துப் பூர்வமான ஓர் ஆவணம்; மேலும் உலகிலேயே மிக அதிகபட்ச விரிவுடைய அரசியல் சட்டமும் இதுதான். அரசியல் சட்டத்தின் உச்சநிலையை இது நிறுவியுள்ளது. காரணம், மத்திய மற்றும் மாநிலங்கள் இரண்டுமே, தங்களுடைய ஆளுகைக்குட்பட்ட களங்களில், சுதந்திரமாகச் செயல்படுவதற்குரிய அதிகாரங்களை, அரசியல் சட்டம் விளக்கமாக அளித்துள்ளது.

வாசகம் 343:
இந்தியை அலுவல் மொழியாகக் குறிக்கின்றது. தமிழகம் மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள பல மாநிலங்கள் இந்தித்திணிப்பை எதிர்க்கின்றன. ஏற்கனவே, இந்தியால் பல மொழிகள் அழிந்துவிட்டன. பாகிஸ்தானில், உருது தேசிய மொழியாய் இருக்கும் போதிலும், உருதும் ஆங்கிலமும் அலுவல் மொழிகளாக உள்ளன. ஏனெனில், அங்கும், உருதுவைத் தவிர, பஞ்சாபி, சராய்கி, பாஷ்டோ, சிந்தி, பலுச்சி, குஜாரி, காஷ்மீரி, இந்த்கோ, பிராஉயி, ஷீனா, பால்டி, கோவார், தத்கி, அர்யான்வி, மார்வாரி, வாகி, புருஷாகி எனப் பல மொழிகள் பேசப்படுகின்றன. எனவே, இந்த வாசகத்தை வரலாற்றுப் பூர்வமாக ஆராய்ந்து, திருத்தம் கொண்டுவர வேண்டியது எதிர்கால அவசியமாகும்.

அரசியல் அமைப்புச்சட்டத்தின் மூன்று பட்டியல்கள் (வாசகம் 246):
மத்திய, மாநில மற்றும் பொதுப்பட்டியல்கள். மத்திய அரசின் பட்டியலில், பாதுகாப்பு, இரயில்வேக்கள், தபால் மற்றும் தந்தி போன்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த 97 அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.
மாநிலப் பட்டியலில், பொதுச் சுகாதாரம், காவல் போன்ற உள்ளூர் நலன் சார்ந்த 66 அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.
மின்சாரம், தொழிற்சங்கம், பொருளாதார மற்றும் சமூக திட்டமிடல் போன்ற 47 அம்சங்கள், மத்திய மற்றும் மாநிலம் ஆகிய இருதரப்புக்குமே முக்கியத்துவம் வாய்ந்தவை என்ற வகையில், பொதுப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.
ஆனால், இன்றைய சூழலில், மாநிலங்களின் நலன்களை விலையாகக் கொண்டு, மையத்திற்குச் சாதகமான விதத்தில், ஒரு சாய்வுப் போக்கு நிலவுகிறது.
மத்திய அரசுடன், மிக நெருக்கமான ஒத்துழைப்புடன் மாநிலங்கள் பணியாற்றியாக வேண்டும் எனும் கட்டாயம் நிலவுகின்றது.

இந்திய அரசியல் சட்டம், தனது வடிவத்தில் கூட்டாட்சித் தன்மையுடனும், உள்ளடக்கத்தில் ஒற்றையாட்சித் தன்மையுடனுமே அமைந்திருக்கிறது.

வாசகம் 370:
ஜம்மு–காஷ்மீர் மாநிலத்துக்குச் சிறப்பு நிலை வழங்கி இருந்தது.
அதன்படி இந்திய அரசியலமைப்பின் அனைத்து சட்டதிட்டங்களும் ஜம்மு–காஷ்மீர் மாநிலத்துக்குப் பொருந்தாது.
இந்தியாவிலேயே இந்த மாநிலத்திற்கு மட்டும் தான் தனியாக "ஜம்மு காஷ்மீர் அரசியலமைப்பு" எனும் மாநில அரசியல் அமைப்பு இருந்தது.
இவ்வாசகம் அகற்றப்பட்டதால், இன்றைய நிலையில், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கும், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் பொருந்தும்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் தன்னாட்சி அமைப்புகள்:
வாசகம் 324: தேர்தல் ஆணையம், ஒரு தன்னாட்சி அமைப்பாகும். eci.gov.in/
வாசகம் 280: நிதி ஆணையம் ஒரு தன்னாட்சி அமைப்பாகும். https://fincomindia.nic.in/ShowContentOne.aspx?id=3&Section=1
வாசகம் 315: மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் தன்னாட்சி அமைப்பாகும். https://www.upsc.gov.in/about-us/commission-
வாசகம் 148: இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத்தலைவரை, குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். https://cag.gov.in/
வாசகம் 338: தாழ்த்தப்பட்டோருக்கான தேசிய ஆணையம்.
வாசகம் 338A: பழங்குடியினருக்கான தேசிய ஆணையம்.http://www.ncsc.nic.in/pages/display/12-whos-who
வாசகம் 76: இந்திய அரசின் தலைமை வழக்குரைஞரைக் குடியரசுத் தலைவர் நியமிப்பார்.

தன்னாட்சி அமைப்புகள் சுதந்திரமாக இயங்கவில்லை என்றால், மக்களின் சுதந்திரமும் பறிபோகும், எதேச்சதிகாரம் மட்டுமே மிஞ்சும் என்பது வரலாற்றுப்பாடம்.
அரசியலமைப்புச்சாரா அமைப்புகள்:
1. திட்டக்குழு
2. தேசிய வளர்ச்சிக் குழு
3. தேசிய மனித உரிமைகள் ஆணையம் https://hrcnet.nic.in/HRCNet/public/Home.aspx
4. மத்திய கண்காணிப்பு ஆணையம் http://portal.cvc.gov.in/cvproject/
5. லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா http://lokpal.gov.in/
6. நிதி ஆயோக் https://niti.gov.in/

இறுதியாக, 2005 – ஆம் ஆண்டின் 'தகவல் அறியும் உரிமைச் சட்டம்', மிகவும் முக்கியமான சட்டமாகும். குடிமக்களை அதிகாரம் படைத்தவர்களாக ஆக்குவது அரசாங்கத்தின் செயல்பாட்டில் வெளிப்படைத் தன்மையையும் - பொறுப்பேற்றுக் கொள்ளுதலையும் முன்னெடுத்துச் செல்வது, ஊழலைக் கட்டுப்படுத்துவது மற்றும் நமது ஜனநாயகத்தை, மக்களுக்காகப் பணி செய்வதை அதனுடைய உண்மையான அர்த்தத்தில் மேற்கொள்ளுமாறு செய்வது - ஆகியவையே தகவலறியும் உரிமைச் சட்டத்தின் அடிப்படை நோக்கங்களாகும்.

பணியைச் சோதித்தறிவது, ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளைப் பரிசோதிப்பது, அத்தகைய ஆவணங்களையும், பதிவேடுகளையும் சான்றளிக்கப்பட்ட பிரதிகளாகப் பெறுவது, அவற்றின் குறிப்பிட்ட சில பகுதிகளை மட்டும் பெறுவது, அவற்றிலிருந்து குறிப்புகள் எடுப்பது, மற்றும் பொது அதிகார அமைப்பு அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட்டிருக்கும் சான்றாதாரங்களின் சான்றளிக்கப்பட்ட மாதிரிகளைப் பெறுவது போன்ற இவையனைத்துமே, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அடங்குவனவாம்.

தகவல் அறியும் உரிமையை இச்சட்டம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் பெற்றுள்ள உரிமைக்குச் சமமான விதத்தில் குடிமக்களுக்கு வழங்கி உள்ளது.
ஒரு பொது அதிகார அமைப்பிடமிருந்து, ஏதேனும் ஒரு தகவல் கோருகிற ஒரு நபர், தனது விண்ணப்பத்துடன் ரூ.10 (ரூபாய் பத்து) மதிப்புள்ள இந்திய அஞ்சலக ஆணை அல்லது வங்கி காசோலை அல்லது வங்கி கேட்போலை – ஒன்றை, அப்போது அதிகார அமைப்பின் கணக்கு அலுவலருக்கு வழங்கப்படும் வகையில், தகவல் கோருவதற்காக நிர்ணயிக்கப்பட்ட கட்டணமாகச் சேர்த்து அனுப்ப வேண்டும்.
சாதாரணமான நடைமுறைப்படி, பொது அதிகார அமைப்பினால் விண்ணப்பம் பெறப்பட்டதிலிருந்து 30 நாட்களுக்குள் ஒரு விண்ணப்பதாரருக்கு அவர் கோரும் தகவல் அளிக்கப்பட வேண்டும். அத்தகவல் ஒரு குறிப்பிட்ட நபரின் உயிர் அல்லது சுதந்திரம் தொடர்பானதாக இருக்கும் பட்சத்தில், 48 மணி நேர அவகாசத்திற்குள், அவ்வாறு கோரப்படும் தகவல் வழங்கப்பட்டுவிட வேண்டும்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், அதன் வடிவத்திலும், சாரத்திலும் மிகவும் உன்னதமான படைப்பாகும். கூடவே, தகவல் அறியும் உரிமைச் சட்டமும், அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு மிகவும் உறுதுணையானதாகும்.
ஆனால், எந்த அழகிய வண்ணமாலையும், யார் கையில் இருக்கின்றது என்பதைப் பொறுத்தே, அது அணியப்படும் அல்லது குதறப்படும்.
ஊடகமும், நீதிமன்றங்களும் சுதந்திரம் இழந்து கையறுநிலையில் இருக்கும்போது, அரசியல் அமைப்புச் சட்டம் தவறான கைகளில் இருப்பின், அது, தொடர்ந்து அவ்வாறு இல்லாதபடி பார்த்துக் கொள்ள வேண்டியது, மக்களின் கடமையாகும். மக்களே, அரசியல் அமைப்புச் சட்டத்தின் இறுதிக் காவலர்கள்.

மேலும், ஒன்றை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் சாரம், இந்திய அரசாங்கச் சட்டம் 1935-ஐ அடிப்படையாய் கொண்டதாகும். முதலில், அது ஆங்கிலேயரின் நலன்களையும், பின்பு, மேலாதிக்கத்தினரின் உள்நோக்கங்களையும் கொண்டதாக இருந்தது. என்னதான், அம்பேத்கரோ பிறரோ திருத்த முயன்றாலும், சில நுணுக்கமான எதிர்மறை அம்சங்கள், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில், கண்களுக்குப் புலனாகாமல் மறைந்துள்ளன. ஆழமாய் ஆய்ந்து, அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டியது, எதிர்கால சந்ததியின் கடமையாகும். அதற்கான ஆய்வுகளைத் தொடரவேண்டியது இளைய சமுதாயத்தின் உடனடி பணியாகும்.

17. கலைஞர் எனும் கருணாநிதியின் வாழ்க்கை வரலாறு.

— முனைவர்.தேமொழி



எழுத்தாளர் வாசந்தி எழுதி, செப்டெம்பர் 2020இல் ஜகர்னாட் பதிப்பகம் மூலம் "கருணாநிதி: தி டெஃபினிட்டிவ் பயோகிராஃபி"(Karunanidhi: The Definitive Biography) என்ற தலைப்பில், முன்னாள் தமிழக முதல்வர் கலைஞர் முத்துவேல் கருணாநிதி அவர்களின் மறைவிற்குப் பின்னர் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள அவரது வாழ்க்கை வரலாற்று நூலின் மீதான திறனாய்வே இக்கட்டுரை. வாருங்கள் படிப்போம் - நூல் திறனாய்வுக் குழுவின் நிகழ்வில் அக்டோபர் 31, 2020 அன்று இத்திறனாய்வு உரை வழங்கப்பட்டது.

வாசந்தி அவர்களின் நூல் தலைப்புகளின் தேர்வு தனித்தன்மையுடன் வியக்க வைக்கும் தன்மை கொண்டவை; "துரத்தும் நினைவுகள் அழைக்கும் கனவுகள்" என்பது போல. துரத்தும் நினைவுகளையும் அழைக்கும் கனவுகளையும் கொண்டதுதானே நமது வாழ்க்கையாகவே இருக்கிறது. திறனாய்வுக்கு உள்ளாகும் 'கருணாநிதி: தி டெஃபினிட்டிவ் பயோகிராஃபி' என்ற இந்த நூலின் அத்தியாயங்களின் தலைப்பும் அவ்வாறே கவனத்தைக் கவரும் வகையில் உள்ளன. வாசந்தி முன்னாள் முதல்வர் கருணாநிதியின் வாழ்க்கை வரலாற்றை "கலைஞர் எனும் கருணாநிதி" என்ற தலைப்பில் முன்னர் தமிழிலும் 2018 ஆம் ஆண்டில் வெளியிட்டிருந்தார். இப்பொழுது ஆங்கிலத்திலும் நீண்ட நெடிய, பல திருப்பங்களைக் கொண்ட கருணாநிதியின் வாழ்க்கை வரலாற்றை 20 தலைப்புகளில், ஒருபாற் கோடாத நடுவுநிலை நின்று கருணாநிதியின் பிறப்பில் தொடங்கி மறைவு வரை 250 பக்கங்கள் கொண்ட நூலாக வடித்துள்ளார்.

தமிழர்களுக்கு 1980கள் முதற்கொண்டு நன்கு அறிமுகமானவரும்; புதினம், கதைகள், கட்டுரைகள், பயணக்கட்டுரைகள், வாழ்க்கை வரலாறுகள் என 50க்கும் மேலான நூல்களை எழுதிய எழுத்தாளரும், இந்தியா டுடே இதழ் தமிழ்ப் பதிப்பின் முன்னாள் ஆசிரியராகவும் பணியாற்றியவர் எழுத்தாளர் வாசந்தி. கர்நாடகாவில் பிறந்து வளர்ந்த தமிழ்ப் பெண்மணி இவர். மிஜோரம், நேபாளம், பஞ்சாப், இலங்கை, ஃபீஜி நாடுகளைப் பின்புலமாக வைத்து வாசந்தி எழுதிய புதினங்கள் - மூங்கில் பூக்கள், ஆர்த்திக்கு முகம் சிவந்தது, மௌனப் புயல், நிற்க நிழல் வேண்டும், தாகம் ஆகியவை. மௌனப்புயல் என்ற நூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு பஞ்சாம் சாகித்திய அகாடமி விருது பெற்றது. சமூக நாவலான 'ஆகாச வீடுகள்' ஹிந்தியிலும் ஆங்கிலத்திலும் மலையாளத்திலும்

மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. ஹிந்தி மொழிபெயர்ப்பிற்கு உத்தர் பிரதேச சாகித்ய சம்மான் விருது கிடைத்தது. மேலும் "வாசந்தி சிறுகதைகள்" என்ற தொகுப்பிற்குத் தமிழக அரசின் சிறந்த நூல் என்ற விருதும் கிடைத்துள்ளது. முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் வாழ்க்கை வரலாற்றையும் நூல்களாக இவர் எழுதியுள்ளார். அந்நூல்களில் 'அம்மா' என்ற நூல் தமிழிலும், ஆங்கிலத்திலும், ஹிந்தியிலும் வெளியாகியது. இவர் இந்தியா டுடேயில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தின் போது ஏற்பட்ட தமிழ் நாட்டு அரசியல் நிகழ்வுகளை தமது அரசியல் சார்பற்ற பார்வையுடன் ஆங்கிலத்தில் எழுதிய 'Cut-outs, Caste and Cine Stars' என்ற புத்தகத்தை பெங்குவின் பதிப்பகம் வெளியிட்டிருக்கிறது.

"என் உயிரினும் மேலான உடன் பிறப்புகளே" என்று அவர் அழைப்பதைக் கேட்டாலே ஆர்ப்பரிக்கும் தமிழக மக்கள் கூட்டத்தைத் தன்பால் கவர்ந்து வைத்திருந்த கலைஞர் என்று அறியப்பட்ட, தமிழகத்தின் முன்னாள் முதல்வர் முத்துவேல் கருணாநிதிக்குத் தமிழக வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும் தனியிடம் உண்டு. அவ்வாறே இந்திய வரலாற்றிலும் தனி முத்திரை பதித்துச் சென்றவர் கருணாநிதி.

கருணாநிதி வேறு தமிழக அரசியல் வேறு என்று பிரிக்க முடியாத வகையில், கடந்த நூற்றாண்டு தமிழக வரலாற்றையே ஒரு மீள்பார்வை செய்வதாக அமைந்துவிட்ட நூல் இது. இந்த நூல் வாயிலாகக் கருணாநிதியைப் பற்றி அறிந்து கொள்கையில், குறைகளும் நிறைகளும் கொண்ட கருணாநிதி அரசியல் வாழ்வு மூலம் எதைச் சாதிப்பதைத் தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தார் என்பது தெளிவாகிறது. அதைக் கருணாநிதியே இந்திய அளவில் அரசியல் பங்களிப்பில் அவரால் செயல்படுத்த முடிந்த குறிப்பிடத் தக்கப் பங்களிப்பாகவும் கூறிச் சென்றுள்ளார்.

பிற்காலத்தில் கருணாநிதியைப் பற்றி ஏதும் நேரடியாக அறிந்திராத, ஆனால் கிடைக்கும் பலவகைப் பதிவுகள் மூலம் மட்டுமே கருணாநிதியின் அரசியல் வாழ்வை அறியக்கூடிய ஒரு நிலையில் இருக்கும் வருங்காலத் தலைமுறையும் அவரது ஆட்சியின் செயல்பாடுகளை எடை போட்டு அதையே அவரது பங்களிப்பாக, கருணாநிதியின் அடையாளமாக முடிவு செய்ய வேண்டியிருக்கும்.

இந்த நூலின் நான்கைந்து அத்தியாயங்கள் குறித்த சற்று விரிவான அலசலுடனும், மற்ற அத்தியாயங்கள்; அதாவது வாழ்க்கை வரலாற்றைப் புரிந்து கொள்ள உதவும், ஆனால் யாவரும் அறிந்த கருணாநிதி குறித்த வரலாற்றுப் பின்னணிகள் மேலோட்டமாகவும் குறிப்பிட்டுவிட்டுக் கடந்து செல்வோம். ஏனெனில், கருணாநிதி அரசியல்வாதியாகத் தமிழகம் மற்றும் இந்திய அரசியலில் ஏற்படுத்திய தாக்கம் குறித்து மட்டும் சொல்வதே சமூக அளவில் கருணாநிதியின் பங்களிப்பைக் காட்டும் என்பது எனது கருத்து.

மேலும், கருணாநிதி எழுதிய தன்வரலாற்று நூலாகிய புகழ்பெற்ற 'நெஞ்சுக்கு நீதி' என்ற நூலின் 6 தொகுப்புகளையும் படித்தவருக்கும், கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் 1950 களுக்குப் பிறகு பிறந்து தமிழகத்தில் வாழ்ந்திருக்கக் கூடிய எவருக்குமே நூலில் எதுவும் புதிய செய்திகளாக இருக்க வாய்ப்பில்லை. ஆனால் நெஞ்சுக்கு நீதி 6 நூல்களின் செய்தியையும் அதன் பிறகு கருணாநிதியால் முடிக்கப் படாமல் விட்டுப்போன பிற்கால நிகழ்வுகளையும் சேர்த்து 250 பக்கங்களில்

விறுவிறுப்பாகத் தொய்வின்றி சுருக்கமாகச் சொல்லிச் சென்ற வாசந்தியின் திறமை பாராட்டிற்குரியது. எத்தனை முறை ஆனாலும் முன்னர் பார்த்த 'பராசக்தி' திரைப்படத்தையே நம்மால் மீண்டும் மீண்டும் பார்க்க முடிவது போல, கருணாநிதியின் தாக்கத்திற்கு உள்ளான தமிழக வரலாற்றையும் இந்த நூலின் வழி நினைவு கூர்ந்து அசை போட முடியும்.

அரை நூற்றாண்டிற்கும் மேலாகத் தமிழகத்தின் ஒரு முன்னணிக் கட்சியின் தலைவராக, ஐந்து முறை முதல்வராகப் பொறுப்பு வகித்த, எந்த தேர்தலிலும் தோல்வியுறாத ஒரு அரசியல்வாதியாகவே நூல் அவரைக் காட்டிச் செல்கிறது. அவரது இளமைக் காலம், கலையுலக வாழ்க்கை போன்றவை நூலில் மிகக் குறைவாகவே உள்ளன. எதன் மூலம் மக்கள் மத்தியில் கருணாநிதி பெரும்பான்மையாக அறியப்பட்டாரோ அந்த கலையுலக பங்களிப்பு என்பது இறுதியில் அவரது மறைவு குறித்துக் கூறப்படும் அத்தியாயத்தில் சிறிய அளவில் சற்றே இடம் பிடிக்கிறது. தேவையான அளவு இளமைக் கால, கலையுலக வாழ்க்கையுடன் அவரது அரசியல் வாழ்வு குறித்து நூலில் விவரிக்கப்படுகிறது.

1934இல் பத்து வயது சிறுவனாகத் திருக்குவளை வீட்டில் தனது தந்தை முத்துவேலர் வாசிக்கும் நாதஸ்வர இசையைத் தன்னை மறந்து கேட்டுக் கொண்டிருந்த கருணாநிதிக்குச் சாதி பேதத்தின் முதல் பட்டறிவு கிட்டுகிறது. திறமையான இசைக்கலைஞரும் கல்வி அறிவு கொண்டவரான தனது தந்தை மிராசுதார் அழைப்பின் பேரில் அவர் வீட்டிற்குச் சென்று இடுப்பில் துண்டுடன் கூனிக் குறுகி அவர் முன் நிற்க வேண்டிய நிலைக்குச் சாதி அமைப்புதான் காரணம் என்று புரிந்து கொண்ட துவக்கம் அது. பின்னர் அதுவே அவர் பிற்காலத்தில் யாராக உருவெடுக்கிறார் என்பதற்கான காரணம் என்று 'Born to Rebel' என்ற தலைப்பில் நூலைத் துவக்குகிறார் வாசந்தி. பள்ளியில் நீதிக் கட்சியின் பனகல் அரசர் குறித்துப் படித்த நூலின் மூலம் சமூக நீதி பற்றி அவர் அறிந்து கொண்டது அவரது வாழ்வைச் சமத்துவக் கொள்கைப் பாதைக்குத் திருப்ப மேலும் ஒரு தூண்டுகோலாக அமைந்தது. ஈ.வெ.ராவின் சுயமரியாதை இயக்க முழக்கங்களும், அவரது தளபதி சி.என்.அண்ணாதுரையின் அருமைத் தமிழில் அமைந்த திராவிடக் கொள்கைப் பரப்புரைகளும் கருணாநிதியை 14 வயதிலேயே 'மாணவ நேசன்' என்று கையெழுத்துப் பத்திரிக்கையைத் துவக்கி வெளியிடும் இதழாளராகவும் மாற்றியது. அத்துடன் அவரை இந்தி திணிப்பு கொள்கையின் ஒரு எதிர்ப்பாளராக மாற்றிவிட்டது. இதற்கு நீதிக் கட்சியின் தேர்தல் தோல்விக்குப் பிறகு 1937இல் ஆட்சிக்கு வந்த காங்கிரஸ் முதலமைச்சர் ராஜாஜி பள்ளியில் இந்தியை நுழைக்க முற்பட்டதுதான் திருப்புமுனை.

தமிழக வரலாற்றில் மறக்கமுடியாத சில திருப்புமுனைகள் உள்ளன. அந்த திருப்புமுனைகள் நிகழக் காரணம் ஆட்சியில் இருப்பவர் செய்த தவறான கணிப்புகளின் விளைவுகளும், எடுத்த அல்லது எடுக்கத் தவறிய நடவடிக்கைகளின் விளைவுகளாகவே அமைந்திருந்தன என்பது மறுக்க முடியாத ஒரு வரலாற்று உண்மை.

பள்ளி வாழ்க்கை முடிந்து இளைஞரான பின்னர் திருமண வாழ்க்கை, தொடர்ந்து நாடகத் துறையில் நுழைந்தது, ஈ.வெ.ராவின் குடிஅரசு இதழில் துணை ஆசிரியராகப் பணிக்குச் சேர்ந்தது, அங்கிருந்து ஜூபிடர் பிலிம்ஸ் மூலம்

திரைத்துறையில் கதை வசனம் எழுதச் சென்றது, அங்கு நடிகராக இருந்த எம்.ஜி.ஆருடன் ஏற்பட்ட நெருங்கிய நட்பு என்பது வரை ஒரு தனிப்பட்ட இலக்கிய ஆர்வமுள்ள முற்போக்குச் சிந்தனை கொண்ட இளைஞர் ஒருவரின் வாழ்க்கை வரலாறு.

இதன் பிறகு திமுகவும் அதனுடன் கருணாநிதியும் இணைந்து பயணித்த வரலாற்றின் துவக்கம். ஈ.வெ.ராவின் திராவிட கழகத்திலிருந்தவர்களில் சிலர் தேர்தலில் போட்டியிட்டு அரசாட்சியில் பங்கேற்க விரும்பி அண்ணாதுரையின் தலைமையில் துவக்கிய திமுக என்று அறியப்படும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோற்றம், அந்தக் கட்சியின் கொள்கை பரப்பும் பொறுப்பேற்று முக்கியமான ஒரு உறுப்பினராகக் கருணாநிதி அரசியலில் பயணித்தது, 1950 மற்றும் 1960களில் இந்தி திணிப்பு எதிர்ப்பில் தீவிரமாகப் பங்கேற்றது, டால்மியாபுரம் - என்பதைக் கல்லக்குடி எனப் பெயர் மாற்றம் கோரிய போராட்டத்தில் புகைவண்டி மறியல், தண்டவாளத்தில் படுத்துப் போராட்டம் செய்து கருணாநிதி சிறைக்குச் சென்றது, இவ்வாறாக எதிர்பாராத வகையில் கருணாநிதி நடத்திய இந்த அதிரடி செயலால் அண்ணாதுரையின் மனவருத்தத்திற்கு ஆளானது, குளித்தலையில் போட்டியிட்டு 1957இல் சட்டசபைத் தேர்தலில் வென்றது, தொடர்ந்து முரசொலி நாளிதழில் உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதி கட்சி உறுப்பினர்களுடன் ஒரு வலுவான தொடர்பை வளர்த்துக் கொண்டது ஆகியன நாம் விரைவில் பார்த்துக் கடக்கக் கூடிய திமுகவின் கட்சி உறுப்பினராகக் கருணாநிதியின் ஆரம்பக்கால அரசியல் வாழ்க்கைச் சுருக்கம்.

1965 இல் திமுக தலைவர்களை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகச் சிறையில் அடைத்த பிறகும் மாணவர்கள் நடத்திய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை ஆட்சியிலிருந்த காங்கிரஸ் அடக்குமுறையின் மூலம் ஒடுக்க நினைக்க, அதனால் ஏற்பட்ட உயிர் இழப்புகளில் தமிழகமே நிலைகுலைந்து போனது. இது திமுகவிற்கு 1967 தேர்தலில் வெற்றி வாய்ப்பை அளித்து ஆட்சியை திமுக கையில் கொடுத்தது. இது திமுகவே எதிர்பார்த்திராத ஒரு வெற்றியாக அமைந்தது, சி.என்.அண்ணாதுரை முதல்வர் பொறுப்பை ஏற்றார், கருணாநிதி தமிழ்நாடு பொதுப்பணித் துறை அமைச்சர் பொறுப்பை ஏற்றார்.

ஆனால் அண்ணாதுரையின் கெடுவாய்ப்பாக நோயுற்று, புற்று நோயால் 1969 இல் இயற்கை எய்தினார். கட்சி உறுப்பினர்களே தங்களது அடுத்த தலைமைப் பொறுப்பைத் தேர்வு செய்துகொள்வதே முறை என்று நோயுற்று இருந்த அண்ணாதுரையும் தனக்கு அடுத்து யார் பொறுப்பேற்க வேண்டும் என்று குறிப்பிடவில்லை. அவர் மருத்துவமனையிலிருந்த காலத்தில் இடைக்கால முதல்வராக இருந்தவர் திமுகவின் ஐம்பெரும் தோற்றுநர்களில் ஒருவரான, சிறந்த கல்விமானாக, நல்ல பேச்சாளராக, கட்சியில் முக்கியப் பொறுப்பிலிருந்த நெடுஞ்செழியன்.

அவரைவிட திமுக சட்டசபை உறுப்பினர்கள் கருணாநிதியே முதல்வர் பொறுப்பை ஏற்கவேண்டும் என்று தனிப்பட்ட முறையில் கருணாநிதியைக் கேட்டுக் கொள்ளத் தொடங்கினர். கருணாநிதியுடன் தமிழகமெங்கும் தொடர்பிலிருந்த திமுக கட்சி உறுப்பினர்களும் இதையே விரும்பிய நிலையில், கருணாநிதியின் நெடுநாளைய நண்பரும் கட்சியில் முக்கியப் புள்ளியாக இருந்த

எம்.ஜி.ஆரும் அதையே விரும்பி கட்சியில் மக்களாட்சி முறை அடிப்படையில் கருணாநிதியை திமுக தலைவராகவும் முதலமைச்சர் பொறுப்பிலும் தேர்வு செய்தார்கள். 383 திமுக கவுன்சில் உறுப்பினர்களில் 300 பேர் கருணாநிதியை முதல்வர் பதவிக்கு ஏற்றுக் கொண்டதாகத் தெரிகிறது. எம்.ஜி.ஆர் தனது ராமாவாராம் தோட்ட வீட்டில் திமுக உறுப்பினர்களுடன் கலந்துரையாடி கருணாநிதிக்கு ஆதரவு திரட்டி கருணாநிதி முதல்வராக முக்கிய காரணமாக இருந்துள்ளார். அன்று தொடங்கி கருணாநிதி திமுகவின் தலைமைப் பொறுப்பில் சற்றொப்ப அரை நூற்றாண்டாகப் பொறுப்பிலிருந்து பல தேர்தல் தோல்விகளுக்கும் பின்னரும், கட்சியில் ஏற்பட்ட பிளவுகளுக்குப் பின்னரும் ஒரு உறுதியான கட்சியாக திமுகவை அவர் விட்டுச் சென்றார் என்பது ஒரு திறமையான மேலாண்மைக்குச் சான்று.

கருணாநிதி முதல்வர் பதவி ஏற்ற பின்னர் மனுநீதி திட்டம் என்று அதிகாரிகள் மக்களிடமே சென்று குறை கேட்டு நிவர்த்தி செய்வது, பிற்படுத்தப்பட்டோர் நலவாழ்விற்காக சட்டநாதன் ஆணைக்குழு அமைத்தது, அதன் பரிந்துரையில் இட ஒதுக்கீட்டை 49 விழுக்காட்டிற்கு உயர்த்தியது, சி.என்.அண்ணாதுரையின் ஆட்சிக் காலத்தில் 1968 இல் கீழவெண்மணி உழவர் படுகொலை நிகழ்ச்சியினால் உழவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் குறைந்த அளவு ஊதியம் என்ற முறை கொண்டு வந்தது, காங்கிரஸ் ஆட்சியிலிருந்த நில உச்சவரம்பை 30 இல் இருந்து 15 ஏக்கர் என்ற அளவிற்குக் குறைக்கும் சட்ட மாறுதல் போன்றவை குறிப்பிடத்தக்க அரசியல் செயல்பாடுகள். இந்தியா சுதந்திர நாளில் மாநில முதல்வர் தேசியக் கொடியேற்றும் உரிமை, மனிதரை மனிதர் இழுக்கும் கைரிக்ஷா ஒழிப்பு போன்றவை கருணாநிதி முதல் முறை முதல்வர் பதவி வகித்த பொழுது கொண்டு வந்த மாற்றங்கள்.

மாநில சுயாட்சி - மத்தியில் கூட்டாட்சி கொள்கை முன்னெடுப்பு, மத்திய -மாநில அரசுகளின் அதிகாரம் உறவு போன்றவற்றை மேம்படுத்த ராஜமன்னார் ஆணையம் அமைத்தது என்பது அரசியல் மற்றும் ஆட்சிக் கோணத்தில் ஒரு முற்போக்கான நடவடிக்கை. இது இந்தியாவிற்கே முன்மாதிரியான ஒரு வரவேற்கத்தக்க மாறுதலாகக் கருதப்பட்டது. 9 ஆண்டுகள் கழித்து மற்ற மாநிலங்களும் பாராட்டி இதை நடைமுறைப்படுத்த ஆர்வம் காட்டியது குறிப்பிடத்தக்கது.

1969 இல் காங்கிரஸ் இரண்டாகப் பழைய காங்கிரஸ் இந்திரா காங்கிரஸ் என்று உடைந்த பொழுது, மத்தியில் இந்திரா காந்தியின் காங்கிரசுக்கு ஆதரவு அளித்தாலும் தனது மாநில சுயாட்சி கோரிக்கையைக் கைவிட இயலாது என்பதை வலியுறுத்த "உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்" என்று அறிவித்து இந்திரா காந்தியின்; வங்கிகளைப் பொதுவுடைமையாக்கும் திட்டத்தில் உதவியது, விவி கிரியை இந்திரா காந்தியின் விருப்பப்படி தற்காலிக குடியரசுத் தலைவர் பதவியில் அமர்த்துவது போன்றவற்றில் கருணாநிதி இந்திரா காந்திக்கு உதவினார்.

மத்திய மாநில அரசுகளின் இடையே ஆட்சியிலிருந்தவை எதிர்க் காட்சிகளாக இருந்தாலும் உறவுச் சிக்கல் இன்றி இருந்தது என்பதைக் கருணாநிதியின் ஆட்சிக் கால விளைவுகளாக வாசந்தி குறிப்பிடுகிறார். அவர் குறிப்பிடாத மேலும் சில நற்பணிகளும் எனக்கு நினைவில் உள்ளது குறிப்பாகக் கண்ணொளி வழங்கும்

திட்டம், குடிசை மாற்று வாரியம், குதிரைப் பந்தய ஒழிப்பு, தொழுநோயாளிகளுக்குச் சிகிச்சை ஏற்பாடுகள், பிச்சைக்காரர் மறுவாழ்வு திட்டம் போன்றவை.

கட்சியில் தனக்கு இணையான அளவில் மக்கள் ஆதரவுடன் இருந்த எம்.ஜி.ஆரின் நிலைப்பாட்டை உணர்ந்தாலும் அவரது வளர்ச்சியைப் பெரிதுபடுத்த, அங்கீகரிக்க விரும்பாத மனநிலை கருணாநிதிக்கு இருந்தது. 1971 தேர்தலுக்குப் பிறகு மீண்டும் ஆட்சி அமைத்த திமுக அமைச்சரவையில் ஒரு பதவியை எதிர்பார்த்திருந்த எம்.ஜி.ஆரின் விருப்பம் நிறைவேறவில்லை. கட்சி உறுப்பினர்களின் முடிவாக அது காட்டப்பட்டது. நடிப்புத் தொழிலை விட்டு வந்தால் அமைச்சரவையில் இடம் என்று கூறப்பட்டதில் மனம் குமைந்து கொண்டிருந்த எம்.ஜி.ஆருக்குப் போட்டியாக கருணாநிதியின் மகன் மு.க.முத்துவும் 1972 இல் திரைப்படத்துறையில் களமிறங்கியதும் அல்லது இறக்கப்பட்டதும் எம்.ஜி.ஆருக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை.

இவ்வாறாகக் கட்சிக்கு எதிராகத் தனது மனக்குறையை வெளிப்படையாகக் காட்ட இயலாத நிலையிலிருந்த எம்.ஜி.ஆர். இந்திரா காந்தியால் வருமானவரி குறித்த ஆய்வு என்ற சிக்கலில் சிக்க வைக்கப்பட்டார். இதற்காக எம்.ஜி.ஆர். டெல்லி சென்று வந்த பின்பு ஒரு புதிய மனிதராக மாறினார் என்பது கருணாநிதியின் கருத்து. தேர்தல் கூட்டணியில் காங்கிரசுக்குச் சரியான பிரிவினை கொடுக்கப் படவில்லை என்று கருணாநிதி மீது குறைபாட்டுடன் இருந்த இந்திராகாந்தி திமுகவினை சிதைக்க எம்.ஜி. ஆரைப் பயன்படுத்தி, கட்சிக்குள் மறைமுகமாகப் பிளவு ஏற்படுத்தினார். இவற்றைக் கண்ணன் எழுதிய எம்.ஜி.ஆர். நூலிலிருந்து மேற்கோள் கொடுக்கிறார் வாசந்தி. இதன் பிறகு கட்சியின் விதிமுறைகளையும் கட்டுப்பாட்டையும் கடைபிடிக்காமல் கட்சியின் நிதி நிலை கணக்கு கேட்டு பொதுவில் வெளிப்படையாக எம் ஜி ஆர் குற்றம் சாட்டிய பொழுது, எம்.ஜி.ஆரை கட்சியிலிருந்து கருணாநிதியே எதிர்பார்க்காத முறையில் வெளியேற்றக் காரணமான நடவடிக்கை எடுத்தவர் எம்.ஜி.ஆரால் கருணாநிதியிடம் முதல்வர் பதவியை இழந்த நெடுஞ்செழியன்.

அதன் பிறகு துக்ளக் ஆசிரியர் சோ கணித்தது போல திமுகவின் வாக்குகள் எம்.ஜி.ஆருடனும் கட்சி கருணாநிதியிடம் சென்றுவிட்டது. அரசில் ஊழல் என்ற குற்றச்சாட்டுகள் எழுந்ததன் எதிரொலியாக கருணாநிதி அரசு முன்னெடுத்த பொதுப்பணியாளர்கள் ஊழல்களைக் கட்டுப்படுத்த வரையப்பட்ட சட்ட மசோதா எம்.ஜி.ஆரால் ஏமாற்று வேலை என்று கூறி முறியடிக்கப் பட்டது. கச்சத்தீவு இந்திய அரசால் இலங்கைக்கு அளிக்கப்பட்ட பொழுது மறுப்பு தெரிவித்த கருணாநிதியின் மீது எம் ஜி ஆரால் அன்றும், அவர் கட்சியினரால் இன்றும் கருணாநிதி அதைத் தடுக்கவில்லை என்ற குற்றம் சாட்டப்படுகிறது.

கருணாநிதி இந்திரா காந்திக்கு மத்தியில் ஆதரவு அளித்தாலும், இந்திராகாந்தி நெருக்கடி நிலை அறிவித்த போது (1975-1977 ஆண்டில்) மனித உரிமைகளை மதிக்காத, மக்களாட்சி முறைக்கு எதிரான சர்வாதிகாரம் என்று கண்டித்தார் கருணாநிதி. அதனால் அவர் ஆட்சி 1976 இல் எம்.ஜி.ஆர். உதவியுடன் ஊழல் குற்றச்சாட்டுகள் அடிப்படையில் கவிழ்க்கப்பட்டு கருணாநிதியின் மகன் மு.க. மகன் ஸ்டாலின் உட்பட திமுக கட்சி உறுப்பினர்கள் சிறை சென்றனர். சர்க்காரியா

ஆணையக்குழு ஊழல் குற்றச்சாட்டுக்கள் என்ற பரபரப்புகளினாலும், எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற தனிக்கட்சி துவங்கி விட்டதாலும் 1977 இல் ஆட்சியைப் பிடித்தார் எம். ஜி ஆர். அதன் பிறகு 13 ஆண்டுகளுக்கு, அதாவது எம்.ஜி.ஆர். மறையும் வரை, கருணாநிதியால் முதல்வர் ஆக இயலவில்லை. 1989 இல் மீண்டும் முதல்வர் ஆனார். அதன் பிறகு எம்.ஜி.ஆரின் ஆட்சி வாரிசான ஜெயலலிதாவுடன் கருணாநிதியின் போராட்டம் தொடர்ந்தது. 1989 இல் வி.பி.சிங், மண்டல் ஆணைக்குழு / மண்டல் கமிஷன் பரிந்துரையின்படி இட ஒதுக்கீட்டை 49.5 விழுக்காட்டிற்கு உயர்த்த உறுதுணையாக இருந்தது கருணாநிதி இக்காலத்தில் இந்திய அரசியலில் பங்களித்த முக்கிய செயல்பாடு.

1990-91இல் ஈழப் போராட்டத்திற்கு கருணாநிதி அளித்த ஆதரவில், தமிழகத்தில் ஈழப் போராளிகளுக்குக் கட்டுப்பாடுகள் காட்டாத நிலையில் போராளிகளுக்குள்ளேயே போராட்டம். புலிகளைக் கருணாநிதி கட்டுப்படுத்துவதில் தோற்றதில் கே.பத்மநாபா கொலை என்று தொடங்கி ஸ்ரீபெரும்புதூர் வந்த ராஜீவ் காந்தி கொலையில் அது முடிந்தது. தமிழகமும் இந்தியாவும் அதிர்ச்சிக்கு உள்ளானது. அதனால் தேசியப் பாதுகாப்பில் தவறியதாகப் பழியைச் சுமக்க நேரிட்ட கருணாநிதியின் ஆட்சி 1991 இல் கவிழ்க்கப்பட்டது, குடியரசுத் தலைவர் ஆட்சி தமிழகத்தில் ஏற்பட்டது. அடுத்த தேர்தலில் வெற்றி பெற்று 1991 இல் ஜெயலலிதா முதல்வரானார். அவரது ஆட்சி ஊழல் மலிந்தது என்று பெயர் வாங்க அவரும் தொடர்ந்து வந்த தேர்தலில் 1996 இல் பதவியை இழந்தார்.

1996 இல் கருணாநிதி மீண்டும் முதல்வர் ஆனார். பிறகு கருணாநிதி 1996 இல் இருந்து 2014 வரை மத்திய அரசின் அரசியலில் ஆணித்தரமாக இடம் பிடித்து, மத்தியில் மூன்றாம் அணியின் சார்பில் பிரதமராகக் கிடைத்த வாய்ப்பை என் உயரம் எனக்குத் தெரியும் என்று கூறி மறுத்தார். அப்பொழுது மத்தியில் தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் அவரது பங்களிப்பு இன்றி அமையாததாக இருந்தது.

கட்சி என்ன சங்கரமடமா வாரிசு முறையில் நடத்துவதற்கு என்று கூறிய கருணாநிதி அதை மறந்தார். ஸ்டாலின், அழகிரி, கனிமொழி என்று தனது பிள்ளைகளும், உறவினர் மாறன்களும் கட்சியிலும் ஆட்சியிலும் இடம் பெறச் செய்தார். அதற்காகக் கட்சியில் வைக்கோ போன்று வளர்ந்து வருபவர்களை வெளியேற்றியது போன்ற செயல்பாடுகள் திமுக என்பதை ஒரு குடும்ப அரசியல் கட்சி என்ற நிலைக்குக் கொண்டு சென்றது.

இந்த நூல் வெளியான பிறகு இந்துஸ்தான் டைம்ஸ், 2 ஜி ஊழல் குறித்து இடம் பெறும் 'The 'Mother of All Scams' என்ற தலைப்பில் உள்ள 17வது அத்தியாயத்தின் பகுதியை Book Excerpt என்று வெளியிட்டிருக்கிறது. நூலின் 13 ஆவது அத்தியாயம் 'Administrator Par Excellence' என்று கருணாநிதியின் ஆட்சியில் அவரது பங்களிப்பு என்ன என்று விவரிக்கும். இப்பகுதியில் 1996-2001; 2006-2011 கால கட்டங்களில் கருணாநிதி செயல்படுத்திய திட்டங்களை மிக விரிவாக வாசந்தி அலசுகிறார். இந்த அத்தியாயமும் ஆசிரியரின் அனுமதி பெற்று அவ்வாறு வெளியிடத் தகுதியான ஒரு பகுதியே. இந்தியாவின் மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், சமூகநீதி பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றினால் தமிழகத்தை முன்னணி மாநிலமாக,

வளர்ச்சியடைந்த ஒரு மாநிலமாக நிறுத்தி, தமிழகத்தைத் தனித்து நிற்கச் செய்ததில் ஐந்து முறை ஆட்சி செய்த கருணாநிதி அரசின் பங்களிப்பும் மக்கள் நலத் திட்டங்களும் காரணம் என்பதை முன்னுரையிலேயே சுருக்கமாகக் குறிப்பிட்டு விடுகிறார் வாசந்தி.

இந்த அத்தியாயம் அவற்றை மிக விரிவாக அலசுகிறது. பெண்களுக்கு குடும்ப சொத்தில் உரிமை, உள்ளாட்சியில் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு, கிராமப்புற மின்வசதி, 24 மணி நேர மருத்துவ வசதி, நியாயவிலைக்கடையின் உணவுப் பொருட்கள் விநியோகம் மேம்பட்டது, பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீடு சதவிகிதத்தை உயர்த்தியது, தொழில்நுட்ப வளர்ச்சியில் மேம்பாடு, சமத்துவ புரம், உழவர் சந்தை போன்ற கருணாநிதியின் கனவுத் திட்டங்கள் என இந்த அத்தியாயத்தில் ஒவ்வொரு பத்தியிலும் கருணாநிதி அரசின் மக்கள் நலத் திட்டங்கள் குறித்துத் தொடர்ந்து பல தகவல்கள் நிரம்பியுள்ளன.

மற்ற அத்தியாயங்கள் தனிப்பட்ட ஒரு மனிதர் அரசியலில் நுழைந்து ஆட்சியில் அமர்ந்து பிறகு அதை இழந்து மறைந்த வரலாற்றைக் கூறும். ஆனால், இந்த அத்தியாயம் கருணாநிதியின் ஆட்சியின் மூலம் தமிழகத்தில் ஏற்பட்ட மாற்றம், மக்களுக்கான திட்டங்கள் போன்றவற்றைக் குறிப்பிட்டுப் பட்டியல் இட்டுச் செல்கிறது. இத்திட்டங்கள் தமிழக மக்களுக்கானது என்ற பொது நோக்கில் பார்க்கப்பட்டாலும், திட்டங்களின் அடிப்படை சீர்திருத்தம், சமநீதி போன்றவற்றைக் கருத்தில் கொண்டதாக இருப்பதைக் காணலாம்.

The 'Mother of All Scams' 2G spectrum - What was once the 2G spectrum tale? என்று 2G ஸ்பெக்ட்ரம் குறித்து 17 ஆம் அத்தியாயத்தில் சுருக்கமான தெளிவான விளக்கம் நூலில் கொடுக்கப்படுகிறது. பத்து ஆண்டுகளுக்குப் பிறகு இன்றைய 5G புழக்கத்தில் இது மீள்பார்வை செய்யப்பட வேண்டிய ஒரு பழங்கதை. ஆனால் மக்களுக்குப் படிப்பினை தரும் ஒரு கதை. ஒரு மத்திய அமைச்சருக்கு இதற்கான ஆணை பிறப்பிப்பதில், முடிவெடுப்பதில் உள்ள அதிகாரநிலை ஊழலுக்காக முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டதா ? என்பது தீவிரமான ஆய்வுக்கு உள்ளாக்கப் படவேண்டியதே. ஆனால் அந்த ஆய்வின் விளைவு என்ன என்பதோ மற்றொரு கோணம்.

2 ஜி ஸ்பெக்ட்ரம் விநியோகிப்பதில் இதுவரை இருந்த முறை மாற்றப்பட்டது, முறையற்ற வகையில் குளறுபடி நடந்துள்ளது என்று கேள்விப்படுகிறேனே, என்று தொலைபேசியில் அமைச்சர் ராஜாவை அழைத்துக் கேட்ட கருணாநிதியின் கலக்கம் நிறைந்த குரலும், அவர் என் பெயரைக் கெடுத்துடாதே என்று கவலையுடன் ராஜாவிடம் சொன்னதும் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அமைச்சர் ராஜா கருணாநிதிக்கு விளக்கம் அளித்த பொழுது, இது வதந்தியாகத் துவங்கிய பொழுது கவலையுடன் கருணாநிதியின் கவனத்திற்குக் கொண்டு வந்த, கருணாநிதியின் நம்பிக்கைக்குரிய இந்து ஆசிரியர் என்.ராமிடம் நடந்ததை விவரிக்குமாறு சொல்லியிருக்கிறார் கருணாநிதி.

2G ஸ்பெக்ட்ரம் விநியோகிப்பதில் வழக்கமாக நடைமுறையிலிருந்த, ஏலம் விட்டு அதிக தொகை சொல்பவருக்கு விநியோக உரிமை வழங்கும் முறையைக் கைவிட்டு, விருப்பம் தெரிவித்து வரிசைப்படி கோரிக்கை வைத்தவர்களுக்கு அந்த

வரிசைப்படி வழங்கியதால் இந்திய அரசிற்கு ஒன்றே முக்கால் லட்சம் கோடி (1,76,000 கோடி) இழப்பு ஏற்படுத்திய ஊழலாக ஒரு குற்றச்சாட்டு எழுந்தது. உரிமம் வழங்குவதில் ஊழல் என அமைச்சர் ராஜா மீது சுப்பிரமணியம் சாமி முன்னெடுப்பில் வழக்குத் தொடுக்கப்பட்டது. இதன் காரணமாக அமைச்சர் ராஜா குற்றம் சாட்டப்பட்டு சிறைக்குச் சென்றது கருணாநிதியின் கைமீறிய செயலாக இருந்தது கருணாநிதிக்கு ஒரு அதிர்ச்சி. இதை எதிர்க்கட்சியின் வாய்ப்பாகப் பயன்படுத்தி ஜெயலலிதா 2011 தேர்தலில் நான்காவது முறை ஆட்சியைக் கைப்பற்றியதும், தொடர்ந்து 2G வர்த்தகத் தொடர்பாகக் கலைஞர் தொலைக்காட்சி இயக்குநர் பொறுப்பிலிருந்த அவரது மகள் கனிமொழி திகார் சிறையில் 6 மாதங்களுக்கு மேல் சிறையில் வைக்கப்பட்டதும் 87 வயது கருணாநிதிக்குத் தொடர்ந்து கிடைத்த பேரிடிகள். ஆனால், 2017 இல், அதாவது 7 ஆண்டுகள் கழித்து ஊழல் என்பதற்கான சான்றுகள் எதுவும் இல்லை, ஐயத்தின் பேரில் தொடரப்பட்ட வழக்கு என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் விடுவித்தது என்றாலும் இடைப்பட்ட காலத்தில் எண்ணிறைந்த இழப்பு கருணாநிதிக்கும் அவரது திமுக கட்சிக்கும், அவர் பொறுப்பிலிருந்த திமுகவின் அரசுக்கும். இதனால் தமிழகத்தின் வளர்ச்சியும் மக்கள் நலத் திட்டங்களும்

எந்த அளவுக்கு பின்னடைந்தன என்பதை மக்கள் மீள்பார்வை செய்யும் தேவையும் உள்ளது.

இதற்கிடையில் 2G ஸ்பெக்ட்ரம் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட எவரும் குற்றவாளிகள் இல்லை என்று எதிரணியினரை நீதிமன்றம் விடுவித்த தீர்ப்பையும், அளவுக்கு மீறிய சொத்துக் குவிப்பு வழக்கின் தீர்ப்பின்படி ஜெயலலிதா ஒரு குற்றவாளி என்ற தீர்ப்பு வழங்கப்பட்டது என்பதையும் அறியாமலே, அடுத்தவரின் மீது ஊழல் குற்றம் பரப்புரை செய்து ஆட்சியைப் பிடித்த ஊழல் குற்றவாளியான ஜெயலலிதாவும் மறைந்து விட்டிருந்தார்.

காலம் கடந்து வழங்கப்படும் நீதி மறுக்கப்பட்ட நீதிக்குச் சமம் (Justice delayed is justice denied) என்பது ஒரு சட்ட அறம். அது சமுதாயத்தைப் பாதிக்கும்.

கருணாநிதி தனது தனிப்பட்ட வகையிலும், அரசியலிலும் செய்த சில தவறான கணிப்புகளினால் அவர் அரசியல் வாழ்வு சறுக்கல்களுக்கு உள்ளானதைத் தெளிவாகவே நூல் காட்டுகிறது. தமிழார்வலராகவும் முற்போக்கு சிந்தனை கொண்டவராகவும் இருந்தவர் கருணாநிதி. அதனால் தான் என்றும் தமிழினத்தின் ஒரு தலைவராக, பாதுகாவலராக இருக்க வேண்டும், சமய சார்பற்ற கொள்கை கொண்டவராக மக்கள் மனதில் இடம் பெறவேண்டும் என்ற நோக்கத்தில் தமிழகத்தில் உலாவிய ஈழப் போராளிகளைக் கட்டுக்குள் கொண்டுவருவதிலும், கோவை இஸ்லாமியர் தொடர்பான குண்டுவெடிப்புகளில் கடுமையான கட்டுப்பாட்டைக் காட்டத் தவறிய பிழைகளால் இருமுறை கருணாநிதியின் அரசியல் வாழ்வு கவிழ்ந்தது என்பதைச் சுட்டிக் காட்டும் வாசந்தி; அவரது தமிழ்க் காவலர், சமயசார்பற்றவர் போன்ற அடையாள விருப்பங்களைக் கருணாநிதியின் பலவீனங்களாகப் பார்க்கிறார்.

அவ்வாறே கட்சி நெருக்கடிக் காலத்தில் இன்னல்களை எதிர்கொண்ட நாளிலிருந்தே கட்சிப்பணியில் தன்னை இணைத்துக்கொண்டிருந்த மு.க.ஸ்டாலின்

தவிர மற்ற குடும்ப உறுப்பினர்களை வளர்த்துவிட்டது, அவர்களுக்கும் மத்திய அரசு வரை பதவி பெற்றுத்தர முற்பட்டது, தீவிரவாதத்தில் ஈடுபட்ட குடும்ப உறுப்பினர்களைக் கண்டிக்க முடியாத பாசத்தில் சிக்கிக் கொண்டது, சட்டத்தை மதிக்காது குற்றங்கள் புரிந்த கட்சி உறுப்பினர்களைத் தண்டிக்காதது யாவும் அவரது சறுக்கல்கள் என்று மிகத் தெளிவாகவே வாசந்தி சுட்டிக் காட்டுகிறார். இவையெல்லாம் அரசியலில் நுழைய விரும்பும் பிறர் கருணாநிதியின் வாழ்க்கையிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள்.

இந்தியாவில் தொடர்ந்து கட்சிகள் மத்தியிலும் மாநிலத்திலும் குடும்பங்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் நிலை இனி எதிர்காலத்திலாவது மாற வேண்டும்.

கவிஞர் வாலி, தான் எழுதிய ஒரு புதுக் கவிதையில் ..
நீ தடியில்லாத பெரியார்
பொடியில்லாத அண்ணா
இருவரும் உன் வடிவில்
இருக்கிறார் ஒன்னா

என்று முத்தாய்ப்பாக கருணாநிதியைப் பற்றிக் கூறியிருப்பார். அது சரியான எடை போடுதலே.

சமூக நீதிக்கான ஈ.வெ.ராவின் கொள்கைகளையும் போராட்டக் குணங்களையும்; சி.என்.அண்ணாதுரையின் தமிழ் ஆளுமையும், மக்களைக் கவரும் பேச்சுத் திறமையையும், அரசியல் திறமைகளையும் தக்க விகிதத்தில் கலந்தவராகக் கருணாநிதி இருந்ததால் தமிழகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மற்றும் எளிய மக்களுக்கான நலத்திட்டங்கள், சமூகநீதி திட்டங்கள், பெண்களுக்குச் சம உரிமை, சாதி ஒழிப்பு நடவடிக்கைகள் என்று சீர்திருத்தக் கோணத்தில் பல திட்டங்களை வகுத்தவராகா பிற்காலத்தில் அவரது ஆட்சிக் காலத்தைப் பிறருடைய ஆட்சிகளுடன் ஒப்பிடும் அரசியல் ஆய்வாளர்கள் அடையாளம் காணுவார்கள் என்பது உறுதி.

தனது ஆட்சிக் காலத்தில் எத்தனையோ அரசு நடவடிக்கைகள் எடுத்திருந்தாலும் "கல்விக் கொடை தந்த காமராஜர்" என்பது காமராஜர் தமிழ்நாட்டிற்கு அளித்த பங்களிப்பாகவே அறியப்படுவது என்பது யாவரும் அறிந்த உண்மை. அது போல, கருணாநிதியின் பங்களிப்புகள் வழி அவரது ஆட்சியை எடை போட்டால் சமத்துவம் - சமூகநீதி மேம்பாடு என்பதுடன் அவர் அடையாளம் காணப்படுவார்.

இன்று கருணாநிதி தமிழர் அல்ல ஒரு தெலுங்கர் என்று கூறப்படும் கருத்தை வாசந்தி தனது நூலில் குறிப்பிடவில்லை. இத்தனைக்கும் எம்.ஜி.ஆர். ஒரு மலையாளி, இலங்கையில் பிறந்தவர் என்ற செய்திகள் எம்.ஜி.ஆர் பற்றி குறிப்பிடுகையில் அதையும் குறிப்பிட வாசந்திக்கு வாய்ப்பு இருந்திருக்கிறது. அதையும் அவர் பதிவு செய்து வைத்திருக்கலாம். இறுதியில் கருணாநிதியும் ஜெயலலிதாவும் மருத்துவ மனையில் தனியாக அடைபட்டுவிட யாருமற்ற தனிமையில் அவர்கள் எண்ணங்கள் எவ்வாறு இருந்திருக்கும், கருணாநிதியின் மீது பற்று கொண்ட ஒரு பெரிய குடும்பமே அவருக்கு இருக்க, பணத்திற்காக மட்டுமே ஜெயலலிதாவைச் சுற்றி அவரைப் பயன்படுத்தி உறிஞ்சி எடுத்த கூட்டம் மட்டும்

இருந்த நிலையில், தனிமையில், அவரது மனநிலை எப்படி இருந்திருக்கும் என்று ஒப்பிட்டு வியக்கையில் வாசந்தி வரலாற்று ஆசிரியர் என்பதிலிருந்து நழுவி ஒரு கற்பனைப் படைப்புகளைத் தரும் எழுத்தாளராகப் பயணித்துப் பார்க்கிறார்.

தனிப்பட்ட முறையில், பத்திரிகைக்காரர்கள், மக்கள் அணுகும் வகையிலிருந்த ஒரு முதல்வராகக் கருணாநிதி இருந்தது வாசந்தியைக் கவர்ந்ததாகத் தெரிகிறது. இதற்கு எதிர்மாறாக இருந்த எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆகியோருடன் ஒப்பிடாமல் ஆசிரியரால் இருக்க முடியவில்லை. ஊடகத் துறையினரை எம்.ஜி.ஆர். தாக்கியது, அரசு அதிகாரிகளே அணுக இயலாமல் இருந்த ஜெயலலிதா ஆட்சியையும், ஊடகத் துறையினரை அவர் எதிரிகள் போல நடத்தியதையும் சுட்டிச் செல்கிறார். கருணாநிதியின் இந்த செயலுக்கு அவரும் பத்திரிக்கைத் துறையிலிருந்ததுதான் காரணம் என்பது ஆசிரியரின் முடிவு. வாசந்தியும் இந்தியா டுடே ஆசிரியராக இருக்கையில் கருணாநிதியின் நேர்காணல் கிடைக்காமலிருந்த நிலையில், நேரே அவர் கருணாநிதியின் முரசொலி அலுவலக வாசலுக்கே, அவர் வரும் நேரத்தைக் கணக்கிட்டுச் சென்றுவிட, அலுவலகத்தின் உள் நுழைந்த காரில் இருந்த கருணாநிதி காரை நிறுத்தச் சொல்லி என்ன வேணும் என்று கேட்டு, நேர்காணலுக்கு வீட்டிற்கு வருமாறு கூறி நேரம் குறிப்பிட்டுவிட்டுச் சென்றதை முன்னுரையில் நினைவு கூர்கிறார் ஆசிரியர். இது எப்பொழுது என்றால் 'கருணாநிதியின் பெண்கள்' - Karunanithi's Women என்ற தலைப்பில் இந்தியா டுடே இதழில் கருணாநிதியின் மீது ஒரு இகழ்வுக் கட்டுரை வெளியாகிய பின்னர், அதற்கு முரசொலி இதழும் கண்டனம் வெளியிட்டு வாசந்தி என்பதை வாந்தி என்று திட்டி வெளியிட்ட பதிவிற்குப் பிறகு நடந்த நிகழ்வு. கருணாநிதி கூறியதை மறுத்து அது குறித்த தனது மாற்றுக் கருத்தை நேரடியாகக் கருணாநிதியின் முகத்துக்கு எதிரே சொல்ல முடிந்ததையும் குறிப்பிடும் வாசந்தி அது இப்பொழுது தனக்கு வியப்பளிப்பதாகவும் கூறுகிறார். கருணாநிதியை நேரில் சந்தித்த பொழுது உங்களைக் கடுமையாக விமர்சித்துப் பல கட்டுரைகள் நான் வெளியிட்டாலும் உங்கள் மீது எனக்கு நல்ல மதிப்பு என்று கருணாநிதியிடம் வாசந்தி கூறியபொழுது அது எனக்குத் தெரியாதா எனக் கருணாநிதி புன்னகைத்தாராம்.

கருணாநிதி எவ்வளவுதான் பத்திரிக்கை ஊடகத்தை மதித்தாலும் ஊடகம் அவரை கடுமையாகவே விமர்சித்தது என்கிறார் வாசந்தி. கருணாநிதி மீது குற்றம் சாட்டுபவர்களும், குற்றம் சாட்டும் கட்சியினரும் மாறிக் கொண்டே இருந்தாலும் தொடர்ந்து குற்றம் சாட்டப்படுவது நிற்கவில்லை. அவர் குணமற்றவர், நடத்தை சரியல்லாதவர், சின்னவீடு வைத்திருப்பவர் என்று 1968 முதலே காங்கிரஸ் கருணாநிதி மீது குற்றச்சாட்டுகளைத் தொடங்கியது. ராஜாத்தி என்பவர் யார் என்று சட்டசபையில் கேள்வி எழுப்ப, கருணாநிதி எனது மகள் கனிமொழியின் தாய் என்று உண்மையைச் சொல்லி அந்தப் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்து அவர் எனது துணைவி என்று ஒப்புக் கொண்டார். இது போன்ற தனிப்பட்ட வாழ்வு குறித்த விவகாரங்களில் எம்.ஜி.ஆர். தப்பித்துக் கொண்டார் என்பதையும் ஆசிரியர் குறிப்பிடுகிறார். பின்னர் விஞ்ஞானம் முறையில் ஊழல் என 70களில் குற்றச் சாட்டு துவங்கி கருணாநிதி மீது தொடர்ந்த ஊழல் புகாருக்கு முடிவில்லாது போய்க் கொண்டிருந்தது. ஆனால் அவை எதுவும் நிரூபிக்கப் பட்டதில்லை. இதே போன்ற குற்றச் சாட்டுகள் எம்.ஜி.ஆர் மீதும், ஜெயலலிதா மீதும் வந்த பொழுது அவற்றைக் குறித்து யாரும் பெரிதாகப் பேச எண்ணியதில்லை. குறிப்பாக ஜெயலலிதா மீது குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினாலும் அவற்றை எவரும்

பொருட்படுத்துவதில்லை, பொதுமக்கள் உட்பட என்பது வாசந்திக்கும் வியப்பளிக்கிறது. கருணாநிதியும் அது குறித்து வியந்துள்ளதாகத் தெரிகிறது. அதற்குத் தனது பிறப்பு மக்களின் இதுபோன்ற ஒரு நிலைப்பாட்டுக்குக் காரணம் என்று கருணாநிதி எண்ணியுள்ளதும் தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய ஆளுமையான கருணாநிதியின் வாழ்வும் பயணமும் அவரது எளிமையான பிறப்பு வளர்ப்பில் துவங்கி, தமிழார்வத்தில் சமூகநீதி கொள்கைகளில் ஊறிப்போன மாறுபட்ட ஒருவரின் வாழ்க்கைப்பாதை. அவர் பங்கேற்ற தமிழகத்தின் அரைநூற்றாண்டு அரசியலிலும் 1995க்கு பிறகு அவர் இந்திய அரசியலில் ஏற்படுத்திய தாக்கத்தையும் எவராலும் மறுக்க இயலாது.

கருணாநிதி யார், அவர் கருணாநிதியாக மாற யார் காரணம், அவர் செயல்பாடுகளுக்கும் முடிவுகளுக்கும் என்ன காரணம் எவை எவை காரணம் என்று விளக்கும் நோக்கில் நூலில் 1910களின் நீதிக் கட்சியில் துவங்கி, ஈ.வெ.ரா., காமராஜர், அண்ணாதுரை, இந்திராகாந்தி, எம்.ஜி.ஆர், ஜெயலலிதா என அனைவர் குறித்தும், அவர்களின் தாக்கம் குறித்தும், இந்தியா அரசியல் சூழ்நிலை குறித்தும் தேவையான பின்புலம் கொடுக்க வேண்டிய காரணத்தினால், ஆசிரியர் அவர்கள் குறித்தும் குறிப்பிட வேண்டிய கட்டாயம் ஏற்படுவதைக் காணமுடிகிறது. இருப்பினும், தேவையான அளவுக்கு, படிப்பவர் வரலாற்றைப் புரிந்து கொள்ள வேண்டிய அளவிற்கு வாசந்தி அவற்றைச் சொல்லிச் செல்கிறார் என்றே சொல்லலாம். சொல்லப் போனால் கருணாநிதி, எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகியோர் பற்றி தனித்தனியாக எழுத நேர்ந்தாலும் மூவரும் எல்லாவற்றிலும் இடம் பிடிப்பார்கள் என்பதும், அத்துடன் திராவிட கழகத்தின் பரிணாம வளர்ச்சியைச் சொல்லிச் செல்ல வேண்டிய சூழ்நிலையும் அவர்கள் வாழ்ந்த காலத்தின் ஒரு கட்டாயம். 75 ஆண்டுகளுக்கும் மேலாக தினம் தினம் எழுதுவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்த ஒருவரின் வாழ்வை, அந்த வாழ்வில் பலதிருப்பங்களும் கொண்ட பன்முகத் தன்மையும் கொண்டிருந்த ஒரு அரசியல் ஆளுமையின் வழக்கை வரலாற்றை 250 பக்கங்களில் கொடுக்க முடிந்தது வாசந்தியின் சாதனைதான்.

பிற்படுத்தப்பட்ட சமூகப் பொருளாதாரச் சூழலிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு கழகத்திலும் மாநில, தேசிய அரசியலிலும் உரிய இடத்தைப் பெற அயராது உழைத்த கருணாநிதியின் ஈடுபாட்டுணர்வு இணையற்றது. தீவிரமான சவால்களையும் விமர்சனங்களையும் எதிர்கொண்ட பயணம் அது. அசாதாரணமான ஏற்றங்களும் சரிவுகளும் கொண்ட கருணாநிதியின் வாழ்வியக்கத்தைச் சார்பற்றும் புரிதலுணர்வுடனும் இந்நூலில் ஆராய்கிறார் வாசந்தி. திருக்குவளையில் எளிய இசைக்குடும்பத்தில் பிறந்து, திரைத்துறை, இதழியல், மேடைப் பேச்சு, அரசியல் நிர்வாகம் ஆகியவற்றில் மிளிர்ந்த பன்முக ஆளுமையான கருணாநிதியின் பெரு வாழ்வை அவரது இறுதிக்காலம்வரை விமர்சனக் கண்ணோட்டத்துடன் அணுகியிருக்கிறது இந்நூல் என்று நூல் குறித்த சில மதிப்புரைகள் சொல்வது உண்மைதான். அந்த மதிப்புரைகள் இந்த நூலுக்கு முற்றிலும் பொருந்தும் என்பது எனது முடிவு.

இந்த நூலைப் படித்த பிறகு தமிழக அரசியலையும், அரசின் செயல் பாடுகளையும் மேலும் விமர்சனக் கண்ணோட்டத்துடன் அறிந்து கொள்ள

எஸ். நாராயண் எழுதிய The Dravidian Years: Politics and Welfare in Tamil Nadu என்று 2018ஆம் ஆண்டு வெளிவந்த நூலையும்;
சந்தியா ரவிசங்கர் எழுதிய Karunanidhi: A Life in Politics என்று 2018ஆம் ஆண்டு வெளிவந்த நூலையும்;
வாசந்தி எழுதிய Cut-outs, Caste and Cine Stars என்று 2008ஆம் ஆண்டு வெளிவந்த நூலையும்;
வாசந்தி எழுதிய The Lone Empress: A Portrait of Jayalalithaa என்று 2019ஆம் ஆண்டு வெளிவந்த நூலையும்;
எம். எஸ்.எஸ். பாண்டியன் எழுதிய The Image Trap என்று 1992 ஆம் ஆண்டு வெளிவந்த நூலையும் படிக்கும் ஆவல் தோன்றுகிறது.
நூலைப் படித்து முடித்த பிறகு அது காட்டும் இந்திய அரசியல் சூழ்நிலை மிகுந்த ஆற்றாமையைத் தருகிறது. அமெரிக்காவில் 30 ஆண்டுகளுக்கும் மேல் வாழ்ந்த பிறகு, இந்திய அடிப்படையும் தெரிந்திருப்பதால் இந்த இரண்டு நாடுகளுக்கும் உள்ள வேற்றுமை தெளிவாகவே தெரிகிறது. அமெரிக்க இலினாய்ஸ் மாநிலத்தின் முன்னாள் ஆளுநர் ராட் பிளாகோஜெவிச் என்பவர் ஒபாமா அமெரிக்க அதிபர் ஆன பிறகு அவர் விட்டுச் சென்ற மாநிலச் சட்டசபையின் உறுப்பினர் பதவியில் மற்றொருவரை அமர்த்துவதில் ஊழல் செய்தார். அவரது குற்றம் நிரூபிக்கப்பட்டு 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றார். பதவியிலிருந்து நீக்கப்பட்டு இனி அந்த மாநில அரசில் எந்த ஒரு பதவியிலும் இருக்கவியலாது என்ற தீர்ப்புடன் சிறைக்கும் சென்றார். ஒபாமா இருமுறை பதவியிலிருந்து, பிறகு இப்பொழுது டிரம்ப் ஒருமுறை அதிபர் கால பதவி முடிந்து அடுத்த சுற்றிற்கும் போட்டியிடும் 2020 ஆம் ஆண்டுதான் டிரம்பிடம் சிறையில் அவரது நன்னடத்தை காரணமாகத் தண்டனையைக் குறைத்து விடுதலை தருமாறு கோரினார். டிரம்ப் அவரது குற்றத்திற்கு மன்னிப்பு கிடையாது, ஆனால் முன்னராகவே விடுதலை செய்கிறேன் என்று விடுதலை செய்துள்ளார்.

இந்த நூல் மூலம் அறிய முடிவது; இந்தியாவில் சட்டமும், நீதித்துறையும், காவல்துறையும் அரசு எந்திரங்களால் வளைக்கப்படுவதால் பொறுப்புடன் நல்ல முறையில் ஆட்சி செய்து கொண்டிருந்தாலும் ஏதேனும் குற்றம் குறை கூறி மத்திய அரசின் மூலம் ஆட்சிக் கவிழ்ப்பு செய்யமுடியும் என்ற நம்பிக்கை இந்திய அரசியல்வாதிகளின் மனதில் ஊறிப் போயிருப்பது தெரிகிறது.

ஜெயலலிதா வழக்கில் குற்றவாளி தேர்தலில் போட்டியிடக்கூடாது என்ற நீதி மன்றத் தீர்ப்பை, தடையுத்தரவை, வேட்பாளரும் மதிப்பதில்லை, தேர்தல் துறையும் மதிப்பதில்லை என்பது போன்ற நேர்மையற்ற நிலை இருந்தாலும்; வாக்காளர்களாகிய மக்களும் பொறுப்பின்றி தடையை மீறித் தேர்தலில் நிற்பவருக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்வதும், அவ்வாறு வெற்றி பெற்றவரை நீதிபதி பதவியிலிருந்த ஒரு ஆளுநரே ஆட்சி அமைக்க அழைப்பதும் இந்தியாவில் மட்டுமே நடக்கக் கூடிய வியப்பிற்குரிய நிலைப்பாடுகள்.

மக்கள் தங்கள் வாக்கு மூலம் சரியான தீர்ப்பைச் சரியான நேரத்தில் கொடுக்காமல் இருப்பதும், புனையப்பட்ட பொய் வழக்குகளை அடையாளம் கண்டு உண்மை

அறிய முயலாமல் இருப்பதும், உணர்வுப் பூர்வமாக முடிவெடுப்பதும் தங்களுக்குத் தாங்களே இழைத்துக் கொள்ளும் தீமை. மக்கள் நலனுக்காக நல்ல பல திட்டங்களைச் செய்பவர்கள் ஆட்சியைப் பாராட்டி அவர்களுக்கு மீண்டும் மீண்டும் வாய்ப்பளித்து தங்கள் நிலையை, வாழ்க்கையை உயர்த்திக் கொள்ள தங்களுக்குக் கிடைக்கும் நல்ல வாய்ப்புகளை மக்கள் நழுவ விடுவது வரலாற்றைத் திரும்பிப் பார்க்கையில் வியக்க வைக்கிறது என்பதுதான் உண்மை .

ஒருவரின் முயற்சியில் விளைந்த நன்மைகள் யாவை, மக்களின் இழப்பு என்ன என்பதை மக்களுக்கு எடுத்துக் கூறும் வகையில் ஊடகங்கள் செயல் படாமல் தங்களின் வருமானம் உயர, தங்கள் மதிப்பீட்டு-அளவு எண்ணை உயர்த்த என்று கவைக்கு உதவாத வாதங்களில் மக்களை ஈடுபடச் செய்து மிக முக்கியமான செய்திகளை மக்களிடம் எடுத்துச் செல்லாமல் தவறுவதும் மக்கள் ஆட்சியின் நான்காவது தூணாக மதிக்கப்படும் ஊடகத் துறையினரின் பொறுப்பற்ற செயல். மக்களுக்கு விரல் நுனியில் கைபேசிகள் வழியே தேவையான அனைத்துச் செய்திகள் கிடைப்பதும், இந்நாட்களில் அதிக அளவில் கல்வி கற்ற நிலையில் அவர்களின் நிலை உயர்ந்து இருப்பதும், எந்தவகையில் அவர்களுக்கு தங்கள் வாழ்க்கை குறித்து ஆராய்ந்து முடிவெடுக்கும் திறனை வளர்த்துள்ளது என்பதை எண்ணி ஏக்கமும் வருகிறது.

மெய்ப்பொருள் காண்பது அறிவு என்ற நோக்கில் எதையும் ஆராய்ந்து முடிவெடுக்காவிட்டால் இழப்பு மக்களுக்குத்தான் [இப்பதிவு காணொளியாக - https://youtu.be/NbGxigV4j1g].

18. நெசவாளர்களும் துணிவணிகர்களும்.

— முனைவர். க. சுபாஷிணி



நெசவாளர்களும் துணிவணிகர்களும்
நூலாசிரியர்: எஸ்.ஜெயசீல ஸ்டீபன் (தமிழில் ந.அதியமான்)
நூல் மதிப்புரை: முனைவர். க. சுபாஷிணி

வண்ண வண்ண ஆடைகளை விரும்பாத மனிதர்கள் தான் உண்டா? சென்ற மாதம் ஒரு சேலை வாங்கி இருப்போம். ஆனால் இன்று யாராவது அணிந்திருக்கும் சேலை அழகாகக் கண்களைக் கவர்ந்தால் அதனையும் வாங்கி விட வேண்டும் என்ற எண்ணம் எல்லோர் மனதிலும் எழாமலில்லை. பெண்கள் மட்டுமல்ல; ஆண்களும் வகைவகையாக ஆடைகளை வாங்கி அணிந்து அழகு பார்ப்பதில் தனிக் கவனம் செலுத்தத் தவறுவதில்லை. சிறு குழந்தைகளிலிருந்து வயதான மூத்தவர்கள் வரை எல்லோருக்குமே மனதைக் கவர்வது மனிதர்கள் நாம் அணிந்து கொள்கின்ற வகை வகையான ஆடைகள் தான்.

ஆடைகளை வாங்கி அணிகின்ற நம் ஒவ்வொருவருக்கும் ஆடை உற்பத்தியின் பின்னால் இருக்கும் பல்வேறு நடவடிக்கைகள் பற்றி அதிகம் கவனம் செல்வதில்லை. பொதுவாக எடுத்துக் கொண்டால் துணி நெய்வதற்குத் தேவையான நூலை உருவாக்கப் பருத்தி விவசாயம் அடிப்படையாக அமைகிறது. அதன் பின்னர் பருத்திப் பஞ்சிலிருந்து நூல் உருவாக்கம் நூலுக்குச் சாயம் ஏற்றும்

தொழில், துணி உருவாக்கம், துணியில் வண்ணம் தீட்டுவது, சாயத்தில் முக்குவது, துணிக்கு அச்சு செய்வது என்ற வகையில் முதல்கட்ட பணிகள் அமைகின்றன. இப்படி உருவாக்கப்பட்ட துணிகளை வெவ்வேறு வகையான ஆடைகளாகத் தைப்பது அல்லது சேலை போல உருவாக்குவது என்பது அடுத்த கட்ட நடவடிக்கையாக அமைகிறது. இதனையடுத்து இப்படித் தனித்தனியாக உருவாக்கிய ஆடைகளை வணிகம் செய்வது என்பது நிகழ்கிறது.

தமிழகம் மிக நீண்ட நெசவு பண்பாட்டைக் கொண்டிருக்கிறது. நமக்கு இன்று கிடைக்கின்ற ஈராயிரம் ஆண்டுக்கு முற்பட்ட கிரேக்க வரலாற்று ஆசிரியர்களான தாலமி போன்றோரது ஆவணக் குறிப்புகளும், ரோமானிய வர்த்தக குறிப்புகளும், இன்றைய எகிப்தின் அலெக்சாந்திரியா நகர வணிகர்களின் குறிப்புகளும் இன்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலகட்டத்திலேயே தமிழக நிலத்தில் உருவாக்கப்பட்ட துணிவகைகள் ஐரோப்பியச் சந்தையில் புகழ்பெற்று பொருளாதார பலமிக்க வணிகப் பொருளாக இருந்தது என்பதை உறுதி செய்கின்றன.

மிக நீண்டகாலமாக தமிழகத் தொழில் பண்பாட்டில் மிக முக்கிய அங்கம் வகித்த ஒரு தொழிலாக நெசவுத் தொழில் அமைகிறது. நெசவுத்தொழிலைச் சார்ந்து பல்வேறு தொழில்கள் தொடர்பு கொண்டிருப்பதால் மிக விரிவான பொருளாதார தொடர்புடைய முக்கியத் தொழில் என்ற சிறப்பையும் நெசவுத்தொழில் பெறுகிறது. ஈராயிரம் ஆண்டுக்கு முற்பட்ட நெசவுத் தொழிலின் சிறப்பு பற்றி பேசும் நமக்குக் கடந்த சில நூற்றாண்டுகளில் இந்த நெசவுத்தொழில் எவ்வகையில் செயல்பட்டது என்பதைப்பற்றிய தகவல்கள் பேசப்படாமலேயே இருக்கின்றன என்பதைக் குறிப்பிடத்தான் வேண்டும்.

கிபி 16 ஆம் நூற்றாண்டு வரலாற்றைப் பேசுகின்ற பெருவாரியான வரலாற்று ஆய்வாளர்கள் பொதுவாகப் பேசிச் செல்லும் ஆய்வுத் தளத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு ஆய்வுத் தளத்தை மையமாகக்கொண்டு மிக விரிவான சான்றுகளுடன் முனைவர் எஸ்.ஜெயசீல ஸ்டீபன் "நெசவாளர்களும் துணி வணிகர்களும் (கிபி 1502-1793)" என்ற நூலை ஆங்கிலத்தில் வழங்கி இருக்கின்றார். இதனை மறைந்த முன்னாள் தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ந.அதியமான் அவர்கள் தமிழில் மொழிபெயர்த்து இந்த நூல் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பதிப்பகத்தின் வெளியீடாக வெளிவந்துள்ளது.

முனைவர் ஜெயசீல ஸ்டீபன் மிக நீண்ட ஆய்வு அனுபவமும் பல்வேறு உலகத்தரம் வாய்ந்த பல்கலைக் கழகங்களில் பணியாற்றிய அனுபவமும் கொண்டவர். இவரது ஒவ்வொரு நூலும் தமிழக வரலாற்றை மிக மிக நுணுக்கமான பார்வையுடன் மிக விரிவான பற்பல ஆவணங்களை ஆய்வு செய்ததன் அடிப்படையில் திகழக்கூடியவை. இவருக்குள்ள பன்மொழி திறன் இவரது ஆய்வுகளுக்குக் கூடுதல் பலம். போர்த்துக்கீசிய மொழி, லத்தீன், பிரெஞ்சு மொழி, ஜெர்மானிய மொழி, ஆங்கில மொழி, தமிழ் மொழி ஆகியவற்றில் ஆழமான திறன் கொண்டவராக இவர் திகழ்கிறார். இத்தகைய மொழி ஆளுமை இருப்பதால் இவரது ஆய்வுகள் முதன்மைத் தரம் வாய்ந்த ஆவணங்களை அலசிப் பார்த்து அதிலிருந்து சான்றுகளைப் பெறுவதற்கு வாய்ப்பாக அமைந்திருக்கின்றது என்பதை மறுக்கவியலாது.

நெசவுத்தொழில் என்பது அவ்வளவு முக்கியம் வாய்ந்ததா? இதற்கென்று ஒரு ஆய்வு நூல் தேவையா? எனச் சிலர் கேட்கலாம். அப்படிக் கேட்போருக்கு ஏராளமான பதில்களை முன்வைக்கிறது இந்த நூல்.

நூலாசிரியர் இந்த நூலுக்கு எடுத்துக்கொண்ட காலகட்டம் என்பது சற்றொப்ப முந்நூறு நூறு ஆண்டுகள் கால கட்டம் மட்டுமே. அதாவது கிபி 1502 ஆம் ஆண்டிலிருந்து 1793ஆம் ஆண்டு வரை தமிழகத்தின் நெசவுத் தொழில் துணி வணிகர்களின் செயல்பாடுகள், சோழமண்டல கடற்கரையோர வணிக முயற்சிகள் இவை ஏற்படுத்திய தாக்கங்கள், ஐரோப்பியர்களுடனான வணிகத் தொடர்புகள், கிழக்காசிய நாடுகளில் ஏற்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார தாக்கங்கள் என்ற வகையில் இந்த நூல் அமைகிறது.

நூல் தமிழாக்க அறிமுக உரையுடன் தொடங்குகிறது. அதனை அடுத்து ஆங்கில நூலில் ஆசிரியர் வழங்கி இருக்கின்ற நன்றியுரை இடம்பெறுகிறது. அதன்பிறகு நூலாசிரியர் பற்றிய ஒரு குறிப்பும் நூலில் பயன்படுத்தப்பட்ட சொற்குறுக்கங்கள் பட்டியலும் இடம்பெறுகின்றன. நூலை தொடங்குமுன் நூலின் மையக் கருத்திற்கான காட்சி அமைப்பு விளக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்தார் போல கிபி. 1502ஆம் ஆண்டிலிருந்து 1641ஆம் ஆண்டுகளில் தமிழகக் கடற்கரை பகுதியிலிருந்து வளைகுடா இந்தோனேசியா தீவுக்கூட்டப் பகுதிகளுக்குப் போர்த்துக்கீசியர் நிகழ்த்திய துணி வணிகம் பற்றி ஒரு தனி அத்தியாயம் வழங்கப்பட்டுள்ளது. இக்காலகட்டத்தில் போர்த்துக்கீசியர்கள் தமிழகக் கடற்கரை துறைமுகப் பகுதிகளில் தங்கள் ஆளுமையைச் செலுத்திக் கொண்டிருந்த படியினால் தமிழக நெசவாளர்களின் துணிகளை அவர்கள் எவ்வகையில் பெற்று அதனை கிழக்காசிய நாடுகளில் வணிகம் செய்தார்கள் என்பதை இந்த அத்தியாயம் விரிவாகப் பேசுகிறது.

இதற்கு அடுத்தபடியாக வருகின்ற மூன்றாம் அத்தியாயம் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது. இந்த அத்தியாயத்தின் தலைப்பு `செட்டியார் முதலியார் பிள்ளை மரக்காயர் வணிகர்கள் 16-18 ஆம் நூற்றாண்டுகளில் ஆசியாவில் மேற்கொண்ட துணி வணிகம் மற்றும் பொருள் நிலவியல் என்பதாகும். இந்தப் பகுதியில் வழங்கப்பட்டிருக்கின்ற ஆழமான செய்திகள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. இந்த ஒரு அத்தியாயத்திற்கு மட்டுமே நூலாசிரியர் 346 அடிக்குறிப்பு சான்றுகளாக வழங்கியிருக்கின்றார் எனும்போது எத்தனை தகவல்களை இது உள்ளடக்கி இருக்கும் என்பதை வாசகர்கள் யூகித்துக் கொள்ளலாம்.

அதனையடுத்து முடிவுரை வருகிறது. நூலில் பெருவாரியாகப் பயன்படுத்தப்பட்ட சொல்லடைவுகளும் அவற்றிற்கான விளக்கங்களும் இப்பகுதியில் வழங்கப்பட்டுள்ளன. நூலுக்குப் பயன்பட்ட ஆய்வு நூல்களின் பட்டியல் அதனையடுத்து இடம்பெறுகின்றது. இறுதியாகப் புத்தகத்திற்குக் கூடுதல் பலம் சேர்க்கும் வகையில் நிலவரைப்படங்களும் தமிழகக் கடற்கரையோர முக்கிய வணிகத் தளங்களின் பெயர்களும் காட்டப்பட்டுள்ளன.

மொத்தம் 220 பக்கங்கள் கொண்ட ஒரு நூலாக இந்த நூல் அமைகிறது.

நீண்டகாலமாகவே தமிழக சோழமண்டல கடற்கரை ஐரோப்பியர்களின் கவனத்தை ஈர்த்த ஒரு பகுதி. இடைப்பட்ட காலத்தில் அரேபியர்கள் மட்டுமே கோலோச்சிக் கொண்டிருந்த தமிழகக் கடற்கரை பகுதியில் மீண்டும் வணிக முயற்சிகளை நேரடியாக மேற்கொள்ள வேண்டும் என்று ஐரோப்பாவின் முக்கிய நாடுகள் மிகத் தீவிரமாகச் செயல்பட்ட காலமாக கிபி 15ம் நூற்றாண்டு தொடக்கத்தைக் கூறலாம். வாஸ்கோட காமாவின் இந்தியாவிற்கான வருகை இதுவரை மறைந்திருந்த வணிகக் கதவுகளை மீண்டும் திறப்பதாக அமைந்தது. தொடர்ச்சியாகப் போர்த்துகீசிய வணிகர்கள் கோவா மற்றும் கேரளாவின் கடற்கரை பகுதி மட்டுமல்லாது தமிழகக் கடற்கரைப் பகுதிகளிலும் தங்கள் வணிக முயற்சிகளைத் தொடங்கினர். போர்த்துக்கீசியர்களின் முயற்சி ஐரோப்பாவில் ஏனைய பிற நாடுகளில் வணிக ஆர்வத்தை எழுப்பியதால் ஏனைய ஐரோப்பிய நாடுகளும் இந்தியாவை நோக்கி தங்கள் கவனத்தைச் செலுத்தத் தொடங்கின. ஏற்கனவே இத்தாலி வணிகர்கள் மற்றும் அரேபிய வணிகர்கள் மூலமாகத் தென்னிந்திய வணிக வளம் பற்றி ஐரோப்பாவின் ஏனைய நாடுகள் அதிகமாகவே அறிந்திருந்தனர். ஆக, போர்த்துக்கீசியர்கள் அதற்கடுத்து டச்சுக்காரர்கள், டேனிஷ்காரர்கள், ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவை வணிகத்திற்குத் தகுந்த இடமாகக் காணத் தொடங்கி வணிக முயற்சிகளைக் கட்டமைக்கத் தொடங்கினர்.

இந்த வணிக முயற்சிகள் தான் இன்றைக்கு நமக்கு இந்தியாவைப் பற்றி மட்டுமல்லாது மிகக் குறிப்பாகத் தென்னிந்தியாவின் நில வரைபடம் மற்றும் இலங்கையின் நில வரைபடம் தொடர்பான ஆவணங்கள் நமக்குக் கிடைப்பதற்கு மிக முக்கிய காரணங்களாக அமைகின்றன. ஆங்கிலத்தில் cartography என்று சொல்லப்படுகின்ற ஒரு தனித் துறையை ஐரோப்பியர்கள் தங்கள் கடல் பயணங்களுக்காக மிக விரிவாகப் பயன்படுத்தினார்கள். இந்தியாவுடனான வணிகம் என்பது ரோமானிய காலம் தொடங்கி முக்கியத்துவம் பெற்றதால் அப்போதிலிருந்தே நில வரைபடங்கள் உருவாக்கம் என்பது ஐரோப்பிய வணிகர்களது முக்கியமான ஒரு செயல்பாடாகவே இருந்தது. கி பி 16ம் நூற்றாண்டுக்குப் பிறகு இந்தியா மற்றும் இன்றைய இலங்கை பற்றிய குறிப்பிடத்தக்க வரைபடங்கள் ஐரோப்பியர்களால் உருவாக்கப்பட்டுள்ளன. இவை மட்டுமல்ல, கேமரா மற்றும் வீடியோ பதிவு செய்யும் கருவிகள் இல்லாத அந்தக் காலகட்டத்தில் தாங்கள் காண்கின்ற காட்சிகளைத் துல்லியமாக ஓவியங்களாக வரைந்து அவற்றை ஆவணப்படுத்தி வைக்கும் செயலையும் ஐரோப்பிய வணிகர்களது குழுவில் இடம் பெற்ற வரலாற்று அறிஞர்களும் பாதிரிமார்களும், செயல்படுத்தினர். இத்தகைய நில வரைபடங்களும் ஓவியங்களும் தான் இன்றைக்கு நாம் கடந்த ஐந்நூறு ஆண்டுக்கால தமிழகத்தின் சமூக நிலையையும் புவியியல் சூழலையும் அறிந்துகொள்ள நமக்கு முதன்மை நிலை ஆவணங்களாகத் திகழ்கின்றன என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

சோழர் காலத்துக் கல்வெட்டுக்களும் செப்புப் பட்டயங்களும் நெசவாளர்களின் நிலையை விளக்கும் செய்திகளை நமக்குத் தருகின்றன. கிபி 970லிருந்து 985 காலகட்டத்தில் ஆட்சிசெய்த சோழமன்னன் மதுராந்தக உத்தம சோழன் காலத்துச் செப்பேடு ஒன்று காஞ்சிபுரத்தில் கச்சிப்பேடு, கருவுளான்பாடி, கஞ்சகப்பாடி, அதிமானப்பாடி, ஏற்றுவழிச்சேரி ஆகிய நெசவாளர் குடியிருப்பிலிருந்த பட்டு

சாலியர்களுக்கு 200 தங்கக் காசுகளை வைப்புத் தொகையாகக் கொடுத்த செய்தியைக் குறிப்பிடுகிறது. `தறிப்பட்டம்`, `தறி இறை` மற்றும் கிபி 10ம் நூற்றாண்டில் `தறி தரகு` என்னும் வரி சோழர்களின் ஆட்சிக்காலத்தில் நெசவாளர்களுக்கு விதிக்கப்பட்டது என்ற செய்தியையும், தஞ்சாவூர், திருச்சி ஆகிய பகுதிகளில் `தறிப் புடவை` `தறி ஆக்கம்` என்ற இரண்டு வகை வரிகள் விதிக்கப்பட்டன என்ற செய்தியும் செங்கல்பட்டு, வட ஆற்காடு ஆகிய பகுதிகளில் `தறிப் புடவை` என்னும் வரி கி பி 11ம் நூற்றாண்டில் வசூலிக்கப்பட்டதையும் கல்வெட்டுச் செய்திகளின் வழி அறியமுடிகிறது. இவை மட்டுமன்றி `அச்ச தறி` எனக் குறிப்பிடப்படும் ஒரு வகை வரியும் `பறை தறி` அதாவது நெசவுத் தொழில் செய்யும் பறையர்கள் கட்ட வேண்டிய வரி, 'சாலிகைத் தறி` என்ற சாலிய நெசவாளர்களுக்கான ஒரு வகை வரி, `பஞ்சு பீலி` அதாவது பங்கு வணிகத்தில் உள்ளவர்கள் செலுத்த வேண்டிய வரி என பல்வேறு வகைப்பட்ட வரி நெசவாளர்கள் மற்றும் நெசவுத் தொழிலில் ஈடுபடுபவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த செய்திகளைக் கல்வெட்டுச் சான்றுகள் விளக்குவதை நூலாசிரியர் குறிப்பிடுகின்றார். இப்பகுதிக்கு நூலாசிரியர் பயன்படுத்தியுள்ள ஆய்வு நூல்களில் மிக முக்கியமாகத் தென்னிந்தியக் கல்வெட்டியல் ஆய்வு நூல்கள் பல இடம்பெறுகின்றன.



தமிழகத்தில் உருவாக்கப்பட்ட பருத்தி துணிகள் சோழர்கள் காலத்திலேயே கிழக்காசிய நாடுகளான இந்தோனேசியா தீவுக்கூட்டங்கள், தாய்லாந்து, இன்றைய மியன்மார் ஆகிய பகுதிகளுக்கு வணிகம் செய்யப்பட்டன என்ற செய்திகளும் கிடைக்கின்றன. சீனாவுடனான மிக நீண்ட கால வணிகத் தொடர்பு சிறப்புக் கவனம் கொள்ளப்பட வேண்டியது. சீனாவில் `சாம்` அரசர்களின் ஆட்சியின் போது அதாவது கிபி 960 இருந்து 1278 காலகட்டத்தில் பல்வேறு வகை துணிகள், வண்ணம் பூசப்பட்ட ஜமக்காளங்கள், வண்ணம் பூசப்பட்ட சிவப்பு பட்டு கைக்குட்டைகள் போன்றவை தமிழக கடற்கரை வழியாக ஏற்றுமதி செய்யப்பட்ட செய்திகளையும், சீனாவிற்கெனவே சிறப்பாக மனித உருவம், குதிரை உருவம், யானை உருவம் போன்ற விலங்குகள் உருவம் வரையப்பட்ட கைக்குட்டைகள் தமிழகத்தில் உற்பத்தி செய்யப்பட்டன என்ற செய்தியையும் நூலில் காண முடிகிறது. கிபி 12-13ஆம் நூற்றாண்டு காலகட்டத்தில் பாண்டியர் கால கல்வெட்டுகள் நெசவுத் தொழிலில் ஆளுமை நிறைந்த கைக்கோளர், சாலியர், நெசவாளர்களின் சாதிகளாகக் குறிப்பிடுகின்றன.

தமிழகச் சூழலில் கைக்கோளர், சாலியர், தேவாங்கர் ஆகிய மூன்று வகைப்பட்ட சமூகங்கள் பெருவாரியாக நெசவுத் தொழில் செய்யும் சமூகங்களாக அறியப்படுகின்றன. செட்டியார்கள், முதலியார், பிள்ளை, மரக்காயர் ஆகிய சமூகத்தார் துணி வணிகம் செய்யும் தொழிலை முன்னெடுத்தவர்களாக அமைகின்றனர். நூலாசிரியர் செட்டியார் சமூகத்தில் பல்வேறு வகை செட்டியார்களைக் குறிப்பிட்டு இடங்கை வலங்கை வேறுபாடுகளையும் அவர்களது வணிக முயற்சிகளையும் நூலின் பல பகுதிகளில் விளக்கிச் செல்கின்றார். அதேபோல முதலியார் சமூகத்தவர்கள் துணி வணிகத்தில் பொருளாதார பலத்துடன் கோலோச்சிய பல்வேறு வரலாற்றுச் செய்திகளை விரிவாக வழங்கி இருக்கின்றார். விவசாயத்தில் கவனம் செலுத்திய பிள்ளை சமூகத்தார் துணி வணிகத்திலும் ஈடுபட்டு மலாயா இந்தோனேசியா தீவுக் கூட்டங்களில் பெரும் வணிகம் நடத்திய செய்திகளையும் கீழக்கரை, காயல்பட்டினம், நாகூர், பரங்கிப்பேட்டை போன்ற பகுதிகளில் குடியேறிய மரக்காயர்கள் கிழக்காசிய நாடுகளில் மிகப்பெரிய வகையில் வணிக முயற்சிகளில் வெற்றி கண்ட வரலாற்றுச் செய்தியையும் அறியமுடிகிறது.

தமிழகச் சோழமண்டல கடற்கரையில் பொருளாதார பலம் பொருந்திய ஒரு வடிவமாக நெசவுத்தொழில் அமைந்திருப்பதை அறிந்துகொண்ட ஐரோப்பிய வணிகர்கள் சோழமண்டல கடற்கரை பகுதியை தங்கள் ஆளுமைக்குள் கொண்டு வர மேற்கொண்ட முயற்சி மிகப் பெரிது. போர்த்துக்கீசியர்கள் வசமிருந்த வணிக செயற்பாடுகளைப் பலமிழக்கச் செய்து டச்சுக்காரர்கள் மிகத் துரிதமாக கி பி 16ம் நூற்றாண்டில் தங்கள் ஆளுமையை விரிவாக்கினர். மலாயாவின் மலாக்கா பகுதியைப் போர்த்துக்கீசியர் வசம் இருந்து கைப்பற்றி பிறகு இந்தோனேசியாவையும் கைப்பற்றி காலனித்துவ ஆட்சியையும் செயல்படுத்தினர்.

கிபி 1511 ஆம் ஆண்டு மலாயா சுல்தான்களிடம் இருந்த மலாக்காவை போர்த்துக்கீசியர் கைப்பற்றினர். ஒரு நூற்றாண்டுக்குப் பின் 1641 ஆம் ஆண்டு மலாக்கா டச்சுக்காரர்கள் வசம் விழுந்தது. இக்காலகட்டத்தில் தமிழகத்தின் சோழமண்டல கடற்கரை பகுதிகளில் தங்கள் வணிகத்தை விரிவாக்கம் செய்து அப்பகுதியில் தங்கள் ஆளுமையை நிலைநாட்ட பெரும் முயற்சி எடுத்தது டச்சு

கிழக்கிந்திய கம்பெனி. தங்களிடம் 'கர்தாஸ்' என்ற சான்றிதழைப் பெற்ற வணிக நிறுவனங்கள் மட்டுமே வணிகம் செய்ய முடியும் என்ற அளவிற்குத் தமிழக சோழமண்டல கடற்கரையில் டச்சு கிழக்கிந்திய கம்பெனி செயல்பட்டது. இந்தக் 'கர்தாஸ்' என்ற சொல் இன்று மலாய் மொழியில் `கெர்த்தாஸ்` அதாவது `தாள்` என்பதைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படும் சொல்லாகப் பயன்பாட்டில் உள்வாங்கப்பட்டுள்ளதைக் காணலாம். இப்படி போர்த்துக்கீசிய, டச்சு ஆதிக்கத்தில் பல ஐரோப்பிய சொற்கள் மலாய் மொழியில் புழக்கத்தில் உள்வாங்கப்பட்ட வரலாறு தனி ஆய்வுக்கு நம்மைக் கொண்டு செல்லும்.

ஐரோப்பிய வணிக நிறுவனங்கள், குறிப்பாக டச்சு கிழக்கிந்திய கம்பெனி மற்றும் பிரெஞ்சு அரசு ஏற்படுத்திய கட்டுப்பாடுகளைச் சமாளித்து தமிழ் வணிகர்கள் கிழக்காசிய நாடுகளில் மிகப்பெரிய அளவில் வணிகம் நடத்திய காலகட்டமாக கிபி 16, 17, 18 ஆகிய காலகட்டங்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். மிக நீண்டகாலமாக மிகத் தரம் வாய்ந்த கப்பல்களைக் கட்டக்கூடிய திறமை பெற்றவர்கள் தமிழர்கள். காற்றின் திசை அறிந்து கப்பலைச் செலுத்தக்கூடிய தொழில் திறன் தமிழ் வணிகர்களுக்குத் தொடர்ந்து இருந்தது. மிகத் தொடர்ச்சியாக வணிகக் கப்பல்களைக் கட்டி பெருமளவில் வணிக முயற்சிகளை நூற்றாண்டுகளாகச் செய்து வந்த அனுபவம் தமிழர்களுக்கு உண்டு. அதற்குச் சான்றளிக்கும் வகையில் நூலாசிரியர் வழங்கியிருக்கும் தரவுகள் நமக்கு அமைகின்றன.

துணி வணிகத்தில் ஈடுபட்ட பல முக்கியஸ்தர்கள் பற்றிய செய்திகள் நூலில் நமக்குக் கிடைக்கின்றன. பாண்டிச்சேரியிலிருந்து வலங்கைப் பிரிவைச் சேர்ந்த முதலியார் வணிகர்கள் 'சங்கரபாணி` என்ற பெயர் கொண்ட ஒரு வணிகக் கப்பலை 1739ம் ஆண்டு வாக்கில் சொந்தமாக வைத்திருந்தனர். மயிலாப்பூர் பாண்டிச்சேரி ஆகிய இடங்களிலிருந்து பிலிப்பைன்ஸ் வரை பொருட்களை ஏற்றிச் சென்றது இந்த கப்பல். இந்தக் கப்பலின் தலைமை மாலுமியாகப் பிரகாசம் என்பவர் இருந்தார் என்றும் இந்தக் கப்பலிலேயே தங்கி வணிகம் மேற்கொண்ட வணிகராக ஜெநிவாச முதலியார் இருந்தார் என்றும் இதேபோல சார்லஸ் என்ற பெயர் கொண்ட கப்பலுக்குத் தலைமை மாலுமியாக குமரப்பிள்ளை இருந்தார் போன்ற செய்திகளையும் நூலின் வழி அறிய முடிகின்றது.

தனித்தனி தீவுகளாக நெசவாளர்கள் வணிகம் செய்வதற்குப் பதிலாக வணிகர்கள் கூட்டமைப்பை உருவாக்கி வணிகம் செய்வதை ஊக்குவிக்கும் வகையில் பிரெஞ்சு அரசும், டச்சு கிழக்கிந்திய கம்பெனியும் தமிழகத் துணி வணிகர்களுக்கு அழுத்தம் கொடுத்தன. அதனடிப்படையில் பழவேற்காடு, பாண்டிச்சேரி காரைக்கால், பரங்கிப்பேட்டை, நாகூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி போன்ற பகுதிகளில் துணி வணிகர்கள் கூட்டுச் சரக்கு நிறுவனங்கள் பல உருவாக்கம் கண்டன. இத்தகைய வணிக அமைப்புகளில் செட்டியார், முதலியார், நாயக்கர், வேளாளர்கள் (பிள்ளை), மரக்காயர் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

கைக்கோள முதலியார் தமிழகம் மட்டுமன்றி கடல் கடந்து மலாயாவின் மலாக்கா பகுதியில் துணி வணிகம் செய்யத் தொடங்கினர். இவர்களில் பலர் மலாக்காவில் குடியேறி அங்கேயே தங்கிவிட்டனர். உள்ளூர் மலாய் பெண்களை மணந்து மலாக்கா செட்டிகள் என்ற புது இனம் ஒன்று இன்று மலேசியாவில் இருப்பதற்கு

இந்த வரலாற்று நிகழ்வு காரணமாக அமைகிறது. 1835 ஆம் ஆண்டு சென்னையில் சிந்தாதிரிப்பேட்டையில் புதிய நெசவு மையம் ஒன்றை சின்னத்தம்பி முதலியார் என்ற பெயர் கொண்ட நெசவாளர் ஒருவர் தொடங்கினார். ஆண்டியப்ப முதலியார் என்பவர் டச்சுக்காரர்களுக்குப் பரங்கிப்பேட்டையிலிருந்து துணிகளைப் பெற்றுத் தந்தார் என்ற செய்தியையும் அறிய முடிகிறது. கனகராய முதலியார் என்பவர் மிகப் பெரிய வணிகராக இக்காலகட்டத்தில் திகழ்ந்தார் என்பது நமக்குக் கிடைக்கின்ற ஆவணங்கள் வழி அறிய முடிகிறது. இப்படித் துணி வணிகம் மேற்கொண்டிருந்த கனகராய முதலியாரும், பிள்ளை சமூகத்தைச் சேர்ந்த வணிகர்களும் 1768 ஆம் ஆண்டு அளவில் பாண்டிச்சேரியைச் சுற்றியுள்ள பல ஊர்களில் உள்ள பல நிலங்களுக்கு உரிமையாளர்கள் ஆனார்கள் என்ற செய்தியும் அறியமுடிகிறது. துணி வணிகம் மிகப்பெரிய பொருளாதார மேம்பாட்டை இவ்வணிகர்களுக்கு அமைத்துக் கொடுத்தது.



தரங்கம்பாடியில் இருந்த ஒரு தையற்காரரும் அவரது மனைவியும் (தேசிய அருங்காட்சியகம், கோபன்கேகன்)

இடையர் பிரிவைச் சேர்ந்த நைனியப்ப பிள்ளை சென்னைக்கு அருகில் உள்ள பெரம்பூரில் இருந்தவர். இவர் பாண்டிச்சேரிக்குக் குடிபெயர்ந்து அங்கு துணி வணிகத்தை மிகச்சிறப்பாக மேற்கொண்டிருந்தார். ஆனால் பிரெஞ்சு ஆளுநரான ஹெர்பாருடன் ஏற்பட்ட பிணக்கு அவருக்கு வாழ்க்கையில் மிகப்பெரிய இழப்பை ஏற்படுத்தியது. மிகப்பெரிய செல்வந்தராகத் திகழ்ந்த நைனியப்ப பிள்ளையைப் பொய் குற்றம்சாட்டி சிறைக்கு அனுப்பி 1717 ஆம் ஆண்டு சிறையிலேயே அவர்

இறந்து போன துயரச் சம்பவமும் நிகழ்ந்தது. இந்த வழக்கை மேல்முறையீடு செய்து பிரெஞ்சு அரசாங்கம் செய்த ஆய்வில் அவர் மீது குற்றமில்லை என்பது உறுதியாகி அவரிடம் இருந்து பறிக்கப்பட்ட சொத்துக்கள் மீண்டும் அவரது வாரிசுகளுக்கு 1719 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது என்ற இந்தச் செய்தியையும் நூலில் அறிய முடிகிறது.

நூலில் ஆசிரியர் மிக விரிவாக வழங்கியிருக்கும் முக்கியமான ஒரு தகவலாக ஆனந்தரங்கம் பிள்ளையின் துணிவணிக முயற்சிகளைக் கூறலாம். ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்பு இன்று நமக்குப் பிரெஞ்சு இந்தியாவின் மிக முக்கியமான தகவல்களை அளிக்கின்ற ஆவணமாகத் திகழ்கின்றது. ஒரு துபாஷியாக, வணிகராக மட்டுமன்றி ஆற்காட்டில் நெசவு மையத்தைத் தொடங்கித் துணி வணிகத்தை மிக விரிவாக செய்தவர்களில் முக்கியமானவர் ஆனந்தரங்கம் பிள்ளை. பாண்டிச்சேரியில் நாணய சாலைக்குத் (அக்கசாலை) தேவையான வெள்ளியை அளிக்கும் இருவரில் ஒருவராகவும் இவர் திகழ்ந்தார் என்பதை அறியும் போது அவரிடமிருந்த சொத்து மதிப்பை நம்மால் ஓரளவு ஊகிக்க முடிகிறது. தமிழக வணிகர்களுக்கு மட்டுமன்றி டச்சுக்காரர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் வட்டிக்குக் கடன் கொடுக்கும் பெரிய பொருள் படைத்த மனிதராக ஆனந்தரங்கப்பிள்ளை திகழ்ந்தார். தனது இரண்டு மகன்களான அய்யாசாமி மற்றும் அண்ணாசாமி பிள்ளை இருவரும் இறந்து போனதால் தந்தையை இழந்த தனது தம்பி மகனான ரங்கப் பிள்ளை என்பவரை தன் மகனாக வளர்த்தார். அவரும் ஆனந்தரங்கம் பிள்ளை போலவே மிகப் பெரிய வணிகராகத் திகழ்ந்தார். வணிகர் என்ற நிலைக்கும் மேல் நிலக்கிழார் ஆகவும் வரி வசூலிப்பவர் ஆகவும் ஆனந்தரங்கம் பிள்ளை இருந்தார். பிரெஞ்சுக் காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் ஏற்பட்ட போரின்போது ஆங்கிலேயர்கள் பழம் தரும் மரங்களை வெட்டி சாய்த்தும் அவர்களிடமிருந்த வீடுகளை எரித்து கதவு நிலைகளைப் பெயர்த்தும் பெரிய சேதத்தை ஏற்படுத்தினார்கள். அப்படி சேதப்பட்ட வீடுகளைச் சரி செய்து கொடுத்து பொருளாதார ரீதியாக மக்களுக்கு உதவினார் என்ற செய்திகளையும் அவரது நாட்குறிப்பு ஆவணங்கள் கூறுகின்றன.

பரங்கிப்பேட்டையில் மரக்காயர்களின் துணி வணிகம் பற்றி இந்த நூல் பல தகவல்களைத் தருகின்றது. அரேபியாவிலிருந்து தமிழகப் பகுதிகளில் குடியேறி உள்ளூர் மக்களை மணந்து பெருகிய இஸ்லாமிய வணிகர்கள் தான் இந்த மரக்காயர்கள் எனப்படுபவர்கள். இவர்கள் கப்பல்களுக்கு உரிமையாளர்களாகவும் தென்கிழக்காசிய நாடுகளில் கப்பல் போக்குவரத்தை மேற்கொள்பவர்களாகும் விளங்கினார்கள் என்பதையும் இவர்களில் பெரும்பாலோர் பழவேற்காடு, கூனிமேடு, நாகூர், கீழக்கரை, காயல்பட்டினம், காயல் ஆகிய பகுதிகளில் வாழ்ந்தார்கள் என்ற செய்தியையும் அறியமுடிகின்றது. போர்த்துக்கீசியர்களுக்கும் மரக்காயர்களுக்கும் தொடர்ந்து வணிக பூசல்கள் இருந்துவந்தன. அந்த வகையில் ஒரு சர்ச்சையின் போது கோபமுற்ற போர்த்துக்கீசியர்கள் மரக்காயர்கள் கப்பல்களை 1625 ஆம் ஆண்டு கொளுத்தினர் என்ற செய்தியையும் நூலாசிரியர் குறிப்பிடுகின்றார்.

தேவனாம்பட்டணத்தில் வசித்த மரக்காயர்கள், டச்சுக்காரர்களுடன் வணிக உறவினை ஏற்படுத்திக் கொண்டு தங்கள் வணிக முயற்சிகளை வெற்றிகரமாகச் செயல்படுத்தினார்கள். பரங்கிப்பேட்டை, பாண்டிச்சேரி, நாகப்பட்டினம் ஆகிய

பகுதிகளிலிருந்து இந்தோனேசியாவின் ஆச்சே, சுமத்ரா, மலாயா ஆகிய பகுதிகளுக்குக் கப்பலில் சென்று அவர்கள் வணிகம் நடத்தினார்கள். அவர்கள் பன்மொழி திறனாளர்களாகவும் இருந்தார்கள். தமிழகத்திலிருந்து துணிகளை ஏற்றிக்கொண்டு சென்று இந்தோனேசியாவிலிருந்து தகரத்தை அவர்கள் தமிழகத்திற்குக் கொண்டு வந்தனர். மலாக்கா, இந்தோனேசியா நாடுகளின் சிற்றரசுகளின் மன்னர்களோடு நேரடி தொடர்பு வைத்திருந்தனர். அவர்களுடன் துணி வணிகத்தில் ஈடுபட்டு வந்தனர் என்ற செய்திகளும் கிடைக்கின்றன.

தமிழகக் கடற்கரை நகரமான பரங்கிப்பேட்டை மரக்காயர்களின் மிக முக்கிய குடியிருப்பாக இருந்தமையும், கிழக்காசியா முழுமையும் மரக்காயரின் வணிகக் கப்பல்கள் துணி வணிகத்திற்காகச் சென்ற செய்திகளும் நமக்குக் கிடைக்கின்றன. 1663 ஆம் ஆண்டு இந்தோனேசியா பாந்தாமில் துணி தட்டுப்பாடு ஏற்பட்டபோது அப்பகுதியின் சுல்தான் தாமாகவே தமிழகத்துக்கு வணிகம் மேற்கொள்ள முனைந்த செய்தியும், அதற்காகப் பிரத்தியேக கப்பல்களை ஒவ்வொரு ஆண்டும் தமிழகத்திற்குத் துணி வணிகம் பெறுவதற்காக அனுப்பிவைத்த செய்திகளையும் அறிய முடிகிறது. 1667 ஆம் ஆண்டு சுல்தான் தனது சொந்தக் கப்பலைத் தமிழக துணிகளை வாங்குவதற்காகத் தயார் செய்ததையும், அது தொடர்ச்சியாக பரங்கிப்பேட்டைக்கு நேரடியாக வந்து துணி வணிகர்களிடம் துணிகளைப் பெற்றுச் சென்றதாகவும் அறியமுடிகிறது. 1682 ஆம் ஆண்டு பாந்தம் பகுதியை டச்சுக்காரர்கள் கைப்பற்றியதால் இந்த முயற்சி தடைப்பட்டு மரக்காயர்கள் இந்தோனேசியாவின் ஆச்சே துறைமுகத்துக்கு தங்கள் வணிகத்தை மாற்றிக் கொண்டனர்.

பரங்கிப்பேட்டை துணி வணிகர்களுக்கு மிக முக்கியமானதொரு துறைமுகமாக இருந்தது என்பது ஒருபுறமிருக்கக் கப்பல் கட்டும் தொழில் இங்கு மிகப் பெரிதாக இயங்கி வந்தமையும் கப்பல் பழுது பார்க்கும் தளமாகவும் இது விளங்கிய செய்திகளையும் அறிய முடிகிறது. கப்பல்களைச் செப்பனிடும் பணிக்கு மிகச் சிறந்த தொழில் வல்லுநர்கள் பழவேற்காட்டிலிருந்திருக்கின்றனர். இந்தியக் கடற்கரை பகுதிகளில் பல்வேறு பகுதிகளிலிருந்து பரங்கிப்பேட்டை கப்பல்களைச் செப்பனிட வந்திருக்கின்றார்கள் என்ற செய்திகளையும் அறிகின்றோம். இடைப்பட்ட காலத்தில், அதாவது 1696 ஆம் ஆண்டுக் குத்தகை ஆவணம் ஒன்று பரங்கிப்பேட்டைக்கு 'முகமது பந்தர்' என்ற பெயர் இருந்ததைக் குறிப்பிடுகிறது. முகலாய மன்னர்கள் மராட்டிய மன்னர்களுடன் போரிட்டு வெற்றி கண்டதால் அவர்கள் ஆட்சிக்குக் கீழ் இப்பகுதி வந்தமையால் இந்த மாற்றம் நிகழ்ந்திருக்கலாம். 1792 ஆம் ஆண்டு டச்சு ஆவணம் ஒன்றின் குறிப்பைக் காணும்போது மிக நீண்டகாலமாக பரங்கிப்பேட்டை சோழமண்டலக் கடற்கரையில் முக்கிய துறைமுகமாக விளங்கிய செய்தி அறியமுடிகிறது. 1857ஆம் ஆண்டு சோழமண்டல கடற்கரை டச்சு ஆளுநரின் அறிக்கையின் படி அவர்களின் வணிகம் மணிலா (பிலிப்பைன்ஸ்), மலாக்கா (மலேசியா), ஆச்சே (இந்தோனேசியா), பர்மா, சுலாவேசி ஆகிய பகுதிகளுக்கு விரிவடைந்து இருந்த செய்தியும், ஒரு ஆண்டுக்கு 200,000 பகோடாக்களுக்கு மேல் வணிகம் நடந்ததாகவும் அறிய முடிகிறது. பரங்கிப்பேட்டையில் உற்பத்தி செய்யப்பட்ட நீலவண்ண துணிகளுக்குப் பல இடங்களில் மிகுந்த வரவேற்பு இருந்தது. பரங்கிப்பேட்டையைச் சார்ந்த சீதக்காதி மரக்காயர் பிரெஞ்சுக்காரர்களிடம் வணிக உரிமம் பெற்று இந்தோனேசியாவின் ஆச்சே துறைமுகத்தில் வணிகம்

மேற்கொண்டிருந்தார். பரங்கிப்பேட்டை தவிர்த்து மரக்காயர்கள் பெரும்பாலும் நாகூரில் குடியிருக்க விரும்பினர். இதற்கு முக்கிய காரணம் அக்காலகட்டத்தில் நாகப்பட்டினத்தில் அதிகமாக டச்சுக்காரர்கள் இருந்தது தான் என்றும் அறிய முடிகிறது. துணி வணிகத்தை அடுத்து நாகூர் கப்பல் கட்டும் துறைமுகமாகவும் விளங்கியது.

மரக்காயர்கள் தமிழ் பெண்களை மணந்து அவர்களின் சந்ததியினர் ஜாவா, சுமத்திரா, அம்போனியா ஆகிய பகுதிகளுக்குக் குடியேறிய செய்திகளையும் ஆசிரியர் குறிப்பிடுகிறார். உதாரணமாக அப்துல்காதர் என்ற பெயர் கொண்ட ஏமனைச் சேர்ந்த இஸ்லாமியர் நாகூரில் குடியேறி அங்கு வசித்த தமிழ் பெண்ணை மணந்து கொண்டு பின்னர் 1747 ஆம் ஆண்டு மலேசியாவின் மலாக்காவிற்குக் குடிபெயர்ந்து வாழ்ந்தார் என்றும் அவருடைய நான்காவது மகன் மலாக்காவில் செட்டியார் வணிகரின் மகளான பெரிய ஆச்சியை மணம் செய்து கொண்டார் என்றும், அவருடைய மகன் அப்துல் காதிர் பின் முகமது இப்ராஹிம் என்ற பெயருடன் மலாக்கா துறைமுகத்தின் தலைவராக விளங்கினார் என்ற செய்தியையும் ஆவணங்களின் வழி காணமுடிகிறது. இப்படித் தமிழ் வணிகர்களுக்கும், மரக்காயர்களுக்கும் இடையே திருமண ஒப்பந்தங்கள் நிகழ்ந்த செய்திகள் வெளிப்படுகின்றன. பல துணி வணிகர்கள் 1788ஆம் ஆண்டு பினாங்குக்கு (மலேசியா) வணிகக் கப்பல்களைக் கொண்டு சென்று வணிகம் நடத்திய செய்தியும், பிறகு ஆங்கிலேய அலுவலர்களின் அழைப்பின் பேரில் பினாங்கிலேயே தங்கி விட்டதாகவும் முதலில் ஏறத்தாழ ஆயிரம் குடும்பங்கள் நிரந்தரமாகத் தங்கி பிறகு ஒவ்வொரு ஆண்டும் ஏறக்குறைய இரண்டாயிரம் மரக்காயர்கள் நாகூரிலிருந்து பினாங்கு சென்றனர் என்றும் அறிகிறோம்.

இந்தக் காலகட்டத்தில் எனது தந்தை வழி தாத்தா நாகப்பட்டினத்திலிருந்து பினாங்கு பயணம் செய்தார் என்ற செய்தியை எனது தந்தையார் கூற நான் அறிந்திருக்கிறேன். இப்படி வணிகத்திற்காகச் சென்ற எனது தந்தை வழி குடும்பத்தார் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் பினாங்கிலும் அதன்பின்னர் கெடா மாநிலத்தில் சுங்கைப் பட்டாணி பகுதியிலும் எனப் பரவி வணிகம் செய்த செய்திகள் இதனை வாசிக்கும் போது என் நினைவுக்கு வருகின்றன.

தமிழக வணிகர்கள் தமிழகத்தில் நடைமுறையிலிருந்த வணிக அறத்துடன் நடந்து கொண்டார்கள் என்ற செய்தியும், குறிப்பாகச் சென்னையிலிருந்த ஆங்கிலேயக் குடியிருப்பில் துணி வணிகர்கள் சீருடை அணிந்து வணிகம் செய்த செய்தி, இடைத்தரகர்கள் குறுக்கீடு இல்லாமல் கொள்முதல் வணிகம் சுமுகமாக நடந்த செய்திகள் மட்டுமன்றி ஏதாவது ஏமாற்றங்கள் நடைபெற்றால் அதற்கு உடல் ரீதியான தண்டனைகள் வழங்கப்பட்ட செய்தி, உதாரணமாக ஏமாற்றுத்தனம் செய்த ஆண்ட செட்டி என்பவரைத் தூணில் கட்டி இருபது கசையடி தரவேண்டும் எனத் தீர்ப்பு வழங்கப்பட்ட செய்திகள் என ஆவணங்கள் வெளிப்படுத்துவதை நூலாசிரியர் குறிப்பிடுகின்றார்.

கடல் வணிகம் என்பது தமிழர்களுக்குப் புதிய ஒன்றல்ல. மிக மிக நீண்ட காலமாகக் கடலை தன்வயப்படுத்தி பயணங்களைத் திறமையுடன் செயல்படுத்திய தமிழர்கள் வணிகத்தில் மிக முக்கிய பங்காற்றி இருக்கின்றார்கள். ஆனால் இது பற்றிய செய்திகள் விரிவாகப் பேசப்படுவதில்லை என்பது நம்மிடையே இருக்கும்

ஒரு குறை. அந்த நிலையைப் போக்கும் வகையில் முனைவர். ஜெயசீல ஸ்டீபன் அவர்கள் எழுத்தில் வெளிவந்திருக்கும் இந்த நூல் தமிழ் வரலாற்றுக்கு மட்டுமன்றி தமிழ் வணிகம் தொடர்பான மிக முக்கிய நூலாக அமைகின்றது.

இந்த நூல் தமிழக பல்கலைக்கழகங்களிலும் தமிழக கல்லூரிகளிலும், தமிழ்த்துறை, சமூகவியல் துறை, வரலாற்றுத் துறை, வணிகவியல் ஆகிய துறைகளில் பாடமாக வைக்கப்பட வேண்டும். இந்த நூலில் கையாளப்பட்டுள்ள ஆய்வுத் தரம் இந்த நூலை வாசிக்கும் ஆய்வு மாணவர்களுக்கும் பொது வாசிப்பாளர்களுக்கும் ஆய்வுகளை முன்னெடுக்க நல்ல அனுபவமாக அமையும்!

நூல்: நெசவாளர்களும் துணி வணிகர்களும்
ஆசிரியர்: எஸ்.ஜெயசீல ஸ்டீபன் (தமிழில் ந.அதியமான்)
பதிப்பு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
விலை: ரூ. 210/-

19. வரலாற்றுப் பேராசான் தி.வை. சதாசிவ பண்டாரத்தார்.

— மா. மாரிராஜன்

ஜனவரி - 2 தி.வை. சதாசிவ பண்டாரத்தாரின் நினைவு தினம். கும்பகோணம் அருகே உள்ள திருப்புறம்பியம் என்னும் ஊரில் 1892 ஆம் ஆண்டு பிறந்தவர். தனது 68 ஆவது வயதில் 1960 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார். ஆரம்பக்காலத்தில் தமிழாசிரியராகத் தன் பணியைத் துவங்கினார். அதன் பிறகு மிகச்சிறந்த கல்வெட்டு அறிஞராக அவதாரமெடுத்தார்.

அது ஒரு காலம். தல புராணங்களும், செவிவழிச் செய்திகளுமே வரலாறாக வலம் வந்த காலம். இருக்கின்ற ஒரு சில ஆய்வு நூல்களும் ஆங்கிலத்தில்தான் இருந்தன. இந்த சூழ்நிலையில்தான் பண்டாரத்தார் நேரடியான கல்வெட்டுச் சான்றுகள் மூலம் வரலாற்றை வெளியிட்டார்.. கால்நடையாகவும், மாட்டுவண்டியிலும், பல கி.மீ. தூரம் சென்று கோவில்களில் உள்ள கல்வெட்டுகளை நேரடியாக ஆய்வு செய்து வரலாற்றுக் கட்டுரைகளை எழுதினார்.

செந்தமிழ், தமிழ்ப்பொழில், போன்ற இதழ்களில் இவரது ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்தன. இன்றைய ஒடிசா மாநிலம் மகேந்திரகிரி குன்றுப்பகுதியில் உள்ள இராஜேந்திரச்சோழனின் கல்வெட்டை 1957 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ்ப்பொழில் நூலில் வெளியிட்டார் (தமிழ்ப்பொழில் இதழ் 33..பக் 131).

வெளிமாநிலங்களில் இருக்கும் கல்வெட்டையும் தனது ஆய்வுக்கு எடுத்தார்.
1930 ஆம் ஆண்டு இவரது முதல் நூலாக குலோத்துங்கச் சோழன் என்னும் நூல் வெளிவந்தது.
1940 ஆம் ஆண்டு இவர் எழுதிய பாண்டியர் வரலாறு என்னும் நூல் வெளிவந்தது.
1949 ஆம் ஆண்டு இவர் எழுதிய பிற்காலச் சோழர் சரித்திரம் என்னும் நூல் வரலாற்று உலகில் பெரும் ஆவணமாகப் பதிவானது.
இன்றளவும் இந்நூல்தான் வரலாற்று ஆர்வலர்களுக்கு ஆரம்பக் கல்வியாக அமைகிறது.

தமிழக வரலாற்று உலகில் தனி முத்திரை பதித்த கல்வெட்டியல் அறிஞர் சதாசிவ பண்டாரத்தாரின் நினைவுகளைப் போற்றுவோம்.

நன்றி:
தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு
தமிழ் வழி இணையக்கல்விக் கழகம் -
https://www.tamildigitallibrary.in/admin/assets/book/TVA_BOK_0000459_முதற்_குலோத்துங்கசோழன்.pdf

20. பாரி நிலையம் செல்லப்பன்.

— கல்பனாதாசன்

தமிழ் நூல் பதிப்பாளர்களுள் தலை சிறந்தவர்கள் என ஒரு பட்டியல் எடுத்தால் அதில் சக்தி கோவிந்தன் பெயர் நிச்சயம் முதல் வரிசையில் நிற்கும். சக்தி கோவிந்தன், பாரி நிலையம் செல்லப்பன், முல்லை முத்தையா மூவருக்கும் ஓர் ஒற்றுமை உண்டு. மூவரும் பர்மாவில் வாழ்ந்து தாயகம் மீண்ட தமிழர்கள். வை கோவிந்தனும் முல்லை முத்தையாவும் செல்லப்பனுக்கு இன்னொரு வகையில் முன்னோடிகள். தமிழ் நூல்கள் பதிப்பை இந்தியத் தரத்துக்கு உயர்த்திய அவர்கள் செல்லப்பனையும் தமது துறைக்கு ஈர்த்து விட்டார்கள்.

1920 இல் புதுக்கோட்டை மாவட்டம் அரிமளத்தில் அடைக்கப்ப செட்டியார் - அழகம்மை ஆச்சி இணையருக்கு மூத்த மகனாகப் பிறந்த செல்லப்பன் 10 ஆம் வயதிலேயே பர்மாவில் குடியேறி விட்டார். அங்கே அவரது தந்தையார் வணிகம் செய்து கொண்டிருந்தார். தாம் படித்த ' கம்பை தன வைசியர் கல்வி க் கழக'த்தில் தமிழ்ப்பற்றும் தேசியக் கண்ணோட்டமும் புகட்டப்பட்டார். பர்மாவில் வசித்த காலத்தில் தமிழோடு ஆங்கிலம், இந்தி, பர்மிய மொழி எனப் பன்மொழியில் தேர்ச்சி பெற்றார்.

விடுதலைப் போராட்ட ச் செம்மல்களை நேரில் தரிசிக்கும் ஆர்வத்தில் 1939 இல் செல்லப்பன், காந்தி அண்ணாமலை என்னும் நண்பருடன் பர்மாவிலிருந்து கிளம்பி இந்தியா வந்தார். வார்தாவில் காந்தி, அலகாபாத்தில் நேரு, சாந்திநிகேதனில் தாகூர், கல்கத்தாவில் சுபாஷ் சந்திரபோஸ் என எல்லோரையும் சந்தித்து ஆட்டோகிராஃப் பெற்றுக்கொண்டு மீண்டும் இரங்கூன் வழி பர்மா திரும்பினார். தமிழில் கையெழுத்துப் போட்ட காந்தியார் எழுதிய வாசகம் -" நீரில் எழுத்தாகும் யாக்கை. "

பின்னர், உள் நாட்டு அரசியல் சூழலால் அகதியாக 43 பேர்களுடன் இந்தியா திரும்புமுன் தாம் நடத்திவந்த புத்தகக் கடையை அங்கிருந்த பெண்மணியிடம் ஒப்படைத்துவிட்டு வெறுங்கையுடன் வர நேர்ந்தது. 43 பேரில் கால் நடையாகவும் பல்வேறு வாகனங்கள் மூலமும் மாறி மாறி அல்லலுற்று உணவு, உறையுள் தொடர்பான இன்னல்கள் அனுபவித்து ஒருவழியாகத் தாம் ஒருவர் மட்டுமே வெற்றிகரமாக இம்மண்ணை மிதிக்கும் பேறு பெற்றார் என்றும் அன்னார் சரிதை பதிவாகியுள்ளது.

முல்லை முத்தையாவே செல்லப்பனைப் பதிப்பகத் துறையில் ஆற்றுப்படுத்தியவர். இருவரும் முன்பே பர்மாவில் நண்பர்கள். மண்ணடியில் காவலர் குடியிருப்புக்குப் பக்கம் ஒரு மாடிக் கட்டடத்தில் முதல் தளத்தில் இருவர் பதிப்பகங்களும் இயங்கின. முல்லைக்கும் பாரிக்கும் பெயர்ப் பொருத்தம் உண்டல்லவா. முல்லைப் பதிப்பகம், பாரி நிலையம் இரண்டும் இயல்பிலேயே நட்புக் கொண்டாடின.

சுத்தானந்த பாரதி எழுத்துகளால் கவரப்பட்டிருந்த செல்லப்பன் பதிப்பகத்துறைக்கு வந்ததில் வியப்பில்லை. தமிழ்ப் புத்தகாலயம் கண முத்தையாவுடன் இணைந்து பாரி புத்தகப் பண்ணை என்னும் கூட்டு நிறுவனத்தையும் உருவாக்கினார். அகிலன், ராஜம் கிருஷ்ணன் ஆகியோர் நூல்களை கண முத்தையா பதிப்பிக்க இவர் விற்றுக்கொடுப்பார். பிறகு தாமே பதிப்புப் பணியில் இறங்கினார். மு வரதராசனின் கள்ளோ காவியமோ தான் விற்பனை உரிமை பெற்ற முதல் நூல். நேதாஜி சொற்பொழிவுகள் அடங்கிய " டில்லியை நோக்கி " மொழியாக்க நூலையும் குறிப்பிட அவர் தவறுவதில்லை.

தொடர்ந்து மு வ நூல்கள் அவரிடமிருந்து வரவே மு வ என்றால் பாரி, பாரி என்றால் மு வ என இருவரும் ஈருடல் ஓருயிர் ஆயினர். மு வ தமது நூல்களைத் தாமே அச்சிட்டு க் கொடுக்க செல்லப்பன் விற்பனை செய்து தருவார் என்பது ஏற்பாடு. நல்லி குப்புசாமி செட்டியார் தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ள தகவல் இது - ' நெசவுத்தொழில் சார்ந்த பட்டுச்செல்வம் என்னும் 300 பக்க நூல் பாரி நிலையப் பதிப்பு (ஆசிரியர் கே எஸ் லட்சுமணன்) ரூ 5 விலையில் எனக்குக் கிடைத்தது. எங்கள் நட்பும் அன்றே முகிழ்த்தது. அந்த நூல் அரிய தகவல் களஞ்சியம். '

ஒரு முறை நூல்கள் வாங்கப் பாரி வந்த வேளை முன்பே மு வ மாடியில் பேசி க் கொண்டிருக்கும் தகவல் கிடைத்து அண்ணா படியேறி வந்து மு வ வுடன் அளவளாவ மூவரும் நெருக்கம் கொண்டனர். இதுவும் செல்லப்பனுக்கு வாய்த்த பேறுதான். அடுத்து அண்ணாவின் தம்பிக்கு கடிதங்கள் (21 தொகுதிகள்) பாரி மூலம் நூல்வடிவம் கண்டன. பின்னாளில் தி மு க வரலாறு, மாநிலச் சுயாட்சி போன்ற நூல்களும் பாரி வெளியீடாயின. பரிமளம் தொகுத்த 'அண்ணா தன் வரலாறு ' நூலை நான் பாரியில் தான் வாங்கினேன். அண்ணாவின் கட்டுரைகள் வாயிலாகவே அவர் வரலாறு நிரல்பட அ ந் நூலில் வர்ணிக்கப் பட்டிருக்கும். அது ஒரு புதிய பாணி.

பாரதி தாசன் நூல்களை முதலில் குஞ்சிதம் குருசாமி பிறகு திருச்சி ராமச்சந்திரபுரம் செந்தமிழ் நிலையம் வெளியிட்டார்கள். மூன்றாம் பதிப்பாளர் செல்லப்பனே. 'அழகின் சிரிப்பு ' தான் செல்லப்பன் மூலம் வெளிவந்த முதல் நூல். கவிஞர் பெற்ற தொகை ரூ 500. அடுத்துப் படிப்படியாக மேலும் 9 நூல்கள் தந்து ரூ 5000 பெற்றுக்கொண்டு புதுச்சேரி பெருமாள் கோவில் தெரு இல்லத்தை வாங்கினார் எனப் புதிய புத்தகம் பேசுது (சூரிய சந்திரன் சந்திப்பு) நேர்காணலில் குறிப்பு உண்டு. குறிஞ்சித் திட்டு, மணிமேகலை வெண்பா, கண்ணகி புரட்சிக் காப்பியம் வரை அனைத்தும் பாரி நிலைய வெளியீடுகள். பிறகு பூம்புகார் பிரசுரம் 1970 களில் மலிவுப் பதிப்பு கொண்டுவந்தது.

ஞான பீடப் பரிசுக்குப் பாரதி தாசன் பெயர் பரிந்துரை செய்யப்படுகிறது. தேர்வுக் குழுவில் தெ பொ மீனாட்சி சுந்தரம், சா கணேசன், பெ. தூரன் உறுப்பினர்கள். 'புதிய பார்வை'க்கு அளித்த பேட்டியில் (ராம்குமார் சந்திப்பு) செல்லப்பன் இந்தச் சம்பவத்தைக் குறிப்பிடுகிறார். ஈரோடு தமிழன்பனிடம் கேட்டதில் கூடுதல் விளக்கம் கிடைத்தது. "ஞானபீடப்பரிசு பற்றிப் பாரி செல்லப்பன்,என்னுடைய நெஞ்சின்நிழல் என்னும் நாவலை வெளியிடப் பாரதிதாசன் என்னை அழைத்துக்கொண்டு போனபோதுதான் முதன்முதலாகக்கூறினார்.

பாரி நிலையத்தாரிடம் யார் தம்மைப் பரிந்துரைத்தது என்பதை மட்டுமே பாரதிதாசன் கேட்டார். அவரோடு அவர் இல்லம் திரும்பும்வழியில் என்னிடம் சொன்னார். " ஒரு லட்சம் தானே, வரட்டுமே. வீட்டுக்கு அரிசியோ பருப்போ வாங்கிப் போடுவேன் என்றா நினைக்கிறாய்? பெரிய அச்சுயந்திரம் வாங்கிப் போட்டு உன்புத்தகம் மற்றவன் புத்தகங்களையெல்லாம் அச்சடிச்சுப் போட்டால் தமிழ்ப்பகையே அழிந்துபோகும்" என்றார். இதுகுறித்து நான் எழுதியுள்ள பாரதிதாசனோடு பத்து ஆண்டுகள் என்னும் நூலில் விரிவாக எழுதியுள்ளேன்.

"இடைப்பட்ட காலத்தில் புரட்சிக்கவிஞர் இறந்துவிடவே பரிசு கிடைக்காமல் போய்விட்டது. ஞானபீட விதிமுறைகள் படி பரிசு படைப்பாளியின் மரணத்துக்குப் பின் வழங்கப்படுவதில்லை. ஆனால் பாரதிதாசன் நூல்களை வெளியிட்டமைக்காக, பாரி நிலையத்துக்கு தமிழக அரசு ஒரு லட்சம் அளித்துக் கௌரவம் செய்தது. கவிஞர் மறைவுக்குப்பின் சாகித்ய அகாடமி பரிசு பிசிராந்தையார் என்னும் நாடக நூலுக்காக வழங்கப்பட்டது. கவிஞரின் துணைவியார் பழனியம்மாள் பெற்றுக்கொண்டார்.

செல்லப்பனின் மகன் அமர்ஜோதி மேலும் சில தகவல்கள் சொன்னார். பாரதிதாசன் 1964 இல் சென்னை பொதுமருத்துவ மனையில் மாரடைப்பால் மரணம் அடைந்த வேளை அன்னார் திருவுடலை புதுச்சேரி இல்லத்துக்கு எடுத்துச் செல்லவும் அடக்கம் செய்யவும் செல்லப்பன் ரூ 3000 அளித்து உதவினார். கவிஞரின் மகன் மன்னர்மன்னன் வசம் தொகை தரப்பட்டது. அண்ணா 1962 இல் நாடாளுமன்றத் தேர்தலில் நின்றபோதும் செல்லப்பன் நிதியுதவி செய்துள்ளார். அண்ணாவின் மகன் டாக்டர் பரிமளம் செல்லப்பனின் நெருங்கிய நண்பர்.

800 நூல்களுக்கும் மேலாக வெளியிட்ட பாரி நிலையம் அண்ணாவின் 'தம்பிக்கு கடிதங்கள்' பிரும்மாண்டமான மெரினா கடற்கரை விழாவையும், அமர்க்களமே இல்லாமல் பத்தே பேர்களுடன் (டாக்டர் ராதாகிருஷ்ணன் உட்பட) நடைபெற்ற ராஜாஜியின் சக்ரவர்த்தி திருமகன் வெளியீட்டு விழாவையும் நேர்காணல்களில் தவறாமல் நெகிழ்ச்சியுடன் நினைவுகூர்வார். ராஜாஜியும் கி ஆ பெ விசுவ நாதமும் தமக்கு ராயல்டி முக்கியமில்லை, நூல்கள் மலிவு விலையில் எல்லோருக்கும் சேரவேண்டும் என்றுதான் வலியுறுத்துவார்களாம்.!

மீ ப சோமசுந்தரம், ஆசைத்தம்பி, தென்னரசு, புலவர் குழந்தை, வ சுப மாணிக்கம், அ கி பரந்தாமனார், அ மு பரமசிவானந்தம், தனி நாயக அடிகள் எனப் பல்வேறு எழுத்தாளர்கள் நூல்கள், புலியூர்க்கேசிகன் உரைகள் ஆகியவற்றை விட்டுவிடாமல் சேர்த்து க் கொள்வார். அவரது பதிப்பாசிரியர் குழுவில் இடம் பெற்ற மே வீ வேணுகோபாலப் பிள்ளை, புலியூர்க்கேசிகன், சண்முகம் பிள்ளை ஆகியோர் பங்களிப்பால் பிழைகளற்ற மொழிச் செம்மையை நூல்களில் கொண்டுவர முடிந்தது எனப் பெருமையுடன் குறிப்பிடுவார்.

'பதிப்பகப் பாரி' என நல்லி குப்புசாமி செட்டியாரால் வர்ணிக்கப்பட்ட செல்லப்பன் பல சொல் சொல்லாமல் சில சொல் சொல்லும் சிக்கனக்காரர். தாமுண்டு தமது பணியுண்டு என்று கருமமே கண்ணாயிருப்பவர். அடிக்கடி வரும் வாடிக்கையாளர்கள் மட்டும் அவரிடம் உரிமை பாராட்டலாம். ஸ்டாக் ரூம் சென்று

நூல்களை த் தேடவும் அலசவும் அவர்களுக்குச் சலுகை தருவார். பேச்சுக் கொடுத்தால் தயங்காமல் அவர்கள் கேட்கும் ஐய வினாக்களுக்கு உரிய பதில் தருவார். அரிதாக அவரே சில நூல்கள் பரிந்துரை செய்வதும் உண்டு. நிறைய விஷயம் தெளிந்தவர். அறிஞர்கள் கவிஞர்கள் ஆய்வாளர்களைப் படித்தவர்.

வெறும் நூற்படிப்போடு நில்லாமல் மனிதர்களையும் படிப்பவர். ஆனாலும் ஒருவகை அறிதுயிலில் ஆழ்பவர். அதாவது மௌனம் காப்பவர். இன்னொரு முக்கியமான செய்தி - நூலாசிரியர்கள், பிற பதிப்பாளர்களுக்குத் தரவேண்டிய ராயல்டியைப் பாக்கி வைக்காமல், தட்டி க் கழிக்காமல் காலாகாலத்தில் கணக்குத் தீர்ப்பவர்.

தமிழகத்தின் தலைசிறந்த ஆளுமைகள் ராஜாஜி, அண்ணா, பாரதிதாசன், மு வரதராசன் ஆகியோர்தம் ஆஸ்தான பதிப்பாளர் அப்பெரியோர்தம் அன்புக்கும் நட்புக்கும் உரிய பண்பாளர் பாரி நிலையம் செல்லப்பன் நூற்றாண்டில் அப்பெருமகனை நினைவு கூர்வோம். அன்னார் வழிப் பல்கிப் பெருகிய புதிய தமிழ், எளிய தமிழ், இனிய தமிழ் உலகெங்கிலும் உள்ள தமிழர் உள்ளங்களிலும் இல்லங்களிலும் செழித்து நீடித்து நிலைப்பதாக என வாழ்த்தி மகிழ்வோம்.

நன்றி - தினமணி தீபாவளி மலர், 2020

21. என்னே தமிழின் இளமை! – நெத்துரு.

— முனைவர்.ப.பாண்டியராஜா

வீட்டு ஹாலில் தரையில் அமர்ந்து, மதிலில் சாய்ந்துகொண்டு, கால்களை நீட்டியவாறு சாய்வுப்பலகையில் மாணவர்களின் விடைத்தாள்களை வைத்துக்கொண்டு திருத்தி மதிப்பெண்கள் போட்டுக்கொண்டிருந்தாள் அந்தத் தமிழ்ப் பேராசிரியை. வாசலில் அழைப்பு மணி அடித்தது. ஒருவாறு எழுந்து, எல்லாவற்றையும் ஒதுக்கிவைத்துவிட்டு நடந்து வந்து கதவைத் திறந்தாள். எதிர்வீட்டுக்காரி! ஒரு கன்னடப் பெண். பேச்சுத்தமிழைப் புரிந்துகொள்வாள். ஆனால் கன்னடத்தில்தான் பேசுவாள். நம் தமிழ்ப்பேராசிரியையோ பெங்களூரில் சிறிதுகாலம் வாழ்ந்தவள். எனவே கன்னடத்தைப் புரிந்துகொள்வாள். ஆனால் தமிழில்தான் பேசுவாள். அவர்கள் இருவரும் பேசிக்கொள்வது கேட்பவர்க்கு வேடிக்கையாய் இருக்கும்.

"வாங்க, வாங்க, எப்படி இருக்கீங்க?" என்று அந்தக் கன்னடப்பெண்ணை வரவேற்றாள் இவள்.

"நானு சென்னங்க இதேனி, நீமு ஏங்க இதேரி" என்றவாறு உள்ளே நுழைந்தாள் அவள்.

பின்னர் அவர்கள் இருவரும் இவ்வாறே பேசத்தொடங்கினர். சற்று நேரத்தில் ஒரு சிறுவன் -அந்தக் கன்னடக்காரியின் மகன் - ஐந்து வயதிருக்கும் - அழுதுகொண்டே வீட்டுக்குள் வந்தான்.

"ஏனு, ஆத்துரு ஆச்சு, நீனு எதுக்கு அழுத்திய" என்று பதறிப்போய்க் கேட்டவள், அவனது வலது முழங்கையில் அடிபட்டு இரத்தம் வருவதைப் பார்த்துவிட்டாள். ஏதோ தெருவில் விளையாடிக்கொண்டிருந்தவன் கீழே விழுந்ததில் சிராய்ப்பு ஏற்பட்டு இரத்தம் கசிந்துகொண்டிருந்தது. தன் தாய் இங்கே வருவதைப் பார்த்திருக்கிறான். உடனே அழுதுகொண்டு தாயிடம் வந்துவிட்டான்.

"ஐயோ, ரத்தம் வருதே" என்று பதறிப்போனாள் தமிழ்க்காரி.

"நெத்துரு பத்தாத, வெரசா மனைக்கு ஒகு பேக்கு, நானு பர்த்தேனி" என்று சொன்னவாறு கன்னடப்பெண் தன் பையனை அழைத்துக்கொண்டு தன் வீட்டுக்கு விரைந்தாள்.

இரத்தம் என்ற பேச்சைக்கேட்டு, வேகமாகத் தன் அறையிலிருந்து வெளியே வந்தான் அவள் கணவன்.

"என்ன ஆச்சு?" என்று அந்தக் கன்னடப் பெண் வெளியே செல்வதைப் பார்த்தவாறு கேட்டான்.

“அந்தப் பெண்ணோட மகன் கீழே விழுந்துட்டான். கையிலே அடிபட்டு இரத்தம்” என்றாள் அவள்.

“அந்தக் கன்னடப் பெண் ஏதோ சொல்லிக்கிட்டே போச்சே. என்ன அது?” என்று வினவினான் அவன்.

“அதான், ரத்தம் வருது, சீக்கிரம் வீட்டுக்குப் போகணும், நான் வர்ரேன்”ன்னு சொல்லிட்டுப் போறா. “நெத்துரு பத்தாதா’ன்னா - ரத்தம் வருது’ன்னு அர்த்தம்” என்றாள் அவள்.

இதைச் சொன்னதும், சில வினாடிகள் ஆழ யோசித்தபடி இருந்த அவள், விடுவிடு-வென்று தன் அறைக்குள் நுழைந்தாள். ஒரு புத்தகத்தைக் கைகளில் விரித்துப் பிடித்தபடி அதனைப் புரட்டிக்கொண்டே ஹாலுக்கு வந்தாள். அவன் அந்தப் புத்தகத்தின் அட்டையைக் குனிந்து பார்த்தான். பதிற்றுப்பத்து - மூலமும் உரையும் என்று அதில் போட்டிருந்தது.

அவள் சொல்லப்போவதை எதிர்பார்த்து அவன் காத்திருந்தான்.
திடீரென்று அவள் கண்கள் மலர்ந்தன.

“இங்க பாருங்க, ”நெய்த்தோர் தொட்ட செம் கை மறவர்”’னு பதிற்றுப்பத்துல நாப்பத்தி ஒம்பதாம் பாடல்ல வருது. அதுக்குப் பொருள் சொல்ற ஔவை துரைசாமியார் சொல்றார், “குருதி அளைந்ததினால் சிவந்த கையினை உடைய போர்வீரர்” அப்படீன்னு. குருதி’ன்னா ரத்தம்தானே. அப்படீன்னா நெய்த்தோர்-ங்கிற தமிழ்ச் சொல்தான் இப்ப கன்னடத்துல நெத்துரு'ன்னு வருது.” என்றாள் அவள் பரபரப்பாக.

“பதிற்றுப்பத்து’ன்னா, சங்க காலத்துச் சேரமன்னர்களப் பத்திய பாடல்கள்தான. சங்ககாலத்து வடசேரநாடுதான இப்ப கர்நாடகாவுல இருக்கிற தெற்குப் பகுதி. அப்ப இந்தச் சொல் தமிழ்நாட்டுல இருந்து மேற்க போயி, அப்புறம் வடக்க போயிருக்குமோ?” என்று அவன் தன் கொஞ்சநஞ்ச தமிழ் அறிவைக் காட்டினான்.

அதனை உடனே ஏற்றுக்கொள்ளாத அவள், தன் மடிக்கணினியை இயக்கி ஏதோ தேடிப்பார்த்தாள். “நெய்த்தோர் அப்படீங்கிற சொல் சங்க இலக்கியத்துல ஏழு தரம் வருது.” என்றாள் அவள்.

“அது என்னென்ன?” என்றான் அவன்.“சொல்றேன்” என்று சொன்ன அவள் கணினியை அவன் பக்கம் திருப்பினாள்.அவன் படித்தான்.

> *செம் மறு தலைய நெய்த்தோர் வாய - நற் 2/4*
> *நெய்த்தோர் அன்ன செவிய எருவை - ஐங் 335/2*
> *நெய்த்தோர் தூஉய நிறை மகிழ் இரும் பலி - பதி 30/37*
> *நெய்த்தோர் தொட்ட செம் கை மறவர் - பதி 49/10*
> *நெய்த்தோர் நிற அரக்கின் நீர் எக்கி யாவையும் - பரி 10/12*
> *நெய்த்தோர் மீமிசை நிணத்தின் பரிக்கும் - அகம் 9/9*
> *நெய்த்தோர் ஆடிய மல்லல் மொசி விரல் - அகம் 375/7*

“நீங்க சொல்றபடி, நெய்த்தோர்’ங்கிற சொல் பதிற்றுப்பத்துல ரெண்டு தரம் வருது. ஆனா நற்றிணை, ஐங்குறுநூறு, பரிபாடல், அகநானூறு’ன்னு பல இலக்கியங்கள்’ளயும் அது வருது’ல்ல. அப்படியே பாத்தாலும் பதிற்றுப்பத்துல அந்தப் பாட்ட எழுதுன புலவர்கள் சோழநாட்டயோ, பாண்டிய நாட்டயோ சேந்தவங்களா இருக்கலாமுல” என்று அவள் ஐயத்தைக் கிளப்பினாள்.

“இருக்கலாம், அந்தப் பாட்டுகள எழுதின புலவர்கள் எல்லாம் தமிழ் நாட்டுல எந்தப் பக்கத்தச் சேந்தவங்க’ன்னு முழுக்க ஆராயணும்” என்றான் அவன்.

“எப்படியோ, நெய்த்தோர் அப்படீங்கிற நம்ம தமிழ்ச்சொல் - ரெண்டாயிரம் வருசத்துக்கு முன்னாடி நம்ம இலக்கியத்துல வாழ்ந்துக்கிட்டிருந்த சொல், இன்னக்கி இன்னொரு திராவிட மொழியான கன்னடத்துல வாழ்ந்துக்கிட்டு இருக்கு” என்று பெருமையுடன் சொல்லி முடித்தாள் அவள்.

“பார்த்தீர்களா! நம்முடைய சங்கச் சொல் இப்போது அண்டைவீட்டுச் சொந்தக்காரரின் வீட்டில் அழகாக ஆட்சிபுரிகிறது. ”

“ என்னே! தமிழின் இளமை! ”

22. எல்லை தருவான் கதிர் பருகி ஈன்ற கார் !!

— முனைவர்.தேமொழி

திருப்பாவை கூறும் அறிவியல் என்ற கருத்தில் ஆண்டாளின் பாடல் மீண்டும் மீண்டும் மேற்கோள் காட்டப்பட்டு வருவது வழக்கம். "ஆழிமழைக் கண்ணா", "அறிவியல்" என்ற ஒரு கூகுள் இணையத் தேடலில் 300க்கும் மேற்பட்ட முடிவுகள் கிடைக்கின்றன என்பதே, அது எந்த அளவு பண்டைய தமிழர் கொண்டிருந்த அறிவியல் அறிவிற்குச் சான்றாக, பரவலாக மக்களிடம் சென்று சேர்க்கப் படுகிறது என்பதை அறியலாம். அடுத்து வருவது அது போன்ற ஒரு பதிவில் கொடுக்கப் பட்டிருந்த விளக்கம்.

ஆழி மழைக் கண்ணா ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்து கொடு, ஆர்த்து ஏறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய் கறுத்து
பாழியந்தோள் உடைப் பற்பநாபன் கையில்
ஆழி போல் மின்னி வலம்புரி போல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழை போல்
வாழ உலகினில் பெய்திடாய்; நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்து ஏலோர் எம்பாவாய்
(திருப்பாவை-4)

மழைக்கு தலைவனே! நீ சிறிதும் உன் வள்ளன்மை ஒன்றையும் மறைக்காதே! நீ கடலுள் ஆழப் புகுந்து நீரை முகந்து பெரு முழக்கோடு வானில் ஏற வேண்டும். உலகுக்கு காரணனான உன் மேனி போல் கறுத்து, வலிய தோள்களையும் உந்தியில் தாமரையையும் உடைய வலக்கையில் உள்ள, சக்ராயுதம் போல் ஒளிவிட்டு இடக்கையிலுள்ள வலம்புரி சங்கு போல முழங்கி உலகிலுள்ளார் அனைவரும் வாழும்படி நோன்பு நிற்கும் நாங்களும் நீராடவும் காலம் கடத்தாமல் பெருமான் கையிலுள்ள சார்ங்க வில்லில் ஏவிய அம்பு மழை போல் பெய்வாயாக. (உரை- வைணவச் செம்மல் டாக்டர். எஸ். ஜெகத்ரட்சகன்) [1]

'திணைமாலை நூற்றைம்பது' என்ற நூலின் முல்லைத் திணை குறித்த அகப் பாடல்களிலும் கடல் நீர் சூரியனின் வெப்பத்தால் ஆவியாகி மேலெழுந்து மேகமாகி, பின்னர் குளிர்ந்து மழையாகப் பொழிகிறது என்ற கருத்து இடம் பெறுகிறது [2].

திணைமாலை நூற்றைம்பது:

எளிய வழியில் அகப் பாடல்கள் கூறும் அன்பின் ஐந்திணை ஒழுக்கம் குறித்து அறிய 'திணைமாலை நூற்றைம்பது' நூலின் பாடல்கள் உதவுகின்றன.
மதுரைத்தமிழாசிரியர் மாக்காயனார் மாணாக்கர் கணிமேதாவியார் இயற்றிய திணைமாலை நூற்றைம்பது என்ற நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. 'ஏலாதி' நூல் இயற்றிய அதே கணிமேதாவியார் இயற்றிய நூல் இது. இவர் கி.பி.5 - ஆம் நூற்றாண்டினர் [3]. இவர் சமண சமயத்தைச் சார்ந்தவர் என்பதையும், மதுரைத்

தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர் என்ற செய்தியையும் ஏலாதி நூலின் முகவுரையின் மூலம் நாம் அறிய முடிகிறது. இந்நூலில், அகத்திணை ஒழுக்கம் குறித்த வெண்பாக்கள் குறிஞ்சி, நெய்தல், பாலை, முல்லை, மருதம் என்ற வரிசையில் அமைந்துள்ளன.

ஐந்திணை ஒழுக்கங்களைக் கோவையாக அமைத்து மாலை போலத் தொடுத்துள்ள மையால் 'திணைமாலை' என்றும், நூலில் இடம்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கையின் அளவினால் 'திணைமாலை நூற்றைம்பது' என்றும் இந்நூல் பெயர் பெற்றது என்ற விளக்கம் கொடுக்கப்படுகிறது. இருப்பினும், ஒவ்வொரு திணைக்கும் 30 பாடல்கள் என மொத்தம் 150 பாடல்கள் இருக்க வேண்டிய நிலைக்கு மாறாக, இந்நூலில் குறிஞ்சி, நெய்தல், முல்லை திணைகள் மூன்றும் 31 பாடல்களைப் பெற்றுள்ளதால் மொத்தம் 153 பாடல்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. நூலின் இறுதியிலே காணப்பெறும் பாயிரச் செய்யுள் ஒன்றையும் கணக்கில் கொண்டால் இந்நூல் மொத்தம் 154 பாடல்களைக் கொண்டதாகும்.

முல்லை திணைக்குரியதாக இந்த நூலில் இடம்பெறும் 31 பாடல்களின் 7 பாடல்களில் (பாடல் எண்கள்: 93, 95, 100, 104, 105, 109,114) மழை உருவாகும் அறிவியல் உண்மை இடம் பெறுகின்றது. அதாவது, முல்லைத் திணைக்கான 31 பாடல்களைக் கணக்கில் கொண்டால், சற்றொப்ப ஐந்து பாடல்களுக்கு ஒரு பாடல் என்ற கணக்கில் மழை தோன்றும் அறிவியல் உண்மை விரவிக் கிடக்கக் காணலாம். இங்கு அப்பாடல்கள் திணைமாலை நூற்றைம்பது நூலில் இடம் பெரும் அதே வரிசையில் கொடுக்கப்படுகிறது [2].

(1)

> ***கருங் கடல் மாந்திய வெண் தலைக் கொண்மூ***
> ***இருங் கடல் மா கொன்றான் வேல் மின்னி, பொருங் கடல்-***
> ***தன்போல் முழங்கி...... (பாடல்: 93)***

விளக்கவுரை: கருமையான கடலிலிருந்து நிறைய நீரினை அருந்திய வெண்மையான தலையைக் கொண்ட முகில்கள், பெரிய கடலினில் புகுந்து மாமர வடிவுகொண்ட சூரபன்மனைக் கொன்ற முருகனின் வேலினைப் போன்று மின்னும் மின்னல்களுடன், அலைகள் ஒன்றோடொன்று மோதிக்கொள்வதால் பொருமும் கடல்தனைப் போல இடிகளை முழக்கி ஆரவாரிக்கின்றன.

(2)

> ***மேல் நோக்கி வெங் கதிரோன் மாந்திய நீர் கீழ் நோக்கி,***
> ***கான் ஒக்கம் கொண்டு, அழகா-காண், மடவாய்!...... (பாடல்: 95)***

விளக்கவுரை: மேல்முகமாக வெப்பத்தைக் கொண்ட கதிரவன் முகந்து உட்கொண்டதால் நீர் நிறைந்த முகிலானது, கீழுள்ள புவியை நோக்கி மழையாகப் பெய்த படியினாலே, முல்லை நிலத்தின் காடுகளெல்லாம் தழைத்தோங்கி அழகாக மாறியுள்ளதைக் காண்பாயாக பெண்ணே!.

(3)

.... மாக் கடல்
கண்டு இயைய மாந்தி, கால்வீழ்த்து, இருண்டு, எண் திசையும்
கார் தோன்ற, காதலர் தேர் தோன்றாது ...... (பாடல்: 100)

விளக்கவுரை: பெருங்கடலினைக் கண்டு தன்னை நிரப்பிக் கொள்ளும்படி கடல்நீரைக் குடித்து, மழைபொழியத் தாழ்ந்து, நிறம் கருத்து, எட்டுத் திக்குகளிலும் முகிற் கூட்டம் சூழ்ந்து காணப்படுகிறது. கார்காலம் துவங்கிவிட்டது. ஆனால், கொடுத்த உறுதிமொழியின்படி தலைவனின் தேர் இங்கு வரவில்லை.

(4)

ஐந்து உருவின் வில் எழுதி, நால் திசைக்கும், முந்நீரை,
இந்து உருவின் மாந்தி, இருங் கொண்மூ, முந்து உருவின்
ஒன்றாய், உரும் உடைத்தாய், பெய் வான்போல்...... (பாடல்: 104)

விளக்கவுரை: ஐந்து நிறங்களையுடைய வானவில்லை வரைந்து வைத்து, நான்கு திக்குகளுக்கும் கடல் நீரைக் கொண்டு சென்று கொடுக்க விரும்பிய, ஈச்சம் பழத்தின் நிறங்கொண்ட மேகமானது நீரை அள்ளிக் குடித்து பெரிய மேகமானது. பழைமையான உருவாகிய வானின் நீல நிறத்தைப் போன்று அதனுடன் ஒன்றாகப் பரவி, இடிகளைக் கொண்டதாக மழையாகப் பொழிகின்ற வான் வெளியின் தன்மை போல,...
(குறிப்பு: இப்பாடலில் வானவில்லிற்கு ஐந்து நிறம் என்று கூறுவதைக் காணலாம், ஒரு வேளை புலவர் கணிமேதாவியாருக்கு 'நிறக்குருடு' (Red-green color blindness) என்று கூறப்படும் பார்வைக் குறைபாடு இருந்திருக்கலாமோ என்று தோன்றுகிறது)

(5)

எல்லை தருவான் கதிர் பருகி ஈன்ற கார்,
கொல்லை தரு வான் கொடிகள் ஏறுவ காண்........ (பாடல்: 105)

விளக்கவுரை: பகற் பொழுதினைத் தரும் கதிரவனின் கதிர்களால் குடிக்கப்பட்ட நீரைக் கொண்ட மேகம் அதை மழையாக வழங்கியதாலே, முல்லை நிலத்தில் வளர்ந்த நெடிய கொடிகள் மரங்களிற் படர்ந்து கொண்டிருப்பதைக் காண்பாயாக!!

(6)

என்போல் இகுளை! இருங் கடல் மாந்திய கார்........ (பாடல்: 109)

விளக்கவுரை: எனது உயிர் போன்ற இனிய தோழியே! பெரிய கடலின் நீரை அருந்தி மழை மேகங்கள் உருவாகின.

(7)

பாத்துப் படுகடன் மாந்திய பல்கொண்மூக்
காத்துக் கனை துளி சிந்தாமைப் - பூத்துக்
குருந்தே!......... (பாடல்: 109)

விளக்கவுரை: ஒலிக்கின்ற கடலின் நீரைக் குடித்துப் பல முகில்களில் பகுத்தெடுத்து, அந்த நீரைப் பாதுகாத்துக் கொண்டு வந்து, செறிவான மழைத்துளிகளை முகில்கள் நன்கு சிதறி பெய்யாத போதும், செழித்துப் பூத்துள்ள குருந்த மரமே!

முல்லைத்திணைக்குரிய பெரும்பொழுது கார் என்பதால், திணைமாலை நூற்றைம்பது நூலின் முல்லைத்திணைப் பாடல்களில் மழைகுறித்து பல பாடல்கள் குறிப்பிடுகின்றன. இருப்பினும், மேற்காட்டிய ஏழு திணைமாலை நூற்றைம்பது பாடல்களில் கடல்நீர் கதிரின் வெப்பத்தால் முகிலாக மாறி மழையாகப் பொழிவது விளக்கமாகவும், சிலபாடல்களில் அவை நன்கு அறியப்பட்ட உண்மை என்பதால் ஓரிரு வரிகளில் சுருக்கமாகக் கொடுக்கப்படுவதையும் காண முடிகிறது. இதன் மூலம் கி.பி.5 - ஆம் நூற்றாண்டில் மழை பொழியும் அறிவியல் அடிப்படையைத் தமிழர் பலர் நன்கு அறிந்திருந்தனர் என்பது இதனால் தெளிவாகிறது.

"ஆழி மழைக் கண்ணா ஒன்று நீ கைகரவேல் ஆழியுள் புக்கு முகந்து கொடு" என்று திருப்பாவையில் மழை குறித்து ஆண்டாள் குறிப்பிட்டது கணிமேதாவியாருக்கும் பிற்பட்ட காலம். ஆழ்வார்களின் காலம் என்பது ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் 8ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை என்று வரையறுத்தவர் மு.இராகவையங்கார். 'வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று' என்ற ஒரு குறிப்பு (திருப்பாவை 13:3-5) கொண்டு, ஆராய்ந்த மு. இராகவையங்கார் கி.பி. 716 ஆம் ஆண்டு திருவாடிப்பூரத்தில் ஆண்டாள் அவதரித்தாள் என்று கூறுகின்றார்[4]. ஆகவே அதற்கும் முன்னர் ஐந்தாம் நூற்றாண்டிலேயே மழை குறித்த அறிவியல் தமிழகத்தில் அறியப்பட்டிருக்கிறது என்பதைத் திணைமாலை நூற்றைம்பது மூலம் அறிய முடிகிறது. தமிழிலக்கியங்களைக் கற்றுத் துறைபோகிய அறிஞர்கள் பண்டைய தமிழ் இலக்கியங்களில் காணப்பெறும் மழை அறிவியல் குறித்து மேலும் பல மேற்கோள்களைக் காட்ட வாய்ப்பிருக்கலாம்.

எல்லாவற்றுக்கும் மேலாக, மழை தோன்றும் முறையை, அதன் அறிவியல் பின்புலத்தை, ஐந்தாம் நூற்றாண்டிலேயே (அதாவது, இந்தக் கட்டுரையின் அடிப்படையில் எனக் கொள்க) அறிந்திருந்த தமிழக மக்களின் வழிவந்தோர், இன்று வருணபகவான் மழை தருவார் என்று நீர் நிரம்பிய பெரிய பெரிய அண்டாவிற்குள் அமர்ந்து பஜனை பாடுவதையும், கழுதைக்கும் கழுதைக்கும் திருமணம் செய்து வைப்பதையும், பெண்ணை ஆடையின்றி தீவட்டியுடன் ஊர்சுற்ற வைக்கும் சடங்கு செய்வதையும், இடி மின்னல் என்றால் அர்ஜுனன் தேர் ஓடுகிறது என்று 'அர்ஜுனா' 'அர்ஜுனா' என்று கன்னத்தில் அடித்துக் கொள்வதைச் செய்யும் மூடநம்பிக்கை கூட்டத்தினராக மாறியதைக் கண்டு நாம் தலைத் தலையாக அடித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

உதவிய தளங்கள்:
[1] ஆண்டாளின் மழை அறிவியல்! – https://minnambalam.com/k/2017/04/26/ad3

[2] கணிமேதாவியார் இயற்றிய திணைமாலை நூற்றைம்பது
விளக்க உரை – தமிழ்ப் புலவர் திரு. அ. நடராச பிள்ளை
http://www.tamilvu.org/library/l2F00/html/l2F00ind.htm

[3] தமிழ் இலக்கிய வரலாறு, ரா. சீனிவாசன், 3-சங்கம் மருவிய காலம், எட்டாம் பதிப்பு : 1997
https://ta.wikisource.org/s/99ul

[4] ஆண்டாள், முனைவர் சி. பாலசுப்பிரமணியன், முதற் பதிப்பு : மார்ச், 1994. பக்கம் 34
https://ta.wikisource.org/s/1321

நன்றி: சிறகு

23. திருக்குறள் குறியீடு படங்கள்.

— சொ. வினைதீர்த்தான்

நீங்கள் திருக்குறளில் விருப்பம் உடையவரா? அப்படியானால் சிறு படங்கள் மூலம் குறியிடப்படும் 10 திருக்குறள்களைக் கண்டு பிடியுங்கள் என்று ஒரு எண்ணிப்பார்க்கும் பயிற்சி முகநூல், புலனத்தில் பகிர்ந்திருந்தேன். சில நண்பர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்கத் தற்போது விடைக்கான குறள் தந்துள்ளேன்.

---

1. 👍🗣👎🗣🍎🚫🍏✅
இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய் கவர்ந்தற்று.

2. 💦🌷👱❤📈
வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளதத்னைய உயர்வு

3. 💰💰👂💰👉💰💰1
செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை

4. 🔥🔫🩹🩹🚫👅🔫🤕
தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினாற் சுட்ட வடு

5. 👕😔🖐💁🤝
உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு

6. 💬❓❓👄👂👉💬❓💬👁🧠
எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு

7. 🧠❓👉🤒🙋🤒
அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய் தந்நோய்போல் போற்றாக் கடை

8. 🐇🏹🎯🐘🎯❌🗡👌
கானமுயல் எய்த அம்பினில் யானை பிழைத்தவேல் ஏந்தல் இனிது

9. ❤❓🔒😢💞
அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்

10. 👱🧔❌🌏🤫🚫
மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்தது ஒழித்து விடின்

24. பெருந்தொற்றுகளின் காலம்: புதுச்சேரியின் அனுபவங்கள்!

— பேராசிரியர். எம். பி. இராமன்

கொள்ளைநோய்களின் தாக்கத்தால் 18-ம் நூற்றாண்டின் பின்பாதியிலும், 19-ம் நூற்றாண்டிலும் தமிழக மக்கள் கொத்துக் கொத்தாக வீழ்ந்தனர். "போரைக் காட்டிலும் நோயால் பலிகள் அதிகம்" என்கிறார் ஆனந்தரங்கப் பிள்ளை. அவரின் நாட்குறிப்புப் பதிவுகளில், அந்தக் காலத்து மக்கள் பெருந்தொற்றை எதிர்கொண்ட விதத்தை விரிவாகப் பதிவிட்டுள்ளார்.

நோய்க்கான காரணமும், அதற்கான தீர்வும் தெரியாததால், படித்தவர்கள்கூட அச்சத்திலும் பீதியிலும் உறைந்துபோனார்கள். பாமர மக்கள் இது தெய்வக் குற்றம் என்று நம்பினர். அம்மன் தனது கோபத்தால்தான் காலராவையும், அம்மை நோயையும் அனுப்பி மக்களைத் தண்டிக்கிறாள் என்று மனதார நம்பினார்கள். எனவே, அந்த நம்பிக்கை ஆழமாக ஊறி, ஊரெங்கும் பரவியது. அதுவே பல்வேறு வதந்திகளாகவும் உருவெடுத்து மக்களை மருட்டியது.

விதவிதமான வதந்திகள்:
1756 டிசம்பர் வாக்கில் தமிழகப் பகுதிகளில் கடும் பஞ்சமும், வைசூரி என்னும் பெரியம்மை, பிளேக், கடும் காய்ச்சல் ஆகிய நோய்களும் கடுமையாகத் தாக்கின. போதுமான ஊட்டமின்றிப் பலவீனமாயிருந்த மக்கள், கொள்ளைநோய்களுக்கு எளிதில் இரையாகினர். ஆர்க்காடு, வேலூர், லால்பேட்டை வட்டாரங்களில் மட்டுமே 10-15 ஆயிரம் பேர் பலியாயினர். ஆர்க்காட்டில் முகாமிட்டிருந்த ஆங்கிலேயரில் பாதிப் பேரும், நவாப் குடும்பத்தினரில் சிலரும் மரணமடைந்தனர்.

ஆர்க்காட்டில் கடம்பை அம்மன் கனவில் தோன்றி 'நான் அனைவரையும் கொன்றுபோடவே வந்திருக்கிறேன், நான் போக வேண்டுமானால், ஒரு யானை, 10 குதிரை, 100 ஆட்டுக்கிடா, 50 எருமைக்கிடா பலி கொடுக்க வேண்டும். அத்துடன் மது, மாமிசம் 100 பானை சோற்றுப் படையல் காணிக்கையும் வேண்டும்' என்று கூறியதாகச் செய்திவந்தது. மற்றொரு அம்மன், குதிரை, யானைகளுடன், தீவட்டி ஏந்திய ஆட்கள் புடைசூழ, மேளதாளத்துடன் மைசூரிலிருந்து புறப்பட்டு, கடலில் குளியல் போடுவதற்காக வந்துகொண்டிருப்பதாகவும், அது வரும் வழியில் திருவண்ணாமலையில் தங்கியிருப்பதாகவும் இன்னொரு வதந்தி பரவியது. முதல் வதந்தியைவிட இது சற்றுக் கொடூரமாயிருந்தது. பகல் நேரத்தில் அம்மன், மரக்கிளைகளில் வௌவால்போல் தொங்கிக்கொண்டு, மனிதர்களைக் கொன்று போடுவதாகவும், இரவில் வெட்டவெளிகளில் திரிவதாகவும், அப்போது உள்ளூர் தேவதைகள், 'நாங்கள் இங்கு காவலிருக்கும்போது நீ எப்படி இங்கு வரலாம்' என்று சண்டை போடுவதாகவும், விடிந்து பார்த்தால், எங்கு பார்த்தாலும் ரத்தமாய் சிந்திக் கிடக்கிறது என்றும், புளியமரத்தில் யானை, குதிரைகளின் தலைகள் தொங்குகின்றன என்றும் புரளிகள் கிளம்பி நோயைவிடவும் வேகமாகப் பரவின.

நாளுக்கு நாள் பிணங்கள் விழுந்துகொண்டே இருந்தன. ஆர்க்காட்டுப் பகுதியில் சாவு எண்ணிக்கை 15,000-க்கும் மேல் எகிறிக்கொண்டிருந்தது. அச்சத்தில் உறைந்துபோன மக்கள், ஊரைவிட்டு வெளியேறத் தொடங்கினார்கள். முதலில் இந்துக்களின் 'தெய்வக் குற்றம்' என்ற கருதுகோளை நம்ப மறுத்த வெள்ளையர்களையும் முஸ்லிம்களையும்கூட அச்சம் கவ்விக்கொண்டது. அவர்களும் தங்களின் வீடுகளில் வேப்பிலை செருகினார்கள். வீதிகளில் வேப்பிலைத் தோரணங்கள் கட்டப்பட்டன. புதுச்சேரி ஆளுநர் லெரியும், அவரது ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் அனைவரும் பீதியில் உறைந்துபோனார்கள். வீடுகளிலும் வீதிகளிலும் வேப்பிலைத் தோரணம் கட்டட்டும் என்றும் ஆளுநரே சொன்னார். கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் தங்களது தலைப்பாகைகளில் வேப்பிலைக் கொத்தைச் செருகிக்கொண்டார்கள்.

பணம் சுருட்டும் குறுக்கு வழி:
இதற்கிடையே மக்களின் பேதைமையைப் பணமாக்கும் முயற்சிகளும் நடந்தன. வந்தவாசி அய்யண்ண சாஸ்திரி அரசுக்கு வரிப்பணம் கட்ட வேண்டியிருந்தது. ஆகவே, ஆட்களை அழைத்துப் பணத்தைக் கொடுத்துச் சிப்பம் கட்டச் சொன்னார். ஆட்களில் ஒருவன் திடீரென்று எழுந்து நின்று, "நான் மாரியம்மன் வந்திருக்கிறேன். இந்தப் பணத்தைக் கோட்டைக்கு அனுப்ப வேண்டாம். எனக்குக் காணிக்கையாகத் தந்தால் போதும்" என்று உரத்துக் கூறி ஆடினான். வெலவெலத்துப்போன சாஸ்திரி, அதையே தெய்வ வாக்காக எடுத்துக்கொண்டு, பண முடிப்பை அனுப்பாமல் வைத்துக்கொண்டார்.

அரசுக்குக் கப்பம் வரவில்லை என்பதால், அதை வாங்கி வருவதற்காக ஒரு சேவகன் சென்றான். அவன் பணமூட்டையில் கைவைத்தவுடன் மூக்கிலும் வாயிலும் ரத்தம் கக்கினான் என்று ஒரு செய்தி பரப்பப்பட்டது. அரசு அதிகாரி சவரிராயரின் தம்பி இந்தச் செய்தியை நம்பவில்லை. ஏதோ சூது நடக்கிறது என்று கண்டுகொண்டு, மூடநம்பிக்கையை நிந்தித்தான்; அம்மனையும் வைதான். ஆகவே, வேறொரு காவல்காரனை அனுப்பி எடுத்துக்கொள்ளலாம் என்று திட்டமிட்டான். அந்த எண்ணம் தோன்றிய அந்தக் கணமே அவனுக்குக் கழிசல் கண்டு உயிர் பிழைப்பதே கடினம் என்றானது. தம்பியின் மேல் பாசமிக்க சவரிராயன் பயந்துபோனார். கிறிஸ்தவர் என்றாலும், பாதிரியார்களுக்குத் தெரியாமல், ஆயிரம் ரூபாயை அம்மனுக்கு உண்டியல் போடுகிறேன், என் தம்பி பிழைத்தால் போதும் என்று வேண்டிக்கொண்டார்; அவரது தம்பியும் குணமானார் என்று விரிகிறது மற்றொரு வதந்திச் செய்தி.

ஆளுநரும் அதிகாரிகளும் வதந்திகளின் வலையில் வீழ்ந்துவிட்டதால், கிறிஸ்தவப் பாதிரியார்கள் அஞ்சினார்கள். அவர்கள் ஒன்றாகக் கூடி, பிரெஞ்சு அரசு அதிகாரிகளைச் சந்தித்துத் தங்களின் ஆட்சேபனைகளைத் தெரிவித்தார்கள். தொடர்ந்து அழுத்தங்களைக் கொடுத்து, அம்மன் பக்தர்கள் என்ற பெயரில் ஆட்டம் போட்டவர்களைப் பிடித்துச் சிறையில் அடைக்கச் செய்தார்கள். கொள்ளைநோயின் தாக்கம் குறைந்ததால் இந்தப் பிரச்சினையும் காலப்போக்கில் அமுங்கிப்போனது. ஆனந்தரங்கப் பிள்ளையின் நாட்குறிப்பிலிருந்து ('அகநி' பதிப்பகம் இந்த நாட்குறிப்புகளைச் செம்பதிப்பாக வெளியிட்டிருக்கிறது) அப்போதைய மக்களின் மனநிலையைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

ஆய்வுக் கட்டுரைகள் சிலவற்றிலிருந்து அப்போது அரசின் சார்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றியும் அறிந்துகொள்ள முடிகிறது.

காலராவுக்குக் காரணம்:
1855-ல் மருத்துவர் கோலாஸ், காலரா பற்றி ஆராய்ந்து, தேங்கிக் கிடக்கும் குப்பைகளும், அசுத்தமான தண்ணீருமே காரணம் என்று புதுச்சேரி அரசுக்கு அறிவித்தார். குப்பைக்கூளங்கள் கிடந்த கடைத்தெருவையும் கறிக்கடைகளையும் தூய்மையாக வைக்க அரசு ஆணையிட்டது. பொதுச் சுகாதாரம் கருதி, 1825-ல் ஆளுநர் துப்புய் அனைத்து சவ அடக்கங்களும் நகருக்கு வெளியேதான் செய்யப்பட வேண்டுமென்று அரசாணை வெளியிட்டார்.

1905 – 1913 காலகட்டத்தில், மொத்த மக்கள்தொகையில் நான்கில் ஒருவர் பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டனர். 'ஆயிரக்கணக்கில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; ஆனால், ஏழைகளும் தொழிலாளர்களுமே அதிகம் இறக்கிறார்கள்; அவர்களும், நோய் தொற்றிய ஓரிரண்டு நாட்களிலேயே இறந்துவிடுகிறார்கள்; தூய்மையற்ற சூழல், அசுத்தமான குடிநீர், ஊட்டமில்லாத உடல், நெரிசலான குடியிருப்புகளே அதீத மரணங்களுக்குக் காரணம் என்றார் மருத்துவர் வெலந்தினோ.

தடுப்பூசிக்குத் தயக்கம்:
1701-ல் ஃபிரான்சுவா மர்த்தேன் காலத்திலேயே புதுச்சேரியில் ஆங்கில முறை மருத்துவமனை தொடங்கப்பட்டுவிட்டது. 18-ம் நூற்றாண்டுக்குள்ளாக மேலும் ஏழு மருத்துவமனைகளும் மருந்தகங்களும் தொடங்கப்பட்டன. முதன்முதலாக, 1849-ல் காலராவுக்குத் தடுப்பூசி அறிமுகமானது. ஆனால், ஆங்கில மருத்துவத்தில் நம்பிக்கையில்லாத மக்கள் அதற்கு முன்வரவில்லை. ஊசி போட்டுக்கொண்டால் ஒரு பணம் இலவசமாகத் தரப்படும் என்று அரசு ஆசை காட்ட வேண்டியிருந்தது.

1879-ல் முதன்முதலாக அம்மை நோய்க்குத் தடுப்பூசி போடும் முறையை பிரெஞ்சிந்திய அரசு அறிமுகப்படுத்தியபோதும், இந்துக்கள் அதை ஏற்கவில்லை. மதரீதியான இந்த எதிர்ப்பை அரசால் எளிதாக எதிர்கொள்ள முடியவில்லை. தடுப்பூசி போட்டுக்கொள்வது நம்பிக்கையைக் கொச்சைப்படுத்தும் செயல் என்று தடுப்பூசி போட்டுக்கொள்ளப் பிடிவாதமாக மறுத்தனர். சுகாதார ஊழியர்களை ஊருக்குள் விடாமல் தடுத்தனர். எல்லோருக்கும் ஒரே ஊசி போட்டு, ஒன்றாக்கப் பார்ப்பதாக உயர் சாதியினர் குற்றஞ்சாட்டினர். நோய்த் தொற்றுக்கு ஆளானவர்கள் மிகவும் பலவீனமாகி, நடக்கவே முடியாத நிலையில், வேறு வழியில்லாமல் மருத்துவமனைக்கு வந்தபோது அவர்களின் நிலைமை மோசமாகிவிட்டிருந்தது.

மக்களின் அறியாமை பற்றிக் கவலை கொண்ட அரசு, ஒவ்வொரு கொம்யூன்களிலும் தீவிர தடுப்பூசி இயக்கம் நடத்தப்பட வேண்டுமென்று 1884 ஏப்ரல் 3-ல் மேயர்களுக்கு அறிக்கை அனுப்பியது. 'பிரெஞ்சு மூவண்ணக் கொடியின் கீழ் ஆளும் அரசு, மாரியம்மன் பெயரால் வரும் எதிர்ப்பைப் பொறுத்துக்கொள்ளாது' என்ற ஆளுநர் கப்ரியேல் லூயி அன்ழூல்வான், 1906-ல் தடுப்பூசி போடுவதைக் கட்டாயமாக்கி அரசாணை பிறப்பித்தார். அடுத்தடுத்த ஆண்டுகளில் ஏற்பட்ட பேரிழப்புகளைத் தடுக்க முடியவில்லை.

மக்களின் தயக்கமும் முழுமையாக நீங்கியபாடில்லை. 1930-களில் 'மக்கள் அனைவருக்கும் முழுமையான பாதுகாப்பு' என்ற பெயரில் வெகுமக்கள் இயக்கம் ஒன்றை அரசு நடத்தத் தொடங்கியது. பிரெஞ்சிந்திய அரசு நோய்த்தடுப்பில் முழுமையான வெற்றிகாண முடியவில்லை. ஆனாலும், அதற்கான வழிமுறைகளை வகுத்துச் சென்றதால்தான், விடுதலை பெற்ற புதுச்சேரி அதை வெற்றிகரமாக்க முடிந்தது.

[எம்.பி.இராமன், பேராசிரியர், 'சூழல் படும் பாடு' உள்ளிட்ட நூல்களின் ஆசிரியர்]

நன்றி: இந்து-தமிழ்

25. அதுவொரு காலம்! பொங்கும் பொங்கல் நினைவுகள்.

— இரா.நாறும்பூநாதன்

மேல பஜார் தெய்வு அண்ணன் கடையில் தான் விதவிதமான பொங்கல் வாழ்த்து அட்டைகள் கிடைக்கும். ஆனால் கடையில் நின்று கொண்டு சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால் அவருக்கு பழியாய்க்கோபம் வரும்.

"இங்கன பாரு..சும்மால்லாம் வேடிக்கை பாக்கதுக்கா அடுக்கி வச்சுருக்கோம்.. வாங்க வர்றவங்களை மறிச்சுக்கிட்டு நின்னா எப்படிடே.. ஒரு ஓரமா நின்னு பாருங்கன்னு சொல்லியாச்சு..கேப்பனான்கியோ.."

தெய்வு அண்ணன் வார்த்தைகள் எல்லாம் எங்களுக்குப் பழகிப் போச்சு. டிசம்பர் மாசம் கிருஸ்துமஸ் தொடங்கும் முன்பே வாழ்த்து அட்டைகள் வாங்கி கடையைச் சற்றே முன்பக்கம் நீட்டி விட்டு, பார்க்கும் வசத்தில் அடுக்கி வைத்திருப்பார்.

ஏசுநாதர் மாட்டுத் தொழுவத்தில் படுத்திருப்பது..மூன்று ஸ்டார்கள்..மரியம்மை, வெறும் சிலுவை..ஏசுநாதர் நெஞ்சைத் திறந்து காட்டுவது போல..
இவை ஒருபக்கம் இருக்கும்..

புத்தாண்டு வாழ்த்துக்கள் அட்டைகள் இன்னொரு பக்கம்..
தகதகக்கும் சூரியன் ..நேதாஜி,நேரு படங்கள் தாங்கிய அட்டைகள்..
பொங்கல் வாழ்த்து அட்டைகள் தாம் நிறைய. பொங்கப்பானை, கரும்பு,ஜோடி காளை மாடுகள்..மஞ்சள் குலை..
ஜல்லிக்கட்டு காளைகளை அடக்கும் காளையர்கள்..கோலம் போடும் அம்மாக்கள்.. எம்.ஜி.ஆர். சரோஜாதேவி பொங்கல் வாழ்த்து சொல்லும் படங்களும் உண்டு. சிவாஜி, பத்மினி படங்கள்...

பக்கத்துக்கு வீட்டு ஹிந்தி பண்டிட் சார் வந்தால் அஞ்சு நிமிசத்தில் பத்து போஸ்ட் கார்டுகளை மாத்திரம் வாங்கி விட்டுப் போய் விடுவார். ஒரு கார்டு பத்து பைசா மேனிக்கு ஒரு ரூபாயில் வேலையை முடித்துக் கொண்டு செல்வார். அந்தப் பத்து கார்டுகளைக்கூட கடைக்காரரையே தேர்வு செய்யச் சொல்வார். தெய்வு அண்ணன் ஒரே மாதிரி கார்டுகளை எடுத்துத் தருவார். " பத்தும் பத்து வெவ்வேறு ஆட்களுக்குத்தானே போகுது..அதனாலே என்ன.." என்பார்.

நான் எம்.ஜி.ஆர்.படங்களைத் தேர்வு செய்து வைத்திருப்பேன். விலை எல்லாம் கூட கேட்டு விடுவேன். மறுநாள் வந்து பார்த்தால், அவை இருக்காது. " குடியிருந்த கோவில்", " தனிப்பிறவி" படங்கள் அதிகமாக இருக்கும்.



கே.மாதவன்





வீட்டில் அண்ணன்மார்கள் எல்லோரும் போஸ்ட் கார்டுகளில் இந்தியன் இங்க் கருப்பு மையால் அழகாய் பொங்கல் பானை,கரும்பு வரைந்து பெரியப்பா பையன்கள்,மாமா பையன்கள் எல்லோருக்கும் அனுப்பி விடுவார்கள். ஆறு பைசா கார்டு விலையோடு முடிந்து விடும். சுய படைப்பு வேற... ஒன்பதாம் வகுப்புக்குப் பிறகு தான், அதே மாதிரி படம் வரைஞ்சு அனுப்புற பழக்கம் எனக்கு வந்தது.

ஒரு பக்கம் படமாய் இல்லாமல், விரித்துப் பார்த்தால், உள்ளே 9 எம்.ஜி.ஆர்.சிரித்தபடி வெளியே வரும் படியாய் ஒரு வாழ்த்து அட்டை உண்டு. அதில் படகோட்டி எம்.ஜி.ஆர்.நாடோடி மன்னன் எம்.ஜி.ஆர்.விவசாயி எம்.ஜி.ஆர். என பல்வேறு படங்களின் தோற்றங்கள் பலவண்ணத்தில் இருக்கும். அதெல்லாம் பயங்கர விலை அப்போது..(ஒரு ரூபாய் பத்து பைசா).

பள்ளி ஓவிய ஆசிரியர் ஈஸ்வரன் சார் வந்தால் மாத்திரம், பார்த்துப் பார்த்து வாங்குவார். பெரும்பாலும் ஓவியர் மாதவன் வரைந்த படங்களாக இருக்கும்.(மாதவன் என்ற பெயரை அவரே முதன்முதலில் அறிமுகம் செய்து வைத்தவர்) அவற்றில் இருக்கும் நுட்பங்களைப் பார்த்துப் பார்த்து ரசிப்பார்.

வாழ்த்து அட்டைகளைத் தொட்டுத் தொட்டுப் பார்த்ததினால், அதில் உள்ள ஜிகினா தூள்கள் கைகளில் ஒட்டிக் கொள்ளும். பொங்கலையொட்டி சைக்கிளில் வரும் போஸ்ட்மேனிடம் " எங்களுக்கு பொங்கல் வாழ்த்து இருக்கா..?" என்று கேட்டபடி பின்னாலேயே செல்வதுண்டு.

கோவையிலிருந்து சிவானந்தம் அண்ணன் அனுப்புவார். வாகைக்குளத்தில் இருந்து திருமலை அத்தான் சமயங்களில். திருவெண்காட்டில் இருந்து திருநாவுக்கரசு

அண்ணன்..நெய்யூரில் இருந்து போஸ் அத்தான்..அப்பாவின் நண்பர்கள் சிலர்.
இப்படியாய் வாழ்த்து அட்டைகள் நமக்கு மகிழ்ச்சியைச் சுமந்து வரும்.

குறுஞ்செய்தி,வாட்ஸ்அப் வாழ்த்துக்கள் வந்து விட்டன இப்போது.
இப்போதும் வாழ்த்து அட்டைகள் அனுப்பலாம்..யார் வேண்டாம் என்று
சொன்னது ?

வீட்டிற்கு வெள்ளையடிக்க எப்போதும் முருகேசன் அண்ணாச்சி தான் வருவார்.
அவருக்கு வயசு அம்பதுக்கு மேல் என்றாலும் எங்களுக்கு அண்ணாச்சி தான்.
வீட்டில் உள்ள சாமான்களை அவரே ஒதுங்க வச்சு வெள்ளை அடிச்ச்சபிறகு அவரே
அதது இருந்த இடத்தில வச்சு விடுவார். நாம கூடமாட ஒத்தாசைக்கு இருந்தால்
போதும்.

வீடு வெள்ளை அடிக்கும்போது, சுவரில் மாட்டி இருக்கும் பிரேம் போட்ட
படங்களை எல்லாம் கழட்டி தூசி துடைச்சு ஈரத்துணியால் இன்னொரு முறை
அழுத்தி துடைத்து மாட்ட வேண்டியது என்னுடைய வேலை. வெள்ளை
அடிக்கும்போது தான் ஆறு மாசத்திற்கு முன்னால தொலைச்ச பொருட்கள் எல்லாம்
கிடைக்கும்.

வீட்டில் இருக்கும் எல்லா சேலைத்துணிகளையும் அம்மை மூட்டை கட்டி வைத்து
விடுவாள். அதுவே அம்பாரி மாதிரி குமிஞ்சு கிடக்கும். அதிலே ஒய்யாரமாய்
படுத்துக் கொண்டு படங்களை துடைப்பதுண்டு. தொலைஞ்ச தீப்பெட்டி
படங்கள், கோலிக்குண்டுகள், கலர் குச்சிகள், என சிலவற்றை தேடி எடுத்துத்
தருவாள் அக்கா. ஒரு புதையல் கிடைத்த சந்தோசத்தோடு அவற்றை தடவிப் பார்க்க
சொல்லும்.

" ராசா..கொஞ்சம் நகந்துக்கிறீகளா.." என்று முருகேசன் அண்ணாச்சி பட்டாசாலை வந்து சத்தம் கொடுப்பார். சுண்ணாம்பு கொதிப்பதை பார்த்துக் கொண்டிருந்தால், " உனக்கு அங்கன என்ன வேல..கையில பட்டு பொத்துப் போகப்போகுது.." என்று அப்பா வாசலில் நின்று குரல் கொடுப்பார்.

பொங்கலுக்கு முதல் நாள் காவிப் பட்டை அடிக்க, முருகேசன் அண்ணாச்சியிடம் இருப்பதில் பரவாயில்லாமல் இருக்கும் மட்டையை வாங்கி வைப்பேன். காவிப்பவுடரை தண்ணியில் கரைச்சு வெள்ளையடித்திருக்கும் படிச்சுவர்களில் முதல் நாள் இரவு கோலாகலமாக அடிக்கும் கொண்டாட்டங்கள். பிசிறின்றி அடிப்பது பெரிய கலை தான். சொட்டுப் போடாமலும் இருக்க வேண்டும். ரொம்பத் தண்ணியாய் கரைசல் இருந்தாலும் காவிப்பட்டை பளிச்சென்று இருக்காது.

மார்கழிக்குப்போடும் கோலத்திற்கு சற்றும் குறைவின்றி, பொங்கல் திருநாளுக்கு பெரிய கோலமாய் போடும் முயற்சியில் அம்மை ஈடுபட்டிருப்பாள். அப்போது ரங்கோலி எல்லாம் கிடையாது. கோலப்பொடி கோலம் தான். சிறுவீட்டுப் பொங்கல் இடுவதற்கு வீட்டின் கிழக்கு முனையில், களிமண் வைத்து சின்னதாக வீடு அமைக்கப்பட்டிருக்கும். அதில் சமையலறை, பட்டாசாலை, தார்சா, படுக்கையறை எல்லாம் இருக்கும். அதில் சிறுபருப்பு பாயாசம் வைத்துக் கும்பிடுவோம்.

வெள்ளையடித்து முடித்தவுடன், வீட்டு உரிமையாளர் திருமேனி செட்டியாரின் மருமகன் வந்து வீட்டை சுற்றிப் பார்த்து விட்டு " முருகேசன் ஒழுங்காதான் அடிச்சுருக்கான்..வீட்டை உங்க வீடு மாதிரி பாத்துக்கோங்க.." என்று சொல்லி விட்டுப் போவார். எதிர்வீட்டின் வாசலில் குத்த வைத்திருக்கும் முருகேசன் அண்ணாச்சி அவசர அவசரமாய் தனது சொக்கலால் பீடியை அணைத்தபடி எழுந்து அவருக்கு வணக்கம் சொல்லுவதை இப்போது நினைத்துப் பார்க்கிறேன்.

26. டிக்..டிக்... திக்...திக்....

— பாளை ப. இசக்கி ராஜன்

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் சாமானியர் வீடுகளில் நேரம் பார்க்கக் கடிகாரங்கள் எல்லாம் கிடையாது. அதனால் ஊரின் மையமான பொது இடம் ஒன்றில் பெரிய வெண்கல மணி ஒன்றை நிறுவி இருப்பார்கள். அதன் மூலம் ஒலியை எழுப்பி, மக்கள் நேரத்தைத் தெரிந்து கொள்ள வகை செய்திருந்தார்கள். அது எத்தனை முறை அடிக்கிறது என்பதை வைத்து, பொதுமக்கள் நேரத்தைத் தெரிந்து கொண்டார்கள்.

கல்வி நிலையங்களில், தோசைக்கல் அளவிலான ஒரு பொருள் வெண்கலத்தில் இருக்கும். அதில் ஒரு இரும்புக் கம்பி கொண்டு ஓங்கி அடிப்பார்கள். அதில் வரும் ஒலி தான், வகுப்பு துவங்குவதற்கும், முடிவதற்குமான அறிவிப்பு. சில இடங்களில், பேருந்துச் சக்கரத்தின் மையப் பகுதியில் இருக்கும் இரும்பு பைதாவைத் தொங்க விட்டு அதைத் தட்டி ஒலி எழுப்புவார்கள். வேறு சில இடங்களில் ரயில் தண்டவாளத்தின் துண்டுகளைப் பயன் படுத்துவார்கள். வெண்கல மணி, தண்டவாளத் துண்டு எல்லாம் இப்போது முழுவதுமாக மறைந்து விட்டன. பல அளவுகளில் கைக் கடிகாரங்கள், சுவர்க் கடிகாரங்கள் இப்போது வந்து விட்டன.

அந்தக் காலத்தில் சுவர்க் கடிகாரம், (Wall clock), மேஜைக் கடிகாரம் (Table clock,) கைக்கடிகாரம், (Wrist watch) என்று பல வகைக் கடிகாரங்கள் இருந்தன. இவை

இயங்குவதற்குச் சாவி கொடுக்க வேண்டும். இப்போது வருகின்ற சுவர்க்கடிகாரங்கள், Table Top கையடக்கக் கடிகாரங்கள், பேட்டரி மூலம் இயங்குகின்றன. சுவர்க் கடிகாரத்தில் பெண்டுலம் என்று ஒரு தொங்கட்டான் உண்டு. அது வலது பக்கமும், இடது பக்கமும் சீராக அசைந்தாடும். அரை மணி நேரத்திற்கு ஒரு முறை சிறு ஒலி ஒன்றை எழுப்பி நேரத்தைத் தெரிவிக்கும். நமக்குத் தேவைப்படும் நேரத்தில் ஒலி எழுப்பும் வகையில் மேஜைக் கடிகாரத்தில் ஏற்பாடு செய்து கொள்ளலாம். நான் படிக்கின்றன காலத்தில், அதிகாலையில் எழுந்து படிப்பதற்காக இந்த வசதியைப் பயன் படுத்தியிருக்கிறேன்.

சில நாட்கள் பல் வேறு காரணங்களுக்காக, அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும். இதற்காகக் குறிப்பிட்ட நேரத்திற்கு ஒலி வரும் வகையில் மேஜைக் கடிகாரங்களில் ஏற்பாடு செய்து கொள்ளலாம். இந்த மேஜைக் கடிகாரங்களைச் சிலர் Time piece என்று சொல்வார்கள். இப்போது கைபேசிகளிலும் குறிப்பிட்ட நேரத்தை நினைவூட்டும் வகையில் ஒலி எழுப்பும் வசதி உள்ளது. நான் படித்த பாளை தூய சவேரியார் பள்ளி ஆசிரியரும், என் வகுப்புத்தோழனுமான அனந்த கிருஷ்ணனின் அப்பா திரு H. ராமநாதன் ஐயா அவர்கள், வானத்தைப் பார்த்தே, நேரத்தைத் துல்லியமாகச் சொல்லி விடுவார்.

நள்ளிரவு, அமைதி சூழ்ந்துள்ள பொழுதில், இந்த கடிகாரங்கள் வினாடிக்கொருமுறை டிக் டிக் என்று ஓசை எழுப்பும். இந்த ஓசையைக் கேட்கும் போது மனது திக் திக் என்று துடிக்கும். தொழில் நுட்ப வளர்ச்சியினால், இப்போது கைபேசி, தொலைக் காட்சிப் பெட்டி, போன்று நிறைய electronic பொருட்களும் நேரம் காட்டும் வேலையைச் சிறப்பாகச் செய்து வருகின்றன. அவை GPS மூலம், நேரத்தைத் துல்லியமாகக் காட்டி வருகின்றன.

நாம் எந்த நாடுகளுக்குச் சென்றாலும், அந்த நாடுகளுக்கு உண்டான நேரத்திற்குத் தானாகவே மாறிக் கொள்ளும் வசதிகள் வந்து விட்டன. சில நாடுகளில் Daylight Savings Time முறை நடைமுறையில் இருக்கின்றன. ஆஸ்திரேலிய நாட்டின் NSW மாநிலத்தில் ஏப்ரல் முதல் செப்டம்பர் முடிய ஆறு மாத காலத்திற்கு நேரம் GMT + 10.00 Hrs என்ற கணக்கில் வரும். அக்டோபர் முதல் மார்ச் முடிய நேரம் GMT + 11 Hrs என்ற கணக்கில் வரும். ஏப்ரல் மற்றும் அக்டோபர் முதல் ஞாயிற்றுக் கிழமை அதிகாலையில் கைபேசி போன்ற கருவிகளில் எலக்ட்ரானிக் கடிகாரம் தானாகவே பின்னோக்கிச் செல்வதையும் முன் நோக்கிச் செல்வதையும் கண்டு மகிழலாம்.

பொது இடங்களில் கடிகாரங்கள் வைத்து அமைக்கப்பட்டுள்ள உயர்ந்த கோபுரங்கள், மணிக்கூண்டு என்ற பெயரில் இன்றைக்கும் அழைக்கப் பட்டு

வருகின்றன. லண்டன் மாநகரில் அமைக்கப்பட்டுள்ள 96 மீட்டர் உயரமுள்ள மணிக்கூண்டில், நான்கு பக்கங்களிலிருந்தும் தெரியும் வகையில் பெரிய கடிகாரங்கள் பொருத்தப் பட்டுள்ளன. இந்த கடிகாரத்தின் குறுக்களவு 7 மீட்டர் ஆகும். இந்த மணிக்கூண்டு 31-5-1859 ல் துவங்கி வைக்கப்பட்டது. துவக்கத்தில் மணிக்கூண்டு என்று அழைக்கப்பட்டது. பிறகு Big Ben என்று பெயர் மாறியது. 2012 ம் ஆண்டு முதல், இங்கிலாந்து பேரரசி யான எலிசபெத்தைப் போற்றும் வகையில், எலிசபெத் கோபுரம் என்று அழைக்கப் பட்டு வருகிறது.

விரிஞ்சிபுரம் கோயில்
மணிகாட்டும் நிழல் கடிகாரம்

எங்களது வீடு பாளை சாந்தி நகரில் இருக்கிறது. வீட்டுக்கு அருகில் உள்ள சீவலப்பேரி சாலையில், திம்மராஜபுரம் விலக்கு வரும். அங்கு நல்ல உயரமான மணிக் கூண்டு ஒன்று அமைக்கப் பட்டிருக்கிறது. இந்த மணிக் கூண்டை அடையாளம் காட்டித்தான், எங்கள் வீட்டிற்கு வருபவர்களுக்கு வழி சொல்லவேண்டும். இந்த மாதிரியான மணிக் கூண்டுகள் இப்போது, நேரத்தைச் சரியாகக் காட்டி உதவுகிறதோ இல்லையோ, வீடுகளுக்கு வழி காட்டி மக்களுக்கு உதவுகின்றன.

27. அமெரிக்க அதிபர் தேர்தல் வாக்காளர் கையேடுகளில் தமிழ்!!!!

— முனைவர் தேமொழி

தமிழ் மொழியில் அறிக்கைகளும் அறிவிப்புகளும் வேண்டும் என்று இந்தியாவில் எத்தனை ஆண்டுகள் நாம் போராட வேண்டியிருக்கிறது. ஆனால் அமெரிக்காவிலோ இதற்கு நேர் எதிர்நிலை. அதிபர் டிரம்ப்பும் ஜோ பைடனும் அதிபர் பதவிக்குப் போட்டியிட்ட நவம்பர் 3, 2020 - அமெரிக்க அதிபர் தேர்தலுக்கு, அமெரிக்க கலிபோர்னியா மாநிலத்தின் வாக்காளர்களுக்கு விளக்கக் கையேடுகளை அஞ்சலில் அனுப்பியுள்ளார்கள்.

ஆங்கிலம், ஸ்பானிஷ், சீனா மொழிகளில் விளக்கக் கையேடுகளை அச்சிட்டு அனுப்பியிருந்தாலும், தமிழோ அல்லது பிற மொழிகளிலோ மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட வாக்காளர் கையேடு தேவை என்றால் அனுப்ப உதவுவதாகக் குறிப்பும் அச்சிட்டு அனுப்பியுள்ளார்கள்.





அமெரிக்காவைப் பார்த்து என்னென்னவோ கற்றுக் கொள்ள விரும்புகிறோம். மக்களின் தேவையை மதிக்கும் முறையை இந்தியாவின் மத்திய மாநில அரசுகள் ஏன் கற்றுக் கொள்ளக் கூடாது என்ற ஏக்கம் மேலிடுகிறது.

குறிப்பு: முனைவர் தேமொழி, கலிபோர்னியா மாநிலத்தில் வாழும் ஒரு தமிழர்

28. எல் உமிழ் இரும்பொறை அம்பொறி கனல.

— ருத்ரா இ.பரமசிவன்

எல் உமிழ் இரும்பொறை அம்பொறி கனல
கடுங்கண் காட்டும் முள்படர் இலவம்
அவிழ் இலை செறிந்த அழற்பெருங்கானம்
எரியூர் தோற்றியும் ஓவா நடையின்
மீமிசை ஊக்கி செல்வம் நசைஇ
ஆறு படுத்த நெடும்பணைத்தோள!
இவண் ஓர் இறைநெகிழ்ந்த வளையள் ஆங்கு
கொல் அலரி படுத்த கொடுநோய் வீழ்ந்த
நிலைகண்டு அன்னை எவன் ஆங்கு
"ஊதை ஈட்டிய உயர்மணல் அடைகரை"
ஓரை ஆடி ஒள் மணல் தெள்ளினை
எனவாங்கு
பொய்ச்சொல் பெண்டிர் முருகு வெறியாடல்
நின் நோய் ஆற்றும் கண்டிசின் தெளினே
என்று ஊக்கிய அன்னைக்கு சொல்லும்:
அவன் மின்னல் அகலம் யான் தோயும் காலை
முருகன் என்னை அவன் அய்யன் என்னை
நத்தம் இல்லா அத்தமும் ஏகுவன்
அவனை ஓர்ந்து யான் சேரும் மாட்டே.

தலைவன் பொருள் தேடி கொடிய பாலையின் காட்டுவழியில் செல்ல தலைவியோ பிரிவுத்துயரில் மிகவும் வாடுகிறாள். இதைக்கண்ட அன்னை அவளுக்கு முருகன் வெறியாடல் என்னும் "சாமியாட்டம்" ஏற்பாடு செய்ய தலைவியோ முருகன் வந்தாலும் சரி அவன் அப்பனே வந்தாலும் சரி நான் என் தலைவன் வழி தான் ஏகுவேன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறாள். இதை தோழி தலைவனுக்குச் சொல்வது போல் அமைந்துள்ளது இப்பாடல்.

அகநானூற்றுப் பாடல் (எண் 60) குடவாயிற்கீரத்தனார் எனும் புகழ்மிக்க புலவரால் பாடப்பட்டது. "ஊதை ஈட்டிய உயர்மணல் அடைகரை" என்ற வரியை அப்பாடலில் எழுதியுள்ளார்.ஆழம் செறிந்த சொல்லழகு மிக்கது இவ்வரி. கடற்கரையை அடுத்த நீர்ப்பரப்பில் எழும் வாடைக்காற்று வேகமாக வீசி கரையில் மணல் மேடுகளை உருவாக்குகிறது என்று இங்கே பொருள்படும். இதில் ஓரை என்பது கடற்கரை மணலில் கூட்டம் கூட்டமாய் பெண்கள் வண்டல் மண்ணில் பாவை செய்து விளையாடுவதைக்குறிக்கும். தலைவி இப்படியெல்லம் விளையாடியதால் தான் இந்த நோய் வந்ததோ என்று அந்த வெறியாடலுக்கு ஏற்பாடு செய்கிறாள் அன்னை .தலைவியோ காதலனின் முன் எந்தக்கடவுளும் பொருட்டு இல்லை என்பதாய் காதல் பற்றி உறுதியாக இருக்கிறாள். இந்த சங்கத்தமிழ்க்காட்சியையே நான் சங்கத்தமிழ் நடைச்செய்யுட் கவிதை ஆக்கி இங்கு எழுதியுள்ளேன்.

29. கீழ்த்திசை சிவக்கக் கண்டோம்.

— கோவை எழில்

கீழ்த்திசை
சிவக்கக் கண்டோம்
கிளர்ச்சிகள்
செய்யத் துணிந்தோம்
புரட்சிகள்...
வேண்டும் நாட்டில்
இல்லையேல்
பழமையே தூணாய் மாறும்
வறுமையும்
பசியும் நீங்கி
வாழ்ந்திடும்
மக்கள் வேண்டும்
வையத்து மானிடர்கள்
ஓர் ஜாதி ஆதல் வேண்டும்
இல்லையேல்
வாய்ச் சொல்லில்
வீரம் பேசும்
வாலிபம்
பொய்யாய்ப் போகும்!

30. உன்னையே நீ எண்ணிப்பார்.

— ருத்ரா இ.பரமசிவன்

நம் மைல்கற்கள்
களைத்து விட்டனவோ?
இனி அந்த
குழியைத்தவிர வேறு
எதற்கும்
இனி நடப்பதற்கு மைல்கற்கள்
நடுவதற்கும் அவசியம் இல்லையோ?
மனித மலர்ச்சியின்
பயணம் இதற்குமேல்
நடைபோட இயலாமல்
மனிதம் தன்
சுவாசத்தையெல்லாம்
இழந்து விட்டதோ?
அதோ பாருங்கள்
முக கவசங்கள் மற்றும்
கவச உடைகளின்
உடைந்து போன
செயற்கை சுவாசக்கருவிகளின்
குப்பைமேடுகள் எல்லாம்
இமயமலைகளையும் விழுங்கி விடும்
உயரத்துக்குச்
சென்று விட்டனவே!
அஞ்சத்தேவையில்லை.
பயங்களை உதறி விடுங்கள்.
கொரோனாவுக்குள்
ஒரு ரகசிய சங்கீதத்தின்
சுருதி ஒன்று
மனிதனுக்கு
மெல்லிதாய் கேட்கத்தான்
செய்கிறது.

அந்த ஒளியை
அந்த ஒலியை
அந்த விஞ்ஞான நுட்பத்தை
நீ
புரிந்து கொள்ள முயலக்கூடாதா?
வானம் அளந்து
பிரபஞ்சங்களையெல்லாம்
உரித்துக்கொண்டு
கிளர்கின்ற அறிவின் ஒளி
உன் மீது
புதிய வெளிச்சத்தைப்
படரவில்லையா?
பூஜை நைவேத்தியங்கள்
பக்தர்கள் இன்றி
எளிமையாக
நடந்தன.
பிரம்மோற்சவங்கள் எல்லாம்
அப்படியே
பிரம்மங்கள் இன்றியே
இன்னும்
எளிமையாக நடந்து
கொண்டிருக்கின்றன.
ஆம்.
கடவுள்கள் இன்றி
அவற்றின் பேரால் பொய்மை
போற்றும்
சாதி மதங்கள் இன்றி
காழ்ப்புகள் கழன்று
இந்த உலகம் எளிமையாகச்
சுழன்று கொண்டிருக்கிறது.

ஓ! மனிதா!
என்னை விடவும் கொடியதான
மூடத்தனத்தின் அரசியல்
உன்னை மூடிக்கிடக்கிறதே!
என்னால்
உன் கூட்டுக்குள்ளேயே
முடங்கிக்கிடந்தாவது

மனிதா!
உன் மூளையை எல்லாம்
கழற்றி
கொரோனாவாய் ஆகிய
இந்த அடகுக்காரனிடம்
கொடுத்துவைத்திருக்கிறாய்.
ஏதோ ஹெல்மெட்டைக் கழற்றி

கொடுத்து வைத்திருப்பது போல.
போதும்!
நீ பயந்து பயந்து செத்தது.
எப்போது
உன் உயிர்களை
சிந்தனையால் சாகடிக்கவே முடியாத
உன் அறிவின் செல்களை
இந்த "அடகிலிருந்து"
மீட்டுக்கொள்ளப்போகிறாய்?
இதற்கு
அசலும் வேண்டாம் வட்டியும்
வேண்டாம்.
"உன்னையே நீ எண்ணிப்பார்"
உன் சமுதாயத்தையே நீ
எண்ணிப்பார்"
அது போதும்.

31. உழவும் வாழ்வும்.

— கோவை எழில்

உடலும் உணர்வும்
உணவும் உயிரும்
உழவின் கொடையே.

உண்மை உணர்ந்து
உலகம் சுழலும்
உவகை உடனே.

ஆனால்...
வறட்சியும் புயலும்
இயற்கையின் சீற்றமும்
மதியிலா மாந்தரும்
மனமிலா மைந்தரும்
மிதித்து அழிப்பார் உழவையே.

ஆனாலும்....
அவர்தம் வயிறும்
அனைவரின் உயிரும்
அண்டியிருப்பது உழவையே.

அதனால்....
உழவு செய்யும் உழவரையும்-அவர்
களையெடுத்த கரங்களையும்
கண்ணில் ஒற்றி நன்றி சொல்வோம் வாரீர்
ஊர்கூடி ஒன்றுகூடி மகிழ்விப்போம் வாரீர்.

பொங்கலிலே பொங்கி வரும் பொழிவாய்
செங்கதிராய் ஒளிர்ந்து வரும் செழிப்பாய்
உழவர் வாழ்வுதன்னை உயர்த்திடுவோம் பாரில்
அவர் வேதனையைத் துடைத்திடுவோம் இந்நாளில்

32. தமிழ் மரபு அறக்கட்டளை நிகழ்வுகள் மற்றும் வெளியீடுகள் – செய்திகள் தொகுப்பு

— முனைவர் தேமொழி

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் இணையத்தளம்

https://www.facebook.com/TamilHeritageFoundation

தமிழ் மரபு அறக்கட்டளையின் நிகழ்வுகள் வெளியீடுகள் மற்றும் செய்திகள்

http://thf-news.tamilheritage.org/

தமிழ் மரபு அறக்கட்டளையின் யூடியூப் காணொளி அலைவரிசை

https://www.youtube.com/Thfi-Channel

"கடிகை" – தமிழ் மரபு முதன்மை நிலை
இணையக் கல்விக்கழகத்தின் சிறப்புச் சொற்பொழிவு:
ஐரோப்பிய தமிழியல் ஆய்வுகள் - முனைவர்.ஆனந்த் அமலதாஸ்
- அக்டோபர் 18, 2020 - https://youtu.be/L_yQMIQ_0lc

வையத்தலைமை கொள் – பிரிவு நடத்தும்
மாற்றுப்பாலினம் & பாலீர்ப்பு கொண்டோர்
மூன்று நாள் இணையவழி கருத்தரங்கம்:
அக்டோபர் 30 – அக்டோபர் 31 – நவம்பர் 1, 2020
நாள் 1 – கலையும் வரலாறும்
https://youtu.be/IdftHixA2iI

நாள் 2 – மானுடவியலும் கலாச்சாரமும்
https://youtu.be/ADhyUD5Ceaw

நாள் 3 – சமூகச்சிக்கல்களும் சாதனைகளும்
https://youtu.be/6yBZMNK1Occ

வரலாற்றுத் தொடர் ஆய்வுரைகள்:
நடுநாட்டில் சமணம் – முனைவர்.த.ரமேஷ்
நவம்பர் 27&28&29, 2020
பகுதி-1: https://youtu.be/8bW8-xS27pk
பகுதி-2: https://youtu.be/66_Jy0b15vs
பகுதி-3: https://youtu.be/zq3BM8rQzqU

தமிழ் மரபு அறக்கட்டளையின் சிறப்பு நிகழ்ச்சிகள்:
ஜெர்மனியில் திருவள்ளுவரின் ஐம்பொன் சிலைகளை
நிறுவிய முதலாம் ஆண்டு விழா
– ஐரோப்பியத் தமிழர் நாள் விழா-4.12.2020
https://youtu.be/N4jPQv3nxow

சங்கம்பீடியா வலைப்பக்கத்தின் சங்கச்சோலை நிகழ்ச்சி
டிசம்பர் 12, 2020 - https://youtu.be/Tt-u_Z574MU

"எம்.ஜி.ஆர்" – முனைவர் இரா.கண்ணன், சூடான்
டிசம்பர் 18, 2020 - https://youtu.be/nY9i99CsXYY

பண்பாட்டு ஆய்வாளர் பேராசிரியர் முனைவர் தொ.பரமசிவன்
அவர்களின் நினைவேந்தல் கூட்டம்
டிசம்பர் 27, 2020 - https://youtu.be/aFtvkRDkiM4

2020 – சோதனையைச் சாதனையாக்கிய ஆண்டு
https://youtu.be/SNpCr0xhaDQ

அருங்காட்சியகம் மற்றும் கண்காட்சிப் பிரிவின் சிறப்பு நிகழ்ச்சி:
டிசம்பர் 19, 2020 - https://youtu.be/e1F8-EHu4lo

தொல்லுயிரியல் ஓர் அறிமுகம்
– இளம் தொல்லுயிரியலாளர் அஸ்வதா - https://youtu.be/-VEWsXAgsoE
இயற்கை சார்ந்த பாரம்பரிய கலைப்படைப்புகள்
– வெ. உமாபதி, கைவினைப் பயிற்சியாளர் - https://youtu.be/YkgmeqKGVQU

இணையவழி உரைத்தொடர்கள்:
ஊடக அறம் - முனைவர் சந்திரிகா சுப்ரமணியன்
- அக்டோபர் 18, 2020 - https://youtu.be/ASRHSe1ASBo

கொரியா-தமிழ்ப் பண்பாட்டுத் தொடர்புகள் - முனைவர் செ.ஆரோக்கியராஜ்
- அக்டோபர் 25, 2020 - https://youtu.be/PpZ9mxOvu48

நடுகற்கள் - விழுப்புரம் சி.வீரராகவன்
- நவம்பர் 8, 2020 - https://youtu.be/iUTnOLXSGO0

காடழிப்பும் கொரோனா தொற்றும் - பூவுலகின் கோ. சுந்தர் ராஜன்
- நவம்பர் 22, 2020 - https://youtu.be/8PHjCpS6zI8

தளிஞ்சிவாழ் குறிஞ்சி நில மக்கள் - திரு.ப.ஜெய்சிங்
- டிசம்பர் 13, 2020 - https://youtu.be/7yPjm_X6sPM

பர்மா தமிழர்கள் வரலாறு - திரு. ஜி. தனசேகர்
- டிசம்பர் 20, 2020 - https://youtu.be/JBGdptc-XpE

குமரிக்கண்டம், ஒரு தொன்மக்கருத்தாக்கப் புனைவு – முனைவர் தேமொழி
- ஜனவரி 3, 2021- https://youtu.be/ELUTi7Ml8R8

மெட்ராஸின் சிவப்பு நிறக் கட்டிடங்கள் – எழுத்தாளர் கரன் கார்க்கி
- ஜனவரி 10, 2021 - https://youtu.be/qVRNDr3RA-U

நூல் வெளியீடுகள்:
வடலூர் வரலாறு – கற்காலம் முதல் தற்காலம் வரை
நூலாசிரியர்: முனைவர்.ஜெ.ஆர்.சிவராமமகிருஷ்ணன்
நவம்பர் 22ம் தேதி, 2020 - https://youtu.be/cDeCdUMHy2k

மின்னூல் வெளியீடுகள்:
I. வடலூர் வரலாறு – கற்காலம் முதல் தற்காலம் வரை
http://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2020/11/vadalur-varalaru.pdf

II. பண்பாட்டு நகர்வுகள் – தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு - முனைவர்.செ. இராஜேஸ்வரி
https://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2020/12/Panbaatu-Nagarvugal-Japan-Rajeswari.pdf

III. பெண் தெய்வ வழிபாடு – முனைவர்.செ. இராஜேஸ்வரி
https://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2020/12/Pentheiva-Vazhipadu-Rajeswari.pdf

IV. தேவேந்திரன் – முனைவர்.செ. இராஜேஸ்வரி
https://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2020/12/Deventhiran-Rajeswari.pdf

V. மருதநிலப் பெண் தெய்வங்கள் – முனைவர்.செ. இராஜேஸ்வரி
https://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2020/12/Maruthanilap-Pentheivangal-Rajeswari.pdf

VI. மொழிபெயர்ப்பியல் ஆய்வு – முனைவர்.செ. இராஜேஸ்வரி
https://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2020/12/Mozhipeyrapiyal-Aaivu-Rajeswari.pdf

VII. வெற்றித் திருமகன் எம். ஜி. ஆர் நூல் தொகுப்பு – முனைவர்.செ. இராஜேஸ்வரி
""தொகுப்பில் இடம் பெறும் 20 நூல்கள் ...""
1-வெற்றித் திருமகன் எம்.ஜி.ஆர்.
http://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2020/11/1-Vetri-Thirumagan-MGR-Book-Series.pdf

2-என்றுமே எம்.ஜி.ஆர்., நிழல், நிஜம், நிரந்தரம்
http://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2020/11/2-Vetri-Thirumagan-MGR-Book-Series.pdf

3-சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பாப்பா
http://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2020/11/3-Vetri-Thirumagan-MGR-Book-Series.pdf

4-வீர மகன் போராட வெற்றி மகள் பூச்சூட
http://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2020/11/4-Vetri-Thirumagan-MGR-Book-Series.pdf

5-மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம். ஜி. ஆர்.
http://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2020/11/5-Vetri-Thirumagan-MGR-Book-Series.pdf

6-எம். ஜி. ஆர். ஒரு ஜீவநதி
http://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2020/11/6-Vetri-Thirumagan-MGR-Book-Series.pdf

7-கலியுகப் போராளி எம். ஜி. ஆர்.
http://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2020/11/7-Vetri-Thirumagan-MGR-Book-Series.pdf

8-ஒளிவிளக்கு எம். ஜி. ஆர்.
http://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2020/11/8-Vetri-Thirumagan-MGR-Book-Series.pdf

9-வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் I
http://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2020/11/9-Vetri-Thirumagan-MGR-Book-Series.pdf

10-நீங்க நல்லா இருக்கணும்
http://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2020/11/10-Vetri-Thirumagan-MGR-Book-Series.pdf

11-பாட்டுடைத்தலைவன் எம். ஜி. ஆர்.
http://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2020/11/11-Vetri-Thirumagan-MGR-Book-Series.pdf

12-ரசிகர்களின் இதயதெய்வம் எம். ஜி. ஆர்.
http://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2020/11/12-Vetri-Thirumagan-MGR-Book-Series.pdf

13-முத்தமிழ்க் காவியம் மதுரைவீரன்
http://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2020/11/13-Vetri-Thirumagan-MGR-Book-Series.pdf

14-இரட்டைவேடங்களில் ஜொலிக்கும் எம். ஜி. ஆர்.
http://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2020/11/14-Vetri-Thirumagan-MGR-Book-Series.pdf

15-எம். ஜி. ஆர். படங்களில் அறிவியல் புனைவு
http://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2020/11/15-Vetri-Thirumagan-MGR-Book-Series.pdf

16-படகோட்டி மீனவ நண்பன் ஒரு ஒப்பீடு
http://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2020/11/16-Vetri-Thirumagan-MGR-Book-Series.pdf

17-Unique Fandom of MGR
http://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2020/11/17-Vetri-Thirumagan-MGR-Book-Series.pdf

18-எம். ஜி. ஆர். படங்களில் தொழில் தர்மம்
http://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2020/11/18-Vetri-Thirumagan-MGR-Book-Series.pdf

19-எம். ஜி. ஆர். சண்டைக் காட்சிகளின் சுவாரசியங்கள் – 1
http://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2020/11/19-Vetri-Thirumagan-MGR-Book-Series.pdf

20-எங்கவீட்டுப் பிள்ளை எம்.ஜி.ஆர்.
http://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2020/11/20-Vetri-Thirumagan-MGR-Book-Series.pdf

"திணை" – செய்திமடல் வெளியீடுகள்:

"திணை" – செய்திமடல்-5: அக்டோபர் 2020
http://mintamilmedai.tamilheritage.org/wp/wp-content/uploads/2020/11/THF-Newsletter-Thinai-Madal-5-Oct-2020.pdf

"திணை" – செய்திமடல்-6: நவம்பர் 2020
http://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2020/12/THFi-Newsletter-Thinai-Madal-6-Nov-2020.pdf

"திணை" – செய்திமடல்-7: டிசம்பர் 2020
http://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2021/01/THF-Newsletter-Thinai-Madal-7-Dec-2020.pdf

தமிழ் மரபு அறக்கட்டளை
Tamil Heritage Foundation
THF
தமிழர் வரலாற்றுக்கு ஓர் அரண்

Electronic Preservation of Tamil Heritage Materials
e-BOOK Series

an international NGO initiative to digitize
old Tamil Books and Palm Leaf Manuscripts
visit: http://www.tamilheritage.org/

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி
மேலும் அறிய: http://www.tamilheritage.org/

முதுசொம் முத்திரை
தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

மின்தமிழ்மேடை

காட்சி: 24 ஜனவரி - 2021

உழவுக்கும் கைத்தொழிலுக்கும் வந்தனை செய்வோம்

தமிழ் மரபு அறக்கட்டளை - பன்னாட்டு அமைப்பு
வெளியிடும் காலாண்டு மின்னிதழ்
24